நகுலன் நினைவு இதழ்

மார்கழி
16
2007
ஐப்பசி

புது எழுத்து

ஆசிரியர் மனோன்மணி



புது எழுத்து

16

மார்ச் 2008

நவீன படைப்பிலக்கியத்திற்கான சிறுபத்திரிகை

ஆசிரியர்

மனோன்மணி

பதிப்பாசிரியர்

இரா.சுகவனம்

அச்சு

F1 Computer Offset Printers

சேலம் - 1.

ஆண்டு சந்தா	:	ரூ. 200/-
மாணவர் சந்தா	:	ரூ. 150/-
ஆயுள் சந்தா	:	ரூ. 10000/-
நிறுவன சந்தா	:	ரூ. 350/-
தனி இதழ்	:	ரூ. **50/-**

அட்டை ஓவியம்

ஆதிமூலம்

படங்கள்:

காஞ்சனை சீனிவாசன், விஸ்வம், பா.வெங்கடேசன்

பல்லாண்டு பல்லாண்டு...

கி.ரா.85, குந்தர்கிராஸ் 80

இந்த இதழுக்கென்றே பிரத்யேகமாக ஓவியம் வரைந்த **ஆதிமூலம்** மற்றும் **மார்க்வெஸ் டொராடோ** (லத்தீன் அமெரிக்கா) ஆகியோருக்கு புது எழுத்து நன்றி தெரிவிக்கிறது.

அனைத்து தொடர்புகளுக்கும்

மனோன்மணி

ஆசிரியர் - புது எழுத்து

39, ஜே. கே. சி. தெரு,

காவேரிப்பட்டிணம் - 635 112.

கிருஷ்ணகிரி மாவட்டம்,

பேசி : 98426 47101

மின்னஞ்சல் : puduezuthu@gmail.com

அஞ்சலி

லா.ச.ரா., டாக்டர். சேத்தி, எட்மண்ட் ஹில்லாரி

அடுத்த இதழில்

முப்பரிமான ஓவியன் ஐஷர்

பேப்பர் பையன்

விடிந்தும் விடியாத காலை தெருக்களில்
சைக்களில் பேப்பர் போட்டுக்கொண்டு
வருகிறான் பேப்பர் பையன்
மாடியில் குடியிருப்போருக்கு கீழிருந்து வீசப்படும் பேப்பர்
வழக்கம் போல் பால்கனியில் விழாமல்
பால்கனியை கடந்து
மாடியை கடந்து
காலை வேளை பறவைகளைக் கடந்து
வானத்தை நோக்கிச் செல்கிறது
வானம் நெருங்க நெருங்க
பேப்பர் தன்னைப் பூதாகரமாக விரித்துக் கொள்கிறது
வானமே கூரையாகவிருந்த இந்த நகருக்கு
இப்பொ து பேப்பரே கூரையாகிவிட்டது
பேப்பரின் இருளும் ஒளியுமே
நகரின் இரவு பகலாக மாறுகிறது
ஒவ்வோர் நாள் காலையிலும்
பேப்பரிலுள்ள செய்திகள் மாற்றமடைகின்றன.
இதைக் கண்டு பேப்பர் பையன் முதலில் கலக்கமடைகிறான்
காலப்போக்கில் அவன் குல்ஃபி ஐஸ்காரனாக மாறுகிறான்
இரவுகளில் குல்ஃபி ஐஸ் விற்கும்போது
அதை வாங்குவோர் சிலர் கேட்கிறார்கள்
உன் கரத்தில் பேப்பர் வாசம் அடிக்கிறதே?
மேலே பேப்பரை அண்ணாந்து பார்த்து
அவன் தனக்குள்ளே சிரித்துக் கொள்கிறான்

மாயாவின் முலைகள்

நாவலை வாசிக்கும் மாயாவிற்கு
நான்காம் பக்கத்தில் நண்பனும்
இருபத்து இரண்டாம் பக்கத்தில் காதலனும் அறிமுகமாகிறார்கள்
மாயாவின் இடது முலையை காதலனும்
வலது முலையை நண்பனும் காதலிக்கிறார்கள்
முலையைக் காதலிக்கும் அவர்கள்
அதை ரகசியமாக மாயாவிடமிருந்து திருடுகிறாரகள்
களவுபோன முலைகளை எங்கோ தேடி
இறுதியில் நாவலின் நூற்றி ஐம்பத்து இரண்டாம் பக்கத்தில்
அவை நகர்ந்து கொண்டிருப்பதை காண்கிறாள் மாயா
நாவலை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும்
இவ்வனுபவம் நேர்கிறதென்பதைக் கண்டுணரும் மாயா
நாவல் முழுவதும் இவ்வனுபவங்கள்
நகர்ந்து கொண்டிருப்பதைக் கண்டு மயங்கிச் சரிகிறாள்
மயக்கந் தெளிந்து விழித்த மாயா
முலைகள் நாவலின் கதாபாத்திரங்களாகி
பேசிக்கொண்டு நகர்வதைக் கவனிக்கிறாள்

மணிக்கூண்டு



எங்கும் இடமற்று
மணிக்கூண்டு கடிகாரத்துள்
தஞ்சமடைகிறார்கள் கள்ளக்காதலர் இருவர்
இவர்களைத் தொடர்ந்து
இன்னும் சில கள்ளக் காதலர்களும்
மணிக்கூண்டு கடிகாரத்துள் தஞ்மடைகிறார்கள்

ஏற்கனவே அங்கு
சில அரிய வகை ஆந்தைகளும்
வெளவால்களும் வசிக்கின்றன
மனப் பிறழ்வானவர்கள்
பிரக்ஞை அடையும் வேளைகளில்
இங்கு வந்து சேர்கிறார்கள்
தொடர்ந்து
பாலியல் முறைப் பிறழ்வானவர்களும்
இங்கு வந்தடைகிறார்கள்
மதுவிடுதிகளில் மதுவருந்த இயலாத கவிஞர்களும்
மதுக்குப்பிகளுடன் இங்கு நுழைகிறார்கள்
இவர்களின் வருகையால்
ஸ்தம்பிக்கிறது மணிக்கூண்டு கடிகாரம்
காலம் அகாலமாகி வெடித்துச் சிதற
வெளி அவெளியாகி சிதறிச் சிதறும்
இந்த மணிக்கூண்டு
வந்தேறிகளை ஒரு புராதான நகருக்குள்
அழைத்துச் செல்கிறது
உடன் கவிஞர்களும் இக்கவிதையை
உரக்க பாடத் தொடங்குகிறார்கள்

ஆக்கமுள்ள கூகை

ச. முகமது அலி

'முத்தைத்திரு பத்தித்திரு நகை...' என்ற நயமான அருணகிரிநாதரின் பழம்பாடல் ஒன்றை டி.எம். சௌந்தரராசன் சண்முகப்பிரியா ராகத்தில் தமிழ் உலகின் பட்டித்தொட்டி வரை பரப்பினார். ஆனால் புகழ்மிக்க அப்பாட்டின் இறுதிவரிகளான

'கொத்துப்பறை கொட்ட களமிசை
குக்குக்குரு குக்குக் குகு குகு குதிப்
புதை புக்குப் பிடியென முது கூகை
கொட்டிற்றெழ நட்பற்றவுணரை...!'

என்பதன்பால் கருத்தைச் செலுத்தியிருப்போர் எத்தனை பேர்? கூகையின் குரலொலி குறித்து தமது இலக்கியப் பார்வையில் அழகு சொல்லாட்சியுடன் அருணகிரியார் அமைத்துள்ளது போல வேறு எவரும் அமைத்திருப்பார்களா? வள்ளுவம், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, பதிற்றுப் பத்து, பட்டினப்பாலை, பெருங்கதை, புறத்திரட்டு, முத்தொளாயிரம், மணிமேகலை, ஆகிய முற்கால பாடல்கள் முதுல் அருணகிரியார் வரை... தற்போதும் கூட கூகை என்ற ஆந்தையின் பெயர் நம்மில் நிலைத்திருப்பது ஆச்சரியம் தான்! சில இடங்களில் கூகையை வெண்ணாந்தை என்கிறார்கள். ஆங்கிலத்தில் (தானியக்) களஞ்சிய ஆந்தை (Barn own) என்ற பொருளில் இவை அழைக்கப்படுவதும் பொருத்தமாக இருப்பினும் தமிழகத்தில் புல்மலைச் சரிவுகள் உள்ளிட்ட பல இடங்களிலும் இவை வாழ்கின்றன.

பழைய கட்டடங்கள், கோட்டை, கொத்தளங்கள், தானியக்குதிர்கள், பொந்துகள், சந்துகள் ஆகியவற்றில் குச்சில் புல் துணி, தாள் போன்றவற்றைக் கொண்டுகூடமைக்கும். இவற்றின் கரகரத்த கிரீச்சிடும் குரல் அந்திக்கருக்கலில் கூட்டை விட்டுப்புறப்படும் முன் எழுப்பப்படும் ஒலி காரணமாக Screech owl என்ற பெயரிலும் இது சுட்டப்படுகிறது. மேலும் ஹிஸ்ஸ் எனவும் தொண்டைக்குள்ளான கூக்... எனவும் சத்தமிடுவது பலரையும் பயமுறுத்தி பேய், பிசாசுக் கற்பனைகளை ஊக்கப்படுத்தி விட்டன. ஒரு ஆப்பிள் வடிவ வெள்ளை முகம், தட்டு போலவும், உடலின் முன்பகுதி வெண்மையாக, பின்பகுதி மஞ்சள் நிறத்தில் சிறு சிறு கரும்புள்ளிகளாகவும் உடலமைப்புள்ள இந்த வகை ஆந்தைகள் உலகமெங்கும் காணப்படுகின்றன.

ஆந்தைகள் பேரினத்தில் (Strigiforms) கூகையிடனம் (Tytonidae) இரண்டிலொரு பகுதியாகும். இதில் உள்ளினங்கள் மட்டுமே .ண்டு. ஆனால் மற்றொரு பகுதியான (Stigidae) ஆந்தைகளில் அதாவது Typical owl களில்

சுமார் 120 வகைகள் உலகுதழுவியவை. கூகையினம் இன்றி அமையாத இடங்களே இல்லையெனும் அளவிற்கு பனிபடர்ந்த பகுதியும் சரி, தகிக்கும் பாலையிலும் சரி, எங்கும் இரவு நாயககர்களாக இந்த இரவாடிகள் Nocturanal. விளங்குகின்றன. அந்திக்கருக்கல் முதல் வைகறை வரை தமது மென்மையான சிறகமைப்பால் துளியும் ஓசையின்றி பறந்து, திரிந்து, தமது பேரினத்திற்கேயுரிய நான்கு விரல் கூருகிர்களால் எலி, சுண்டெலிகளை மட்டுமே பற்றிக்கொன்று அலகால் தூக்கிச் செல்லும் ஒரு இரவில் 3, 4 என உணவாக அவற்றை அப்படியே முழுதாக விழுங்கிவிட்டு சிறிது நேரத்தில் கடுந்திறன் கொண்ட சீரண உறுப்புகளால் சத்துப் பொருட்கள் எடுத்துக் கொள்ளப்பட்டது போக எலும்புத்துண்டுகள் முடி, நகம் போன்றவற்றை நீறுருண்டைகளாக கக்கிவிடும் கூகைகள் வேளாண் தொழிலுக்கு ஏற்ற பெரும் நண்பர்களாக ஏன் விளங்குகின்றன என்பதை இப்போது கணக்கிடுங்கள்.

பொதுவாக ஆந்தைகள் யாவும் கெட்ட சகுணத்தடைகளாகவும், அகால மரணத்தின் குறியீடாகவும், மர்மத்தின் அடையாளமாகவும் பாவிக்கப்படுகின்றன. வெள்ளைக்காரர் வந்த பிறகு தான் தன் போர்ப்படை பிரிவுகளுக்கு ஓர் அடையாளச் சின்னமாக ஆக்கி வைத்தனர். இரவாக இருப்பினும் விழிப்போடு இருத்தலின் குறியீடாக அது உருவாக்கப்பட்டது - இன்றும் தொடர்கிறது.

காக்கையைவிட சற்று பெரிதான கூகை, பங்குனி மாதம் பகலில், காக்கைகளால் விரட்டிச்செல்லப்படக்கூடும். ஒரு வேளை அவற்றால் சுற்றிவளைக்கப்பட்டு துன்புறுத்தலுக்குள்ளாவதும் தற்செயலானதல்ல. இஃது கூகையின் இனப்பெருக்க அல்லது கூடுகட்டல் சார்ந்த வழக்காறுகளில் ஒன்றாக இருக்கலாம். இதைத்தான் வள்ளுவர் 'பகல்வெல்லும் காக்கை' என்று கூறினார் போலும்.

பெரிதும் அழிந்து வரும் இப்புள்ளிறனங்களைப் பாதுகாக்க விழித்துக்கொண்ட அறிவியலார்ந்த அயல் நாடுகள் கூகைகளையும் உச்சி முகர்ந்து அரவணைக்கத் துவங்கிவிட்டன. ஆனால் நாம்தாம் உடையில் எழிலாகவும், உள்ளத்தில் இழிவாகவும் இயங்கும் நிலையை உணர மறுக்கிறோம். ஆக 'ஆக்கங்கெட்ட கூகை' என்பதை விட ஆக்கங்கெட்ட மாந்தன் என்பதே பொருத்தமானது.

ஓவியம் : முகமது அலி   படம் : சண்முகாநந்தம்

தொடரும் கொடுங்கனவின் சாட்சியாய்

மாதங்கி

வான்வெளியில் கொல்லப்பட்டன அந்தப் பறவைகள். கொலைகளுக்கெதிராக நட்சத்திரங்களும் மேகங்களும் காற்றும் கதிரவனும் சாட்சி கூறா விட்டாலும் அடிவானம் அதற்கு செவிமடுக்க விரும்பாவிடினும் மலைகளும் அருவிகளும் அவற்றை மறந்து விட்டாலும் ஏதேனுமொரு மரம் அக் கொடுஞ்செயலைப் பார்த்துத் தானிருக்கும் தன் வேர்களில் அக்கொடியோரின் பெயர்களை எழுதி வைக்கத்தான் செய்யும்.

– ஷெர்கோ பெகாஸ் (குர்தீஷ்)

(தமிழில் எஸ்.வி.ஆர்./பாலம் செப் 1988)

நிகழ்வுகளைக் கள ஆய்வு செய்து - Reportingகைச் செய்தியாக்கும் நடைமுறை வழக்கொழிந்துபோய், செய்திகளை உற்பத்தி செய்வது Creation of news என்கிற ஊடக இயக்கத்தினூடாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எவற்றையெல்லாம் நாம் கேட்க/பார்க்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களோ - எவையெல்லாம் லாபம் தரும் என அவர்கள் கருதுகிறார்களோ அவற்றையெல்லாம் செய்திகளாக உற்பத்தி செய்து நமக்கு வழங்குகிறார்கள். தெரிவு செய்யும் உரிமை மறுப்பு என்பது நமது அன்றாட நுகர்பொருட்களுக்கு மட்டுமல்லாது எதுவொன்றின் மீதான நமது கருத்தாக்கத்திற்கும் சேர்த்துத்தான். இன்றைய பின் நவீன - உலகமய - மறுகாலனிய உலகில் நொடிக்கொருமுறை மாறிமாறி ஒளிரும் வண்ணக்கலவைகளையும், பல்திசைவழிக்குரல்களையும் எந்நேரமும் உமிழ்ந்து கொண்டிருக்கும் தொலைக்காட்சிகளுக்கு முன்பாக கட்டுப்பாடிழந்த ரிமோட் கண்ட்ரோலினை விரல்களால் தடவியபடி - செவிப்புலணந்து நிறக்குருடர்களாய் நாம் அமர வைக்கப்பட்டிருக்கிறோம். ஈழம் குறித்து நமது நிலையும் அங்கனமே

சிங்கள அரசு / ராணுவத்தின் பேரினவாத ஒடுக்குமுறை - கொடூரத்தாக்குதலினூடாக செத்துச் செத்தப் பிழைந்துக் கொண்டிருக்கும் தமிழீழமக்கள் - மறத்தமிழரின் - புலிகள் வீரம் -தற்கொலைத் தாக்குதல் - வான் / கடல் வழித்தாக்குதல்கள் - வெற்றி - பிரபாகரன் .... என்பன போன்ற (தமிழ் பிழைப்பு வாதிகளின்) சொல்லாடல்களினூடாக உணர்வெழிச்சிமிக்க பொதுமனநிலையொன்று உருவாக்காக்கப்பட்டு மறைந்துக்கிடக்கும் அவற்றின் உண்மை நிலைகள் குறித்த பிரக்ஞை மௌனமாய் உறைய வைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில், தமிழீழத்தில் சாதியத்தின் கொடூர வரலாறு குறித்தும், ஆயுதக் குழுக்களின் மக்கட் கொலைகள் குறித்தும் இதுவரையிலுமில்லாத அளவில் விரிவான பதிவுகளுடன் வெளிவந்திருக்கிறது தோழர் ஷோபாசக்தியின் இச்சிறுநூல். புனை வெழுத்தின் ஈர்ப்பு மிக்க மொழியுடன் ஷோபாசக்திஎழுதியுள்ள ஜெனேயின் பணிப்பெண்கள் நாடக விமர்சனம், மதுக்குரல் மன்னன் கே.எஸ்.ராஜாவின் கொலை, கண்டனங்களினூடாக ஆணிவேர் தம்பி குறைப்பட விமர்சனங்கள் போன்ற கட்டுறைகளும் இந்நூலில் அடக்கம்.

இந்திய தேசிய விடுதலைப் போராட்டங்களின் போது வெளிப்பட்ட இந்துத்துவ / ஆதிக்க சாதி நலன்களுக்கு எதிரான இடையறாத போராட்ட

ங்கள் அம்பேத்கர், பெரியார் போன்றோரால் பரந்துபட்ட மக்கள் இயக்கங்களாக உருவெடுத்து அவற்றின் வெற்றி - தோல்விகளுடன் பல்வேறு அளவுகளில் இயங்கி வருகின்றன. தொண்ணூறுகளில் புதிய வீர்யத்துடன் உயிர்த்தெழுந்து தலித் இயக்கங்கள், செயல்படத் தொடங்கியபோது தலித் கருத்தாக்கம் குறித்து சமூக வெளியில் முன்னெடுத்துப் பேசி, விவாதங்களை ஒருங்கிணைத்து அதன் முன்னகர்விற்கான குறிப்பான பங்கை அளித்தவர்கள் என அ.மா., ரவிக்குமார், எஸ்.வி.ஆர், ராஜ்கவுதமன், சிவகாமி.... என்று தொடங்கி ஒரு மிகப் பெரிய அறிவாளர் கூட்டமே இங்கு செயல்பட்டது.

ஆனால் ஈழத்தில் செயல்படும் சாதிய உணர்வுகள் குறித்து டானியல், டொமினிக் ஜீவா, நந்தினி சேவியர் தொடங்கி ஷோபா சக்தி வரையிலான படைப்பாளிகள் பதிவு செய்த அளவிற்கு எந்த இடதுசாரி சமூக ஆய்வாளரும் பதிவு செய்யவுமில்லை முன்கையெடுத்துச் செயல்படவுமில்லை என்றே முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

தமிழகத்தை விட தமிழீழத்தில் / புகலிடங்களில் மேலோங்கியுள்ள சாதியாதிக்கத்திற்கு இதுவொரு முக்கிய காரணமெனத் தோன்றுகிறது. ஈழத்து இடதுசாரி சிந்தனையாளர்கள் / ஆய்வாளர்கள் மீது ஷோபாசக்தி முன்வைக்கும் இந்த நியாயமான குற்றச்சாட்டு வரலாறு முழுவதும் அவர்கள் மீதான ஒரு கரும்புள்ளியாகவே தொடரும்.

கொடிக்கால் என்ற இடத்தில் (பஞ்சமரில் இரத்தினம் என்ற பாத்திரம் ஒருமிடம்) இரத்தினத்தின் உறவினரான 22 வயதுடைய ஒரு இளைஞன் பட்டப்பகலில் சந்தைக்குள் வைத்து வெட்டி வீழ்த்திச் சுமார் இரண்டு மணிநேரம் வரை மறுபடியும் வெட்டித் துண்டு துண்டாக்கிவிட்டனர். இச்சம்பவம் நடக்கும்போது சந்தையைச் சுற்றி சுமார் 500 பேர்கள் வரை நின்று வேடிக்கை பார்த்திருக்கின்றனர். முதலில் ஒரு தடவை அவனை வெட்டி வீழ்த்திவிட்டுப் போகவே அவனின் சிறிய தாயானவள் வந்து பக்கத்திலிருந்த கடையில் தண்ணீர் தரும்படி கெஞ்சிப்பார்த்தாள், அந்த அறந்தமிழர்கள் யாருமே தண்ணீர் கொடுக்கவோ கார் விடவோ இல்லை. மறுபடியும் சுமார் 50 பேர் வரை வந்து அவனைத் துண்டு துண்டாக்கி உயிரை எடுத்துக் கொண்டனர். இத்தனைக்கும் அந்த இளைஞன் செய்தது ஒரு வேளாளினுக்குக் கைநீட்டி அடித்துவிட்டது. அவ்வளவுதான்.

- கே.டானியல், 12.06.1984.

முதல் கட்டுரையில் தமது அல்லைப்பிட்டி என்கிற கிராமத்தினை எளிய மனிதர்களை போரிருள் சூழ்ந்த கதையினைச் சொல்லத் தொடங்கும் ஷோபாசக்தி தொடர்ந்து அய்ந்து தலைப்புகளில் மொத்தத் தமிழீழத்தின் குரூரமூலம், அவலமூலம் நிரம்பிய - கதைகளை நம்மைக் குற்றவுணர்வும், வெட்கமும், அவமானமும் கொள்ளத்தக்கவகையில் சொல்லிச் செல்கிறார். பக்கங்கள் தோறும் அலைவுறும் பட்டியல்கள் - கணக்குகள் அரசபடைகள் / புலிகள், பிற ஆயுதக்குழுக்கள்.... என்போரால் செய்யப்பட்ட படுகொலைகள், ஆதிக்க சாதித் தமிழர்கள் அப்பாவித் தமிழர்களை (ஆயுதக் குழுக்களை வைத்து) கொன்றொழித்த.. எண்ணக் கணக்குகள் .... பட்டியல்கள்... என நம்மைத் தற்கொலைக்கு தூண்டும் மனிதப் படுகொலைக் காட்சிகள் இலங்கையில் நாற்ப

துகளில் தொடங்கி செயல்பட்டுக் கொண்டிருந்த சிறுபான்மை தமிழர் மகாசபை,
சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினர், தீண்டாமை எதிர்ப்பு போன்ற சமூக இயக்க
ங்கள் எழுத்துக்கள் வரையிலும் சாதியாதிக்கத் தீண்டாமைக்கு எதிரான இடை
டயறாத போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தன. இடையில்1956 ஜூலை
யில் இயற்றப்பட்ட சிங்களம் (மட்டுமே) ஆட்சி மொழிச்சட்டம். பின்னர்
அதைத் தொடர்ந்து 1958ல் தோன்றிய தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம்
அதனடிப்படையில் உருவான தமிழ்தேசிய இயக்கங்கள் குறிப்பாக நிகழ்வு
களின் மூலம் ஷோபா சக்தி தோலுரித்துக் காட்டுகிறார். தேசியத்தின் பெயரால்
சாதியாதிக்கத்திற்கு எதிரான குரல்களை - பல்வேறு ஆயுதக் குழுக்களாலும்
துடைத்தெரிந்து முற்றிலுமாய் மௌனமாக்கப்பட்ட நிலை முழுவதும் சான்று
களுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேசியம், சுயநிர்ணய உரிமை, கூட்டின் சிறையை, சமாதான சகவா
ழ்வு போன்ற சொற்கள் யாவும் அவற்றின் உண்மை முகமழிந்து, அர்த்தமற்று
அலைவுற்றுக் கொண்டிருக்கும் உலகமய சமகாலச் சூழலில் - அமெரிக்க அய்க்
கிய (ஐ.நா அல்ல) நாடுகள் அவையின் சிறப்பு விசாரணையாளர் பிலிப்அல்ஸ
ட்டனின் அறிக்கையினைக் கட்டவிழ்த்து அதில் வெளிப்படும் போலி மனித
உரிமைப் பற்றையும், போலி சனநாயக உணர்வையும் தோலுரித்துக் காட்டியு
ள்ள ஷோபா சக்தியின் கட்டுரை முக்கியத்துவமுடையதாக விளங்குகிறது.

நாற்புறமும் கடல்சூழ்ந்த தமிழீழத் தீவில் மீனின் விலை ஆயிரம் ரூபாய்க்கு
மேல், சர்க்கரை ரூ.500, பெட்ரோல் ரூ.1000க்கு கிடைப்பதில்லை, குழந்தை
களுக்கான பால்மாவு கிடைப்பதில்லை.....என்கிற அவலநிலை. பேரினவாத
அரசின் பொருளாதாரத் தடை ஏழுபுறலமனில் புலிகளின் உத்தரவின் பேரில்
அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி வைக்கும் வணிகர்கள் மறுபுறம்.
வேலையிழந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் (சிங்கள / தமிழர்).

அரசுக்கு ஆதரவான அவசரச் சட்டம், ராணுவச் செலவுகளை அதிகம
ாக்குதல்... அவ்வப்போது அவசரநிலைப் பிரகடனம் என்று பதற்ற நிலையி
னால் வேலையின்மை, வறுமை, தற்கொலைகள், சிறார் மரணங்கள்..... என
தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு போகும் சமூக துயரங்கள் அனை
த்திற்கும் அடிப்படையான ஷோபாசக்தி ஊடாக தலித் தேசியம்,
இஸ்லாமியத தலித் தேசிய அங்கீகாரம் போன்ற கோரிக்கைகளுக்கான
நியாயங்களையும் முன் வைக்கிறார்.

வர்க்கரீதியாக இணையும் போது மறைந்துவி
டும், தேசிய உணர்வில் கரைந்து விடும், மதத்திரட்சியினூ
டாக ஒழிந்து விடும் என்றெல்லாம் வாய்ப்பாடு படிக்கப்ப
ட்டு வளர்த் தெடுக்கப்பட்ட சாதியம் எல்லாவற்றையும்
பொய்யாக்கிவிட்டு... படுகொலைகளும், விரட்டப்படு
தலும், கீழறப்புபளுமாக தீராக் கொடுங்கனவாய் நம்
மைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கான
காட்சியாய், ஆவணமாய் ஷோபாசக்தியின்
இந்நூல் விளங்குகிறது.

விஸ்வநாதன் கணேசன் கவிதைகள்

ஓரிசைச் சேர்க்கை
தேற்றத் தொனியில்
சாக்கடைச் சகதி மீதான
என் மஞ்சள் மூத்திரம்
தேற்ற வெளிதனில் வரு நிலா
வந்த நிலா
நிலப்பரப்புக் கடத்தியது
மஞ்சளாளுமை நீக்கிய
வைத்தியக் கூறுகளை
நட்டால்
என்ன மயிருப் பயிர்
செய்வது
ஓர் இசை
குன்றில் மறையும்
இந்தக் கணத்தில்

விஸ்வநாதன் கணேசன் கவிதைகள்

சூரியனின் ஏழாவது குதிரை

நடுவாக்கில் பிளந்து நின்ற
வாழையொன்றின் பிறழ்வு
எம் இருப்பு
ஐந்து அல்லது ஆறில்
வகைப் படுத்தப்பட்டு விட்ட
பிளவைப் பார்த்து
பதறியடித்துத் தெறித்தன
நால்வகைத் தாவரங்கள்
ஆற்றில்
பூச் சனம்
சேற் றமைதி
சுழு ஒழுக்கம்
நில வொளி
சூரியக் கூசல்
நிறப் பேரிகை

விஸ்வநாதன் கணேசன் கவிதைகள்

அடிக் கோடு

மணமக்கள்:
அ.செல்வஇராஜன்
டே. ரோஸி

மணநாள் :
நான்காம் பிறை நாள், சர்வஜித்து வருடம்

பித்தளைப் பாத்திரங்கள்:
ஒரு ஜெப மாலை
ஒரு தர்ப்பம்
ஒரு சங்கு
புனித நீர் - கொள்ளளவு
 ஒரு குண்டான்

துருவி வெள்ளிப் பாத்திரங்கள்:
பல ஜெபமாலைகள்
பலத் தர்ப்பங்கள்
பற்பலச் சங்குகள்
புனித நீர்கள்
ஒரே குண்டான்

செந்தில் நாதன் :
ஊர்தியானவன்
பல்வேறு அழைப்பிதழ்களின்
ஒரே கணிணிப் பிரதி
ஒரே அத்தான் கண்டடைந்த விபத்து
ஒரே ஒரு விடுப்பு
அழைப்புகளின் ரீங்காரம்

அ.செல்வஇராஜன் :
கையடிக்காதிருத்தல்
சரக்கு இறைத்தல்
சரோஜாதேவி அல்லது ஒன்றுமில்லை

டே. ரோஸி :
இறைமை நல்கிப் போகின்ற
போதனை வாழ்வு
சருமப் புதுக்குகளின்
வெம்மை தணித்தல்
பற்பலப் பூசல்கள்

தமிழ் :
ஒரு கல்யாணம் இனிதே நடைபெற
ஆசீர்வாதங்கள்

நெடும் பயணத்தின் முதல் காலடி

நாவல், சிறுகதை, கட்டுரை போன்றவற்றை ஆர்வமுடன் வாசிப்பவர்களைக் காட்டிலும், கவிதையை விரும்பிப் படிப்பவர்களின் தொகை மிகக் குறைவானதே ஆயினும், ஆண்டு தோறும் அச்சடிக்கப்பட்டு வரும் ஆயிரக்கணக்கான நூல்களில், அதிக எண்ணிக்கையை கொண்டிருப்பது கவிதைத் தொகுப்புகளாகவே இருக்கும். இம்முரண்பாட்டினை மேலும் ஆராய்வோமெனில், ஆழமான அனுபவப் பகிர்வை நல்கும் அசலான கவிதைகளுடன், மேலோட்டமான கருத்துக்களுடன் கூடிய, உணர்ச்சிகரமான வரிகளும் கவிதை எனும் பெயரில் ஏராளமாக எழுதப்படுகின்றன என்ற எளிய உண்மையை எழுதப்படுகின்றன என்ற எளிய உண்மையை நாம் காணலாம். அசலையும், நகலையும் தெளிவாகப் பிரித்தறியக்கூடிய புறவயமான வழிமுறைகள் எதுவும் இல்லாததால், சந்தைக் கூச்சலுக்கு நடுவே தன்னை தொலைத்துவிட்டு விழிக்கும் குழந்தையாகி நிற்கிறது நிஜமான கவிதை

கண்ணில் படும் கவிதை வரிகள் குறிப்பான ஆர்வமேதுமின்றி மேலோட்டமாக வாசிக்கத் துவங்கும் ஒரு வாசகன் ஏதோ ஒரு தருணத்தில் ஆழமானதொரு மனநகர்வை அடைகிறான். கவிஞனின் உத்தேசமும், கவிதையின் சொற்களும், வாசகனின் லயிப்பும் சந்திக்கும் அந்த மாயத்தருணத்திலேயே ஒரு கவிதை முழுவதுமாகத் தன்னை திறந்து கொள்கிறது. ஒரு நுட்பமான வாசகன், தன மன அந்தரங்கத்தில் எந்த அளவிற்கு ஒரு கவிதையை மீது நெருக்கமாக உணர்கிறானோ அந்த அளவிற்கு அது விளக்கத்திற்கு அப்பாற்பட்டதாகவும் இருப்பதை அறிவான்.

ஒரு கவிஞன் தன் வாசகனுக்கோ, தனது கட்சிக்கோ தான் நம்பும் கருத்தியலுக்கோ கட்டுப்பட்டிருப்பதைக் காட்டிலும், தனது மனசாட்சிக்கு அதிகமும் கடமைப்பட்டவனாக இருக்கிறானா என்பதையே நாம் ஆராயவேண்டும் அவ்வகையில் பாம்பாட்டிச் சித்தனின் கவிதைவரிகள் அவருடைய சுயமான மனநெருக்கடிகளின்றும் பிறந்த தார்மீகமான அக்கறையுடன் எழுதப்பட்டவை என்பதை முதல் வாசிப்பிலேயே அறிந்துகொள்ள முடிகிறது. முன்னோடிகளின் பாதிப்புகள், வெளிப்பாட்டு மொழியில் தத்தளிப்புகள் என முதல் தொகுப்பிற்கேயுரிய பலவீனங்கள் சிற்சில இடங்களில் காணப்பட்டாலும் போலி பாவனைகளோ, செயற்கை ஆவேசங்களோ இன்றி தனக்கானதொரு தணிவான குரலைக் கொண்டிருக்கிறது இத்தொகுப்பு

ஒரு சோற்றுப்பதமாக பக் -55ல் உள்ள மூன்று சிறிய கவிதைகளை நோக்கலாம். இவற்றை மாதிரியாகக் கொண்டு தொகுப்பின் மற்ற கவிதைகளையும் வடிவரீதியாக நாம் வகைப்பிரித்துவிடலாம் என்றே தோன்றுகிறது.

கதிரவனின் ஒளிவிரல்கள்
திசைகளின் இருளினுள் பரவி
கண்களுக்கு கொணர்கின்றன
விடியல் பூவை

★

வெட்டிய நகங்கள்
விழுந்த இடமெல்லாம்
விரல்கள்

★

யாரோ வெட்டியிருந்த நகங்கள்
யாருடைய விரல்களையோ
நினைவூட்டிக் கொண்டு

★

முதல் கவிதையிலுள்ள 'ஒளிவிரல்கள்', 'விடியல் பூ' போன்ற பதங்களாலான மரபான உருவகங்கள் தற்காலத்திய கவிதைகளில் செல்வாக்கிழந்து போன ஒன்றாகும். தொகுப்பின் வேறு சில இடங்களிலும் பயின்று வரும் இது போன்ற உருவகங்கள் கவிதையின் இயல்பான தொனிக்கு பெரும்பாலும் இடையூறாகவே அமைகின்றன.

இரண்டாவது கவிதை ஆகக் குறைந்த சொற்களில் மிகத்துல்லியமானதொரு காட்சியை எழுப்பிக் காட்டுவதாக அமைந்துள்ளது. கவிதை தோற்றுவிக்கும் உணர்விற்கு அநாவசியமான விவரங்கள் தவிர்க்கப்பட்டிருப்பதால் வாசகனின் கற்பனைக்கும் இடமளிப்பதாக இருப்பது இதன் சிறப்பு.

மூன்றாவது கவிதையானது, இரண்டாம் கவிதையின் விளக்கவுரைபோல அமைந்திருக்கிறது. விளக்கம் தருவதாக அமைந்த சொற்களின் விரயத்தினால் கவிதை எழுப்பும உணர்வு எவ்விதம் குறைவுபடுகிறது என்பதை இருகவிதைகளையும் ஒருசேர படிக்கும் ஒருவர் உடனடியாக உணரமுடியும்.

பெரும்பாலும் வாழ்வை அவநம்பிக்கையுடன் நோக்கும், ஒரு வித வறண்ட மனநிலையை பிரதிநிதித்துவப்படுத்துவதாக உள்ளன என்பது இன்றை நவீனத்துவக் கவிதைகள் பற்றி வைக்கப்படும் ஒரு பொதுவான குற்றச்சாட்டு. ஆனால், இத்தொகுப்பில் நிறைந்துள்ள இயற்கையை பற்றின காட்சிப் படிமங்களும், குழந்தைகளின் வாஞ்சைமிக்க உலகமும், மகிழ்ச்சியானபசுமை நிறைந்த, பிரகாசமான தொரு மனநிலையை நிலையை பிரதிபலிப்பதாக அமைந்திருப்பதை சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

தான் உத்தேசிக்கிற விதமான விளைவை ஏற்படுத்தும் வண்ணம் கச்சிதமாயும். துல்லியமும், தெளிவும் கொண்ட மொழியை கண்டடைகிற பயணம் துவங்குகிறது ஒரு கவிஞனின் அசலான பயணம் துவங்குகிறது எனலாம். அவ்வகையில் இந்நூலின் இறுதிக் கவிதையை முதன்மையாகக் குறிப்பிட வேண்டும்.

இறுதியாக ஒன்று, பாம்பாட்டி சித்தன் என்ற பெயரை கண்ணுற்றதுமே, பொதுப்புத்தியுடன் ஒத்தோட மறுத்து, அழுத்தமாக ஒலிக்கும் எதிர்கலாச்சார குரலொன்று நம் நினைவில் எழுவதை காணலாம. இத்தொகுப்பின் சாரமாக அமைந்திருக்கும் இவருடைய குரல், இந்தப்புனைப் பெயருடன் எந்த அளவிற்கு ஒத்துப் போகிறது அல்லது முரண்படுகிறது என்பதை பாம்பாட்டிச சித்தன் என்கிற சௌரிராஜன்தான் யோசிக்க வேண்டும்.

- க. மோகனரங்கன்.

குற்றவுணர்வின் மொழி - பாம்பாட்டிச்சித்தன்
அன்னம்,
1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் - 613 007.
பக்கங்கள் 75 விலை ரூ. 50

நகுலன் - சில குறிப்புகள்

ஆர். ராஜகோபாலன்

1

ராமச்சந்திரன்

ராமச்சந்திரனா
என்று கேட்டேன்
ராமச்சந்திரன்
என்றார்
எந்த ராமச்சந்திரன்
என்று நான் கேட்கவில்லை
அவர் சொல்லவுமில்லை

வாழ்வின் முக்கிய அம்சம் ஒருவரை ஒருவர் முதலில் தெரிந்து கொள்வது. அறிந்து கொள்வதின் முதல் கட்டம். ஆனால் அதுவே சிக்கலாகிப் போகிறது. எனக்கு அவரைத் தெரிகிறது அவருக்கு என்னைத் தெரியவில்லை. இருவருக்கும் ஒருவரை ஒருவர் தெரியவில்லை. இப்படித்தான் நாம் வாழ வேண்டியிருக்கிறது. போகப் போக வாழ்க்கை முதலில் புரிந்து கொள்வதில் பின் செயலாற்றுவதில் சிக்கலாகவும் மிகப்பெரிய புதிராகவும் உள்ளது. நகுலனின் மேதமை இப்புதிரை கட்டுடைப்பதில்தான் வெளிப்படுகிறது. வாழ்வின் அம்சங்களை எந்தவித பூச்சும் இல்லாமல் கூர்மையான அறிவின் திறன் கொண்டு கட்டுடைத்து அறையைப் பார்க்கிறார்.

ஸ்டேஷன்

ரயில் விட்டிறங்கியதும்
ஸ்டேஷனில் யாருமில்லை
அப்போதுதான்
அவன் கவனித்தான்
ரயிலிலும் யாருமில்லை
என்பதை ;
ஸ்டேஷன் இருந்தது.

அது ஸ்டேசன் இல்லை என்பதை
என்று நம்புவதிலிருந்தும்
அவனால் அவனை
விடுவித்துக் கொள்ள
முடியவில்லை
ஏனென்றால்
ஸ்டேஷன் இருந்தது.

எல்லா நிகழ்வுகளுமே புதிர்கள்தான். மனிதர்களை சரியாக புரிந்துகொள்ள அவர்களை தோலுரித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. எந்தவித பாசாங்கும் போலித் தத்துவமும் இல்லாமல் மனிதர்களைக் காணும்போது வியப்பாகவும் இருக்கிறது. கசப்பாகவும் இருக்கிறது. யார் எதை அடைந்து விட்டதாக பொருளும் கொண்டாலும், இன்னும் பேய்கள் சிரித்துக்கொண்டுதான் இருக்கின்றன. மனிதர்களில் உண்மையானவர்கள் இருக்கிறார்களா அப்படியென்றால் எப்படி இருப்பார்கள் இன்னும் இன்னும் கட்டுடைக்க வேண்டும் என்பது போல.

வாழ்வு போலவே மனித மனமும் - வாழ்வு அதை அதிகமாகச் சார்ந்திருப்பதால் - மிகப்பெரிய புதிராயிருக்கிறது. ஆனால் இதில் ஒரு சௌகரியம் மனம் என்ன நினைக்கிறது என்ன திட்டம் போடுகிறது என்று நம்மைத் தவிர யாருக்கும் தெரியாது. நமக்கு மட்டும் தெரியும் நாமும் நம்மை மறைத்துக் கொள்ளலாம், மறந்தும் போகலாம்.

அலைகள்

நேற்று ஒரு கனவு
முதல் பேற்றில்
சுசிலாவின்
கர்ப்பம் அலசிவிட்டதாக
இந்த மனதை
வைத்துக் கொண்டு
ஒன்றும் செய்யமுடியாது.

மனதையும் கட்டுடைக்க வேண்டும் இப்படிச் செய்தால் எல்லோரும் வெளிப்படையாகத் தெரிவார்கள். அவர்கள் எண்ணமும் நடவடிக்கையும் ஆசையும் நிராசையும், போட்டியும் பொறாமையையும் புரிந்து போகும். ஆனால் இப்படியெல்லாம் யோசித்துச் செயல்படுவதற்கு மிகுந்த தைரியம் வேண்டும். பயமின்மை வேண்டும் எந்தவிதமான அங்கீகாரத்தையும் விரும்பக்கூடாது. யாரைப்பற்றியும் எதைப்பற்றியும் அப்படியே சொல்லும் துணிவு வேண்டும். தன்னையே முதலில் இன்னொருவராக பார்த்து அலச வேண்டும். இப்படித்தான் வாழ்க்கையை கைகொள்ள வேண்டியிருக்கிறது. இந்த வெளிப்பாட்டில் முதிர்ச்சி, கசப்பு, இனிப்பு, ஆச்சரியம், விமரிசனம் எல்லாம் கலந்து இருக்கிறது.

மனித மனத்தை இந்த அளவிற்கு அலசியவர் நகுலனைத் தவிர யாருமில்லை. அவருடைய ஆழ்ந்த அகலமான வாசிப்பு, கூர்ந்த அறிவு எதையும் ஊடுறுவிப் பார்க்கும் தன்மை என பல ஆயுதங்களைக் கொண்டு வாழ்வை கணிக்க முற்படுகிறார். வாழ்வின் நுணுக்கங்களை மனித மனத்தின் நுட்பங்களை அறிந்துகொள்ள துடிக்கும் அனைத்து படைப்பாளிகளுக்கும் நகுலன் ஒரு முன்னோடி.

2

நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமான காலகட்டத்தில் வாழ்ந்தவர் நகுலன் நவீன தமிழ்க்கவிதையுள் தொடக்க காலம் முதல் சி.சு. செல்லப்பா, க. நா. சு முதல் இன்றுவரை எழுதிக்கொண்டு வந்திருப்பவர். மேற்சொன்ன வாழ்வு பற்றிய புரிதல்களை இலக்கியத்தில் கொண்டுவர என்ன மாதிரியான இலக்கிய வடிவங்கள் தேவை? நிச்சயமாக மரபானவை அல்ல. பின் தானே உருவாக்கிய பரிசோதனை முயற்சிகளாகும். அவை மரபை முற்றாக தவிர்த்தாலும் காலங்காலமாக ஆட்கொண்டிருக்கும் தத்துவ விவரங்களை தவிர்க்க முடிவதில்லை. கவிதையின் பொருள்போல வடிவமும் வேறு வேறு திசைகளைக் கைகொள்கின்றன.

புதினங்களிலும் நகுலன் வேறுபடுகிறார். அவருடைய குருஷேத்திரம் தொகுதியில் 'ரோகிகள்' மூலம் அவருடைய வித்தியாசமும், கசப்பும், வீரியமும் வெளிப்படுகின்றன. புதுமைப்பித்தனும் மௌனியும் இரண்டு பரிமாணங்கள் என்றால் நவீன தமிழ் புனைகதையில் நகுலன் மூன்றாவது பரிமாணம். அநேர் இலக்கியங்களுக்கு தமிழில் பாதை வகுத்துக் கொடுத்தவர். நனவோடை உத்தி என்று சொன்னாலும் சரி வாழ்வு பற்றிய கடைசி வரையிலான அலசல்களை புகுத்தி அதை விண்டு கண்டு சொல்வது கைவந்த கலையாய் அவருக்கு முடிந்திருக்கிறது. அவரை வெளிப்படையாக ஏற்றுக் கொள்வதில் தயக்கம் ஏற்பட்டாலும் அவருடைய ஆளுமை பலருடைய எழுத்துகளில் முகம் காட்டகிறது எனலாம். பழைய

இசைமேதைகளின் இசையை இன்றும் நன்றாக அனுபவிக்க முடிகிறது. திளைத்து மூழ்க முடிகிறது. புதிதாக படைப்புகளும் காலத்தைத் தாண்டி வாசிக்க வாசிக்க புதிய பரிமாணங்களையும் - வாழ்வு பற்றிய - நம்மை நாமே அறிந்து கொள்ளவும் கணிசமாக செயல்படுகின்றன என்பதில் ஐயமில்லை.

ழ வெளிவந்து கொண்டிருந்த காலத்தில் திரு. நகுலன் சென்னைக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தார். அவருக்குச் சென்னையில் உறவினர்கள் இருந்தார்கள். ழ ஏட்டின் மூலமாக அவருடன் கடிதப் போக்குவரத்து என நல்ல பரிச்சயம் ஆகியிருந்தது. முதல் கட்டத்திலேயே அவருடைய இயல்பான பேச்சும் ஒளிவுமறைவில்லாத் தன்மையும் நம்மை ஆட்கொண்டுவிடும். வயது ஒரு பொருட்டே யில்லை. இலக்கியம் பற்றி விவாதிக்கவும் ஏன் மற்ற விஷயங்களுக்கும் அவர் சிறந்த நண்பராக விளங்கினார். சென்னையில் அவர் ஏதாவது விடுதியில் தங்கினாலும் அல்லது கவிஞர் ஆனந்த் போன்ற நண்பர்கள் வீட்டிலோ இரவு முழுவதும் ஞானக்கூத்தன், ஆத்மாநாம், ஆனந்த், வைத்தியநாதன் நான் என்று பேசிக்கொண்டிருந்த தருணங்கள் பல. நடுஇரவு வரை பேசிவிட்டு பின் காலை வந்து பார்த்தால் நாம் பேசியதை எழுதி வைத்திருப்பார். அவரிடம் எதையும் பேசமுடியும் என்பது தான் சிறப்பு. திரு. க. நா. சு அவர்கள் சென்னையில் இருந்தபோது திரு. நகுலன் வந்திருந்தார். அனைவரும் அவருடன் சிலநேரம் கழித்தோம். பிறகு க. நாசு எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் 'நீங்கள் நகுலனைக் கருதுவதைப் போல என்னையும் நண்பனாகக் கருதலாம்' என்று. ஆனால் இதில் நகுலன் தான் எங்களை நண்பர்களாக கருதிவந்துள்ளார் என்பது இப்போது யோசிக்கையில் புரிகிறது. யாரைப் பற்றியும் எதைப்பற்றியும் தயங்காமல் கருத்து கூறுபவர். 'ழ'வில் வெளிவந்த பல புதிய கவிஞர்கள் பற்றி - இன்று அவர்களில் பலபேர் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களை தயங்காமல் பாராட்டுரை வழங்கியவர். ஒவ்வொரு முறை படைப்புகளை அனுப்பும்போதும் பிரசுரிக்க இயலவில்லையென்றால் திருப்பி அனுப்ப உரிய தபால் தலைகளுடன் அனுப்பி வைப்பார். அந்த அளவிற்கு நமக்கு ஒரு வெளி அவரிடம் இருந்தது என்பது முக்கிய அம்சம்.

ஒரு நண்பர் என்ற அளவில் அவருடன் கழித்த நேரங்கள் மிகுந்த நிறைவை அளித்தவை எப்போதும் மனதை விட்டு நீங்காதவை புதிரான வாழ்வு பற்றி சொல்லவந்த அவர் ஒரு புதிரா சொல்ல இயலவில்லை. ஆனால் அவருடன் கூட எப்போதும் இருக்கும் மகிழ்ச்சி அவருடைய சிரிப்பு அபூர்வமானது.

காலம் என்னும் பெருவெளியில் நம்முடைய அல்லது அவருடைய காலத்தில் பலமணி நேரங்கள் கழிக்க வாய்த்திருந்தது பெரும்பேறுதான் என்று முடிவாகச் சொல்லத் தோன்றுகிறது.

நகுலன் - சில நினைவுக் குறிப்புகள்

அழகியசிங்கர்

முதன்முதலாக நகுலனைப் பற்றி எப்போது நான் தெரிந்து கொண்டேன். ஒருமுறை வைத்தியநாதனுடன் (தீவிர வாசகர், ழ, விருட்சம் இதழ்களில் கவிதைகள் அதிகம் எழுதியவர்). நான், ஆத்மாநாம், மூவரும் ஆனந்த் வீட்டிற்குச் சென்றோம். எனக்கு வைத்தியநாதனைத் தெரியும். அவருடைய கவிதைகள் சில ழவில் அப்போது வெளிவந்து கொண்டிருந்தன. நான் அப்போது வங்கியில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். கதை, கவிதைகள் எழுதத் தெரிந்தவன். ஆனால் தமிழில் தீவிரத்தன்மை கொண்ட படைப்புகளை ஆர்வமாய் தேடிப் போய் வாசிப்பவன். என்னை தீவிர எழுத்துக்கு அறிமுகப்படுத்தும் நோக்கமாகத்தான் வைத்தியநாதன் என்னை ஆனந்த் வீட்டிற்கு அழைத்து வந்தார். கூடவே எங்களுடன் வந்து கொண்டிருந்த ஆத்மாநாமிடம் என்னை அறிமுகப்படுத்தினார்.

ஆனந்த் வீட்டிற்கு வந்தவுடன், வைத்தியநாதன் சொல்லியபடி, நாலைந்து 'ழ' வெளியீடு புத்தகங்களைக் கொடுத்தார். நான் மகிழ்ச்சியுடன் அவற்றை விலைக் கொடுத்து வாங்கினேன். ழ புத்தகங்கள் எல்லாம் விலை குறைவாக இருந்ததோடல்லாமல் நல்ல தரத்துடன் தயாரிக்கப்பட்டிருந்தன. உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டிருந்தன. அதில் ஒரு புத்தகம், 'கோட்-ஸ்டான்ட் கவிதைகள்'. அதை எழுதியவர் நகுலன். அப்புத்தகம் தயாரிப்பு முறையும், அதை அச்சிடப் பயன்படுத்திய தாளையும் கண்டு நான் வியந்து போனேன். 'காகிதத்தில் கோடு' என்ற ஆத்மாநாம் புத்தகத்தில் அவருடைய கையெழுத்தையும் வாங்கி வைத்துக் கொண்டேன்.

நகுலன் இந்தப் புத்தகம் மூலமாகத்தான் எனக்கு அறிமுகமாகிறார். அவருடைய கவிதைகள் படிப்பதற்கு எளிமையாக இருப்பதோடல்லாமல் ஆழமான உணர்வு அலைகளை எழுப்பாமல் இருக்காது.

இருப்பதற்கென்றுதான்
வருகிறோம்
இல்லாமல்
போகிறோம்

என்ற வரிகளெல்லாம், மனதில் வேறு வேறு எண்ண அலைகளை எழுப்பாமல் இருப்பதில்லை.

நான் நகுலன் பெயர்கொண்ட புத்தகங்களையெல்லாம் வாங்கத் தொடங்கினேன். 'க்ரியா' என்ற புத்தக வெளியீடு அறிமுகமானபோது,

நகுலனின் 'நினைவுப்பாதை' என்ற நாவலை வாங்கினேன்.

பொதுவாக நகுலனின் எழுத்துகள் ஒரு மனதிலிருந்து இன்னொரு மனதிற்கு எழுதுகிற எழுத்துகள். என்னால் முழுதாகவும் அவற்றைப் படிக்க முடிந்ததுமில்லை. ஏனெனில் மனதை அதிகமாக ஆட்டிப் படைக்கும் தன்மை கொண்டவை அவருடைய படைப்புகள். அவருடைய படைப்புகள் மூலமாக அவரை நான் அறிந்துகொண்டாலும், விருட்சம் பத்திரிகை ஆரம்பித்தபோதுதான் நேரிடையாக எனக்கு அவருடைய தொடர்பு ஏற்பட்டது. அவர் படைப்புகளை அனுப்பும்போது, மறக்காமல் ஸ்டாம்பு, கவரெல்லாம் வைத்து அனுப்புவார். ஒரு குறிப்பும் எழுதி அனுப்புவார். 'படைப்புகள் உங்களுக்குத் திருப்தியாக இல்லையென்றால் திருப்பி அனுப்பி விடுங்கள்,' என்று. நான் அவர் எழுதிய படைப்புகளை திருப்பி அனுப்பமாட்டேன்.

ஒவ்வொரு விருட்சம் இதழையும் அவருக்கு அனுப்புவதில் அதிக ஆர்வம் காட்டுவேன். உடனுக்குடன் அவர் இதழ் குறித்து கருத்துக்களை ஒரு கார்டில் எழுதி அனுப்பி விடுவார். கார்டில் அவர் எழுத்தைப் படிப்பது என்பது பெரிய விஷயமாக இருக்கும். சிலசமயம் அவருடைய

கையெழுத்து புரியும்படி நிதானமாக இருக்கும். சிலசமயம் புரியாமல் கிறுக்கப்பட்டிருக்கும்.

ஒரு சமயம் கார்டில் எனக்கு ஒரு கவிதை எழுதி அனுப்பினார்:

நில்
போ
வா

வா
போ
நில்

போ
வா
நில்

நில்　　போ　　வா?

என்பதுதான் அக் கவிதை. விருட்சம் இதழில் இந்த குறள் வழி கவிதையைப் பிரசுரம் செய்தேன். இது தரமான கவிதையா, பிரசுரம் செய்யப்பட வேண்டிய கவிதையா என்று கேட்டால், நான் பதில் சொல்ல மாட்டேன். நகுலன் எழுதியிருக்கிறார். அவர் எழுத்துக்களைப் பிரசுரம் செய்ய வேண்டியது, நான் மதிக்கும் எழுத்தாளருக்கு நான் கொடுக்கும் மரியாதை. இன்னும் சில படைப்பாளர்களிடமும் நான் இதுமாதிரி நடந்து கொள்வேன்.

இக்கவிதை பிரசுரம் ஆனவுடன், இரு இடங்களிலிருந்து எதிர்ப்பு வந்தன. ஒன்று காஞ்சிபுரம் இலக்கிய நண்பர் வே. நாராயணன் (காஞ்சிபுரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கியக் கூட்டங்களை நடத்தியவர். அபாரமான ஞாபகச் சக்தி கொண்டவர். கூட்டம் முழுவதும் யார் பேசினாலும் அதை மனதில் வாங்கிக் கொண்டு திருப்பிச் சொல்லும் தன்மை கொண்டவர்). எப்படி இக் கவிதையை விருட்சத்தில் பிரசுரம் செய்தீர்கள்? அக் கவிதைக்கு என்ன அர்த்தம் என்பதை உங்களால் சொல்ல முடியுமா? என்று கேட்டு எழுதியிருந்தார். நான் அக் கடிதத்தை நகுலனுக்கு அனுப்பியிருந்தேன். அவர் இரண்டு பக்கங்களுக்கு விளக்கம் கொடுத்து பதில் அனுப்பினார். அதையும் விருட்சத்தில் பிரசுரம் செய்தேன்.

எதிர்த்தவர்களில் இன்னொருவர் பிரமிள். நகுலனின் இந்தக் கவிதையை ஏன் பிரசுரம் செய்தீர்கள்? இது கவிதையா என்று கேட்டார். 'விருட்சம்' இதழில் அரைப்பக்கம்தான் இக் கவிதை வந்திருக்கிறது. வந்தால் என்ன?' என்றேன்.

'ஒரு சிறு பத்திரிக்கையின் அரைப் பக்கத்தில் பிரசுரம் ஆகும் விஷயம் கூட முக்கியம் உமக்கு இதெல்லாம் தெரியாதா?' என்றார் பிரமிள். பிரமிள் இதைச் சாதாரணமாகப் பேசிவிட்டு விட்டுவிடுவார் என்று நினைத்தேன். ஆனால் அபத்தக் கவிதைகள் என்ற பெயரில் அவர் ஏராளமான கவிதைகள் எழுதியிருந்தார். அதில், 'எந்துண்டி வஸ்தி?' என்ற கவிதையில்,

'நில் போ வா'
என்பதை எழுதிக் கீழே
கையெழுத்து வைத்து
அனுப்பினார் சகா
தேவனின் சகோ
தர நாமி

இதைக் கவிதை என்று
போட்டுவிட்டது தன்
இலையிலே 'மரம்'

"இதையே
எழுதியது யாரோ
ஏழுமலை ஆறுமுகம்
என்றால் 'மர' இலையில்
வருமா இது?" என்றேன்.

பதில் இல்லை இன்னும்.

இப்படி ஒரு கவிதை பிரமிள் எழுதியிருக்கிறார் என்பது அது புத்தகமாக வரும்போதுதான் தெரியும்.

நகுலன் ஒவ்வொரு முறையும் சென்னை அசோக்நகரில் உள்ள அவருடைய இளைய சகோதரர் வீட்டிற்கு வருவார். அப்படி வரும்போது மேற்கு மாம்பலத்தில் உள்ள என் வீட்டிற்குத் தகவல் தராமல் இருக்க மாட்டார். சென்னையில் இருக்கும்போதெல்லாம் அவரை அடிக்கடி சந்திப்பது என் வழக்கம். ஏன் தினமும்?

சிலசமயம் அவர் ஊரிலிருந்து வந்தபிறகு, அவர் சகோதரருடன் என் வீட்டிற்கு வருவார். அவரால் தனியாக வரமுடியாது. கூடவே அவருடைய சகோதரரை அழைத்துக்கொண்டு வருவார். யாராவது அவருக்குத் துணை வேண்டும். அவர் வரும் சமயத்தில் நான் தட்டுப்படவில்லையென்றால், என் தந்தையாருடன் பேசிக்கொண்டு இருப்பார். ஹோமியோபதி

மருந்துகளைப் பற்றி என் தந்தை சொல்வதை புதிதாகக் கேட்பதுபோல ஒருவித மரியாதையுடன் நகுலன் கேட்பார்.

அவர் சகோதரர் என் வீட்டில் விட்டுவிட்டுப் போய்விடுவார். நான் நகுலனைப் பார்த்துவிட்டால் நேரம் தெரியாமல் பேசிக் கொண்டிருப்பேன். என்னைப் பார்த்து, "நீங்கள் இவ்வளவு தூரம் எல்லாருக்கும் உதவியாக இருக்கிறீர்கள். ஆனால் உங்களைப் பற்றி யாரும் எதுவும் சொல்லாமல் இருப்பது சரியில்லை," என்பார். 'யாருடனும் இல்லை' என்ற என் கவிதைத் தொகுதியைப் பற்றி அவர் எழுதிய கட்டுரையை என்னால் மறக்க முடியாது.

பொதுவாக நகுலன் வரும்போது, நான் புதிதாக எழுதிய கவிதைகளைக் காட்டுவேன். அவர் சிரத்தையுடன் படித்துவிட்டு, அதில் உள்ள பிரச்சினைகளைக் குறிப்பிடுவார். சில கவிதைகளைப் படித்துவிட்டு, வரிகளை மாற்றினால் நன்றாக இருக்குமென்று குறிப்பிடுவார். சில கவிதைகள் நன்றாக வந்திருப்பதாகவும் குறிப்பிடுவார். வேறு விஷயங்களையும் நாங்கள் பேசுவோம். ஒருமுறை நான் அலுவலகத்திற்குச் செல்வதற்காக மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று கொண்டிருந்தேன். அப்போது ஐராவதத்தைப் பார்த்தேன். நகுலன் வந்திருப்பதைக் குறிப்பிட்டேன். பின் இருவரும் அலுவலகம் போகாமல் நகுலனைப் பார்க்கச் சென்றுவிட்டோம். நகுலனுடன் பேசும்போது ஒருவருடன் ஒருவர் பேசுவதுபோல்தான் இருக்கும். ரொம்ப கூச்ச சுபாவம் உள்ளவர். ஒரு முறை அவருக்கு ஆல்பர்ட் மூலம் பரிசு கிடைத்தது. அக்கூட்டத்திற்கு வந்த நகுலன், ரொம்ப கூச்சத்தோடு மேடையில் அமர்ந்திருந்தார். கூட்டத்துடன் நின்று பரிசு வாங்க எழுந்து வரகூட வெட்கப்பட்டார். ஆனால் மேடையில் தோன்றுவதையே பிரதானமாக விளம்பரப் பிரியராக ஒரு வங்கியின் தலைவர் இருந்தார். அவர்தான் அக்கூட்டத்தை நடத்த நன்கொடை கொடுத்திருக்கிறார். அவர் நகுலன் பக்கத்தில் அமர்ந்தும் அவருக்கு நகுலன் யார் என்பது தெரியாது. இருவரும் ஒருவரை ஒருவர்பார்த்தும் பேசாமல் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

நகுலனை அவர் சகோதரர் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போவேன். நடந்துதான் போவோம். அவர் சகோதரர் வீட்டிற்குப் போவதற்குள், பலமுறை 'இந்த வழியாகத் தானே உங்கள் வீட்டிலிருந்து வந்தோம்,' என்று கேட்காமல் இருக்க மாட்டார். 'ஆமாம்', என்று பலமுறை நான் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். அவர் தனியாக எங்கும் போகமாட்டார். ஒரு சமயம் நகுலனின் திருவனந்தபுர நண்பர் காசியபன் மையிலாப்பூரில் இருந்தார். 'அவரைப் போய்ப் பார்க்கலாமா?' என்று கேட்டேன். காசியபனும் அவர் வந்ததை அறிந்து பார்க்க ஆசைப்பட்டார்.

"என் வண்டி பின்னால் அமர்ந்து கொள்ளுங்கள்" என்றேன். நகுலன் மறுத்து விட்டார். "பஸ்ஸில் போகலாம் வாருங்கள்," என்றேன். "அவ்வளவு பைசா செலவு செய்ய முடியாது. வேண்டுமானால் காசியபன் என்னை வந்து சந்திக்கட்டும்," என்று கூறிவிட்டார். கடைசிவரை அவர் காசியபனை பார்க்கவே இல்லை.

மிகக்குறைந்த பக்கங்களுடன் அவருடைய புத்தகமொன்றை கொண்டுவர நினைத்தேன். "இரு நீண்ட கவிதைகள்" என்ற புத்தகம் போட எனக்குப் பணத் தட்டுப்பாடு. அதனால் நானும், நகுலனும் சேர்ந்து அந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்தோம். பாதி நானும், பாதி நகுலனும் செலவு செய்தோம். பொருத்தமே இல்லாமல் புத்தகத்தில் நகுலன் வரைந்த ஓவியமும் இருக்கும். புத்தகம் வந்தபிறகு வழக்கம்போல் கவிதைப் புத்தகம் விற்கவில்லை. பொதுவாக நம் தமிழ் தீவிர சூழ்நிலையில் கவிதைப் புத்தகத்திற்குக் கொடுக்கும் அலட்சியம்போல் வேறு எந்தப் பிரிவு நூலிற்கும் இருக்காது. ஆனால் நகுலன் தான் போட்ட பணத்தை உடனடியாகக் கேட்க ஆரம்பித்து விட்டார். ஏனெனில் அவர் இதற்கு முன்னால் பலரிடம் புத்தகம் போட பணம் கொடுத்து ஏமாந்திருக்கிறார். நான் அவர் பணத்தை மாதா மாதம் என் சம்பளத்திலிருந்து கொடுத்து சரி செய்தேன். இன்னும் கூட விற்காத புத்தகப் பிரதிகள் என்னிடம் இருக்கிற து. விலை ரூ. 12- தான்.

நகுலனை திருவனந்தபுரத்தில் ஒருமுறையாவது போய்ப் பார்க்க வேண்டுமென்று நினைப்பேன். "நான் உங்கள் ஊருக்கு வந்து உங்களைப் பார்க்க வேண்டும்," என்று ஒருமுறை குறிப்பிட்டேன். உடனே, நகுலன், "நீங்கள் என் வீட்டிற்கு வந்து தப்ப முடியாது," என்று குறிப்பிட்டார். அவருக்கு ஏனோ புரியவில்லை. நான் அவரைப் பார்க்க வந்தாலும், அவர்

வீட்டில் வந்து தங்க மாட்டேன் என்பது. ஏனோ திருவனந்தபுரம் போய் அவரைப் பார்க்கவே இல்லை.

வழக்கமாக அவருக்குப் பத்திரிகை - புத்தகம் அனுப்பிக் கொண்டிருப்பேன். ஒருமுறை அவர் எனக்குக் கடிதமொன்று எழுதியிருந்தார்.

*16.12.1996*ல் அவர் எழுதிய கடிதத்தை இங்கு குறிப்பிட்டு முடிக்கிறேன்.

நண்பருக்கு,

வணக்கம். எனக்கு இம்மாதம் 12.12.96 -ல்தான் பென்ஷன் கிடைத்தது. எனவே மையம் சந்தாவை இன்றுதான் அனுப்ப முடிந்தது.

நான் உடல் மனம் சோர்வுற்று மிகத் தளர்ந்த நிலையில் இருக்கிறேன். இனி எனக்கு மையமோ வேறு பத்திரிகைகளோ புஸ்தகங்களோ அனுப்ப வேண்டாம். உங்கள் யாருடனும் இல்லை என்ற புத்தகத்தை அமெரிக்காவில் இருந்து வந்த பிறகு காலமான என் சகோதரியிடம் கொடுத்து விட்டேன். அதுவும் என் கையில் இல்லை.

இனியும் எழுத வேண்டாம் என்ற நிலையில் யாராவது வந்து எழுதுங்கள் என்று துன்புறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். எனக்கு 75ஆவது தொடங்கிவிட்டது. வெகு விரைவில் காலமாகிவிட்டால் என்ற நிலை. உடல்-மன உளைச்சல்கள் அவ்வாறு.

உங்களுக்கு நான் சொன்னதால் நாய்களற்ற வீதிகள் (Streets without Dogs) என்ற கவிதைத் தொகுதி கிடைத்ததா?

உங்கள் தகப்பனாருக்கு என் நமஸ்காரத்தைச் சொல்லவும்.

என்னவோ இருந்து கொண்டிருக்கிறேன்.

அன்புடன்
" நகுலன் "

மேலே குறிப்பிட்ட கடிதத்தை நகுலன் அனுப்பிய பிறகு, நான் புத்தகங்களையோ பத்திரிகைகளையோ அனுப்புவதை நிறுத்தி விட்டேன். பிறர் மூலமாகத்தான் எனக்கு நகுலனைப் பற்றி தெரியும். நீல பத்மநாபனுடன் பேசும்போது, நகுலனைப் பற்றி விசாரிக்காமல் இருக்க மாட்டேன்.

முதலில் வாசகன் பிறகுதான் பதிப்பாளர்

காவ்யா சண்முகசுந்தரம்

கடிதத்தில் குறிப்பிட்டபடி அவர் மரணத்தை எதிர்நோக்கி காத்துக் கொண்டிருந்தாரென்று நினைக்கிறேன்.

பாளையங்கோட்டை சேவியர் கல்லூரியில் தமிழ் இலக்கியம் படித்தபோது திராவிட இயக்கத்தின் பாதிப்பும் திரைப்படத் தாக்கமும் நிறைந்த தமிழ் அபிமானமும் இலக்கிய ஆக்கங்களும் எனக்குள் இருந்தன. 'தென்றல் விடு தூது' போன்ற விருத்தப் பாடல்களையும் 'சவாலே சமாளி' போன்ற நாடகங்களையும் எழுதிக் கொண்டு, வடக்கன் குளத்து நூலக வாசிப்பினால் பாரதிதாசன், கண்ணதாசன், அகிலன், நா. பா., கல்கி, அண்ணாதுரை, கலைஞர் போன்றோரின் எழுத்துக்களில் ஈர்க்கப்பட்டு ஒருவகை மோகத்தில் இருந்தேன். பீட்டர் அல்போன்ஸ், வலம்புரிஜான் போன்றோரின் மேடைப்பேச்சும் கவர்ச்சி காட்ட எம்.ஏ. படிக்க சென்னை பச்சையப்பனுக்கு வந்தேன். அங்கே 'படிக்கட்டும் பைந்தமிழ்' பாடிற்று. அது 1971ஆம் ஆண்டு.

திருவல்லிலிக்கேணி பிள்ளையார் கோயில் தெரு, நான் சென்னைப் பல்கலை வகுப்புக்கு வாரந்தோறும் சென்றபோது என்னையும் நண்பர் பாலமுருகனையும் ஈர்த்து வரம்தர, 'எழுத்தை' எண்ணிப் படித்தோம். அவர் ஞானக்கூத்தனையும் எங்கள் விடுதிக்கு ஓர் இலக்கிய கூட்டத்துக்கு அழைத்து வந்தபோது எங்கள் இலக்கிய வாசிப்பு விரிய 'கசடதபற' வாசித்தோம்; பழைய இதழ்களை வாங்கிப் படித்தோம். இரண்டாவது இதழில் நகுலனின் 'மூன்று கவிதைகள்' இருந்தன. அவை எங்களை இழுத்துப் பிடித்துக் கொண்டன. நண்பர் பாலமுருகன்,

கந்தைக் குடைத்துளியெனக்
கிடக்கும்
தன்னினமொன்றைச்
சுற்றிச் சுற்றி வருமிக்
கறுப்பின் ஓலம்போல்
செத்துக் கிடக்கும்
சுசீலாவை
வட்டமிட்டு
வட்டமிட்டு
வட்டமிட்டு..............

"சேலை அவிழ்க்
கலாமென்றாலோ
சுசீலாவும் செத்துக்
கிடக்கிறாள்".

என்று மனப்பாடமாகி ஒரு மந்திரம்போல் உச்சாடனம் செய்வார். அப்போது சுசீலா, வட்டமிட்டு. செத்துகிடக்கும், சேலை இந்தச் சொற்கள் விதவிதமான அர்த்தங்களை எங்களிடம் பரப்பும். மயில்சாமி, முருகன் எனப்பல நண்பர்கள் எங்கள் இலக்கியக் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டனர். பைந்தமிழ் பாடிய பச்சையப்பன் வளாகம் 'புதுத்தமிழ்' பாடியது. நாங்கள் கவிதைத் தொகுதி 'கதம்பம்' வெளியிட்டோம். பேராசிரியர்களால் கண்டிக்கப்பட்டோம்.

தொடர்ந்து வானம்பாடியும் கலாப்ரியா, காமராசர், மேத்தா, மீரா, சிற்பி போன்றோர் கவர்ந்தனர். எனினும் நகுலனின் கவிதையின் "வாழ மனமில்லை சாக இடமில்லை" என்ற வரிகள் என்னை அவ்வப்போது இம்சைப்படுத்தின.

1978 முதல் பெங்களூர் வாசியானேன். என் பேராசிரியர் தமிழவன் நான் அங்கே செல்லவும் வாழவும் காரணவர் ஆனார். அவரிடம் ஏற்கனவே சேவியரில் தமிழ் இலக்கியம் படிக்கும்போதே நடை, எழுத்து இதழ்கள் வாசித்து காட்டிய நவீனப் பேராசிரியர். என் வாசிப்பு நாட்டுப்புற இயல் நூல்களோடு நவீன இலக்கியங்களையும் இதழ்களையும் நாடிற்று. தமிழவன், கிருஷ்ணசாமி, கிருஷ்ணன், இராமசாமி, பாவண்ணன் என்று நண்பர்கள் கூடி புல்வெளிகளில் ஞாயிறு காலைகளை இலக்கிய விசாரங்களோடு கழித்தோம். 'படிகள்' தொடங்கினோம். 'இலக்கு' நடத்தினோம். நகுலனின் 'நினைவுப்பாதை' எனக்குப் புது எழுத்தாகத் தோன்றியது. அவரது 'குருஷேத்திரம்' புதிய எழுத்துக்களை அறிமுகம் செய்து வைத்தது.

1981-ல் என்னால் காவ்யா பதிப்பகம்- இது என் மகளின் பெயர். அவளது முதலாம் பிறந்தநாள் விழாவில் எனது 'பகல் கனவுகள்' கவிதைத் தொகுதியோடு பதிப்பகம் தொடங்கப்பட்டது. எனக்காகத் தொடங்கப்பட்டது என் நண்பர்களின் நூல்களையும் அவர்களது உதவியோடு நூல்களாக வெளியிடத் தொடங்கியது. எனக்குப் பிடித்த படைப்பாளிகளின் நூல்களையும் நான் விரும்பி வாங்கி வெளியிட்டேன். 1993ல் நானும் நண்பர் ப. கிருஷ்ணசாமியும் ஒருநாள் பேசிக் கொண்டிருக்கும் போது நகுலனின் சிறுகதைகளை வெளியிடலாமா என்று கேட்டார். அவர் அடிக்கடி நகுலனைப் பற்றியும் அவரது எழுத்துக்களைப் பற்றியும் பேசிக்கொண்டிருப்பார். அவர் திருவனந்தபுரத்தில் படித்தபோது நகுலனால் ஈர்க்கப்பட்டு தன் பெயரை 'சகாதேவன்' என்று வைத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தவர். இருவரும் 'கிளாஸ்மேட்' என்பதையும் மணிக்கணக்காக இலக்கியம் பேசுபவர்கள் என்பதையும் அறிந்தவன். நான் சம்மதம் தெரிவித்திருந்தேன். ஒருநாள் தொலைபேசியில் அழைத்தார். "நகுலன் வந்திருக்கிறார். உங்களது ஆராரோ நாவலைப் படித்து ரொம்ப ரசித்தாராம். ஆறுமுகத்தைப் பார்க்க வேண்டுமாம். வாரும்" என்று

விபரம் சொன்னார். க.நா.சு., காசியபன் போன்றோரும் இவர் மூலம்-தான் எனக்கு பரிச்சயமானவர்கள். உடனே நான் புறப்பட்டுப் போனேன். அதுதான் முதல் சந்திப்பு. நாங்கள் மூன்றுபேரும் ஒரு மதுச்சாலையில் அமர்ந்து சுமார் இரண்டு மணி நேரம் பேசினோம். அவருக்குப் பிடித்த பிராந்தியும் அவரும் அவரோடு நாங்களும் அருந்தினோம். முட்டைப் பொரியலை விரும்பி சாப்பிட்டார். அந்த உரையாடல் என்னை அவருக்கு மிக நெருக்கமானவன் ஆக்கியது. கதைகள் வெளியிடுவது பற்றியும் அவர்பட்ட சிரமங்களையும் சொன்னார். என் நாவலில் உள்ள சில ஜோக்குகளைச் சொல்லிலிச் சொல்லிலி சிரித்தார்.

பிறகு அவரது சிறுகதைகளை வெளியிட்டேன். ப. கிருஷ்ணசாமியும் ஒரு முன்னுரை எழுதினார். நகுலன் ரொம்பவும் சந்தோஷப்பட்டார். கதைகளில் உள்ள எளிமையும் ஆழமும் அபூர்வ விஷயங்களாக எனக்குத் தோன்றியது. இக்கதைகளை நான் பல சிற்றிதழ்களில் தேடித் தொகுத்தேன். நண்பரும் உதவினார்.

அடுத்தது அவரது கவிதைகளை வெளியிடவேண்டும் என்ற ஆசை தோன்றியது. நகுலனிடம் கவிதைகள் பற்றி விவரம் கேட்டேன். அவரோ ஞாபகத்தில் இல்லை என்று சொல்லிவிட்டார். அதற்காக சிற்றிதழ்களையும் சின்னச்சின்ன தொகுப்புகளையும் சேகரித்து வகைப்படுத்தி 2001-ல் 114 கவிதைகளை வெளியிட்டேன். திருவனந்தபுரத்தில் தமிழ்ச்சங்கம் ஒரு விழாவை ஏற்பாடு செய்தது. நண்பர் நாச்சிமுத்துவும் நீலபத்மநாபனும் ஏற்பாடு செய்தனர். நகுலன் வந்து கலந்து கொண்டார். வெளியிட்ட மலையாளக் கவிஞர் தொகுப்பையும் தயாரிப்பையும் பாராட்டினார். நகுலன் "உங்களால் எப்படி விற்க முடியும்" என்று வருத்தப்பட்டார். அவரை உற்சாகப்படுத்தினேன். அன்று மாலை அவரது வீட்டில் நீண்ட நேரம் நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தது சுகமாக இருந்தது.

கேரளப் பல்கலைக் கழகப் பேராசிரியர் நாச்சிமுத்து எனக்கு நண்பர். என் நண்பர்களுக்கும் நண்பர். அவரை ஒருமுறை சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் எண்பதுகளின் கடைசியில் சந்தித்தேன். அப்போது அவர் "நகுலன் கட்டுரைகளைத் தொகுத்து வைத்திருக்கிறேன். உங்களால் வெளியிட முடியுமா?" என்று கேட்டார். நான் அப்போதைய நிலையில் பணம் செலவழித்து நூல் வெளியிட முடியாதபடி இருந்தேன். பெங்களூரில் வீடு கட்டி முடிந்த சிரமநிலை. பிறகு பார்க்கலாம் என்று சொல்லியிருந்தேன். 2000 பிறந்த பின் 'காவ்யா' சென்னைக்கு மாற்றப்பட்டது. பதிப்பகத்தை விரிவு படுத்தும் ஆசை. நான் நண்பர் நாச்சிமுத்துவைத் தொடர்பு கொண்டேன். அவரும் பலரிடம் முயன்று பார்த்துவிட்டு தொகுப்பைப் பத்திரமாக வைத்திருந்தார். அனுப்பி வைத்தார். அவற்றோடு விடுபட்ட சில மதிப்புரைகள், ஆய்வுரைகள், விமர்சன குறிப்புகள் ஆகியவற்றைத் தொகுத்து 2002ல் 62 கட்டுரைகளை வெளியிட்டேன்.

சங்க இலக்கியம் முதற்கொண்டு ராஜமய்யர், மாதவையா, சி.சு. செல்லப்பா, வெங்கட்ரமணி, அழகிரிசாமி, பிச்சமூர்த்தி, சுந்தரராமசாமி, தி. ஜ ானகிராமன், மௌனி, க.நாசு, ஞானக்கூத்தன், கலாப்ரியா, உமாபதி, காசியபன், ஆத்மாநாம், பிரம்மராஜன், விக்ரமாதித்யன், அசோகமித்திரன், மா. அரங்கநாதன், சுப்ரபாரதிமணியன், தேவதேவன், எஸ். வைத்தீஸ்வரன், இந்திரன், கோணங்கி, நீலபத்மநாபன், அழகியசிங்கர், சண்முக சுப்பையா என இன்றைய எழுத்தாளர்களையும் தாயுமானவர் பாடல்கள், திருக்குற ள் நீதிநூல்கள், பாரதி கவிதைகள் போன்ற எழுத்துக்களையும் நகுலன் எவ்வாறு விரும்பி வாசித்து விமர்சித்து உள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடியும். தனிமையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் தவ முயற்சிகள் என்று கூடச் சொல்ல முடியும்.

நகுலன் மறதி ரூபத்தில் மூழ்கிக்கொண்டிருந்தார். அவரது நாவல்களைத் தொகுத்து வெளியிட விரும்பி ஒரு நாள் அவரது வீட்டில் போய் பார்த்தேன். தன்னிடம் எதுவும் இல்லை என்றார். ஆனால் அவரது தம்பி மணி பெங்களூரில் வசித்து வந்தவர். எனக்கு நவீனன் டைரி, நாய்கள் போன்றவற்றை ஜெராக்ஸ் பண்ணித்தந்தார். 2004-ல் நினைவுப்பாதை, நிழல்கள், நாய்கள், நவீனன் டைரி, சில அத்தியாயங்கள், இவர்கள், வாக்குமூலம், அந்த மஞ்சள் நிறப் பூனைக்குட்டி என 8 நாவல்களையும் குறுநாவல்களையும் சேர்த்து 830 பக்கத்தில் பெரிய நூலாக சிறந்த பதிப்பாகக் கொண்டு வந்தேன். ஒரு நாவலின் எட்டு அத்தியாயங்களாக அவை அமைந்தன. இவற்றில் ஒரு வகை ஆட்டோபயோகிராபிக்கல் தன்மை இருந்தது. இந்தப் பிரமாண்டத்தைப் பார்த்து பலர் ஆச்சரியப்பட்டனர். அபார துணிச்சல்தான் என்று சிலர் பாராட்டினர்; சிலர் பரிதாபப்பட்டனர். அரசு நூலக இயக்கமும் அன்பர்களும் வாங்கியதால் நான் தப்பித்துக் கொண்டேன். இன்றுவரை நகுலன் என்னை நஷ்டப்படுத்தவில்லை.

சென்ற ஆண்டு அதாவது 2006-ல் அவருக்குச் சிறப்பாக ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். காவ்யா தொடங்கி 25 ஆண்டுகள் ஆகியுள்ளன. வெள்ளிவிழா வெளியீடாக என்ன செய்யலாம் என்று ஆலோசித்தேன். அவருக்கு ஒரு 'டாக்குமென்டரி' தயாரிக்க ஆசைப்பட்டேன். சில நண்பர்களிடம் பேசியபோது குறைந்தது 50 ஆயிரமும் நன்றாகச் செய்ய 2 லட்சமும் தேவைப்படும் என்றனர். என் ஆசைக் கழுதையைத் தேய்த்து கட்டெறும்பு ஆக்கினேன். அவருக்கு ஒரு 'ஃபோட்டோசெஷன்' செய்யவே முடிந்தது. நண்பர் காஞ்சனை சீனிவாசன் இல்லாவிட்டால் இதுவும் நடந்திருக்காது. என் உடல்நலக் கேட்டால் என்னால் அவரோடு போக முடியவில்லை. அவரே போய் மிகச் சிறப்பாகச் செய்து கொண்டு வந்தார். இரண்டு நாள் தங்கி. புகைப்படங்களைப் பெரிதாக்கி சட்டம் போட்டு அலையன்ஸ் பிரான்சிஸ்ஸோடு சேர்ந்து புகைப்படக் கண்காட்சி வைக்கலாம் என்று முடிவு செய்தோம்.

நகுலன் கவிதைகள் நூலை நான் மதிப்புரைக்கு அனுப்பாத போதிலும் அதைப்பற்றி 'மதிப்புக்கோடாக' ஒரு விமர்சனத்தைத் தீராநதியில் நண்பர் எஸ்.ராமகிருஷ்ணன் எழுதினார். ஐயப்பப் பணிக்கர் பார்த்து பாராட்டிய தயாரிப்பை அவர் சரியில்லை என்றும் அதைக் கையில் வைத்திருப்பதை ஒரு கேவலமான விஷயமாகவும் எழுதினார். அது என் மனதைப் புண்படுத்தியிருந்தது. அதற்கு மருந்து போடுவது போன்று காஞ்சனை சீனிவாசனின் உதவியோடு "கண்ணாடியாகும் கண்கள்" என்ற தேர்ந்தெடுக்கப்பட்ட நகுலனின் கவிதைகளோடு பக்கத்துக்குப் பக்கம் புகைப்படங்களோடு மிக விலை உயர்ந்த தாளில் அச்சிட்டு வெளியிட்டேன். 'நகுலன் இலக்கியத் தடம்' என்ற நூலையும் தொகுத்தேன். அதன் மூலம் நகுலனின் நண்பர்களை இனம் கண்டேன். நண்பர் எஸ். ராமகிருஷ்ணனும் ஒப்புதல் தந்தார். அவரது கட்டுரையைச் சேர்த்துக் கொள்ள. இந்த இரு நூல்களையும் பார்த்துவிட்டு நண்பர் முருகேசபாண்டியன் பாராட்டி ஒரு நீண்ட கடிதம் அனுப்பியது நெகிழ்ச்சியாக இருந்தது. நண்பர் பவா செல்லத்துரை திருவண்ணாமலையில் நகுலனுக்காக புகைப்படக் கண்காட்சி ஏற்பாடு செய்தார்.

நகுலன் இன்று படமாகிப் போனார். நகுலன் இறந்துவிட்ட பின்னும் அவரது புகைப்படங்களும் புத்தகங்களும் எனக்குள் புரண்டு கொண்டிருக்கின்றன. சென்னையில் நகுலனுக்கு ஒரு இரங்கற்கூட்டம் நடத்த விரும்பி நான்கு பேரிடம் பேச அவர்கள் ஆறுவித ஆலோசனைகளைச் சொல்ல அந்த எண்ணமும் கைவிடப்பட்டது. நெல்லையில் புகைப்படக் காட்சியும் நினைவுக் கூட்டமும் நடத்தும் திட்டம் உருவாக்கியுள்ளது.

யார் என்ன செய்தாலென்ன? நகுலன் நம்மிடம் இல்லை. இருப்பதற்கென்று வந்து இல்லாமல் போய்விட்டாரா. துரைசாமி நகுலன், நவீனன், நாயர் என்றெல்லாம் தன்னைப் பகுத்துப் பார்த்தவன். அவரே கூட அவருக்குத் துணையாக இல்லாமல் போன தனிமை இப்பொழுதும் தொடரலாம். எங்கிருந்து வந்தார், எங்கு போனார் - இடையில் எங்கே இருந்தார்? இந்த வினாக்கள் அவரிடமும் இருந்திருக்கின்றன. அவர் எங்கிருந்தாலும் எனக்கும் அவரோடு இருக்கவே ஆசை. ஏனென்றால் நான் முதலிலில் அவரது வாசகன் பிறகுதான் பதிப்பாளன்.

கருப்புப் பிரதிகள்

B-74, பப்புமஸ்தான் தர்கா,

லாயிட்ஸ் சாலை,

சென்னை-5.

செல் 9444272500

ஸ்ரீராம் பொன்ஸ் கவிதைகள்

என்றொரு அடிமை

அமில வார்த்தைகள் சிந்திச் செல்கிறாய்
காலத்தின் மௌனத்தை உதடுகளில் சுமந்தபடி
வேறுபாதைகள் அறியாத வளர்ப்புபிராணி போல
மாறும் பருவங்களை நுகர்ந்தவாறே பின்தொடர்கிறேன்
ஆசுவாச நிழல்தேடி அமர்ந்திருக்கும் யாத்ரீகர்கள்
சபிக்கின்றார்கள் உன்னை
வரும் காணக்கூடாத துர்தேவதையென
இரவு பகல்களில் மனிதர்கள் யாவரும்
வாழ்வுமரண சமன்பாடுகள் முரண்பட்டு போனதாய்
பெருங்கூச்சலிடுகிறார்கள்
கற்கோபுரங்கள் எழுப்பிய தெருக்கள் எங்கும்
தீ படர்ந்ததன் அடையாளங்கள் கண்டபடி
முதுகு வளைந்த ஆதிமனிதனென
மௌனதேசத்தின் எல்லைகள் நோக்கி நடக்கிறேன்
மணிக்கட்டின் எலும்புகள் முறிபட
என்னை முடிந்திருக்கும் அந்த கயிறு
மெல்ல அறுந்துகொண்டே வருகிறது.

விட்ட இடத்திலிருந்து

பங்குச் சந்தைகளில் மாரடைப்பில் சரியும்
யாரோ ஒருத்தியின் காதலனுக்காய்
கீழ்நோக்கிய சிவப்பு அம்புக்குறி
துடித்துக் கொண்டிருக்கிறது
அரியவகைப் பூவொன்று
மலர்வதை படம்பிடிக்கச் சென்றவன்
கண்ணிவெடியில் கால் வைத்த நிமிடம்
மலர்ந்த இதழ்களில் துளிகளாய் வீழ்கிறான்
கள்ளிப் பாலோ அல்லது
குரல்வளை திருகப்பட்டோ
குப்பைத் தொட்டிகளில் வீசப்படும் அவைகளின்
மெல்லிதயங்களை
நாய்களும் பசித்த பைத்தியங்களும்
தின்னத் தொடங்கும் இந்நொடியில்
பறவைகளின் கோணத்தில்
இயங்கும் கேமிராக்களை அறியாமல்
விரல்களால் புணர்கின்றனர் காதலர் எனப்படுவார்கள்
ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படுவதை அறிந்த
பகை தேசங்களின் ஆயுதக் கிடங்குகள்
முன்னெச்சரிக்கையாய் தயார் செய்யப்படுகின்றன
கொட்டும் மழை மற்றும் அண்டைய மாநிலத்தில்
பிணங்கள் நீரில் மிதக்கும் காட்சிகளோடு முடித்துக்கொள்ள
விட்ட இடத்திலிருந்து தொடர்கிறது
பண்டிகைநாள் சிறப்புத் திரைப்படம்.



நகுலனுடனான முதல் சந்திப்பு

விஸ்வாமித்திரன்

நினைவு

சென்ற நூற்றாண்டின் நான் செய்து இறுதித் தவறு அப்போதைய நண்பர்களுடன் சேர்ந்து கொண்டுவந்த ஒரு கவிதை இதழ். எங்களால் திறந்தமனதுடன் சமரசப்படுத்திக் கொள்ளவியலாத குண பேதங்களால் இதழின் தொடர்பிறப்பு அகாலமாக நின்றுபோனது. எதிர்விளைவாக, தற்காலிகமாக வந்த அந்த இதழ் எங்களது நட்பையும் தற்காலிகப்படுத்திவிட்டது. சிறுபிள்ளைகளுடனான சகவாசம் போலத்தான் எனது சிற்றிதழ் உருவாக்கக் கூட்டிணைவும். சினிமாவின் தடம் வேறு. அங்கு கூட்டிணைவே தனித்துவமானது. தனிமனிதன் அதன ஒரு சிறுபகுதியே என்பது, வெகுமக்களை ஆட்கொண்டிருக்கும் கெட்ட சினிமாவானாலும் சரி வெகுமக்களை ஆட்கொள்ளவேண்டிய நல்ல சினிமாவானாலும் சரி, சரியாக உணரப்பட்டும் பின்பற்றப்பட்டும் வருகிறது. சிற்றிதழில் அது சாத்தியப்படாதது. ஏனெனில் அது லாபமற்ற முதலீடு. குறிப்பிட்ட கொள்கைப்பாட்டை, நோக்கத் தெரிவை உள்ளடக்கியது. எனவே அங்கு நிகழும் பங்கேற்பின் உள்விரிசல் நடைமுறைப்படுவது இயல்புதான். என் அனுபவத்தின் வரையிலாவது இது நேரடி உண்மை. இந்தப் பின்கதை இப்பொழுது ஏன்? போகட்டும். வெளிவரவியலாமல்போன அதன் அடுத்த இதழில் நகுலனது நேர்காணலைக் கொண்டுவந்துவிடவேண்டும் எனும் எனது ஆர்வமுனைப்பைச் சொல்லவே அவ்விதழின் பின்கதையும் குரங்குக்குட்டியென நடையைக் கவ்விக் கொண்டுவிட்டது.

இதழில் நகுலனது பேட்டியைக் கொண்டுவர, எனக்கு மற்றொரு காரணமும் இருந்தது. நான் நகுலனது இருப்பை திரைவாயிலாக ஆவணப்படுத்தவும் திட்டமிட்டிருந்தேன். இன்றைக்கு நாம் தமிழில் வழக்கமாகப் பார்க்கும், எடுத்து எடுத்து பழுதடைந்துவிட்ட ஆவணப்பட பாணியில் படம்பதியும் திட்டம் என்னிடமில்லை. மாறாக, நகுலனை புனைவு கலந்த ஆவணமாக பதிவுபடுத்த ஆவல்கொண்டிருந்தேன். எனவே, நகுலனை திரைக்குள் கொண்டுவராமல் அவரது குரலோசையை மட்டுமே சில காட்சிகளில் பயன்படுத்திக் கொள்ளவும் எண்ணியிருந்தேன். இதன் காரணமாகவும் நகுலனை நான் பேட்டி எடுப்பது உறுதியானது. நான் மனம்திறந்து வெளியிட்டுவிட்ட எனது ஆர்வத்தின் ஒலித்துடிப்பால் உடன்வரும் அனைவரது பயணத்தின் செலவும் என்னுடையது என மற்றவர்களால் மௌனஏற்புடன தீர்மானிக்கப்பட்டது. அது எனக்கு பிரச்சினையாகவும் இல்லை. நான் வெகுவாக நேசிக்கும் ஒரு இலக்கியமேதையுடன் நிகழப்போகும் சந்திப்பு, என்னிடம் போதியபணம் இல்லாதபோதும், பணம்குறித்த கவலையை துரத்திவிட்டு பரவச உணர்ச்சிகளை பதிலுக்குத் தந்திருந்தது.

திட்டம் வலுப்பெற, வழியெங்கும் சந்தித்த தோழமைக் குரல்கள் ஒரு சொற்றொடரையே பின்பாட்டாக ஒலித்தன. 'நகுலனை இசைவாய்

பார்த்துத் திரும்பவேண்டுமா, விக்ரமாதித்யனை உடன் கூட்டிப்போ'. எனவே தென்காசிக்கும் இப்பொழுது பயணப்பட வேண்டும். 'எனவே' என்பது நகுலனுக்கான பயணப் பார்வையின் அடியொற்றியே. அவ்வெண்ணத்தைத் தனியாகப் பிரித்துவைத்தால், விக்ரமாதித்யன் எனக்கு மிகவும் பிடித்த கவிஞர். இன்றுவரைக்கும். அவரது பல கவிதைகளில் செய்வதறியாது அலைவுறு வலியை எனது அனுபவங்களிலிருந்தும் நான் தாங்கியலைந்திருக்கிறேன். அதெல்லாம் போக. அவர் அதிசயாக எழுதுவதில் எனக்கும் மற்ற சிலரைப் போலவே விமர்சனமிருக்கிறது. ஏனெனில் அதிகம் என்பது நிர்பந்தத்தின சிப்பந்தி. (அதேபோல் கொஞ்சம் என்பதும் சோம்பேறியின் ஆலோசகன்). அதை அவர் யோசிக்கவில்லை. ஏன்? வாழும் காலத்திலேயே அனைத்தையும் எழுத்தின்பரப்பில் கொட்டித் தீர்த்து வாழ்ந்த வாழ்வின் சகல பக்கங்களையும் ஒரு குழந்தையின் கோபத்தோடு கிழித்தெறிந்துவிட முயலும் பதற்றமோ? இருக்கவும்கூடும்.

ஆனால் நேர்ப்பேச்சில் விக்ரமாதித்யனிடம் அந்தக் கோபம் தெரியாது. கல்லாமூச்சியில் மறைந்திருக்கும் என்பதை பிற்பாடான தருணங்களில் உணர்ந்திருக்கிறேன். அவர் மொய்க்கும் ஈக்களை கைவீசித் துரத்துவதுபோல தனது பற்றுதல்களை துரத்தும் முயற்சியில் ஆழ்ந்திருக்கும் யோகியின் வடிவிலான எளிய மனிதர். வாய்ப்பில் சதா பேசுபவர். தடையற்ற நட்புறவை வயது வித்தியாசமில்லாமல் வாரி வழங்குபவர். எனவேயும் தென்காசி சென்று விக்ரமாதித்யனைப் பார்ப்பது எனக்கு புத்துணர்விற்கான வாய்ப்பைத் தந்தது. மேலும், அப்போதைய முழுமைப்பட்ட நோக்கமான நகுலனது சந்திப்பின் அடிப்படையில் விக்ரமாதித்யன் ஆயுதப் பாய்ச்சலைத் தாங்குபவர் மாத்திரமல்ல, பலத்து இசையெழுப்பும் தற்காப்புக் கேடயமும்கூட. நகுலனுடனான நமது அரிய கணங்களை பொக்கிஷமாக மாற்றித் தரும் மாயவித்தைக்காரர். நகுலனது ரட்சிப்பை வெளிக் கொணரும் படைப்புறவின் திறவுகோல். இப்படித்தான் அவர் கற்பனையில் தைரியத்தை மானசீகமாக ஏற்றிக்கொண்டிருந்தார்.

இப்போது விக்ரமாதித்யனையும் சேர்த்து நாங்கள் திருவனந்தபுரம் செல்லவேண்டும். ஒவ்வொரு வருடமும் நான் திரைப்பட விழாக்களுக்குச் செல்ல மாத்திரமே அடகுக் கடைக்குச் செல்லும் எனது அம்மா பரிசளித்த மோதிரம் திருநெல்வேலியிலிருந்த பொற்கொல்லர் வசிக்கும், தெருவிற்கு இப்போது சென்றது. அவ்விடம் வசிக்கும் நண்பர் லெனா குமார் பணம்பெற உதவினார். வழியில் விக்ரமாதித்யனின் ஓயாத பேச்சும் பேச்சு மங்கும் வேளைகளில் குடியும் என தொடர்ந்தது பேருந்து மற்றும் ரயில் பயணம். மனிதன் என்னமாய் மதுக்கடைகளைத் தெரிந்துவைத்திருக்கிறார்! கேரளத்திலும் சின்னச்சின்ன சந்துமுடிவுகளில் பாதை இறக்கங்களில் மறைந்திருக்கும் கள்ளுக்கடைகள் அவருக்கு பிரசித்தம் போல. நான் அயர்ந்துவிட்டேன். வாழ்வுமுறையின் தேவையை எவ்வித கடினவழிகளிலும் மனிதமனம் தன்னியல்பான எளிமையில் சேகரித்துவிடுகிறது. ஒருபுறம் விக்ரமாதித்யனோடு பயணப்படுவதில் மகிழ்ச்சி. மற்றொருபுறம் மீதமிருக்கும் பணம் நகுலனைப் பார்க்கும்முன் தீர்ந்துவிடுமோ என்கிற பாதுகாப்புணர்வின் நெருடல். இந்தமாதிரியான ரெட்டை மனவிருப்புக்கள் குழப்பமான பொழுதுகளை கையுவந்துவிடுகின்றன. ஆளுமைச் சிதைவின் அடிவேர் இவை.

ஒருவழியாக இரவில் திருவனந்தபுரம் போய் சேர்ந்தோம். கேரளத் திரைப்பட விழாக்களை முன்னிட்டு மேற்கொண்ட பயணங்களில் இதுவரை அதிகாலையில்தான் திருவனந்தபுரம் அடைந்திருக்கிறேன். இந்தப் பயணம் இரவின் துவக்கத்தில். நகரில் கால்பட்டதும் ஆழ்ந்த யோசனையுடன் பேசுவதுபோல வீசிக் கொண்டிருந்தது குளிர் காற்று. நகுலனை சந்திக்கப்போகிறோம் என்கிற உணர்வெழுச்சியும் சேர்ந்து மெல்லிய நடுக்கத்தை உள்ளசைத்துக் கொண்டிருந்தது. நகுலனுக்குப் பிடித்தமானது எனப் பெயர்போன பிஜாய் பிராந்திக் குப்பியை வாங்கிக் கொண்டோம். ஆட்டோ ஒன்றைப்பிடித்து அவர் வசிக்கும் கோல்ஃப் லிங் சாலைக்கு பிரவேசிக்கிறோம். நகுலனது இருப்பிடம் நோக்கி, தந்தையிடம் அடிபடாமல் தப்பித்தோடும் சிறுவனின் ஓட்டவேகத்தில் ஆட்டோவின் சக்கரங்கள் நழுவிச் செல்ல, வாகன ஆட்டத்திலிருக்கும் எனக்கு இனம்புரியாத மனமந்தம் சன்னமாக உருவடைந்துகொண்டிருந்தது. ஏதோ சாவின்முனைக்குச் செல்வதுபோல. நாம் அதிகம் நேசிப்பவர்களை முதன்முறையாகப் பார்க்கும் அனுபவம் நிஜத்தில் போர்க்களத்திற்குள் கால்வைப்பதுபோல கலவரமூட்டக்கூடியதுதான். என்பதை அந்தக் கணங்கள் எண்ணத்தில் உரைத்துக் கொண்டிருந்தன.

திருவனந்தபுரம் கோல்ஃப் லிங் சாலையில், திசைதிருப்ப எண்ணி நகரமுடியாமல் நெளிந்து படுத்த பாம்பின் தோற்றத்தில் ஒரு வால்வளைவு. அவ்விடத்தின் அருகாண்மையில்தான் நகுலனது ஆயுட்காலக் குடியேற்றம். எல்லைக்குள் முளைத்த சிறுவனம் போல தோற்றமளித்தது அவரது இல்ல வளாகம். நகுலனது இருப்பை ஏதோஒரு விதத்தில் பிரதிசெய்வதாகவே மரங்களுடனான அவரதுஇல்லத்தின் உள்மறைவும். விக்ரமாதித்யன் முற்றத்தில் கால்வைக்கும் போதே உறவுக்காரரின் பாவனையை அடைந்துவிட்டார் என்பது அவரது நடையில் தெரிந்தது. நான் கொஞ்சம் வியர்க்கும்படியான பதட்டத்தில் இருந்தேன். நகுலன் வராந்தாவைத் தாண்டின உள்ளறையின் வலதுபக்கமிருந்த கட்டிலில் அமர்ந்திருந்தார். அவரது சகோதரர் வந்திருந்தார்போல. படைப்பற்ற தொனியில் நகுலனும் அவரும் தகவல் சார்ந்த விஷயங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார்கள். என் மனதினையொத்த கால்களின் தயக்கத்துடன் உள்நுழைந்தேன். நகுலன் முகம்சுருங்கி ஏறிட்டுப் பார்த்தார். விக்ரமாதித்யன் வணக்கம் தெரிவித்துப் புன்னகைக்க, நானும் உடன் வந்தவர்களும் அவரது செயலைப் பின்தொடர்ந்தோம். நகுலனை முதன்முதலாக நேரில் காணும் எனக்குத்தான் உடல் சில்லிட்டுவிட்டது. நகுலனை பார்த்த அந்த இரவின் மங்கின விளக்கொளியுடனான முதல்கணங்கள் சிறுவனின் தூக்கத்தில் நிகழ்ந்துவிட்ட முதல் விந்துபாய்தலாக விரவ, எனது மனதுள் தரைவீழ்ந்த பாத்திரங்களின் அதிர்வுருட்டல். பயண அயர்வும் நகுலனைக் கண்டுவிட்ட மனஅமைதியும் ஒன்றுசேர்ந்து ரசம் கரைந்த கண்ணாடிக்குள் காணும் ஒரு திரைப்படக் காட்சியில் செயலற்றுநிற்பதுபோல் எனக்குத் தோன்றியது நாங்களிருந்த நிலை.

உலக சினிமாவின் ஆன்மவளம் திரண்ட மார்பின் வெம்மைபடர கட்டியணைத்து என்னை மயக்கிக் கொண்டிருந்த காலம் அப்பொழுதையது. இப்போதும் அந்த மயக்கத்திலிருந்து தெளிந்தபாடில்லைதான். மனிதனாகப் பிறப்பெடுத்ததைவிட, (இலக்கிய ஊற்று இடம்பெயர்ந்து நதியெனப் புரளும்) நல்ல சினிமாவின் உள்ளம்சங்களோடு சங்கமித்துவிடும் பண்பட்ட இரசிக தளத்திற்கு நான் சென்றடைந்து கொண்டிருப்பதே எனது வாழ்வைப் பரவசப்படுத்திக் கொண்டிருந்தது.

ஒரு திரைப்படைப்பாளனாகவும் என்னை பதியப்படுத்திக் கொள்ள வேண்டிய காலநிர்பந்தமும் என்னை வட்டமிட்டுக் கொண்டிருக்க, எனது முதல் படமாக ஆவணப்படுத்த திட்டமிட்டது நகுலனைத்தான். அன்றைக்கு நான் ஏறிட்டுப் பார்க்கும் உயர்ந்த படைப்பாளியாய் இருந்தவர் நகுலன் மாத்திரமே. இன்றுவரையிலும் அந்த ஏறிடல் கண்தளராமல் நிலைத்தவண்ணமே உள்ளது என்பது எனது வளர்ச்சிமாற்றங்களுடனான ஆச்சரியம். வளர்ந்த பருவங்களையெல்லாம ஊடாடிப் பார்க்கையில் நிலைக்கண்ணாடியில் எப்போதுமே மாறாமல் கூர்கிறது ஒரே முகவடிவம். எனில், நீண்ட ரயில் பயணத்தில் உடன் தொடரும் நதியைப் போலவே எனது கலையிருப்பில் நகுலன் தொடர்ந்தவண்ணமிருக்கிறார் என்பதை உள்ளபூர்வமாக ஒப்புக் கொள்வேன்.

எனது இளவயதில் இலக்கியமும் படைப்பாளியும் குறித்த மாபெரும் கற்பனையாக்கம் என்னிடமிருந்தது. அது அம்புலி மாமா கதைகள் உண்மையுருவில் என்னைச் சுற்றின உலகில் உலவிக் கொண்டிருப்பதாக கண்கள் விரிய பரவசித்து நம்பினவகையில். நான் உள்ளுணர்ந்த படைப்பின் நேரியதன்மையை இருப்பிலும் பிரதிபலிக்கும் விதமானவர்கள் இலக்கியவாதிகள் என்கிற கற்பனை அது. எனவே நான் எழுதப்பழகும் பிதற்றல் காலகட்டத்திலேயே தன் குடியிருப்பைப் பேணும் ஒரு குடிசைவாசியின் எளிய அகந்தை என்னையும் தொற்றிக் கொண்டது. அந்த அகந்தை அதிகாரத்தை சுவீகரிக்க முயலுவதல்ல. இருப்பை தனித்துவமாகப் பார்த்துக்கொள்ளும் கற்பித ஒப்புமையுடனானது. பிற்பாடான காலத்தின் காம விசனமும் கலைத்தேடலும் போட்டிபோட்டு என்னை திணறவித்துக் கொண்டிருந்த இளம்பிராயம், ஒட்டுமொத்த உலகமுமே நிறைவடையாத தேவைகளோடு தூக்கிலாடிக் கொண்டிருந்த விதமாய் வாழ்வைக் காட்டிற்று. பேயிருள். அன்பும் மனிதநேயமும் படைப்பில் மட்டுமே செல்லுபடியாகக் கூடிய பாழடர்ந்த பண்டம் என்பது புரிதலுக்கு வந்தது. மெலிதாய் ஆடும் சோலையில் மூச்சடக்கிக் காத்திருந்தது பசித்த புலி. படைப்பும் படைப்பாளியும் அகண்ட பிளவில் வேறுபட்டிருந்தனர் என்பது தெரியவந்தது.

இக்கணிப்பை நான் அனைவருக்குமான பொதுவில் வைக்கவில்லை. அவ்விதம் உணரவுமில்லை. தனது படைப்பின் அடையாளத்தை தன்னில் தாங்கியலைந்த படைப்பாளர்களும் உண்டு. அவர்களே இன்றைக்கும் கைபிடித்துத் தொடரும் எனது நேயவயப்பட்ட மனவிருப்பின் ஆதார இசைத்தூண்கள். எனினும், பெரும்பான்மை நிலை என்பது எப்போதுமே நமது அறிவுத்தேற்றத்தை ஆயுதத்தால் தோற்கடிக்கும் ஒரு நிகழ் வதை. உடன்பாடு

உள்ளதோ அல்லது இல்லையோ, அதன்முன் மண்டியிட்டு கைகளை பின்தலையில் வைத்து நடக்கப்போவதை ஏற்றுச் சகிக்க காத்திருக்கவே நேரும். அந்த சரணடைதலே எவ்விதத்திலும் நாம் நீடித்திருக்கும் கருணையை கைமாறுசெய்யும். மறுத்தால் புழுக்கள் சூழபட தனித்துச் சாவதே இறுதித் தீர்ப்பு. செவிமடுத்த சமன்பாடுகள்தான் வாழ்வை துப்பாக்கிமுனைகளில் பேணிகாக்கின்றன. இந்தச் சமன்பாடுகளை மனனம்செய்த ஏனையோரில், நான் படைப்பில் எதிர்கண்டவர்கள் தமது எல்லைக்குரிய அனுபவங்களை எழுத்துப் பொக்கிஷங்களாக மாற்றுவதில் வல்லவர்கள். என்றாவது ஒருநாள் பிடித்துவிடுவதென கண்களைப் பிறழ்வுபடுத்தும் மாயமானை வேட்டையாட தேடிக் கொண்டிருப்பவர்கள். நிஜம் என்பது அவர்களது பார்வைக்கு விளங்காமல் எழுதப்பட்ட பழைய ஜோதிடக் கலைக்கு மாத்திரமே. அவ்வப்போது எடுத்து சரிபார்த்துக் கொண்டால் போதுமானது. நிலை பிறழாமல் அனைத்தும் வழியேகும்.

விழுமியங்களின் மீதான இத்தகைய நிழல்படர்வின் பின்னணியில், நகுலனது எழுத்துக்களை வாசிக்கிறேன். உணர்விற்குப் புலப்படாத அவ்வெழுத்துக்களின் ஆன்மம் ஊடுருவும் புதிய தன்மையும் இளம்துறவியின் அருவிநோக்கின நடையோட்டமும் சேர்ந்து முதல் காதலின் ஆர்வத்தையும் அதனால் விளையும் பயத்தையும் ஒருசேர உள்மூட்டியது. பிடித்துப் பிரயாணம் செய்த தேசத்தின் புதிர்களாலான சூட்சுமத்தில் பாதை தவறி இருளில் மாட்டிக் கொண்ட பயம். எனினும், திரும்பவியலாத சந்தர்ப்பத்தில் யோசனைக்கு எங்கே இடம்? நம்பும் வழியில் நடக்கவேண்டியதுதான். நகுலனது எழுத்துக்கள் எனக்கு அந்த நடையைப் பழக்கிற்று.

'நவீனன் நினைத்தான். எழுத்து எங்கெல்லாம் நம்மை அழைத்துச் செல்கின்றது. தட்டின கதவுகளெல்லாம் திறக்கும் போலும். ஊசி வழி நூல் செல்லும் என்பது போல மனம் வழி எழுத்துச் செல்லும் போலும். மனம் ஆசை வழி செல்லும் போலும்.'

படைப்பிலிருந்து உலக சஞ்சாரத்தை கேள்விப்படுத்திவிடுவதாகத் தெரிந்தது நகுலனது எழுத்துக்கள். உடைக்குள் விடுவிடுவென கண்மறைவாக ஏறிச் சென்றுவிடும் உடலை உறுத்தாத சிற்றெறும்புகள். நேரிலும், அவர் சொன்னதுபடியே உலகில் அனைத்தும் விதிவயப்பட்டு உழல்வதாக இடறி விழுந்து கடந்துசென்றன. அல்லது அப்படியாக ஒரு பாவனை. முழுக்க நகுலனிடம் மனம்மூழ்கத் துவங்கிவிட்டேன். அவரது வாக்கியங்கள் பாதையோர மரங்களின் நிழலாக உடன் தொடர்ந்தன.

'அவன் வார்த்தைகளில் ஏறிச் சவாரி செய்துகொண்டிருந்தான். அதுவும் எத்தகைய ஒரு மகானுபவம்.'

முடிவற்ற குகைப்பயணம்.

'காலத்தைக் கடிகாரமாகக் கையில் கட்டிக்கொண்டு விட்டோம். பேசக்கூடச் சமயமில்லை.'

உணர்வழுந்தி அறையில் முடங்கின அகப் பூனை.

‘அந்த அறையிலிருந்த அவன், பேனா, நாற்காலி எல்லாமே அந்தர் தியானமாகின்றன.’

இப்பொழுது நகுல இருப்பும்.

‘மிகச் சிறிய துவாரத்தினூடு கர்ப்பச் சிறையில் ஒடுங்கிய ஒரு யோகி ஒரு புதுநகரைக் காண (நான்?) தனியாகத்தான் வருவான்’. தன்னைப் பற்றின கதைதான். தனது முன்னிலைப்படுதலில் சித்திரிக்கும் எண்ணங்கள் அனைத்திலும் தனது தன்னிலையை மறைத்துவைக்கப் பார்க்கிறார். நகுலன் ஒரு அகத்துறவிதான்.

‘நிழல்கள் என்பவைதாம் என்ன? மனதின் பிரதிபலிப்புகள் என்று சொன்னேன். இந்த மனம்தான் நாம் ஒன்றாக இருப்பதற்கும் பலவாக மாறுவதற்கும் அடிப்படைக் காரணம்.’

நவீனன் அவரது ஆண்நிலை. சுசீலா அவரது பெண்நிலை. வழி காண்பவர் மீதங்கள்.

தனக்கே வலைவிரித்து விருப்பமாய் சிக்கிக் கொண்டவர் நகுலன். அவருக்கு அது ஒரு வாழ்வுமுறைமை. பதற்றமற்ற சௌகர்யம். வெளியுலகம் அவருக்கு இருட்டு. உள்ளுலகம் சூரியம். ‘இடமே சாட்சியாக காலமே கணக்காக நின்னைக் கண்டபின் மீண்டும் கண்டதேயன்றி வேறொன்றுமறியேன்.’

‘அதனால்தான்? அதனால்தான்? யார் அங்கே? நீ எங்கே? என்ன? என்னையே நான் தேடிக் கொண்டிருக்கிறேனா என்ன? இல்லாமல்? நான் இல்லாவிட்டால் நான் இருப்பேனா என்ன? சந்தேகமாக இருக்கிறதா? நீ ஏதோ ஒன்றின் நிழல் என்று சொன்னதை மறந்துவிட்டாயா? தோற்றத்திற்கும் மறைவுக்கும் அப்பாற்பட்டது அது என்றால்? என்றால்?’

இன்மை என்பது இருப்பின்மேல் படர்ந்த கொடி என்பதை எனது பார்வைக்கு உணர்த்தியது நகுலனது எழுத்துக்கள். மற்றொன்று ஓஷோவின் உரை. தியானத்தில் ஈடுபடும் காலம் மரண அச்சுறுத்தலாகவே எனது உள்ளத்தை விழுங்கிக் கொண்டிருந்தது நகுலம். இழப்பின் அர்த்தம் வளர்ச்சியில் வேர்விடுகிறது. நரையை முதிர்ச்சிக்கான குறியீடாக பார்ப்பது ஏன்? கருமை வெண்மையடைவதன் சமிக்ஞை மறதி ஞானத்தின் உபயோகிக்காத பிறப்புறுப்பாகி விடுகிறதோ? வெண்மையை வெண்மையாக மட்டுமே உணரத் தெரிந்தால் நீயும் யோகி என்றது நகுலனது அர்த்தப்பாடு. அனைத்துமான புள்ளியில்.

நினைவு

செல்லும் திசைகளெங்கும் வழிமறிக்கும் குரல்கள். நகுலன் ‘ஒரு தொட்டாற்சுருங்கி’ என. ‘நோயுற்ற மௌனவாயிலானவர்’ என. ‘சாமான்யம் கழன்று சித்தம் கலங்கினவர்’ என. இவையெல்லாம் நகுலனை சந்திக்க நான்

விழைவுகொண்ட காலகட்டத்தில் எழுந்தருளின சொலலாடல்கள். நாம் விரும்பும் படைப்புக்களைத் தந்தவர்களை சந்தித்துவிடக் கூடாது எனவும மரபான பொதுக் குரல் ஒன்று எனது செவிகளினருகே ரகசியப் பரிவில் ஒலித்துக்கொண்டிருந்தது. நான் முன்னமே கூறினபடி, படைப்புவிலகல் கொண்ட படைப்பாளிகளின் ஒட்டுருவமாக இந்த அவதானிப்புக்கள் நிலவுகின்றன. இந்நிலை ஏன்?

மதிப்பீடுகள் ஒன்றுதிரண்டு நிஜச்சித்திரம் களவாடப்பட நகுலன் நடைமுறை சார்ந்த முரண்பாடுகளை கையாள்பவர் என்கிற எண்ணமே எனக்கும் பற்றிக் கொண்டது. ஒருவேளை தன்னை உணராத வாசகனை விரட்டிவிட அவரே பரப்பிவிட்ட கட்டுக் கதையோ இது? எனவும் தோன்றியது. எண்ணங்களுக்கு என்ன தடை. குறுக்கும் நெடுக்குமான மின்னல் வெட்டுதலின் சரமாரியான வாள்தீற்றல்களை எப்போதும அது வீசிக்கொண்டேயிருக்கும். அதிகபட்ச தலைகள் உருள்வதே அதன் முதன்மை நோக்கம். எனது தலையும் உருண்டுவிடுமோ என்கிற அச்சநெருக்கடியுடனே யோசிப்பின் தவிர்ப்பும் இதயத்தின் தூண்டுதலும கைகோர்த்துக் கொணடு பழுத்த குடிகாரனின் இல்லத் தேடல்போல குழப்பத்தில் தட்டுத்தடுமாறி நிகழ்ந்ததே நகுலனுடனான எனது முதல் சந்திப்பு.

அந்த முதல் சந்திப்பில் எனக்கு விக்ரமாதித்யனைப் போலவே நம்பிக்கையூட்டிய மற்றொரு புதையல எனது பையிலிருந்த நகுலனுக்குப் பிடித்த பிஜாய்ஸ் பிராந்திக் குப்பி. ஆரம்பப் பேச்சில் அவர் உதாசீனப் படுத்தநேர்ந்தாலும், பிறகு சம்மதித்து ஒன்றாகக் குடிக்கும்வேளையில் இலகுவான நெருக்கத்தைப் பெறமுடியும் என்கிற குறுக்குக் கணிப்பும் இருந்தது. பிஜாய் தரப்போகும் அணுக்கத் துணிவில் எனது உள்ளமெங்கும் பரபரத்து நெகிழ்ந்தோடின கூடை திறக்கப்பெற்ற சிறுகோழிகள்.

நகுலன் முதல் நிமிடங்களில் பார்வையை பெரிதாகத் திருப்பவில்லை. விக்கிரமாதித்யனது சந்திப்பிற்கு நேற்றிப்பொட்டிடும் நல விசாரிப்புக்களை செவிமடுத்துக் கொண்டிருந்தார். விக்கிரமாதித்யன் என்னை அறிமுகம் தந்தபோதும் பழகநாட்டம் கொள்ளாத நபரின் ஒப்பந்தப் புன்னகைத் தோற்றமே அவரிடம் மிஞ்சியது. நான் போரால் இடிபாடடைந்த கட்டிட இரவில் உயிர்காக்கப் பதுங்கின நிச்சலனத்தைப் பெற்றிருந்தேன். ஒரு கண வளைவில், பேச்சு நகுலனது எழுத்துக்களுக்குத் திரும்ப, அவரது சுருதி கவிதைத் தொகுப்பில் ஓவியர் ஆதிமூலம் வரைந்த அட்டைப்படம் 'உங்களுக்கு என்ன அர்த்தத்தில் படுகிறது' என விக்ரமாதித்யனிடம் கேட்டார். என்னமோ தெரியவில்லை, விக்கிரமாதித்யனிடமும் என்னைப்போன்றதொரு மறுதலைமுறையின் தயக்கமும் குழந்தையின் அச்சமும் வெளிப்பட்டது. மரியாதையின் சதவீதம் அதிகப்பட்டுவிட்டது போல.

நகுலனது கேள்வியை சரியாகப் புரிந்துகொள்ளவியலாமல் சமாளிக்கும்விதமான பதிலொன்றை அளித்தார் விக்ரமாதித்யன். ஒருவேளை அப்பதிலுக்குள் அவரது நீச்சலின் நுட்பம் இருந்திருக்கக் கூடும். ஆனால், நகுலன் நல்ல திரைப்படமென நம்பிச் சென்று மோசமான திரைப்படத்தின் சுவரொட்டியை பார்த்துவிட்டு வெறுமனே அரங்கிலிருந்து வீடு திரும்பிச் சோர்ந்தமாதிரி மனமறுப்பை முகத்தில் நிலவச்செய்தார். திடீரென என்னை

கவனித்தார். பார்வையில் தப்பியோடுபவனை பிடிக்க முனையும் கையொன்று எனபக்கம் நீண்டது. ஆனால் எனக்கு அந்த பிடிபடல் இசைவானதும் அரிய தருணங்களிலானதும் ஆகும். நன்கு படித்துவிட்டு பரிட்சையெழுத வரும் பள்ளி மாணவனின் தைரியமும் என்னிடமிருந்தது. மகிழ்வான எதிர்கொள்ளல்தான். நகுலனுக்கும் எனக்குமான முதல்நட்பை உருவாக்கித் தந்த அந்த தருணம் இருட்புள்ளியிலிருந்து மண்துளைத்து வெளிமீண்ட செடியினது நிலைப்படும் இருப்பின் மெய்யுணர்விற்கு ஒப்பானது.

'சுருதியின் அட்டை உங்களுக்கு எப்படி தோணறது?'

விக்ரமாதித்யனிடம் கேட்ட கணமிருந்தே, அந்த ஓவியம் அட்டையிலிருந்து கழன்று என்னுள்ளும் சட்டகமிட்டு விட்டது. மேலும், அது மறக்கவியலாத ஆழ்மைகுணம் கொண்ட ஓவியமும்கூட. மரத்தின் இலைகள் சுருள மேல்நகரும் பாம்பின் வேகத்தில் எனக்கு அந்த ஓவியத்தில் பட்ட அர்த்தவிரிவுகளை அடுக்கிக் கொண்டே சென்றேன். நான் முடிக்கும்வரை பேசாதிருந்து பின் நகுலன புரியாதவித நடிப்பில் கூர்ந்து பார்த்தார். பின்பு 'உங்க அர்த்தம் உங்களுக்கே புரியறதா?' எனக் கேட்டார். பின்பு சில கணங்கள் தாமதித்து மீண்டும் பார்வையை உயர்ததினார். அதில் கனிவான பாங்கில் ஒரு புறா அமர்ந்திருந்தது. எனக்கு மனதில் ஒளியைப் பரப்பும் தீ பற்றிக் கொண்டது அத்தருணம். அவ்வோவியத்தினது கழன்றுவிழும் கண்ணாடியுள் பதிந்த நகுல இருப்பு அங்கு சூழ்ந்துவிட்டது. நான் அவர் சொல்லப்போகும சொற்களை உள்வாங்க, ஆணைக்குக் காத்திருக்கும் படையினனின் தீவிரத்துடன் காத்திருந்தேன். இனி பிஜாய்சுக்கு பெரிய வேலையிருக்காது. எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளும் அந்த முழுநீள இரவிற்கான பதிலளிக்காத பேச்சுத்துணையாக மாத்திரமே எஞ்சும் அது.

மீண்டும் விக்ரமாதித்யனை நகுலன் சோதித்தார். ஐந்து தொகுப்பிலிருந்து சில வரிகளை வாசித்துக் காட்டி 'இவ்வரிகள் உங்களுக்கு என்னவா தோணுது?' என்றார். ஐந்து அவரது நெடுங்கவிதைத் தொகுப்பு. ராமாயணத்தில் வரும் சில காட்சிகளின் கவிதையாக்கம். விக்ரமாதித்யன் உடல் அயர்வு அதிகரித்தது போல இருந்தார். நகுலன கவனித்துவிட்டு அறையினுள்ளே சென்றார். திரும்பினபோது கையில் ஒரு சிறு புத்தகம். அவரது 'சில அத்தியாயங்கள்' எனும் சிறுநாவல் என நினைக்கிறேன். தன்னிடத்தில் அமர்ந்தவர் முதல் வரி தொடங்கி ஏறத்தாழ 60 பக்கங்கள வரையிலான பொடி எழுத்துக்களை உற்றுப்பார்த்து வாசிக்க ஆரம்பித்தார். தான் நினைப்பதை விளக்கிக் காட்ட ஏதோ ஒரு பாரா வாசித்துக் காட்டுகிறார் என அனுமானித்திருந்த எனக்கு யாருமற்ற அறையில் தடுக்கி விழுநத குழந்தையின் தன்னதிர்ச்சி. முழு நாவலையுமே வாசித்துவிட்டார். இடையிடையில் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோமா என்கிற கவனிப்பு வேறு. இது நான் எதிர்பாராதது. வாசித்துமுடித்ததும் 'ஐந்துக்கான பதில் சரிதானே?' எனவும் கேட்டார். என்னைச் சுற்றியிருந்த மௌனத்தின் போதையளவும் கூடிவிட்டது. நகுலனது புதிர்த் தன்மையும் அசூர உயரத்திற்கு தாவிக்கொண்டிருந்தது. அவ்விடத்தின் சுயநினைவிலிருந்தவை குழந்தைமைக்குத் திரும்பின நகுலனும் வயோதிகனின் தன்வய முனகலாகச் சுற்றும் ஒலிநாடாவும் மாத்திரமே.

'வீட்டிற்குள் இருந்தோம், வெளியே நல்ல மழை, ஒரு சொரூப நிலை.'

எனது வார்த்தைகளில் அவருடனான படைப்பனுக்கத்தை உணரத்துவங்கின அந்த நள்ளிரவில், நீண்ட பிரிவிற்குப் பின் அரிதாய் சந்தித்த நண்பரைப் போல தோற்றத்தை மாற்றிக்கொண்டார் நகுலன். விக்ரமாதித்யன உறக்கத்தில் ஆழ, நகுலனுக்கும் எனக்குமான இடையறாத உரையாடல் பகலில் நிகழ்வதான புத்துயிர்ப்பை ஒத்திருந்தது. நவீனன் சுசீலா, இகம் பரம், தாண்டிச் செல்லுதல் சுயம் நசித்தல் என நகுலனது எழுத்தில் வழிந்தோடின அனைத்து சிந்தனைப்பாடுகளையும் கேள்விகளாகவும், எதிர்வினைப்படும் அவரது கேள்விகளுக்கு பதில்களாகவும் பரிமாறிக் கொண்டிருந்தேன். நகுலன் தடையற்ற பேச்சின் லாவகத்தில் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். எனது பரவசத்தின் ஒரு கிளை நீண்டு அவரது இருப்பைத் தொட்டுக்கொண்டிருந்த விதமாகத் தென்பட்டது அவரது மகிழ்ச்சிநிலை. அவருக்குப் பிடித்தமான மேலை இலக்கியங்கள், தமிழ்ப் படைப்பாளிகள், படைப்பாளர் குறித்த வதந்திகள், தனது எழுத்தின் சிருஷ்டி உந்தங்கள் என பரந்த வாசிப்பனுபவத்துடனான அவரது உரையாடல் என்னை மகிழ்வின் உச்சிமரக்கிளையில் அமரும்படி செய்துவிட்டது. சிறந்த பாடலின் மனிதவடிவமென நகுலன் தென்பட்டார். எங்களது கவிதையிதழில், அவரது நினைவில் நான் எழுதின கவிதையைப் பற்றிச் சொல்லி 'வாசித்தீர்களா?' எனக் கேட்டேன். உடனே உள்ளறைக்குச் சென்றார். நாங்களும் உரிமையுடன் பின்சென்றோம். புத்தக அலமாரிக்குச் சென்று தேடவே செய்யாமல் மிகச் சரியாக உருவியெடுத்து 'இந்த இதழ்தானே' எனக் கேட்டார். அவரது ஞாபகத் திறனைக் கண்டு நான் திகைத்துவிட்டேன். எனினும், சிறந்த ஞாபகத் திறன் மிக்கவனே தனது படைப்பனுபவத்தை மிகத் துல்லியமாக்கிக் கொள்ளமுடியும் என்கிற உண்மையினடிப்படையில் அந்த திகைப்பு மங்கி இயல்பிற்கு வந்தது.

நகுலன் மிகவும் தோழமையாகிவிட்ட சூழலில், காழ்ப்புகொண்ட நண்பனென எங்களையும் தூக்கம் கவ்வ, நகுலன் தொடர்உற்சாகத்திலிருந்தார். எனது பேச்சின் வாயிலாக நான் எதையும் பேசும் திறந்தமனமுள்ளவன் எனக் கருதி என்னிடம் காமம் சார்ந்த சில கேள்விகளையும் கேட்டார். அதிலொன்று 'உங்களுக்கு பெண்ணோட எந்த அங்கம் பிடிக்கும்?' என்கிற கேள்வி. அவரது முகத்தில் மீசை காணும் இளைஞனின் ஆர்வம்.

நகுலன் யாருடனும் எளிதாகப் பழகமாட்டார் என்று முன்மதிப்பீட்டுடன் சென்றஎனக்கு,மறுநாள் அதிகாலையில் விடைபெறும்போது 'எப்போது திருவனந்தபுரம் வந்தாலும் என்னை சந்திக்கவேண்டும்' என்று நகுலன் கேட்டுக் கொண்டது அவரது இல்லவளாகத்தின் மரங்களைச் சுற்றி பறக்கும்படியான ஆனந்தத்தைத் தந்தது. தொடர்ந்து, பலமுறை சந்தித்ததுபோன்ற நிறைவை அந்த ஒரு சந்திப்பே எனக்கு அளித்துவிட்டிருந்தது. புறப்படும்போது 'நீங்கள் மீண்டும் வரும்போது இந்தப் புத்தகத்தை வாங்கிவரவும்' எனக் கூறி இயற்கை மருந்துகளின் விளக்கம் சார்ந்த நூலின பெயர் எழுதின குறிப்பொன்றையும், நூலின் விலையான பத்து ரூபாயையும் என்னிடம் தந்தார். நான் 'சென்னை சென்ற உடனே வாங்கி அனுப்புகிறேன்' என்றேன். 'இல்லையில்லை. அடுத்தமுறை நீங்கள் திருவனந்தபுரம் வரும்போது வாங்கிவந்தால் போதுமானது' என்றார். ஏன் அந்தச் சங்கிலிப் பிணைப்பு?

தன்னைத் தாண்டிச் செல்ல விரும்பின நகுலன் முற்றிலுமாக தன்னைத் தாண்டிச் செல்லவியலாமல் போய்விட்டதற்கு அவரது காமம் நிராகரித்த வாழ்வும் ஒரு காரணமாகலாம் என்பது எனது தனிப்பட்ட கருத்து. அவரது துறவுத்தன்மையையும் அந்த காமஉணர்வே வழிதடுத்துவிட்டது. பேச்சின் நடுவே 'காமத்தில் சிறந்த காமம் எது?' எனக் கேட்டார். நான் 'காமத்தில் சிறந்த காமம் காதல்காமம்' என அவரது கவிதையிலிருந்து ஒரு வாக்கியத்தை பதிலாக அளித்தேன். இசைவாகச் சிரித்தார். ஆனால் நான் அவரது படைப்பின் அடிப்படையில் கூறின பதில் அது. வாழ்வினடிப்படையில் கூறவில்லை. உடல்காமத்தையே அவர் காதல்காமமென அனுமானம் செய்துவிட்டிருக்கிறார். அந்த காதல்காமம் அறிவார்ந்த மனமறைப்புக்களை அவருக்கு தந்துவிட்டது என்றே தோன்றுகிறது. எனவேதான் நேரடிக் காமம் என்பது அவருக்கு உடலை வீணபடுத்தும் ஒன்றாகவும் நெடுங்காலம் பூட்டிவைத்த நூலக இருட்டாகவும் தோற்றப்பட்டுவிட்டது. என் பார்வையில், உறவுசார்ந்த காமத்தினூடாக நகுலன் பயணப்பட்டிருந்தால், அவரது பிற்காலத்திய வாழ்விலும் எழுத்திலும் ஜென் தன்மையின் பூரணத்துவத்தை நாம் சந்திக்க வாய்த்திருக்கும். அந்த மௌன வாய்ப்பு அவரது எழுத்திற்குள் இடம்பெயரும் சாத்தியத்தில் இருந்தது என்பதை அவரது எழுத்தில் ஆழ சஞ்சரித்தவர்கள் உணரக்கூடுமானது.

அந்தச் சந்திப்பில்தான் நகுலன் குறித்து எனக்குப் புலப்பட்டது என்னவெனில், அவர் கேள்விகளுக்கு பதில் தருபவரல்ல. கேள்விகளைக கேள்விப்படுத்துபவர். இது எதிராளி கட்டமைக்கும் நியதிக்கு கட்டுப்படாது மீறும் ஞானத் தப்பித்தல். சாக்ரடீஸிய அணுகல். பதில்களை புதிர்களாக்குவது. ஜென் மனத் தன்மை. ஆளைத் தின்றுவிடும் ஆன்மவிசாரத்தை பதில்களற்ற கேளவிகளாக மாற்றிப்போட்டு அறிவின் விவேகியாக தன்னை காண்பவர் நகுலன் என்பது அந்த சந்திப்பில் புரிநதது. உண்மையில் அவர் ஒரு ஜென்னாக வனங்களில அல்லது பாலைவெளிகளில் மறைந்து திரிந்திருக்க வேண்டியவர். எங்கோ இடறிவிட்ட அறிவு அவரை இருப்பின் எழுத்திலும் எழுத்தின் விவேகத்திலும் தள்ளி விழும்படி செய்துவிட்டது.

எனவேதான் நகுலனை சித்தம் கலங்கின வகையில் பார்க்கிறார்கள் சில படைப்பாளர்கள். வீடுபேறு என்பது பதில்களால் அடங்கியிருப்பதாக காண்கிறான் பதில்களைச் சுமந்துதிரியும் நிகழ் மனிதன். எனில், ஆற்றில் உடையவிழ்த்து குளிக்கும் சன்யாசியின் நிர்வாண குணத்தோடு கேள்விகளை மாத்திரமே வீசியெறிந்துவிட்டு நடையைக் கட்டும் நகுலன் எவ்விதமானவர்? அவருக்கு ஒருவிதத்தில பாதுகாப்பைத் தந்துவிடும் சித்தம் கலங்கினவர் என்கிற அடைப்புச்சொல் சிறப்பான பதில்தான். நகுலன் துரத்தப்பட முடியாத அணுக்கத்தில் வாழ்ந்ததற்கும் இந்த பதிலே அரண்காத்துக் கொண்டிருப்பது. கேள்வி பிறப்பெனில் பதில் இறப்பெனலாம். சாமர்த்தியமான நகுலன் கேள்விகளுக்குள்ளேயே சௌகர்யமாக ஊடாடி வாழ்வு முழுக்க புறப்பாட்டின் தூரிதத்திலேயே இருந்துவிட்டார். அவரது எழுத்தின் அகண்டதன்மைக்கும் நெடிய வசிப்பிற்கும் இதுவே ஓர் அழுத்தமான காரணி எனத் தோன்றுகிறது.

நகுலன் சமீபத்தில் மறைந்துவிட்டார் என்கிறார்கள். ஆனால் முன்பே அவர் சுயம் நசித்தலை குரலெடுத்த காலத்திலேயே மறைந்துவிட்டார் என்பதே

எனது ஞாபகம். 'நகுலன் இறந்தபின்னும் ஒலிநாடா ஓடிக் கொண்டிருக்கிறது' எனும் கோணங்கியும் நகுலனது இறப்பை முன்பே பார்த்தவர். உண்மைபூர்வமாக தனக்கும் தனது படைப்பிற்கும் இடைவெளிகளை உருவாக்கிக் கொள்ளாத எந்தவொரு படைப்பாளியுமே இருப்பிற்கும் இருப்பின்மைக்குமான முரண் அடையாளங்களிலிருந்து தன்னை அழித்துக்கொள்கிறான் என்பது நாமறியக் கூடுமானது. அவனது இருப்பைப் படைப்பாக்கத்தானே இதுவரை வாழ்வை சேமித்திருந்தான். அவனைக் காண, உரையாட உயிர்த்திருப்பதே அவனது படைப்பின் நீட்சி. என்பதை நகுலனின் எழுத்துக்கள் மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றன.

வாக்குமூலம் நாவலின் அட்டைப்படத்தில் ஒரு மனிதன் தனது முகத்திலிருந்து இடுப்புவரை முழுவதும் இறுக்கமாகக் கட்டப்பட்ட நீள்துணியொன்றை எத்திசையிலிருந்தோ கடினப்பட்டு இழுத்துச் சென்று இடம்பெயர முயலும் காட்சி இடம்பெற்றிருக்கும். அந்தப் படத்தில் இழுத்துச் செல்பவன் தனது திசையைப் பார்க்கவியலாது. கைகளும் இறுக்கப்பட்டிருக்கும். அசைவிலிருப்பது கால்கள் மாத்திரமே. எனவே கால்களைக் கொண்டு வலுப்போராட்டமாக அவ்விடத்திலிருந்து அகலமுனைகிறான். இருப்பின் இடப்பெயர்வு. எனக்கு அந்தப் படத்தை ஒவ்வொருமுறை பார்க்கும் போதும் நகுலன் தனது காலத்தை இழுத்துச்செல்வதாக, துயருற்ற வாழ்வை இழுத்துச்செல்வதாக, தனது மரணத்தை இழுத்துச்செல்வதாக எனக்குத் தோன்றும். அந்தக் கதையின் கதாபாத்திரம் தற்கொலை விழைவு கொண்டிருப்பவன். நகுலனிடம் படர்ந்த அவனது பிம்பத்தையும் அவர் பிடித்திழுத்துச் செல்வதாக தோன்றும். ஒட்டுமொத்தமான அவரது படைப்பிலும் இந்த 'இடம்பெயரும் வலுமுனைப்பு' உள்ளது. சூரல்நாற்காலியிலிருந்து உலகைக் காண்பதும் பூனைகளின்வழி உணர்வுகளின் ஊடறுத்துச் செல்வதும் நகுலனது மொழியின் தன்னிருப்பு சமிக்ஞைகளாகின்றன. நவீனன் அவரது நேரடி மனப்பிரதி. அவனூடாக அவர். நேசிப்பைப் பேண சுசீலாவின் பிம்பம். அக சஞ்சரிப்பு. எல்லாக் கற்பனைகளுடனும் சூழ்படும் வாழ்வு புதிர்த்தன்மைகளுடனானது. நகுலன் சூல்கொள்ளும் மையங்கள் இவை.

நகுலனுடான எனது முதல் சந்திப்பை நினைவுபடுத்தும தருணங்களில், அத்தகைய ஒரு சந்திப்பு நிகழவில்லை எனவும் உணர்கிறேன். ஏன்? முழுவதுமாக உள்பரவுதலின் நேர்ந்துவிடும் தன்மறத்தல் காலத்தை அழித்துவிடக்கூடும் போல. அகாலத்தில் இறந்துபோன எனது தந்தையின் சாரமாக என்னிடம் நினைவாய் மிஞ்சிய அவரது கைகளின் மென்மைச்சூட்டினைப் போலவே, நகுலனின் நினைவில் எனக்கு மிஞ்சியிருப்பது மௌனஅடர்வில் பூனையின் கூர்பார்வையை பிரதிபலிக்கும் அவரது கண்ணொளிர்வு. நிஜத்தில் நகுலன் ஒரு பூனையாகத்தான் மாறிவிட்டிருக்கிறார் என்பது எனது நம்பிக்கை. அவரது இல்லத்தில் இன்னும் அவரற்ற வசிப்பைத் தொடர்ந்துகொண்டுதானிருக்கும் அவருடன் வாழ்ந்த பலகாலப் பூனைகள். அவை நகுலனது எழுத்தினூடாகவும் நடமாடிக் கொண்டிருக்கின்றன. அவரது எழுத்துக்களை வாசிக்கப்புகும் வேளைகளில் நம்முள்ளும்.

நகுலனை மீண்டும் மீண்டும் வாசிக்கும்போதெல்லாம் எனக்கு ஒரு எண்ணம் தோன்றும். ஆங்கிலப் புலமைபெற்ற நகுலன் தொடர்ந்து ஆங்கிலத்திலேயே எழுதியிருந்தால் தனக்கு நியாயமாகச் சேரவேண்டிய மதிப்புயானைப்

பெற்றிருப்பார் என்று. அந்த மதிப்புயர்வு அனைத்துப் படைப்பாளிகளும் ஏறிட்டுப் பார்க்கும்விதத்தில் வழங்கப்பட்டிருக்கும். அவர் தமிழை வெகுவாய் நேசித்ததே அவரை தமிழோடு முற்றுப்பெறச் செய்துவிட்டது. அவரது எழுத்தின் தீர்க்கத்திற்கு இணையாக, தமிழில் அவருக்கு மதிப்புயர்வு அளிக்கப்படவில்லை. நகுலன் எழுத்துக்கள் இன்னும் உரிய ஆய்வில் பார்வைக்கு வைக்கப்படவில்லை. தமிழில் மாற்று எழுத்துக்களுக்கு நமது சமகால முன்னோடியாக இருந்து சென்றிருப்பவர் நகுலன். அவரது எழுத்துக்கள் அனைத்தும் அவருக்கேயுரிய தனித்துவமான வடிவிலும் நுட்பமான சீராக்கத்துடனும் மறுபிரதியாக்கம் செய்யப்படவேண்டியதும் அவரது நினைவை நாம் பத்திரப்படுத்திக் கொள்வதற்கான நேரிய வழியாகும்.

நகுலன் குறித்த எனது ஆவணப்படம் சார்ந்து கோணங்கியிடம் பேசிக்கொண்டிருந்தபோது, 'நகுலன் குறித்த ஆவணப்படத்தை அவரை பன்முகமான தொனிகளில் பிரதிசெய்யும் காட்சிகளின் வடிவில் எடுக்கவேண்டும்' என்று ஆலோசனை கூறினார். எனது திட்டமும் அவ்விதமானதுதான். அத்தருணத்தின் செயல்முறைக்கான ஆயத்தம் கிளைதாவ முயலும் பறவையின் றெக்கைகளென விரிவடைந்துகொண்டிருக்கிறது தற்பொழுது. இன்னும் எஞ்சியிருப்பது சற்றைய தொலைவு இடைவெளி மாத்திரமே. எனினும் இறுதியாக ஒளிப்பதிவுக் கருவியுடன் தாவப்போவது மாயவெளியில்தான். நகுலனது ஒட்டுமொத்த வாழ்விருப்பையும் எழுத்திருப்பையும் கேள்வியும் பதிலுமெனக் காக்கிறது பூனையின் கூர் பார்வையால் நிரம்பின அந்த மாயவெளி. கேள்வியும் பதிலும் முடிவடையும் அது மையமிடும் திசைப்புள்ளி ஒன்றுதான். 'யாருமில்லாத பிரதேசத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது? எல்லாம்.' தனது இடம்பெயர்தலின் வழிநகர்வில் நகுலன் கூறிச்சென்றது என்பதாக.

"சாவில்தான் சிருஷ்டி
அது எனக்குத் தெரியும்
நீ எப்பொழுதும்
இப்படிச் செத்துக்கொண்டிருக்க வேண்டும்
என்பதுதான்
என்விருப்பம்"

நகுலனின் 'சாவில் பிறக்கும் சிருஷ்டி' -பொதிகைச் சித்தர்

"ஒருவனுக்குத் தான்பெறக்கூடிய ஆற்றல்களில் எல்லாம் தலைசிறந்தது, தன்னைவிட்டுத்தான் மாறிநிற்கும் நிலை என்றொரு நிச்சயம பிறந்தது... என்னில் மாறிய என்னால் ஆன வேறொரு நிதர்சனமான உலகம் என் எழுத்துக்களில் உருவானது" என்பதே நகுலனின் வாக்குமூலம். இருந்த போதினில் இருந்தும் இல்லாமலும், இறந்த பின்னரும் இல்லாதிருத்தலுமாய் என்றுந் தொடர்வதே நகுல இருப்பு. இப்படித் தன்னிலிருந்தே தப்பித்து வெளிநின்று 'நால் உரித்த நான்'களென தன்னைத் தானே சாட்சிபூதமாகி காக்க வல்ல இந்தப் போக்கு, ஏலவே எம்.வி.வெங்கட்ராமின் காதுகள் வாயிலாகவும் கோபிகிருஷ்ணனின் கதைகள் மூலமாகவும் வெவ்வெறு தளங்களில் வித்தியாசமாக அனுபவம் ஆனதுதான் இது எவ்வாறு வாய்க்கிறது நகுலனுக்கு?

"நகுலன் அனுபவங்கள் சுய அனுபவம் என்ற முத்திரை குத்திக்கொள்ளவில்லை. 'தன்' நிலையை அனுபவத்தை விட்டு விலிக விடுகிறார். இரண்டும் தனித்தனியே செயற்படுகின்றன. எறும்பு ஊர்வதைப் போல இந்திரியம் மெல்ல முன்நகரும். அதைதன் கட்டுக்குள் நிறுத்தி வேடிக்கை பார்பபது போல சுக்கில தியானம் செய்வது தான் நகுலன் கவிதைகள் என்றிதனை மிக அருமையாகச் சித்தர் மெய்யியல் நோக்குநிலையில் சித்திரிப்பார் எஸ்.ராமகிருஷ்ணன் ('யாதுமாகி' 2)

இன்னொருதளத்தில் தம் கோபி குறித்த பதிவில் டேவிட் கூப்பரின 'மைபத்தியம் (அ) சித்தப்பிரமை என்பதும் அறிதலுக்கு கானவழி என்கிற எதிர்உளவியல் ரீதியில் நகுலன் எழுத்தின் நதிமூலங்காண்பார் சா.தேவதாஸ்:

"வான்காவையும் காப்காவையும் இப்படித்தான் (மனச்சிதைவு) சமூகம் கருதிற்று. ஆன் செக்ஸ்டனின் கவிதைகள் இப்பிரத்ஞை நிலையின் தீவிரத்தையே முன்வைக்கின்றன. நகுலனின் எழுத்துக்கள் இங்கிருந்து தொடக்கம் கொள்கின்றன" ('புது எழுத்து' 8)

தன்னிலிருந்து தப்பித்தல் எதன் வெளிப்பாடு? தன்னில் மாறிய தன்னாலான வேறொரு நிதர்சனமான உலகம் நகுலன் கவிதைகளில் எவ்வாறெல்லாம் உருவாயிற்று? இத்தகைய வினாக்களுக்கான விடைகளைக் கண்டடைவதில் டி.எஸ். எலியட் வாயில் திறக்கின்றார்.

கவிதை என்பது உணர்ச்சிகளைக் கட்டவிழ்த்து விடுவதல்ல; உணர்ச்சிகளிலிருந்து தப்பிதல்; அது ஓர் ஆளுமையின் வெளிப்பாடு அல்ல, ஆளுமை

யிலிருந்து தப்பித்தல். ஆனால் வாஸ்தவத்தில் உணர்ச்சிகளின் ஆளுமையில் உள்ளவர்களுக்குத்தான் அதிலிருந்து தப்பிக்க விரும்புவது என்னென்று தெரியும் "மீட்சி" 34 இதனை டி.எஸ்.எலியட் எவ்வாறு உருவாக்குகின்றார் என எலியட் கவிதைகளில் நவீனத்துவம் பற்றி எழுதுகையில் முன்வைப்பார் பிரம்மராஜன்," எலியட் முன் நோக்கத்துடனும் திட்டமிட்டம் தனது கவிதை களில் சுயமற்ற நிலையை (Impersonality) உருவாக்கினார். எலியட்டின் கருத்துப்படி, கவிஞனின் நோக்கம் சொற்களிலிருந்து ஒரு பொருளை உருவாக்க வேண்டும் அந்தப் பொருளை கவிதை தன்னாவில் வேறு ஒரு பெரிய முழுமையின் பகுதியாக இருந்திருக்கும்தன் அனுபவங்களை எல்லாம் கவிதையாக மாற்றுவதற்கு ஏற்ற தான கச்சாப்பொருளாகவே மதித்தார்." என (மீட்சி 30)

இவ்வாறெலாம் எலியட்டும் பிரம்மராஜனும் முன்வைக்கும் சுயம் நசித்தல் (de personalization) எனும் கவிதைக் கோட்பாட்டினை நாமிங்கே தமிழ்ச் சூழலில் நகுலன் கவிதைகளை முன்வைத்து இனம் காணலாம்.

"என்னிலிருந்தே
வெளியேறினேன் நான்
என் பின்னாலிருந்த
கதவை அடைக்காமலே"

"என்னிடமிருந்து
நான் வந்து கொண்டு
போய்க் கொண்டிருக்கிறேன்"

தன்னிலிருந்து தப்பித்து வெளியேறி வெட்ட வெளியில் சஞ்சரித்து அலைக்கக்கூடியலாகின்றது நகுலனின் நினைவுப் பாதை.

"பிரக்ஞையின் மேல் கீழ் நிலைகளில் தாவி அலைவுகொள்கிறது இவர் கவிதை சப்த நிசப்த வார்த்தைப் பின்னலை மேற்கொள்கிறார்.... திருக்குறள், நி.ய. பேட்ஸ், பி.ஹெச்.லாரன்ஸ், தெகார்த்தே, திருமூலர், வில்லியம் பாக்னர் எனப்பல எழுத்தாளர்களின் வாசகங்களும் ராமாயண, புராண வரிகளும் இவர் கவிதையில் ஊடு கலந்து செல்கின்றன இந்த ஒன்றை வரிகளின் மூலம் தனித்த ஒருவனின் சுய அனுபவ உலகம் ஒருண்மை கொண்டு விடுவது அலைக்கழிக்கப்பட்டுச் சிதறடிக்கப் படுகின்றது." என நகுலன் கவிதைகளின் சுயம் நசித்தில் முறையியலைச் சித்தரிப்பார் எஸ் ராமகிருஷ்ணன். இந்த வெட்டி ஒட்டும் கொல்லாஜ் மாண்டேஜ் உத்தியில் நகுலன் தேர்ந்தெடுக்கும் தெரிவுகள் வாயிலாக கீழைமரபும் மேலை மரபும் சித்தர் மெய்யியலும் சென்னும் தாவோவுமாய்த் தம்முள் தலைமயங்கி முயங்கும் சங்குமுகமாக நகுலன் கவிதையில் சங்கமிக்கக் காணலாம்.

இதனையே 'பிரம்மாக்கள் மரித்தாலென்ன பிரதிகள் ஜீவிக்கும்' எனும் என் நீள்கவிதைக்கு ஊடாகவும் இணங்காணலாம். ('பறை' 1990)

நகுலனின் ஓர்மைத்தாரை அலைக்கழிவை டெலியூஸ் கத்தாரியின் 'குறுக்கு மறுக்கு'வுடன் ஒத்துறழ்ந்தும் நோக்கலாம்." ஓர் இடத்துக்குப் போவது திரும்ப வருவது, வேறு இடத்துக்குச் செல்வது என்ற கொள்ளாமல், பக்கம் பக்கமாக குறுக்கு மறுக்காச் செல்வது என்று கொள்ள வேண்டும். எப்படி ஓர் ஆறு வேகமெடுத்துப் போகிறதோ அதைப்போல குறுக்கு மறுக்கு ஒன்றையும்

அதல்லாத வேறொன்றையும் அடித்துச் செல்வதாக இருக்கிறது." (நிராநதி)

"ஒருகட்டு / வெற்றிலை / பாக்கு சுண்ணாம்பு புகையிலை / வாயகழுவ நீர் / பளாஸ்க் நிறைய ஐஸ் / ஒரு பட்டிப்பிராந்தி / வத்திப்பெட்டி / ஸிகரெட் / சாப்பல்தட்டு / பேச்வதற்கு நீ / நண்பா / இந்தச் சாவிலும் / ஒருசுகம் உண்டு" இந்தச் சவு நகுலனுக்கு எப்படி எல்லாம் வாயத்திடலாகின்றது? "நிறையவே குடித்தேன் / நிதானம் வேண்டித் தான்" "வெளிமட்டத்தில் / மதிப்பதை விட / அடிமட்டத்தில் / ஆழ்ந்து கிடப்பது / அது ஒருதனி அனுபவம்" "யாருமில்லாப் பிரதேசத்தில் / என்ன நடந்து கொண்டிருக்கிறத எல்லாம்"

என்றெல்லாமும் அந்தச் 'சாவின் சுகத்தை'ப் பேசிச் செல்லும் நகுலக்கவிதை.

யவனிகாவின் 'கடவுளின் நிறுவனத்தை' முன்வைத்து குலசேகரன், "குடியும் கூட விடுபடுதலின் அம்சமாகிறது. மது பற்றிய குறிப்புகள் பிரக்ஞை நிலையென்றால் குடித்தல் மறுத்தலையும் சிதைத்தலையும் கொண்டாடுவதாகிறது. இந்தக் கவிதைகளில் போதைக்குணமும் மனச் சிதைவும் அருகருகே வைக்கப்படுகின்றன... குடியும் வைத்தியமும் ஒன்றாகிறது எனும் பதிவு மேற்சுட்டிய நகுலன் கவிதைக்களுக்கும் பொருந்தக்கூடியதே எனலாம்.

"ஏன் / இப்படிக் குடிக்கின்றீர்கள் / என்று கேட்டாள் / ஏன் / இப்படி வாழ்கிறீர்கள் / என்று நான் கேட்கவில்லை / உங்கள் வாழ்வுக்கும் / என்

சாவுக்கும் இடையில் / வேறொன்று / நிகழ்ந்து கொண்டிருக்கிறது" இங்கு முற்சுட்டிய எலியட் கூற்றான ஒரு சொல்லிலிருந்து பொருளை உருவாக்கும் பாங்கே 'சாவு' எனும் சொல்லிலிருந்து நகுலன் உருவாக்கும் புதிய அர்த்தப் பாட்டில் புலப்படுகிறது அல்லவா?

- இக்கட்டுரையின் இரண்டாம் பாகம் அடுத்த இதழில்

நகுலன் : ஒரு தேவதை அருவி

மணிமேகலை

"தம்மைப் பார்த்து சிரிக்கத் தெரியாதவர்களை
நம்ப வேண்டாம். தீவிரங்கொண்ட
கவிஞர்கள், நகைச்சுவையற்ற பேராசிரியர்கள்,
சீறியெழவும் சினங்கொள்ளவும்
மட்டுமே தெரிந்துள்ள தீர்க்க தரிசிக
ளெல்லாம் ஆபத்தானவர்கள்"

– ராபர்ட் ஃப்ராஸ்ட்.

எழுத்தாளர்கள் இறந்துவிடும்போதுதான் தமிழ்நாட்டு வாசகர்களும் ஊடகங்களும் தம் அனுதாபத்தையும் அக்கறை யினையும் தெரிவித்து மாய்ந்து போகின்றனர். இதுவரை நகுலன் பெயரை உச்சரிக்கக் கூடத் தயங்கியவர்கள் இப்போது, அஞ்சலி செலுத்தும் வரிசையில் நிற்கின்றனர்.

இதற்கிடையே, மலையாளக் கவிஞர் அய்யப்பன் குறித்து கோழிக்கோடு பல்கலைக் கழகம் செய்துள்ள பங்களிப்பைப் பற்றி அறிய முடிகின்றது. "குழந்தைப் பருவத்திலிருந்து தனிமையுணர்வாலும் கைவிடப்பட்ட உணர்வாலும் அலைக்கழிக்கப்பட்டு வந்த அவர், அதே சூழலில் இறந்து போனார்" என்று அப்பல்கலைக்கழகத்தின் மலையாளத் துறை அக்கவிஞரைக் குறித்து குறிப்புத் தயாரித்து மாணவர்களுக்குக் கற்பிக்கின்றது. இவ்வளவுக்கும் உயிரோடுள்ள அய்யப்பனுக்கு நெருங்கிய நண்பர்கள் அப்பல்கலைக்கழகத்திலேயே உண்டு.

கவிஞன் உயிரோடு இருந்தால்தானே அவனைப் பற்றி அக்கறை காட்ட வேண்டும், அவனது கவிதைகளை வாசிக்க வேண்டும் என்பது போன்ற பிரச்சினைகளையெல்லாம்.

அவன் இறந்துபோனால், இறந்து போனவனாக ஆக்கிவிட் டால், சமூகத்திற்கு எந்தத் தொல்லையும் இல்லை.

இதனால்தான், உயிரோடுஇருக்கின்ற கவிஞனை இறந்து போனதாக அறிவிப்பதும், இறந்துவிட்ட நகுலன் போன்றவர்களுக்கு அஞ்சலிலி செலுத்த வரிசையில் நிற்பதும்....

தமிழ் ஆன்மிகச் சிந்தனை மரபினை நன்கறிந்திருந்த நகுலன், ஆங்கிலத்தில் நான்கு கவிதைத் தொகுதிகள் வெளியிட்டுள்ளார். தன் ஆங்கிலக் கவிதைகளை, கவிதைகளுக்கான குறிப்புகள் என்று குறிப்பிடுவார் நகுலன். மேற்கத்தைய சிந்தனைப் பரிச்சயத்துடன் தமிழ் ஆன்மிக மரபிலிலிருந்து தொடங்கும் நகுலனின் இக்கவிதைகள், பிரம்மாண்ட அருவியின் தெறிப்புகளாக - பாய்ச்சலாக வெளிப்பாடு கொள்கின்றன. பக்திமரபின் தொடர்ச்சியாக, சித்தர்கள் குரல்களின் எதிரொலியாக, சூஃபிகளின் சிலிர்ப்புகளாக உருக்கொள்கின்றன; புதிய குரலாக - எண்ணவோட்டமாக உருமாறவும் செய்கின்றன.

"சதையைப் பழிக்கிறேன்
என என்னிடம் கூறாதே
நீ பழிப்பதில்லை
சதை உனக் என்ன செய்கின்றதோ அதை
நீ பழிக்கின்றாய்
சதையெல்லாம் புற்களே
விட்மன் அறிவார்"

பெண் என்றால் தொலைவிலிருந்து காணப்படவேண்டும். அப்போதுதான் அழகு. அப்போதுதான்அற்புதம். ஸ்பரிசிக்கும் போது இவை போய்விடுகின்றன என்பதுதான் நகுலனின் நிலை. இங்கேதான் அவர் சுசீலா என்னும் கற்பிதப்பாத்திரத்தை காதலியாகவும், எழுத்துக்கான உத்வேக தேவதையாகவும் கருதுவதை எண்ணிப் பார்க்க வேண்டும். அத்துடன் கொல்லிப் பாவையின் நினைவுமீட்டலையும்.

"முத்தமிடு"
என்றாள்.
அது ஸர்ப்பத்தின் சீறல்.

நெருங்கும்போது ஆபத்தானது என்றும் எண்ணுவார். இன்னோரிடத்திலும் இதனை வற்புறுத்துகிறார்.

"என்னைத் தொடு"
என்றாள்.
"என் விரல்கள் எரிந்துபோகும்"
என்றேன்.

இன்னொரு கவிதை, ஆசிரியன்-வாசகன், காதலன் - காதலி, குரு-சீடன் , கடவுள் - பக்தன் ஆகியோருக்கிடையிலான உரையாடலாக எண்ணத்தக்கவையில் உள்ளது.

'நான் முட்களை
எடுத்துக் கொள்வேன்
நீ ரோஜாவை
எடுத்துக் கொள்ளலாம்.'

ஒவ்வொருவரும் தனியே நடக்க வேண்டும். என்னால் இன்னும் கடவுளின் terrible northingness-னை உணர முடிகின்றது. எனினும் அது என்னை மருட்டுவதில்லை - மரணம், பிறப்பு, வாழ்தல், மடிதல், கீர்த்தி மற்றும் சாம்பல் என்பவற்றின் பின்னே இருப்பது அதுதான் - டைலனின் வரிகளுடன் ஆயாசமளிக்கும் இக்கதைக்குத் திரையிட விடுங்கள்:

'Goodbye, good-luck, struck
the sun and the moon,
To the fisherman lost in the land.
He stands alone at the door of his house,
with his long-legged heart in his hand'.

சம்பவங்கள் - நிகழ்வுகள் நிறைந்த யதார்த்த வாழ்க்கை அபத்தமாகத் தோற்றமளிப்பதைக் கண்டு, பொறுமையை எதிர்கொள்ளும் நகுலனின் எழுத்து, உள்ளீடற்றதாகத் தொடங்கி, அவரின் ஆன்மிகச் சிந்தனைத் தெறிப்புகளையும் பகடியையும் சேர்த்து வளமாகி அடியாழங்காண முடியாத உலகத்திற்குள் பயணிக்கின்றது. அப்போது கொல்லிப்பாவை சிரிக்கின்றாள், நவீனன் நினைவுப் பாதைக்குள் இறங்குகின்றான், சுசீலா வசீகரிக்கின்றாள், நாடோடி நகைத்துப் போகின்றான். விட்மனும் டைலன் தாமஸும் சாட்சியமாக நிற்கின்றனர்.

உலகின் மிக உயரமான அருவி வெனிஸுலாவில் உள்ளது. அந்நாட்டவர் அதனை Angel Falls என்கின்றனர். எளிதாக அடைய முடியாத சூழலில் பாறை முகடுகளிலிருந்து பாய்ந்து வரும் அது, புகை கவிழ்தலாய், பாலன் ஒழுக்காய், வசீகரக் கனவாய் இருக்கின்றது.

நகுலனை நாம் தேவதை அருவி என்போம். கெக்கலிக் கொட்டிச் சிரிப்பதும், சிலிர்த்துச் சிதறுவதும், கொட்டி முழங்குவதும் தேவதை அருவி இல்லாமல் வேறென்ன?

ஆதாரங்கள்:

1. ஃப்ராஸ்டின் மேற்கோள்: On poets and others / ocatvio paz / Indus, 1992, New Delhi.
2. அய்யப்பன் மறைவுச் செய்தி: Deccan Chronicle, 13.06.07.
3. நகுலனின் கவிதைகள் Non-Being (May. 1986) தொகுப்பிலிருந்து கட்டுரையாளரால் தமிழாக்கம் செய்யப்பட்டவை.
4. Words for the Wind / T.K. Duraisamy / A writers Workshop GreenBird Book, Calcutta, 1973.

கண்ணாடியில் மிதக்கும் பிம்பம்

– எமிலி டிக்கின்சன் கவிதைகள்
தமிழில் இரா.மீனா

ரூ. 60/-

பனிக்குடம்,
137(54) 2ம் தளம்,
ஜானிஜான்கான் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 14.

நகுலன் - ஒரு இலக்கிய சகாப்தம்

ஐராவதம்

இருப்பதற்காக வருகிறோம் - இல்லாமல் போகிறோம். உபநிஷத் மந்திரங்களைப் போன்ற மகா வாக்கியங்களாக இவற்றை உருவாக்கியிருப்பவர் நகுலன். பன்மையில் எழுதியுள்ளார். ஆக இவர் தனக்கு மட்டும் எழுதிக் கொண்ட வரிகள் இல்லை அவை. எட்டுகோடி தமிழர்களுக்கும் நூறுகோடி இந்தியர்களுக்கும் அறுநூறு கோடி உலக மக்களுக்குமாக எழுதப்பட்ட வரிகள் இவை. ஆனால் சற்றே யோசித்துப் பார்த்தோமானால் இந்த வரிகள் பலகீனமானவை என்பது நமக்குப் புரிகிறது. இருப்பதற்காக - வருகிறோம் என்றால் எங்கேயிருந்து வருகிறோம்? ஈரேழு உலகங்கள் என்று கூறப்படும் பதினான்கு உலகங்களிலிருந்தா? இல்லாமல் போகிறோம் என்றால் சூன்யமாகி விடுகிறோம். சூன்யமான பின் நாம் போகும் இடம் எது? இந்த கேள்வியிலிருந்து விடை என்னிடம் கிடையாது. நீங்கள் இந்த வரிகள் பற்றி இந்த ரீதியில் சிந்தித்திருப்பீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. நிச்சயமாக நான் எழுப்பி உள்ள கேள்விகளுக்கு நகுலனிடம் பதில் இராது. கணிதமேதையும், தத்துவதரிசியுமான விட்ஜென்ஸ்டீன் படித்தவர் நகுலன். அவர் வார்த்தைகளை வைத்து விளையாடும் கெட்டிக்காரர். Rhetoric என்னும் அலங்காரமான சொற்பிரயோகமாக இந்த வரிகள் அமைந்து நிற்கின்றன.

85 ஆண்டுகள் வாழ்ந்த நகுலன் இல்லாமல் போகவில்லை. பல நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் மூலம் நம்மிடையே தொடர்ந்து இருக்கத்தான் போகிறார். ஸ்டெந்தால் ஏற்ற பிரெஞ்சு நாவலாசிரியர் நான் இறந்து எண்பது ஆண்டுகளுக்குப் பிறகு தான் என்னுடைய நாவல்களை மக்கள் படிக்கப் போகிறார்கள் என்றார். நகுலனுடைய நாவல்களில் அருமையை புரிந்துகொள்ள மக்கள் அத்தனை காலம் எடுத்துக் கொள்வார்களோ என்னவோ? அவருடைய சிறுகதைகளும் கவிதைகளும் இலக்கிய ரசிகர்களின் கவனத்தை உடனடியாக கவர்ந்துள்ளன. காவ்யா பதிப்பகம் நகுலனின் 25 சிறுகதைகள் மற்றும் இரண்டு குறுநாவல்கள் அடங்கிய தொகுப்பை 1998-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. மிக சமீபத்தில் நகுலனின் மிச்சிறந்த கவிதை வரிகளை பக்கத்திற்கு பக்கம் மேற்கோள்களாய் போட்டு அவருடைய புகைப்படங்கள் அடங்கிய தொகுப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டு பதிப்பகங்கள் சாதாரணமாக எழுத்தாளர்களை வைத்து பணம் பண்ணுவதையே குறிக்கோளாக

கொண்டுள்ளபோது காவ்யா ஒரு மாணாக்கனின் உற்சாகத்தோடு இப்படி புகைப்படங்கள் நிரம்பிய நூலை கொண்டுவந்திருப்பது எனக்கு உண்மயிலேயே உவகை அளிப்பதாயிருந்தது. ஆனால் நகுலனின் புகைப்படங்கள் எடுத்துள்ள சீனிவாசன் என்ற நண்பர் ஒருவன் தன்னை நீங்கள் தானே சீனிவாசன்? என்று பதினோருமுறை கேட்டதாக எழுதியிருந்தது எனக்கு வருத்தத்தை அளித்தது.

அதைவிட வருத்தம் அளித்த விஷயம் நகுலனுடன் கிட்டத்தட்ட சமகால அளவில் புதுக்கவிதை எழுத ஆரம்பித்து இன்றும் எழுதிவரும் கவிஞர் ஒருவரிடம் இந்த புகைப்பட கவிதை நூலை சிலாகித்து நாலு வார்த்தைகள் சொல்லியிருப்பேன். அவர் எப்படி தெரியுமா இந்த செய்தியை எதிர்கொண்டார்? ஆமாம், தேவையா இந்த கிழ வயதில் இவருக்கு இத்தனை புகைப்படங்கள்?

பண்புக் காய்ச்சல் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அது இத்தனை உக்கிரமாக செயல்படும்; வார்த்தை வடிவமெடுத்து சீறிப்பாயும் என்று நான் ஒருபோதும் நினைக்க வேயில்லை.

அதைவிட அக்கிரமம் நகுலனின் நாவல்கள் பற்றி இதே கவிஞர் விட்ட ஏவுகணை? mlendering என்று ஒருவரியில் நாற்பதாண்டு கால படைப்புகள் புறந்தள்ளிவிட்டார். இதற்கு ஆங்கில அகராதியில் அர்த்தம் என்ன என்று பார்த்தேன். இலக்கு இன்றி திரிவது என்பதாக இருந்தது. நகுலன் கதைகளுக்கு முன்னுரை எழுதியுள்ள ப. கிருஷ்ணசாமி இந்த விமர்சனத்தை முன்னதாகவே எதிர்பார்த்து திட்டமிடப்படாத பயணமாக இருந்தாலும் போய்ச்சேருமிடத்தை நகுலன் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார் என்று எழுதியுள்ளார்.

சித்தம்போக்கு சிவன்போக்கு என்று நம்மூரில் ஒரு பதப்பிரயோகம் உண்டல்லவா? அதைப் பின்பற்றி நகுலன் தன் நாவல்களை எழுதி உள்ளார். Trinstram Standy என்று ஒரு ஆங்கில நாவல். Laurance Sterne என்பவர் எழுதியது.

Denis Diderot என்ற பிரெஞ்சு எழுத்தாளர் எழுதிய Jacques The Fatalist and his Master விளையாட்டுத்தனமாக உரையாடல்களிலேயே அமைக்கப்பெற்றிருக்கும். ஆனால் இது ஆழ்ந்த தத்துவங்களை உள்ளடக்கியது. இன்றைக்கும் இலக்கிய விமர்சகர்களால் பாராட்டி படிக்கப் பெறுவது. INCUBUS என்று ஒரு இத்தாலிய நாவல். ஆசிரியர் பெயர் உடனடியாக நினைவில் லில்லை. கிட்டத்தட்ட 300 பக்கங்களை கொண்ட இந்த நாவல்

ஒரே வாக்கியமாக எழுதப்பட்டுள்ளது. கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, கேள்விக்குறி, ஆச்சரியக்குறி இல்லாமல் ஒரு நாவல். இது ஆங்கிலத்தில் உள்ளது. HOPSCOTCH என்று ஒரு நாவல். JULIO CORTAZAR என்பவர் எழுதியது. இதில் 120 அத்தியாயங்கள் போல இருக்கும். இந்த நாவலை நேரடியாக வரிசைப்படி படிக்கலாம். இல்லையா, இன்னொரு பட்டியல் ஆசிரியர் தந்திருப்பார். 48-34-23-117 என்று புதிர்போல அத்தியாயங்களில் தொடர்ச்சியாகவும் படிக்கலாம். சாமுவேல் பெக்கட் காலங்களில் சொற்பிரயோகம் மிகவும் கம்மி. ஆயிரம் வார்த்தைகளுக்குள் அடங்கிவிடும். இவரும் நகுலனை பெரிதும் பாதித்த ஒரு நாவலாசிரியர். இந்த அசாத்திய எளிமையை எழுத்தில் அடைய மிகுந்த அறிவுத் தெளிவு வேண்டும்.

இன்னொரு மூத்த எழுத்தாளர் இருக்கிறார். இவர் ஒரு எழுத்தாளர் மறைவைப் பற்றி இரங்கல் செய்தி விடுக்கிறார் என்றால் அதை கவனமாக படிக்க வேண்டும். ஒரு குண்டூசி முனையில் விஷம் தோய்ந்திருக்கும். இவர் நகுலன் நாவல்களை வரிசையாக பட்டியலிட்டு அவர் ஆரம்பத்தில் எழுதிய நிழல்கள் என்ற நாவல்தான் படிக்கக்கூடியது. அது ஒரு Conventinal Type சம்பிரதாயமாக அமைந்தது என்று முடித்திருந்தார். சம்பிரதாயம் என்றால் லட்சுமி, அநுத்தமா, இந்துமதி இவர்கள் நாவலைப்போல என்று அர்த்தம் தொனிக்கிறது. ஆனால் ண்மையில் நிழல்கள் ஒரு picaverque நாவல். நிழல்கள் நாவலில் பிராமணன் சபிக்கப்பட்டவன் என்கிறார் நகுலன் என்று ப. கிருஷ்ணசாமி கூறுகிறார்.

என்னுடைய இலக்கிய நண்பர் ஒருவர் அமெரிக்காவில் நிரந்தரமாக குடியேற உத்தேசித்தபோது அவர் கடந்த பத்திருபது ஆண்டுகளில் சென்னையில் வைத்து வாங்கியமர்ந்த தமிழ் நூல்களை இரண்டு அட்டை டப்பாக்களில் அடைத்து என் வீட்டு வாசலில் வைத்து விட்டுப் போய்விட்டார். இதில் பிடித்த புத்தகங்களை நீ எடுத்துக்கொள். மற்றவற்றை பழைய பேப்பர்காரனிடம் போட்டுவிடு என்ற அறிவுரைத்தார். நான் தேரோடும் வீதி என்ற நீல-பத்மநாபனின் இரண்டு வால்யூம் நாவல்களை தெரியாத்தனமாக எடுத்துக்கொண்டு விட்டேன். அரசியல்வாதிகள் எப்படி தங்களை இலக்கியவாதிகளாக காட்டிக்கொள்ள ஆசைப்படுகிறார்களோ அப்படி இலக்கியவாதிகள் அரசியல் சூழ்ச்சி செய்வதில் வல்லவர்கள்; இதனால் பாதிக்கப்பட்ட நீல. பத்மநாபன் ஒரு

therapy முயற்சியாக இந்த நாவலை எழுதியுள்ளார். இந்த நாவலில் நகுலன் ஒரு முக்கிய கதாபாத்திரம். இது ஒரு கற்பனைக்கதை.. இதில்வரும் நபர்கள் உண்மை வாழ்க்கையின் பிரதிநிதிகள் அல்லர் என்ற வாக்கியம் ஆங்கிலத்தில்தான் அச்சிடப்பட்டுள்ளது.

நகுலன் பிரக்ஞையை எழுத்தும் எழுத்தாளர்களும் எப்போதும் ஆக்ரமித்திருக்கின்றனர். ஆனால் அவர் அதை .... ஆக செய்வார். இப்படி பிள்ளையார் கோயில் எதிரில் சூரைத்தேங்காய் உடைப்பது போல உடைக்க மாட்டார்.

அவர் 1960களில் டெல்லியிலிருந்து வந்து கொண்டிருந்த THOUGHT என்ற ஆங்கில வாரப்பத்திரிகையில் எழுதுவார். அந்தப்பத்திரிக்கை அப்பொழுது மவுண்ட்ரோடில் அண்ணாசிலை எதிரில் பழைய நியுஎல்ஃபின்ஸ்டர் தியேட்டர் வாசலில் கிடைக்கும். விலை 30 பைசாவோ, 40 பைசாவோ. அதில். க. ந. சுப்ரமண்யம், 4. ஆஞ்சநேயலு போன்ற பிற மெட்றாஸ் அறிவு-ஜீவிகளும் எழுதுவார்கள். அது கம்யூனிஸ எதிர்ப்புக்காக சர்வதேச ஸ்தாபனம் ஒன்றிலிருந்து நிதி உதவி பெற்று வந்த பத்திரிகை என்று பரவலாக பேசப்பட்டது.

அப்பொழுது நகுலன் அவர் சிறுகதைகள் எழுதியிருந்த கையெழுத்துப் பிரதியை ஒரு முழுசைஸ் நோட்டாக பைண்டு செய்து என்னிடம் முன்னுரை எழுதுமாறு கேட்டிருந்தார். எனக்கு முன்னுரை எழுத வெற்றுத்தாள்களாக நான்கோ, ஐந்து பக்கங்களோ ஒதுக்கியிருந்தார். ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் வேண்டும் என்று கேட்டிருந்தார். என்னை எப்படி அவர் தேர்ந்தெடுத்திருந்தார் என்பது எனக்கு அன்றும் சரி, இன்றும் சரி விளங்கவில்லை. நான் அவர் கேட்ட மாதிரியே எழுதி பதிவுத் தபாலில் அவருக்கு திருப்பி அனுப்பி விட்டேன். பிறகு நான் அவரை நேரடியாக நாலைந்து முறை சந்தித்திருக்கிறேன். அந்த சிறுகதைத் தொகுப்பு வெளிவந்ததா என் முன்னுரை என்ன ஆயிற்று என்று நான் கேட்கவில்லை.

நகுலன் கதைகளை தொகுத்து வெளியிட்டிருக்கும் காவ்யா சண்முக சுந்தரம் நகுலன் கூறியதாக குறிப்பிடுகிறார்; என்கதைகளைத் தொகுத்து ஒரு பதிப்பாளரிடம் கொடுத்தேன். அவர் தொலைத்துவிட்டார். அந்த நகுலன் சாய்ந்து சாய்ந்து கொட்டை எழுத்தில் நீலமையினால் எழுதியிருக்கும் பிரதி கிடைக்குமேயானால் அது ஒரு அரிய இலக்கிய ஆவணம் ஆகும்.

நகுலனுடைய இன்னொரு நாவலை என் நண்பர் ஒருவர்தான் புத்தகமாக கொண்டுவந்தார். நகுலன் அதை வெளியிட இரண்டாயிரமோ, அதற்கு சற்று அதிகமாகவோ பணம் கொடுத்தார். அந்த நாவல் விற்க ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகும் என்றார் என் நண்பர். ஆனால் விற்ற காசில் ஒரு பைசா கூட நகுலனிடம் திருப்பித்தரவில்லை. அரசுப்பணியில் இருந்த அந்த நண்பர் வேறு ஊருக்கு மாற்றல் வாங்கிச் சென்றுவிட்டார். பிறகு என்னை சந்தித்த நகுலன் அந்த RASCAL இப்போது எப்படி இருக்கிற ான்? என்று கேட்டார். அந்த பதப்பிரயோகம் கூட செல்லமாக சிணுங்கலாக காதலி தன் காதலன் காதில் முனகுவதைப் போலத்தான் அமைந்திருந்தது.

இன்னொருமுறை நகுலன் சென்னைவந்து அசோக் நகரில் அவர் உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். சாந்தோம் கலைக்கழகம் அவருக்கு விருது வழங்கியது. அதை வாங்க வந்திருந்தார் அவர். அப்பொழுது நானும், நவீன விருட்சம் ஆசிரியர் அழகிய சிங்கரும் ஒருநாள் அலுவலகத்திற்கு விடுமுறை சொல்லிவிட்டு அவரை பேட்டி காண புறப்பட்டோம். நகுலன் அன்று மிகவும் மனச்சோர்வில் இருந்தார். அன்று எங்கள் இருவருக்கும் அது உறை க்கவில்லை. நாங்கள் என்னமோ அவர் வாயிலிருந்து ராஜாங்க ரகசியங்களை வரவழைத்துவிடுவோமோ என்ற அச்சத்தின்பாற்பட்டு அவர் பேசினார். நான் இறந்த பிறகுதான் இந்த பேட்டியை நீங்கள் வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கேள்விகள் கேட்டது நான். பதில் சொன்னது நகுலன். குறிப்பு எடுத்து பதிவு செய்தவர் அழகிய சிங்கர்.

நகுலன் கதைகள் நூலில் பிற்சேர்க்கையாக அவர் பேட்டி ஒன்று வெளியாகி உள்ளது. சாரதா என்ற பத்திரிக்கையில் நவம்பர் 1993-இதழில் வெளியான பேட்டி. இது கச்சிதமாக அமைந்துள்ளது.

அதில் ஒரு கேள்வி:

பழகிய பழகும் மகிழ்ச்சிக்குரிய மனிதர்களாக யாரையாவது குறிப்பிட முடியுமா?

நகுலன் பதில்:

க.நா.சு. மௌனி, சுந்தரராமசாமி, கிருஷ்ணன்நம்பி, அழகிய சிங்கர், ஆத்மாராம், கி. ராஜநாராயணன், விக்கிரமாதித்தன், வைத்தியநாதன்.

இன்னொரு கேள்வி:

இன்றைய எழுத்தாளர்களில் சிறந்தவர்களாக யாரையாவது சுட்டிக்காட்ட முடியுமா?

நகுலன் பதில்:

மா. அரங்கநாதன், இரா. முருகன், ரூமி, எஸ். வைத்தியநாதன், ப.கிருஷ்ணசாமி, பிரம்மராஜன்.

நகுலன் திருமணம் செய்து கொள்ளவில்லை. இதுபற்றி இந்த பேட்டியில் அவர் குறிப்பிடுகிறார்.

இலக்கியத்திற்குத் தொண்டு செய்வதற்காகத் திருமணம் செய்துகொள்ளவில்லை என்பதை நான் அறவே மறுக்கிறேன்.

எங்களுடன் பேசியபோது Alice in wonderland எழுதிய Levis Carrollஐ திருமணம் செய்து கொள்ளாத எழுத்தாளருக்கு உதாரணமாக குறிப்பிட்டார். அவர் குழந்தைகளுக்கான கதை எழுதி பிரபலமானவர். இந்த தொகுப்பில் குழந்தைகள் என்று ஒரு கதை உள்ளது. புதுமைப்பித்தன், கு. அழகிரிசாமி, கிருஷ்ணன் நம்பிக்குப் பிறகு குழந்தைகளை மையமாக வைத்து இயல்பாக எழுதப்பட்ட கதை இது. 10 வயது பெண்ணுக்கு நவீனனைப் பிடிக்காது. என்ன காரணங்கள் என்று பாருங்கள். தனது அப்பாவைப் போல டிரஸ் பண்ணிக்கிறதில்லை. பின்னே அங்கே அடிக்கடி டாக்டர் வருவது. அவன் அடிக்கடி மருந்து வாங்கிக்கொடுப்பது. புஸ்தகம் புஸ்தகமா வாங்கறது. மாசத்தில் ஒரு தடவையாவது சினிமாவுக்குப் போறது கிடையாது. யார் வந்தாலும் அவாளுக்கு டீ, காபி, கொடுக்கச் சொல்வது. மணிக்கணக்கா உட்கார்ந்து பேசறது, சிலசமயம் ரொம்பலேட்டா வீட்டுக்கு ஆட்டோ ரிக்ஷாவிலே வறது.

கடைசியில் வீட்டுக்குப் போகும்போது சின்னவள் தன் அப்பாவிடம் பெரியப்பா ரொம்ப Interesting ஆக பேசிண்டிருந்தார் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அயோத்தி என்று ஒரு சிறுகதை. வெறுமே நாலே பக்கங்கள். கனகச்சிதமாக அமைந்த கதை. தமிழ்ப்பேராசிரியர் ஒருவர் பாணியில் எடுப்பு, தொகுப்பு முடிப்பு என அமைந்த கதை. ஒரு அம்மாள் வீட்டு அம்மாளிடம் கண்ணீரும் கம்பலையுமாக கதை சொல்லிவிட்டு மாற்றிக் கட்டிக்கொள்ள புடவை தானமாக பெற்றுச் செல்கிறாள்.

பையன் வெறும் வேஷம் என்றாள். இருக்கலாம் ஆனா வேஷம் போடாட்டா நம்ம ஒருத்தராலேயும் ஒருநாள் கூட உயிரை வெச்சிண்டு இருக்க முடியாது என்கிறார் அம்மா. மாலை, லீலை என்ற இந்திய வாழ்வுத் தத்துவங்கள் நம் கண் முன் நடமாடுகின்றன.

சாலைகள் என்ற கதையில் சிலவரிகள் எங்கிருந்தோ வருகி றோம். எங்கோயோ போய்க்கொண்டிருக்கிறோம். நடுவில் பல தடுமாற்றங்கள். இடையில் எதிர்பாராதவிதமாகப் பல சம்பவங்கள் நடைபெறுகின்றன. meandering குற்றம் சாட்டிய கவிஞருக்கு பதில் இந்த வரிகளில் கிடைக்கிறது.

வெயில் என்ற கதையில் SIMONE WEIL என்ற பெண்மணி எழுதிய குறிப்பு ஒன்று வருகிறது. ஸைமன் வீல் ஒரு ஃபிரெஞ்சுக்காரி. அவள் நாட்குறிப்பு எழுதியவளா? நகுலன் மட்டும் தான் அவளை பல இடங்களில் குறிப்பிட்டு நான் பார்த்திருக்கிறேன். Down Load எழுத்தாளர்கள் இவளைப்பற்றி ஆராய்ச்சி செய்து நமக்கு தகவல் தரலாம்.

நகுலனின் ஒருநாள் என்ற கதையில் ராமகிருஷ்ணபரமஹம்சர் கதாபாத்திரமாக வருகிறார். உலகின் மிகச்சிறந்த சிறுகதைகள் நூறு தேர்ந்தெடுத்தால் இது அதில் இடம் பெறும். இந்தக் கதையைப் படிக்காதவர்கள் பாவம் செய்தவர்கள்.

வீட்டில் வயது முதிர்ந்தவர்கள் இறந்து போனால் கல்யாண சாவு என்பார்கள். உறவின் முறைகள் ஒன்று கூடி கோலாகலமாக கொண்டாடுவார்கள். நகுலனின் மறைவு நம் மனத்தில் அவரைப்பற்றிய அவர் எழுத்தைப்பற்றிய நல்லெண்ணங்களை ஏற்படுத்தும் திருமணமாகி அமையும்.


ஒரு நூறாண்டு கால தனிமை
மார்க்வெஸ்
தமிழில்
இரா.நடராசன்
CIEN AÑOS DE SOLEDAD

கேப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ்

தமிழில்

இரா.நடராசன்

3

பிலர் டெனெராவின் மகன் தான் பிறந்த இரண்டு வாரங்கள் கழித்து தனது தாத்தா பாட்டியின் வீடு வந்து சேர்ந்தான். வழக்கம் போலவே தனது கணவரின் நச்சரிப்புகளை தாங்கமுடியாமல் ஊர்சுலா பணிந்தாள், ஆனால் எரிச்சலோடும் குற்றச்சாட்டுகளோடும் தான். அவளது கணவரால் தனது ரத்தம் உள்ளோடும் உயிரொன்று விட்டேத்தியாய் வளருவதை அனுமதிக்க இயலவில்லை என்றாலும் அவனை அழைத்து வந்ததில் ஒரு முக்கிய நிபந்தனை இருந்தது. அவனது பிறப்பு குறித்து தற்போதும் அவன் அறியக்கூடாது என்பதே அது. ஜோஸ் அர்காடியோ என பெயரிடப்பட்டிருந்தாலும் குழப்பம் வாராதிருக்க அர்காடியோ என்றே அவனை அழைத்தார்கள் ஊர் குறுநகரமாக மாறி வந்ததாலும் வீட்டிலும் வெளியாலும் ஏனையோர் குனைய வலைகள் இருந்தமையாலும் குழந்தை பராமரிப்பு இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது. தனது சகோதரனுடன் பல்லாண்டு காலம் தங்களை தாக்கிய உறக்கமின்மை எனும் கொள்ளை நோய்கண்ட நகரிலிருந்து மீண்டு அந்நோயற்ற மெக்காண்டோவிற்கு ஒடிவந்த இந்திய குவாஜிரோ மொழிப் பெண்மணி விஷித்தாசி யோனின் பராமரிப்பில் அவர்கள் அமரந்தாவும் அர்காடியோவும் விடப்பட்டார்கள். சகோதரனும், விஷித்தா சியோனும் அளப்பறிய உதவிகள் எப்போதும் செய்தமையால் ஊர்சுலா வீட்டுவேலைகளில் உதவிட அவர்களை நிரந்தரமாக அழைத்து வந்திருந்தாள். அர்காடியோவும் அமரந்தாவும் ஸ்பானியமொழிக்கு முன்னாலேயே குவாஜிரோ மொழி பேசியது இதனால் தான் அத்தோடு பல்லிசூப்பும், சிலந்தி முட்டைகளும் ஊர்சுலாவுக்குத் தெரியாமல் அவர்கள் உட்கொண்டார்கள். ஊர்சுலாவோ விலங்குகள் வடிவில் மிட்டாய்கள் செய்து ஊருக்குள் விற்கும் தனது புதிய தொழிலில் முன்னேற்ற ஈடுபட்டிருந்தாள். மெக்காண்டோ மாறிவிட்டிருந்தது . ஊர்சுலாவோடு வந்த மக்கள் கூட்டம் ஊரின் அருமையையும் மண்ணின் மகத்துவத்தையும் சதுப்பு நிலப் படுகையிலேயே உயர்ந்திருந்த அந்தஸ்தையும் பற்றி அருகிலுள்ள கிராமங்களிலெல்லாம் பரப்பியதால், மெக்காண்டோவைவிட பட்டிக்காடாக இருந்தவர்களுக்கு அது டவுனாகியது. இங்கே பணிஇடங்களும், பட்டறைகளும், பெருங்கடைகளும் தோன்றியதோடு ஒரு வணிகப் பாதையும் அமைய முதலில் காதில் கடுக்கன் அணிந்த அராபியர்கள் தங்கள் தொளதொளத்த கால்சராய்களுடன் வந்திருந்தார்கள். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஓய்வெடுக்க ஒரு நிமிடும் அவகாசமற்றுப் போனாள். தன்முன்னால் திடீரென்று உருவாகிய உண்மை வளர்ச்சி எனும் யதார்த்தம், தனது கற்பனை அண்டத்தை விடவும் விரிவானதாக இருப்பதை கண்ட அவர் உடனடியாக ரசவாத ஆய்வகத்தின்மேல் தனக்கிருந்த ஈடுபாட்டையெல்லாம் கைவிட்டு, திறமையாய் கையாண்டதன் மூலம் வீரியம் குறைக்கப்பட்டிருந்த உலோக வேதிப்பொருட்களை

அப்படிக்கப்படியே போட்டுவிட்டு தான் முன்பு இலங்கிய அதே ஆர்வத்தோடும், துணிந்தும் செயலாற்றும் வீறுகொண்ட ஊர்தலைவனாகி புதிய வீதிகள் திட்டமிட்டு வீடுகளை யாவருக்கும் சமகளவு கடினம், ஒருவருக்கு ஒரு வசதிஇன்னம் இருப்பின் அது அங்கிருக்கும் யாருக்கும் வசதி இன்மையாய் இருக்கும் வண்ணம் ஊர்கட்டமைப்பில் ஒரு முக்கிய புள்ளியானார். சுவரானாலும் வீடானாலும்-புதிதாய் குடியெர்ப்பவர்கள் அவரது அங்கீகாரமின்றி கட்டவே முடியாது எனுமளவு அவர் மதிப்பு கூடியது. அருகில் பயிர்கள் செய்ய படர்ந்து கிடந்த நிலமனைத்தையும் பங்கீடு செய்து அவர்களிடையே பிரித்து வழங்க அவரே அதிகாரம் பெற்றார். வித்தைக்கார ஜிப்ஸிக்கள் மீண்டும் மீண்டும் வந்தபோது அவர்களோடு ஜோஸ் அர்காடியோ வந்திருக்ககூடுமென அவர்களுக்கு பெரிய வரவேற்பு இருந்தது. மகிழ்ச்சியோடு அவர்களின் வருகை கொண்டாடப்பட்டது. ஜோஸ் அர்காடியோ மட்டுமல்ல தனது மகனின் இருப்பிடம் குறித்த அறிந்து வைத்துள்ள ஒரே நபரென்று ஊர்சுலா கருதிய பாம்பு மனிதனும் வந்திருக்கவில்லை. ஆகவே காம வெறியாட்டமாடுகிறவர்களாகவும், குற்றவழிகளில் செல்பவர்களாகவும் முத்திரை குத்தப்பட்டு ஜிப்ஸிக்கள் அன்றும் பிறகு என்றுமே ஊரில் முகாமிட அனுமதிக்கப்படவில்லை, ஜோஸ் அர்காடியோ புயெண்டியா இவ்விஷயத்தில் ஒரே ஒரு விதிவிலக்கை அறிவித்தார். ஊர் முன்னேற்றத்திற்கு பெரும்பங்கு வகித்ததோடு அறிவின் முதிர்ச்சிக்கும் வித்திட்ட மெகியூ வாடெஸ் இனம் சார்ந்த சந்ததிக்கு மட்டும் எப்போதும் ஊரில் காலூன்றி என்றும் கதவுகள் திறந்தே இருக்கும், ஆனால் நாடோடிகள் மெகியூவாடெஸ் சந்ததி, மனித அறிவு எல்லைக்கு மிகவும் அப்பால் சென்று காலூன்றி இப்பூவுலகை விட்டே அகன்று விட்டதாக திரும்பதிரும்ப கூறினார்கள்.

கற்பனாஇச்சைகளின் பரபரப்பு நிமிடங்களுக்கு நடுவே துன்புற்ற நாட்களிடமிருந்து வானைநோக்கி தங்களது இசையான கூச்சல்களால் ரம்மியமாக்கிய பறவைகளை விடுவித்த ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தான் திட்டமிட்ட கால அடிப்படை பணி சொல்பாட்டு முறைக்கு வசதியாய் ஒவ்வொரு வீட்டிலும் இசைக்கும் சுவர் கடிகாரங்களை மாட்டிவைக்கும்படி செய்தார், மரவேலையில் கைதேர்ந்தவர்களால் உருவாக்கப்பட்ட அற்புத ரம்மியமான அவை அரைமணிக்கு ஒரு முறை ஆகச்சரியான நேரத்தில் அடுத்தடுத்து ஊர் எங்குமிருந்து காற்றுமுதல் காற்று வரை இசைத்து உச்சிப்பொழுதில் உச்ச கட்டத்தை அடைந்து சுழற்சி நடனம் ஒன்றின் கச்சித அரங்கேற்றமானது. கருவேல மரங்களுக்கு பதிலாக-அவர்களது வாழ்நாளை நீட்டிப்பு செய்து நிரந்தரத்தன்மை வரவழைக்கும் வாதுமை மரங்களை ஊரெங்கும் நடுவதற்கு அப்போது எடுக்கப்பட்ட முடிவும் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா வுடையதுதான். வெகு ஆண்டுகளுக்குப் பிறகு துத்தநாக மேற்கூரையோடு வீதிதோறும் மரவீடுகள் மெக்காண்டோவை சுற்றிலும் நிறைத்தபோதும் பழைய வீதிகளில் புழுதியேமுறிந்து வாதுமை மரங்கள் பெரிய நிழல் கொடுத்த படிநின்று யார் நட்டிருப்பார்கள் என அதிசயிக்க வைத்தன. தக்கை மர குச்சியின் முனையில் மின்னிய விலங்குகள்

வடிவ குச்சி மிட்டாய்கள் தயாரித்து நாளைக்கு இரண்டு முறை மணக்க மணக்க ஊரில் விற்று வீட்டின் வருமானத்தை பன்மடங்கு உயர்த்தகால் ஊர்சுலாவும் ஊரை சரியாக கட்டுமானம் செய்ய தந்தை ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவும் அல்லும் பகலும் உழைத்தபோது அவ்ரெலியானோ கைவிடப்பட்ட ஆய்வகத்தில், வெள்ளி உருக்குவேலைகளை தனது சொந்த ஆய்வுமுறைகளால் கற்க தன் கணங்கள் அனைத்தையும் செலவு செய்துவந்தார். தனது அண்ணன் விட்டுச்சென்ற உடுப்புகள் பற்றாமல் தனது தந்தையின் உடுப்புகளை அணியும் அவசியம் ஏற்படும் அளவிற்கு அவர் வேகமாக வளர்ந்து விட்டிருந்தார். யாருடைய உடல்வாகையும் பெற்றிராத அவருக்கு உடுப்பின் பொருத்தப்பாட்டை கொண்டுவர விஷித்தாசியோன் சட்டையில் ஒன்றிரண்டு மடிப்புத்தையல்களும் கால் சராயில் ஒட்டுகளையும் விரைவில் போடவேண்டி வந்தது. வாலிபப்பருவம் அவரது குரலை உடைத்து பெரும்பாலும் அமைதியாகவே இருப்பவராகவும், கட்டாயத்தனிமையை முன்னிருத்துபவராகவும், அதே சமயம் பிறக்கும்போது கொண்டிருந்த விழிகளின் உணர்வுப்பூர்வ கூர்மையை தக்கவைப்பராகவும் அவரை மாற்றிஇருந்தது. வெள்ளி உலோக நச வேலையில் முழுமையான ஈடுபாட்டோடு நாள் முழுவதையும் கடத்திய சுவர் உணவுக்காக ஆய்வகத்திலிருந்து வெளி வருவதையும் மறப்பவராய் இருந்தார். தனது மகனின் இப்படியான உள்வாங்கும் இயல்பு கண்டு கலங்கிப் போன ஜோஸ் அர்காடியோ புயெண்டியா வீட்டின் சாவிகளையும் தேவையான பணத்தையும் தந்தார் - ஒரு ஸ்திரியின் சகவாசமே தன்மகனின் தேவை எனக்கருதி. ஆனால் அவ்ரெலியானோ அப்பணத்தை அரசநீர்மம் தயாரிக்கவுதவும் அரிப்பு அமிலம் வாங்கிட பயன்படுத்தி சாவிகளை தங்கமுலாமிட்டு பளபளப்புயேறிட செய்தார். அவரது மட்டுமீறியதன்மையோடு, பல்விழுந்து முளைக்கும் பருவத்திலிருந்து அர்காடியோவும் அமர்ந்தாவையும் ஒப்பிடமுடியாதது மட்டுமல்ல ஈடுகொடுக்க அவர்களால் முடியாத தொலைவும் ஏற்பட்டது. இந்திய மேலங்கிகளை கைகொள்வதற்காக நாள் முழுவதும் இங்கும் அங்கும் எப்போதும் திரிந்த அவர்கள் எண்ணத்தில் விஷித்தாசியோவின் குவாஜிரோமொழிதான் பேச வேண்டும், ஒரு போதும் தங்கள் ஸ்பானிய மொழியில் பேசிவிடக் கூடாது என்னும் ஆழமான வைராக்கியம் நிறைந்திருந்தது. "இவ்விஷயத்தை பெரிதுபடுத்த வேண்டாம்" என ஊர்சுலா தனது கணவரிடம் கூறினாள், "தங்கள் பெற்றோராது பைத்தியக்காரத்தனம் அப்படியே குழந்தைகளுக்கு உரித்து வைத்திருக்கிறது" தனது கையறுநிலை கண்டு துரதிர்ஷ்டங்களுக்காக ஒருப்பாடு புலம்பித்தீர்க்கும் அவளுக்கு பிள்ளைகளின் முரட்டுப்பிடிவாதம் பன்றிவால் போல மிருகத்தனங்களை ஞாபகமூட்டுவதாயிருந்தது. நிச்சயமற்ற வெளியில் பயப்பின்றி அள்ளாடுபவளாய் அவளை சுற்றி வீழ்த்திய படியான ஒரு பார்வையை வீசிய வண்ணம் அவ்ரெலியானோ தனது வாய் திறந்தான்.

"யாரோ வந்துகொண்டிருக்கிறார்கள்" அவன் திட்ட வட்டமாக

சொன்னார் எப்போதெல்லாம் முன்அறிவிப்பு செய்தாரோ அப்போதெல்லாம் செய்தார் போலவே ஊர்சுலா இம்முறையும் அதை பரிகசித்து வீழ்த்திட முயன்றாள்... இது ஒரு வகை சம்சாரித்தனம்.... யாரோ வந்து கொண்டிருப்பது இயல்புதான்.. மெக்காண்டோவிற்கு டஜன் கணக்கில் மனிதர்கள் வருவதும் போவதுமாகவே உள்ளனர் சந்தேகமும்... ரகசியமும் இதில் தேவையென்ன இருக்கிறது? ஆனால் எந்த தருக்கவாதமும் ஈடுபடா வண்ணம் அவ்ரெலியானோ தனது முன்னறிவிப்பை ஊர்ஜிதமே செய்தான்.

"வருவது யார் என்பதை நான் அறியேன்" அவர் குறிப்புணர்த்தினான், "வருவது யாரானாலும் சரி.... அவர் ஏற்கனவே.... வந்துகொண்டிருக்கிறார்"

அந்த ஞாயிற்றுக்கிழமை, உண்மையில், ரெபக்கா வந்து சேர்ந்தாள், பதினோரு வயதே ஆகியிருந்தது அவளுக்கு. மணயுரிலிருந்து கடிதபரிமாற்ற ஒளிந்தோறிகளால்-ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவுக்கான ஒரு கடிதத்தோடு-கடிதமாய் பட்டுவாடா செய்யப்பட-கடினப்பயணம் அவள்மேற்கொண்டிருந்தாள். ஆனால் அவ்விதமாய் அவளை இவ்விடத்து பட்டுவாடா செய்ய அனுகூலம் கேட்டவர் குறித்து அவர்களால் எதையும் பிரத்யேகமாய் கூறமுடியாதது மட்டுமல்ல.. அது யார் என்பதைக் கூட சொல்லமுடியவில்லை. அவளது ஒட்டுமொத்த உபயோக சாமான்கள் ஒரு டிரங்க்பெட்டி, கைவேலை பூக்கள் அமைத்த சிறிய ஆடும் நாற்காலி, மற்றும் க்ளாக்க்ளாக் என சத்தமிட்ட கித்தான் சாக்குப்பை... அதில் தனது இறந்த பெற்றோர்களின் எலும்புகளை தன் உடன் அவள் எடுத்து வந்திருந்தாள். ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவுக்கு அறிமுக கடிதம் அன்பும், பாசமும் ஒழுக ஆழமான மொழியொன்றில் எழுதப்பட்டிருந்தது. இத்தனை தொலைவும் இவ்வளவு காலமும் பிரித்தெடுக்க முடியாத ஒரு உறவினரால்; அவரது பொதுவாழ்வின் மீதான பிணைப்பையும் தாராமாக பிறர்க்குதவும் தயாள குணத்தையும் நினைவில் கொண்ட ஊர்சுலாவின் ஒன்றுவிட்ட அத்தை ஒருத்தியின் மகள் எனவே ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவுக்கும் உறவினர். அதைத்தவிர அவள் அவரது அன்பு நண்பர் நிக்கானர் உல்லயா மற்றும் அவரது மதிப்புமிகு மனைவி ரெபக்கா மாண்ஷியல் ஆகியோரின் மகள்-அவர்களது ஆன்மாவை ஆண்டவர் ரட்சிக்கட்டும்-அவர்களது எலும்பு மிச்சங்களை அவள் ரெபக்கா சுமந்துவருகிறாள்.... ஒரு கிருத்துவ நல்லடக்கத்தை முன்வைத்து... ஆனால் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஆகட்டும் அல்லது ஊர்சுலாதான் ஆகட்டும்... இருவருக்குமே அக்கடிதம் எழுதியவரை மட்டுமல்ல.... அது குறிப்பிட்ட அந்த ரெபக்கா பெற்றோர்களையும் சேர்த்து எவரொருவரையும் எவ்விதத்திலும் ஞாபகமே இருக்கவில்லை.. இருந்தும் கடிதம் எழுதியதாக அறியப்பட்டவர் கையொப்பம் அதிலிருந்த பெயர்களும் அது ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவுக்கு எழுதப்பட்டிருந்ததும் மிகத்தெளிவாக இருந்தும்... தாங்கள் எப்போதோ விட்டுவந்த மணயுரியின் தொலை இடுக்கு ஞாபகத்தில்.... எவரொருவரையும் நினைவுவைக்க அவர்களால்

இயலவில்லை. அந்தச் சிறுமியிடமிருந்த வேறு எந்த தகவலைய பெறுவதும் இயலாதகறியமாக இருந்தது. வந்த நிமிடத்திலிருந்து ஆடும்நாற்காலியில் அமர்ந்து விரல்சூப்பியபடி தன் அகண்ட மிரளும் விழிகளால் அனைவரையும் வெறித்தபடி இருந்த அவள் குறுக்காக கோடுகளிட்டு கறுப்பு சாயம் போடப்பட்ட மேலாடையும்-அது உடுத்தி உடுத்தியே வெளுத்துப் போயிருந்தது-மடிப்புகளுடன் அங்கங்கே வெடிப்பு விட்டிருந்த தோல் பூட்ஸும் அணிந்திருந்தாள். அவளது முடிக்கற்றை காதுகளின் ஓரமாய் கருப்பு ரிப்பன் கொண்டு கட்டப்பட்டிருந்தது. தோள் ஸ்கார்ப்பில் வியர்வை படர்ந்து உப்புக் கோடுகள் இருந்தன. வலது மணிக்கட்டில் தாமிரத்தாலான புலால் உண்ணி கெட்ட பிசாசுகளுக்கும் நோய்க்கு எதிரான இசையில் வெளித்தபடி இருந்த தாயத்து அணியப் பட்டிருந்தது. அவளது வயதுக்கு மிஞ்சிய வறுமையை பட்டினியை உடனே உரைக்கச் செய்த பழுப்பு பற்களும் உப்பிமத்தளம் போலான வயிறும் கொண்டிருந்தும். அவர்கள் சாப்பிடக் கொடுத்த உணவுத்தட்டை தன்மடியில் வைத்து எதும் சாப்பிடாமல் அவள் அப்படியே இருந்தாள். அவர்கள் அவள் ஒரு ஊமை-யாகவும் செவிடாகவும் இருக்கவேண்டுமென கூட நம்பினார்கள். தங்கள் மொழியில் அவளுக்கு தண்ணீர் வேண்டுமாவென பேச்சு கொடுத்தபோது தான் தன் கண்களை அவர்கள் பக்கம் அவசரமாய் திருப்பி ஆமோதித்து உடனடியாக அவள் அங்கீகரித்தாள்.

அவளை அவர்கள் வைத்துக் கொண்டார்கள். ஏனெனில் அவர்களால் அதைத்தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை. அவளை - கடிதத்தின்படி அவளது தாயின் பெயரான-ரிபெக்கா என்றழைக்க முடிவு செய்தார்கள்.. ஏனெனில் அவ்ரெலியானோ மிகப்பொறுமையோடு எத்தனையோ புனிதர்களின் பெயர்களை அவளுக்கு வாசித்தும் அவளிடமிருந்து எத்தகைய எதிர்வினையும் வரவில்லை. மெக்காண்டோவில் சவ-சடங்குகக்கென ஒரு இடமில்லாது இருந்தது. அந்த நிமிடம் வரை யாரும் மரித்துப்போகாததும் ஒரு காரணம். எனவே அவளது பெற்றோர்தம் எலும்புகள் குலுஸ் இயபை எங்கே பார்த்தாலும் கிடந்தது.. சில சமயம் கிளிங்கிளிங்கென ஆடியபடி எதிர்பாரா இடங்களிலும் கிடைத்துக் கொண்டிருந்த அதை சமயம் வரும் போது அடக்கம் செய்யலாமென விட்டிருந்தார்கள். குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக ரெபக்காமென விட்டிருந்தார்கள். குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக ரெபக்கா ஆவதற்கு நீண்ட காலம் ஆனது. வீட்டில் யாருமே வராத ஒரு மூலையில் தனது ஆடும் நாற்காலியில் விரல்கள் சூப்பியபடி மணிக்கணக்கில் அவள் உட்கார்ந்திருந்தாள். அரைமணிக்கு ஒரு முறை ஏதோ அச்சத்தில் காற்றை துழாவுவது போல மிரளும் விழிகளை வைத்துக் கொண்ட அவளை கவர்ந்த ஒரே விஷயம் இசைக்கும் சுவர்கடிகாரங்கள்தான்.

பல நாட்களுக்கு உணவை அறவே உண்ணாமல் அவள் காலந்தள்ளியபோது பட்டினியில் அவள் சாகாதது ஏன் என்று எவருக்கும் புரியாதிருந்தது. ஆனால் வீட்டின் மூலைமுடுக்கெங்கும் ஓசையின்றி நடந்த திருட்டுக் கால்களால் ஊர்ந்து செல்ல முடிந்த இந்தியர்களால் அவள்

உண்ண விரும்பியது தோட்டத்து மண்ணையும் சுவரிலிருந்து தனது நகத்தால் சுரண்டி அவள் எடுத்த சுண்ணாம்பு சில்லுகளையும் தான் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. அவளது பெற்றோர்களோ அல்லது அவளை இழந்து தவிப்பவர்களோ அவர்கள் யாராக இருந்தாலும், அவளது இந்த செய்கையை வண்மையாக கண்டித்திருக்க வேண்டும். ஏனெனில் அவள், ரெபக்கா, அதை ரகசியமாக செய்தது மட்டுமின்றி ஒரு குற்ற உணர்விலும் அதை மறைத்து வந்தாள்... சில சமயங்களில் அவற்றை திரட்டி மறைத்து வைத்து யாரும் காணாத சமயங்களில் சாப்பிட்டு வந்தாள். அப்போது முதல் அவள் எங்கே போனாலும் எல்லாரும் கண்காணித்தார்கள். மாட்டின் சாணத்தை தோட்டமெங்கும் தெளித்ததோடு காரபச்சைமிளகாயை சுவர்களில் கரைத்து பூசியும் பார்த்தார்கள். ஆனால் அவளே தனது சூழ்ச்சித் திறன்களால் மேலும் மேலும் காரியங்களை தொடர்ந்தபோது, ஊர்சுலா பிற தடுப்பு முறைகளை கையாளத் தொடங்கினாள். பேதி மருந்தை ஆரஞ்சு பழச்சாறில் கலந்து வெட்ட வெளியில் இரவு முழுவதும் வைத்து அதை மறுநாள் காலை வெறும் வயிற்றில் அவளுக்கு கொடுத்தாள். ரெபக்காவை குணப்படுத்த இதுவே வைத்தியம் என யாரும் அவளுக்கு சொல்லவில்லை என்றாலும்... கசப்பான திரவம் எதுவாக இருந்தாலும் அது அவளது வயிறை காலிசெய்து விடுவதோடு குடலை சரி செய்து விடுமெனவும் ஊர்சுலாவிற்கு பட்டது. மெலிந்தும் பலமற்றவள் போலவும் காணப்பட்ட ரெபக்கா அதனை குடிக்க மறுத்து செய்த பெரும் போராட்டத்தினால் ஒரு கன்றுக்குட்டியை போல அவளைக் கட்டிப் போட வேண்டி இருந்தது... அப்படியும் அவள் விட்ட உதைகளையும் கடிகளையும் மட்டுமல்ல பெருங் கூச்சலோடு எச்சில் உமிழந்து அவள் வெளிப்படுத்திய ரகசிய குறியீடுகள் போன்ற விநோத சப்தங்களை கேட்ட இந்தியர்கள் அது அவர்களது மொழியில் யாருமே சொல்ல கூசிடும் நினைத்துக்கூட பார்க்கமுடியாத கீழ்த்தரமான இழிசொற்களென புரிய வைத்தார்கள்... அதை ஊர்சுலா அறிந்தபோது வைத்தியத்தில் கசையடிகளையும் சேர்த்தாள். ஆனால் கசையடியா, பேதி மருந்தா அல்லது இரண்டுமாவென்று யாராலும் ஊர்ஜிதமாய் கூற முடியவில்லை ஆனால் உண்மையில் சில வாரங்கள் கழித்து ரெப-க்கா குணமடைவதற்கான அறிகுறிகளோடு தென்படத் தொடங்கினாள். அர்காடியோவோடும் அமரந்தாவோடும் விளையாட்டுகளில் பங்குபெற்றாள். அவர்களும் அவளை மூத்த சகோதரியாகவே நடத்தினார்கள்.. பாத்திரங்களை சரியாக பயன்படுத்தி வயிறார உணவு உண்ணவும் அவள் தொடங்கினாள் விரைவில் இந்திய மொழியை போலவே ஸ்பானிய மொழியையும் சரளமாய் அவள் பேசினாள் என்பதையும், உடலுழைப்பில் அசாத்திய திறமை படைத்தவள் என்பதோடு, அவளாக இட்டுக்கட்டி கடிகார இசைக்கு பாடல்கள்-வேடிக்கையான புதிய சொற்களைக் கொண்டு இயற்ற வல்லவள் என்பதையும் அவர்கள் கண்டனர். தங்கள் குடும்பத்தின் ஒரு உறுப்பினராக அனைவருமே கருத நாளதிகம் பிடிக்கவில்லை. ஊர்சுலா மீது அவளது ஏனைய குழந்தைகளைவிட அவள் அதிகம் அன்பு

செலுத்தினாள். அர்காடியாவையும் அமராந்தாவையும் தம்பி, தங்கை என அழைத்த அவள் அவ்ரேலியானோவை மாமா என்றும் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவை தாத்தா என்றும் அழைக்கலானாள். எனவே இறுதியாக மற்றவர்களைப்போலவே அவளும் ரெபக்கா புயெண்டியா என்று அழைக்கப்பட்டதோடு தனது மரணம் வரையில் அப்பெருமையை தற்காத்தும் கொண்டாள்.

தனது மண்ணும் சுண்ணாம்பும் தின்னும் பழக்கத்திலிருந்து முற்றிலும் குணமாக்கப்பட்டு ஏனைய குழந்தை அவர்களோடு தினமும் படுக்கும் இந்திய பெண்மணி ஒரு இரவு எதேச்சையாக கண்முழித்து அறையின் மூலையிலிருந்து விட்டுவிட்டு வந்த ஓசையினால் கவரப்பட்டாள். அறைக்குள் விலங்கொன்று வந்திருக்க வேண்டுமென பயத்தில் வாரி சுருட்டிக்கொண்டு எழுந்து அமர்ந்தபோது.... அங்கே ரிபெக்கா தனது அசைந்தாடும் நாற்காலியில் விரல் சூப்பியபடி... இருளில் பூனையின் விழிகள் போல பளபளத்த கண்களோடு அமர்ந்திருப்பதை கண்டாள். விதியின் தொடர்ச்சி எண்ணி வெறுத்து, திகில் அடைந்த விஷித்தாசியோன் அந்தக் கண்களில், தானும் தன் சகோதரனும் இளவரசியும் இளவரசனுமாய் ராஜவாழ்க்கை வாழ்ந்த ஒரு சாம்ராஜ்யத்தை விட்டு ஓடிவரக் காரணமாய் இருந்த நோயின் தறிகுறியை கண்டாள். உறக்கமின்மை எனும் கொள்ளை நோய் அது.

சகோதரன், இந்தியன் கட்டாயுர் அதிகாலையிலேயே வீட்டிலிருந்து வெளியேறி விட்டிருந்தான். ஆனால் அவனது சகோதரி, தான் எங்கே சென்றாலும் தன்னை கொள்ளை நோய் விடப்போவதில்லை உலகின் எந்த மூலையிலும் கொடிய நோய் ஒளிந்திருப்பதை தன் ஊழ் வலிக் கோட்பாட்டின் இதயத்தால் உணர்ந்ததால் அங்கேயே தங்குவதென உறுதியாக இருந்தாள். ஆனால் அவளது பீதியை யாருமே புரிந்துகொள்ளவில்லை. "இனிநாம் உறங்கவே இல்லையாயின், அது நன்று...." ஜோஸ் அர்காடியோ புயெண்டியா விளையாட்டாக சொன்னார், "வாழ்வினை நாம் அவ்வழியில் இன்னும் அதிகம் அனுபவிக்க இயலும்". அதைக் கேட்ட விஷித்தாசியோன் விளக்கினாள் உறங்காதிருத்தல் அந்நோயின் ஒரு பகுதியே உடல் சோர்வே அடையாது என்பதால் அதைக்கூட சகிக்கலாம் ஆனால் தடுக்க முடியாத நோயின் முத்திடும் தன்மை அதைவிட மிககொடிய ஒரு வினையில் போய் முடியும்.... ஞாபகமின்மை அவள்மேலும் விளக்கினாள். அந்நோயால் பாதிப்புற்ற ஒருவர் தனது விழிப்புற்ற நிலைக்குப் பழகிய பின் மெல்ல அவரது குழந்தைப் பருவ சம்பவங்கள் நினைவிலிருந்து மறையத் தொடங்கும், பெயர்கள், பொருட்களின் பெயர்கள் பயன்பாடு என ஒவ்வொன்றாய் நினைவிலிருந்து மறையும் தன்னை அருகிலுள்ளவர் குறித்த அடையாளமும் மறந்து தனது ஒரு இறந்தகாலம் இருந்ததையே முற்றிலும் இழந்து பேதைமையால் தன்னையும் மறந்து ஜடப்பொருளாகும்படி கொள்ளை நோயான உறக்கமின்மை முற்றும்... இதை கேட்டு கலகலத்து சிரித்த ஜோஸ் அர்காடியோ புயெண்டியா, அது இந்தியர்கள் தங்களின் மூட

நம்பிக்கைகளால் பெற்ற புராதன நோயென நினைத்தார். ஆனால் முன்ஜாக்கிரதை நிமித்தம் ஊர்சுலா, எதற்கும் இருக்கட்டுமென, ரெபக்காவை ஏனைய குழந்தைகளுடன் சேராது தனிமை படுத்தி தடுப்பு நடவடிக்கையில் இறங்கினாள்.

விஷித்தாசியோனின் திகில் கிட்டத்தட்ட முற்றிலும் மறைந்துவிட்டதாக தோன்றிய பல வாரங்கள் கழித்து ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தனது படுக்கையில் உறங்கமுடியாது புரண்டுகொண்டிருந்தார். கண்விழித்திருந்த ஊர்சுலா என்ன பிரச்சனை என வினவினாள். "நான் மீண்டும் புரொடிஷியோ ஆக்விலாரை பற்றி யோசிக்கிறேன்" என்றார் அவர்கள் ஒரு நிமிடம் கூட உறங்கவில்லை. ஆனால் மறுநாள் உறங்காத தன் களைப்பே இன்றி கழிந்த போது முந்திய கெட்ட இரவையே மறந்திருந்தார்கள்., அவ்ரெலியானோ மதியஉணவு வேளையின் போது ஆச்சரியத்துடன் ஊர்சுலாவின் பிறந்த நாள் பரிசாக தா ஆய்வகத்தில் சுலங்கார அத்தான் ஒன்றின் தயாரிப்பில் இரவு முழுக்க ஈடுபட்டும் சோர்வின்றி உற்சாகமாய் உணர்வதாக அறிவித்தார். யாருக்கும் உறக்கம் ஏற்படாத மூன்றாம் நாள் வரை யாரும் திகிலடையவில்லை.... உறங்கும் இரவு வேளை வந்தும் உறக்கமே வராத போது தான் அவர்கள் தாங்கள் அனைவரும் தொடர்ச்சியாய் ஐம்பது மணி நேரம் உறங்காது கழித்ததை உணர்ந்தார்கள்.

"குழந்தைகளும் விழித்தபடியே உள்ளன" இந்திய தாதி தன் ஊழ்வலி கோட்பாட்டு தீர்ப்புபோல உரைத்தாள், "இது வீட்டிற்குள் புகுந்து விட்டதாயின் யாருமே கொள்ளை நோயிடமிருந்து தப்ப முடியாது."

உறக்கமின்மை எனும் நோயின் தொற்றுக்கு அவர்கள் ஆளாகி இருந்தார்கள். தனது தாயின் சொல்வழி உறங்கல் போடும் தாவர இலை கஷாயங்களை அறிந்திருந்த ஊர்சுலா அனைவருக்கும் அருந்திட மான்ஷுூக் இலைக் கழிவு ஒரு மடக்கு கொடுத்தாள் ஆனால் உறக்கமின்றி விழித்தபடியே அவர்கள் கனவு நிலையைத் தான் அடையமுடிந்தது. மாயக்காட்டசிகளை பிரமையாக தெளிவுடன் காண நேர்ந்த அந்த பொழுதில் அவர்கள் தங்களது கனவுக்காட்சிகளோடு அடுத்தவர்களுடைய மருட்சி ரூபங்களையும் ஒருங்கே கண்டார்கள். வீடே ஏதேதோ வருகையாளர்கள் விருந்தாளிகளால் நிரம்பியுள்ளதான ஒருவித கலக்கம் ஏற்பட்டது. சமையல் அறை மூலையொன்றில் தனது அசைந்தாடும் நாற்காலியில் அமர்ந்த வண்ணம் ரெபக்கா, தனது உருவத்தையே நக்த, தங்கப் பித்தானால் கழுத்துப்பட்டை மூடிய வெள்ளை சாக்கு வெளியாடையாடு தனக்காக ஒரு ரோஜா செண்டு எடுத்து வரும் ஒரு மனிதரை கனவாகக் கண்டாள். அவர் தன்னோடு இளகிய கைகளினால் ஒரு ரோஜாவை உள்ளிருந்து எடுத்து ரெபக்காவின் பெற்றோர்கள் என்பதை உணர்ந்த ஊர்சுலா அவர்களை அடையாளம் துலக்க பெரு முயற்சிகள் செய்து பின் அவர்களை தான் அறிந்ததே இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்தாள். அதே சமயம், பின்னர் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஒரு போதும் தன் மன்னிப்பு வழங்க

இயலாது வருத்தமெய்தியபடி ஊரெங்கும் வீட்டில் தயாரான விலங்கு வடிவ மிட்டாய்கள். தொடர்ந்து ருசித்து உண்ணபட அனுப்பிவைக்கபட்டன. உற க்கமின்மை நோய் கிருமி தொற்றிய பச்சைநிறத்தில் இனிப்பாய் வருத்த சுவையை... இன்ஸோர்மேனியா ... இன்ஸோமேனியா கொள்ளை நோய் தோய்த்த மஞ்சள் குதிரை குட்டி என குழந்தைகளும் பெரியவர்களுமாய் விரும்பி மொய்த்து தின்று தீரத்ததில் திங்களன்று விடியலின்போது ஊரே வாங்காமல் தான் விழித்திருந்ததை உணர்ந்தது. யாருமே ஆரம்பத்தில் திகிலடையவில்லை. மாறாக மெக்காண்டோவில் பரபரப்பாக நேரமின்றி வேலைகள் நடந்த தருணங்கள் என்பதால் உறங்காதிருப்பதை உணர்ந்து மகிழ்ச்சியே அடைந்தார்கள்.... அனைத்து வேலைகளையும் சுறுசுறுப்பாய் முடித்த அவர்கள் அதிகாலை மூன்றும் மணிக்கு கையைக் கட்டிக்கொண்டு கடிகாரங்களின் இசைக்கு தாளமிட்டபடி உட்காரந்திருந்தார்கள்... சோர்வினால் அன்றி கனவுகள் காணும் நாட்டத்தோடாவது உறங்க விரும்பியவர்கள் பலவிதமான தூக்கமுறைகளை முயற்சி செய்து பார்த்தனர். அவர்கள் ஒரு கூட்டமாய் கூடி அங்கங்கே மணிக்கணக்கில் நகைப்புகளுடன் பேசிப்பேசி காலங்கழிக்கலாயினர்... ஒரே நகைப்பு ஜோ ாக்குகளை திரும்பத்திரும்பக்கூறியும்... பொறுக்கமுடிவின்றி காலத்தை கடத்தினர். உதாரணமாக ஆண்மை நீக்கம் செய்யப்பட்ட வொயிட்லகான் சேவலின் கதை கூறவா என்பான் ஒருவன். சரியென பதில் வந்தால் 'நான் உங்களை சரியென்று சொல் என்றா சொன்னேன்... லகான்சேவல் கதை தான் வேண்டுமா என்றேன் என்பான். வேண்டாம் என்றாலும்..." நான் உங்களை வேண்டாமென்றா கூறச் சென்னேன்... உணவுச்சேவலின் கதையை கேட்கிறீர்களா என்று தான் கேட்டேன்" என்பான். அவர்கள் மவுனமாக அமர்ந்திருந்தாலோ... "உங்களை மவுனமாய் இருக்கவா சொன்னேன்... கபான்சேவல் கதை வேண்டுமா எனத் தான் வினவினேன்" என்பான்... இது இப்படியாக பல சுற்றுகள் அல்லவா கேட்டேன்" என்பான்... இது இப்படியாக பல சுற்றுகள் பல மணிநேரம் ஏன் சமயத்தில் இரவு முழுதும் கூட தொடரும்- ஜோஸ் அர்காடியோ புயெண்டியா, ஊரெங்கும் கொள்ளை நோய் பரவிவிட்டதை அறிந்து, குடும்பத்தலைவர்களை ஒன்று கூட்டி நோயின் தன்மைகளை தான் அறிந்த வரையில் எடுத்துக் கூறிட அவர்களும் அந்த பள்ளத்தாக்கின் பிறவாழிடங்களுக்கு அது பரவாமல் தடுக்கும் முறைகளை எடுக்கவும் ஒப்புக் கொண்டனர். பாடும் கிளிகளுக்கு பண்டமாற்றாக அராபியர்கள் அளித்த ஆட்டு மணிகளை கழட்டி நகரின் வாயிலில் தொங்கவிட்டு வைத்தனர். எவ்வளவோ நோயின் உக்கிரம் குறித்து எச்சரிக்கை எழுதி வைத்தும் பிடிவாதமாய் மெக்காண்டோவிற்குள் நுழைந்தே தீருவதென வருவோரின், கழுத்தில் மணி ஒலிக்கச் செய்தனர் இவ்விதம் மணி ஒசையோடு வருபவர் நோய் தாக்குதல் அற்றவர்... உற க்கமின்மை கொள்ளை நோயின்றி உடல்நலத்தோடு இருந்தவர்... எனவே அவருக்கு அங்கே மெக்காண்டோவில் அவர்கள் தங்கி இருக்கும்வரை யாரும் உணவளிக்கவோ... ஏன் தண்ணீர் கூட தரக்கூடாதென்று ஒப்புக்

கொள்ளப்பட்டது. நோயானது வாய்வழியே பரவியதும் மட்டுமல்ல அங்கே உணவுப் பண்டங்கள் அவற்றிலும் அதன் கிருமிகள் நிறைந்து கெட்டுப் போயிருந்தன. இவ்வகையில் அவர்கள் கொள்ளைநோயை தங்கள் நகரின், எல்லைக்கு உட்பட்டதாக வைத்திருந்தனர். நோயாளிகளாகி தங்களை வெளி உலகிடமிருந்து தனிமைப்படுத்திக் கொண்ட அவர்களின் முயற்சி எந்த அளவிற்கு வெற்றி பெற்றதென்றால் அவர்கள் விரைவில் நோய்வாய்பட்ட அசாதாரண சூழலையே சாதாரண சூழலாக ஏற்று பழையபடி கால அடிப்படை பணிக்கும் கடிகார ராகங்களுக்கும் திரும்பி, தேவையற்ற பழக்கமாக உறங்குவதை ஏற்றும் இருந்தனர்.

பல மாதங்களுக்கு மறதியிலிருந்து அவர்களை காப்பாற்றும் சமன்பாட்டை அவ்ரெலியானை தான் முதலில் யோசித்தான். அகஸ்மாத்தாக அவன் அதை அடைந்திருந்தான். தேர்ந்த உறக்கமின்மை நோயாயாய், அதிலும் முதலில் நோய்வாய்பட்ட மனிதர்களில் ஒருவரை அவன் வெள்ளியை இழைப்பதில் கரை கண்டவன் ஆனான். உலோகங்களை தகடாக்குவதற்கான பட்டறைக்கல் மாக் கருவி ஒன்றை நீண்டகாலமாக அவன் பயன்படுத்தி வந்தான் என்றாலும் ஒரு நாள் அதை எங்கும் தேடியவன் அதன் பெயரை ஞாபகப்படுத்திக் கொள்ள பெரு முயற்சி செய்தும் அவனால் முடியாததைக் கண்டான். அவனது தந்தை சொன்னார்; மரமுளை. அவ்ரேலியானோவ் "மாமுளை" இவ்வகையில் தான் அதன்பெயரை எதிர்காலத்தில் மறந்து விடாதிருக்க முடியமென அவன் நிச்சயம் நம்பினான். தனக்கு ஏற்பட்டது மறதியின் தொடக்கம் என்றோ தான் செய்தது அதனை அறிந்து செய்த மாற்று வழி என்றோ அப்போது அவன் உணரவில்லை. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு அந்த ஆய்வகத்தின் ஒவ்வொரு பொருளையும் பெயரால் நினைவு கூர்வது மிகவும் கடினமாக இருப்பதை கண்டான். பிறகு அக்கருவிகள் அனைத்திலும் அவற்றின் பெயரை எழுதி அவன் ஒட்டினான். அவற்றில் ஒட்டப்பட்டிருந்த சீட்டை படித்தாலே போதும் அவற்றை கண்டறிந்து பயன்படுத்தலாம். அவனது தந்தை தனக்கு தன் குழந்தைப் பருவத்தில் நிகழ்ந்து மனதில் ஆழப்பதிந்த அனைத்தும் மறந்ததாக கூச்சத்தோடு கூறியபோது.... தனது ஞாபகமேற்றும் முறையை விளக்கினான்.. உடனே ஜோஸ் அர்காடியோ புயெண்டியா வீடுமுழுவதும் அதை பின்பற்ற வைத்ததேடு மெக்காண்டோவே அதை பின்பற்றும்படி செய்தார். மையில் நனைத்த ஒரு தூரிகையுடன் அனைத்துப் பொருட்களின் மீதும் எழுதத்தொடங்கினார். மேசை, நாற்காலி, கடிகாரம், கதவு, சுவர், படுக்கை, தட்டு, குவளை, பிறகு தொழுவத்திற்கு சென்றார் அங்கே இருந்த கால்நடைகள் மரஞ்செடிகள் என எதையும் விட்டுவைக்க வில்லை. பசு, ஆடு, பன்றி: அவர் ஒவ்வொன்றிலும் தெளிவாக எழுதினார்: கோழி, வான்கோழி, சுரைக்காய் வாழைமரம். விரைவில் பெயர்களை படிப்பவர்களுக்கு அவற்றின் பயன்பாடு மறக்கப்பட்டிருக்கும் என்பதை உணர்ந்து பெயரோடு பயன்பாட்டையும் சேர்த்து எழுதி அவர் இவ்விஷயத்தில் ஆழமாக இறங்கினார். உதாரணமாக பசுக் ளின் கழுத்தில்

தொங்கிய அறிவிப்பு அட்டை, மெக்காண்டோ வாசிகள் மறதியை போராடி வெல்ல எத்தனை பெரும் ஈடுபாட்டோடு முன் மாதிரிகளாய் திகழ்ந்தனர் என்பதை காட்டியது: 'இதுதான் பசு. அவளை தினமும் அதிகாலையில் அவள் சுரக்கும் பாலை கறந்து எடுக்க வேண்டும். அதைக் காய்ச்சி காப்பியோடு கலந்து, பால்காப்பி தயாரிக்கலாம்'. இப்படியாக அவர்கள் யதார்த்தம் தவறி ஓடி ஒளிந்து வந்த காலத்தையும் வார்த்தைகளின் உதவியோடு பயன்பாடுகளுடன் கழிக்கலாயினர்... ஆனால் எத்தகைய நோய்தீர்ப்பு முறையும் பலனளிக்காது சொற்களை வாசிக்கும் முறையும் - அவற்றின் அர்த்தமும் கூட எட்டாத நிலையை விரைவில் அடைந்தனர்.

வெளியிலிருந்து ஊருக்குள் நுழையும் பாதையில் பெரிதாக 'மெக்காண்டோ' எனவும் பிரதான சாலையில் 'இறைவன் இருக்கிறார்' எனவும் பலகைகள் விரைவில் வைக்கப்பட்டன. ஒவ்வொரு வீட்டிலும் பொருட்களின் பெயர்பட்டியலோடு தொடு உணர்ச்சி சுவை என அனைத்தும் எழுதப்பட்டிருந்தது. ஆனால் இந்த செயல் முறையை கடைபிடிப்பதற்கும் பயன்படுத்துவதாகும் ஏராளமான ஒழுங்கும் கட்டுப்பாடும் விழிப்புணர்வும் தேவைப்பட்டது என்பதால் பலரும் கற்பனாயாக யதார்த்தத்திற்கு தங்களுக்கு தாங்களே உருவாக்கிக் கொண்ட உலகில் வசிப்பதை வசதி கருதி பின்பற்றத் தொடங்கினர். இந்த மர்ம உலகில் பிலர்டெனரா பேருகவியாய் இருந்தாள். சீட்டாட்ட அட்டைகளை வைத்து எதிர்காலத்தை முன் கூறியது போலவே ஒருவரின் இறந்தகாலத்தை எடுத்துரைக்கும் ஒருமுறையை அவள் கண்டறிந்திருந்தர்கள் அவளது சீட்டாட்ட அட்டைகள் உணர்த்திய அனுமானிக்க முடியாத மாற்று வழிகளில் வாழ்ந்து வந்தனர்கள். உதாரணமாக தந்தை என்பவர் ஏப்ரல் மாதம் வந்துசேர்ந்த கருத்த மனிதர் என்றோ தாயானவள் தனது இடது கையில் தங்க மோதிரம் அணிந்த கருத்த பெண்மணி எனவோ அறியப்பட்டார்கள். பிறந்தநாள் எது எனப் பார்த்த அவர்களுக்கு சீட்டாட்ட அட்டைகள் எளிதாய் சென்ற செவ்வாய்கிழமை என்று பதிலளித்தன... அதுவும் கருங்குருவி பளபளத்த இலைகள் கொண்ட மரத்தின்மேலமர்ந்து பாடலிசைத்து சென்ற செவ்வாய்கிழமை துயரற்றும் இவ்விதமான அனைத்து வகை செயல்படுகளிலும் தோல்வியே கண்ட அந்த போதில் ஜோஸ் அர்காடியோ புயெண்டியோ, தான் ஒரு காலத்தில் முயன்று கைவிட்ட நினைவாற்றல் கருவியை திரும்ப உருவாக்குவதில் இறங்குவதென தீர்மானித்தார். ஜிப்ஸிக்களின் வியத்தகு கண்டுபிடிப்புகளை வரும் சந்ததியர் நினைவில் பதிக்க வென்று அவர் விரும்பிய அந்த நினைவுப் பதிவு கருவியை புதிய வடிவத்தில் காலையில் எழுந்ததும் ஒரு முறை ஒருவரின் வாழ்க்கை முழுதும் நடந்துள்ள பெரும்பாலான அத்தியாவசிய சம்பவங்களையும் ஆரம்ப முதல் இறுதி வரை ஒருவர் அடைந்துள்ள அறிவு அனைத்தையும் அறியும் விதமாகவும் கருவியை அமைக்க முடிவானது. அது சுழலும் பொருள் அகராதியாய் இருக்கும் என்றும் ஒரு மைய சுழற்சியில் நெம்புகோல் அமைப்பு கொண்டு சிலமணி நேரங்களில் வாழ்விற்கு மிகவும் அத்தியாவசியமாய் தேவைப்படும் விஷயங்கள் கண்முன்னே ஓடச் செய்யும் விதமாய் கதை கருகொண்டதாகவும் கூறினார். கிட்டத்தட்ட

பொருள் அகராதியாய் பதினான்காயிரம் விஷயங்களை தொகுப்பதில் அவர் வெற்றி கண்டபோது பள்ளத்தாக்கின் வழியே சதுப்புநிலங்களை கடந்து ஊருக்குள், பார்வைக்கு மிகவும் வினோதமாய்பட்ட மிகவும் வயதான ஒருவர் நுழைந்தார். கழுத்தில் உறங்கமுடிந்தோர் மணிஅணிந்து சாமான்கள் வைத்து உப்பி இறுக்கி கயிற்றினால் கட்டப்பட்ட சூட்கேஸும் கருப்பு நிற துணியால் மூடப்பட்ட தள்ளு வண்டியுமாய் வந்தார். அவர் நேராக ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் வீட்டிற்கு சென்றார்.

விஷிதாசியோனுக்கு அவரை அடையாளம் காண முடியவில்லை கதவைத்திறந்தவள் எல்லா நினைவுகளையும் இழந்து கொள்ளை நோயால் முற்றிலும் மீளவழி தெரியாமல் புதைகுழியின் ஆழத்திற்குள் விரைந்து கொண்டிருக்கும் ஒரு ஊரில் விபரம் தெரியாமல் எதையோ விற்பனைச் செய்ய வந்தவரென முதியவரை கருதினாள். முற்றிலும் தளர்ந்து முதுமை எய்தி இருந்தவராய் அவர் காணப்பட்டார்... உடைந்து உறுதியற்றுப்போன தள்ளாடும் குரலும், பொருட்களை உள்ளனவா என சந்தேகத்தில் துழாவும் கைகளும் நடுக்கமுற நின்றாலும் வெளியே அவர் இன்னமும் உறங்கும் தன்மைக்கொண்ட ஊரொன்றிலிருந்து வந்துள்ளதை அவள் விஷிதாசியேின் உணர்ந்தாள். தன்வீட்டு வரவேற்பு அறையில் உட்கார்ந்தபடி, நட்டுவைக்கப்பட்ட குல்லாவினால் விசிறிக்கொண்டிருந்த அவரை ஜோஸ் அர்காடியோ புயெண்டியா கண்டார்... கருணை மிகு முக வாட்டத்தோடு சுவரில் அங்காங்கே எழுதித் தொங்கவிடப்பட்டிருந்த பொருட்களின் பெயர்களை பார்வையிட்டபடி இருந்த முதியவர், அவரைப்பார்த்து மிகவும் வேண்டியவரைப் போல நேசப்புன்னகைப் பூத்தவண்ணம் நலம் விசாரித்தபோது அவர் ஏதோ வேறு ஒரு காலக்கட்டத்தில் வேறு ஒரு மனிதராய் அறிப்பட்டிருந்தும் அடையாளம் காணத் தவறியது போல வருத்த முறுவதும் தெரிந்தது. ஆனால் வந்திருந்தவர் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் பொய்த்தன்மைக்கான காரணிகளை அறிந்தவராகவே காணப்பட்டார்... இதயத்தால் வேண்டுமென திணிப்புற்ற மறதியாக மரணத்தையும் சேர்ந்து மறந்த ஒன்றின் தன்மையாய் அதை விளங்கி கொள்ள அவரால் முடிந்தது போலிருந்தது. இந்த மறதி முன்னதை விடவும் கொடியதாகவும்.... திரும்பப்பெற இயலாததாகவும் அறியப்பட்ட ஒன்று... பிறகு அவரால் முழுமையாக நிலைமையை புரிந்துகொள்ள முடிந்தது... விளக்க முடியாத வினோத சாமான்கள் அடைக்கப்பட்டிருந்த பெட்டியை திறந்து ஒரு சிறிய உள்பெட்டியை எடுத்து கண்ணாடி குவளைகள் அடுக்கிய அதை திறந்தார் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவிற்கு ஒரு சிறிய கண்ணாடி மூடி நிறைய குளிர்ச்சியான நிறத்தில் மருந்துபோன்ற திரவத்தை குடிக்கக் கொடுத்தார். அது அவரது மூளைக்குள் ஊடுருவி நினைவு விளக்குகளை பிரகாசமாய் வைத்தது. அழுது கண்ணீர் மறைத்து பூத்த விழிகள் வழியே பைத்தியகாரத்தனமாய் எல்லா பொருட்களோடும் அதைவிட பெரிதாய் பெயர் பலகைகள் தொங்கிய வரவேற்பு அறையை கண்டு அங்கு விரவியருந்த சடங்குத் தன்மை அவரை வெட்கி தலைகுனிய வைத்த போதும்... வீட்டிற்கு வந்திருந்த முதியவரின் மேல்பார்வை விழுந்த

நொடியில் உற்சாகம் கரைபுரண்டது. வந்திருந்தது மெகியூவாடெஸ்!

மெக்காண்டோ நகரம் நினைவு திரும்பி விட்டதை கொண்டாடிய போது, ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவும் மெகியூவாடெஸ்ஸும் தங்களது பழைய நட்பை புழுதி தட்டி புதுப்பித்தனர். நகரத்திலேயே குடியமர்வதற்கு ஜிப்ஸி விருப்பம் கொண்டிருந்தார். மரணத்தை உண்மையிலேயே தழுவினார் என்றாலும் அங்கே தனிமையை தாங்கமுடியாமல் அவர் திரும்பி வந்துவிட்டார். தனது இனத்தால் கைகழுவப்பட்டும், வாழ்வை நேசித்ததன் காரணமாய் மனிதத்தன்மைக்கு மிஞ்சியதாயிருந்த தன் தனிச்சிறப்புகள் அனைத்தையும் இழந்தும் விட்டமையால்.... மரணம் கண்டுபிடிக்காது மிச்சம் வைத்துள்ள உலகின் இந்த மூலையில் இறுதிக் காலத்தில் தஞ்சமடைந்து, நிழற்பட ஆய்வகத்தின் வேலைப்பாடுகளில் தன்னை அர்ப்பணிக்க விரும்பினார். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அது வரை அந்த உருவ அச்சாக்க கண்டுபிடிப்பை பற்றி கேள்விப்பட்டதும் இல்லை. ஆனால் தானும் தனது குடும்பமும் வண்ணத்தில் பளபளக்கும் தகடு நன்றில் படமாக்கப்பட்டு நொடியில் முடிவற்ற நிலையை அடைந்து அமர்த்துவம் அடைந்ததை கண்டபோது திகைப்பில் உணர்வு மழுங்கி ஊமையானார். வெள்ளித்தகடில் அச்சாய் அறையப்பட்ட ஆக்ஸிஜனேற்ற நிழல்படம் எடுக்கப்பட்ட தேதியில் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா, நரைவிழுந்த முடிக்கற்றையும் பன்றியின் விரைப்புமாய் அட்டை கழுத்துப்பட்டை செம்பு பித்தானால் சட்டையுடன் இணைக்கப்பட்டு கிளர்ச்சிரியவராய் காணப்பட்டார். ஊர்சுலா தனது மங்கிய சிரிப்புடன் கிண்டலாகச் சொன்னாள்: 'திகிலடைந்த படைத்தளபதி'. ஜோஸ் அர்காடியோ புயெண்டியா உண்மையில் வெள்ளி நிழற்பட கருவி மூலம் பிரதி எடுக்கப்பட்ட அந்த சுத்தமான திசம்பர் மாத அதிகாலையில் திகிலடைந்து தனது படம் புதியப்புதிய மனிதர்கள் பயன்படுத்தி விட்டெறியும் நன்றாகவே அந்த அலங்கார வெள்ளித்தகடைக் கண்டார். வழக்கத்திற்கு மாறாக இம்முறை ஊர்சுலாதான் அந்த நினைப்பை அவரது மூளையிலிருந்து கலைத்தாள். கூடவே தனது புராதன வேற்றுமைகளையும் வெறுப்பையும் மறந்து மெகியூவாடெஸ் அங்கேயே தங்கிருக்கவும் முடிவு செய்தாள். தன்னை மட்டும் வெள்ளித் தகட்டில் நிழற்படமாய் பிரதியாக்கம் செய்ய அவள் அனுமதிக்கவில்லை ஏனெனில், (அவளது வார்த்தைகளின்படியே) பேரக்குழந்தைகளின் கேலிச்சிரிப்புகளை அவளால் தாங்கிக் கொள்ள முடியாது. அன்றைய காலையில் உள்ளதிலேயே நல்ல உடுப்புகளை தன் குழந்தைகளுக்கு அணிவித்து. முகத்திற்கு பூச்சு இட்டு. மெகியூவாடெஸ்ன் அற்புத நிழற்பட கருவி முன் இரு நிமிடம் அசையாது நிற்க உதவும் என ஆளுக்கு ஒரு தேக்கரண்டி எலும்பு விரைப்பு நல்கி மருந்தும் கொடுத்தாள். பின் எப்போதைக்குமாக இருந்த அந்த ஒரே குடும்ப படத்தில் அவ்ரெலியானோவ் இருப்பு வெல்வெட் உடையில் அமரந்தாவுக்கும். ரிபெக்காவுக்கும் நடுவில் தோன்றினான் ஆண்டுகள் பல கடந்து கொலைப்படையை எதிர்கொண்டபோது இருந்த அதே சோர்வுடனும், புலன்களுக்கு அப்பாற்பட்டவைகளை காணும்

ஞானதிருஷ்டியுடனும் அவர் அப்புகைபடத்தில் காணப்பட்டார். ஆனால் தனது விதிவழிவரும் தீங்குணராதவனாகவே அவன் இருந்தான். சதுப்பு நிலமெங்கும் பெரும் பாராட்டும் புகழும் பெற்ற கைதேர்ந்த வெள்ளி பொற்கொல்லராய் அவன் இருந்தான். மெகியூவாடெஸின் வெறி மிகு ஆய்வகத்தோடு பகிர்ந்துகொண்ட தனது பட்டறையில் மூச்சுவிடும் ஓசைகூட வெளியே தெரியாத ஒருவனாய்தான் அவன் இருந்தான் அவனது தந்தையும் ஜிப்ஸியுமாய் நாஸ்ட்ரடாமஸின் முன் அனுமானிக்கும் வித்தைகளில் மூழ்கி பெருங் கூச்சலோடு விவாதித்தும் ஆய்வுக்குணங்கள் அதிர்ந்து வெள்ளி புரோமைடு சிந்திட அப்படியும் இப் படிடயுமாய்க் கலைவாழியும் பெரும் சலசலப்புப் போதுகளிலும் வேறு உலகில் மூழ்கியவனாய் வேறு ஒரு காலகட்டத்தில் அவன் - அவ்ரெலியானோவ் - வாழ்பவனாய் தனது பொற்கொல்ல வேலையே அனைத்துமாய் மூழ்கினான். அந்த அர்ப்பணிப்பும் முடிவெடுப்பதில் அவன் காட்டிய அத்த ஈடுபாடும் அவனை விரைவில், இனிப்பு விலங்கு மிட்டாய்களை விற்ற ஊர்சுலாவை விடவும் அதிக வருமானம் ஈட்டுபவனாக்கியது என்ற ாலும் முழுமையாய் ஆண்மகனாகி விட்ட போதும் பெண் யாரையும் அறியாதவனாய் அவனை ஊர் வினோதமாய் பார்த்தது, அவன் அதுவரை பெண்வாடையே அறியாதவன் என்பதும் உண்மையே எனவே அவனை அவர் என்று மரியாதையாய் அழைக்க தொடங்கினர்.

பலமாதங்கள் சென்றதும் ஒரு நாள் நகருக்கு நாடோடியான கிழவன் பிரான்ஸிஸ்க்கோவின் வருகை நிகழ்ந்தது. ஏறத்தாழ இருநூறு வயதை எட்டியிருந்த அவன் பழங்கால நாடோடியாக அறியப்பட்டிருந்தான். மெக்காண்டோ வழியாக தான் இட்டுக்கட்டியிருந்த பாடல்களை வினியோகித்தபடி அடிக்கடி அவன் பயணிப்பதுண்டு... அவ்விதமான நாடோடிப் பாடல்களில் மன்யூர் முதல் அவன் பயணித்த சதுப்பு நில நகரங்கள் எங்கும் நடந்த எல்லா வகையான சம்பவங்களையும் அவன் இட்டுக்கட்டுவான் என்பதால் தங்கள் வீட்டில் நடந்தவைகளை பாட்டில் சேர்த்து பிற ஊர்களுக்கு பரப்ப பலரும் போட்டிப் போட்டுக் கொண்டு பணம் தருவார்கள். அப்படித்தான் தனது தொலைந்து போன மகன் ஜோஸ் அர்காடியோவின் இருப்பிடம் பாடல் வழி வருமா என அறிய கூட்-டத்தோடு ஒருத்தியாய் நின்ற ஊர்சுலா தனது தாயின் மரணம் குறித்து அறிந்தாள்.... அதை பிரான்ஸிஸ்கோ-கிழவன் குறிப்பிட்டது கூட உற க்கமின்மை கொள்ளை நோயின்போது ஊரின் பிசாசு ஒன்றை யோசனையற்ற சொல்யுத்தத்தில் வென்று அங்கிருந்து மறைந்து பின் திடீரென்று ஒரு நாள் கட்டாரினோ அங்காடியின் தோன்றிய தினத்தில் தான். நோயின் பிடியிலிருந்து விடுபட்டிருந்த முழு நகரமே அங்கே வெளியுலகின் சம்வங்களை அறிய கூடியிருந்தது. கிழவனோடு அந்த குறிப்பிட்ட நாளில் நான்கு இந்தியர்கள் ஒரு அசைந்தாடும் நாற்காலியில் வைத்து தூக்கி வருமளவு உடல் பெருத்த ஒரு மாதரசியும் கூடவே செம்பழுப்பு நிறத்தில் அழகு மிளிரும் சூரிய ஒளியிலிருந்து ஒரு வண்ணகுடையால் தன்னை பாதுகாத்துக் கொண்ட

வயதுவந்த பெண்ணும் வந்திருந்தனர். அன்றைய இரவு அவ்ரெலியானோவும் காட்டரினோ அங்காடிக்கு சென்றிருந்தார். ஒரு கல்லாலான பச்சொந்தி ஒணானைப் போல கிழவன் பிரான்சிஸ்கோ வட்டமாய் நின்றுகொண்டிருந்த கூட்டமான பார்வையாளர்கள் நடுவில் விரைத்தபடி அமர்ந்திருந்ததை அவர் கண்டார். பழசாகி காலாவதியான ஒரு மெட்டில் செய்திப் பாக்களை சலிப்பேற் படுத்தும் அதே மாதிரியான ஆர்மோனிய வாத்தியம் இசை-த்தபடி அவன் பாடினான். அந்த ஆர்மோனிய இசைக் கருவி குயினியாவில் சர்வால்டர் ராலே அந்த காலத்தில் அவனுக்கு பரிசாக தந்து வெடிப்புற்று உப்பு பூசப்பட்ட தள்ளாடும் கால்களோடு அவனோடு இத்தனை வருடம் பயணமும் செய்திருந்தது. பின்கட்டில் ஆண்கள் உள்ளே சென்று வெளியே வந்துகொண்டிருந்த ஒரு கதவிற்கு வெளியே பருமனான மாதரசி தனது அசைந்தாடும் நாற்காலியில் அமர்ந்தபடியே விசிறிக் கொண்டிருந்தாள். காதில் அன்றலர்ந்த ரோஜாப் பூவைத்திருந்த காட்டரினோ கூடியிருந்தவர் நடுவே புளித்த கரும்புச்சாறு விற்பனை செய்துகொண்டிருந்தாள் நிகழ்வை சாதகமாக்கிக் கொண்டு ஆண்களை கிட்டேசென்று தொடக் கூடாத இடங்களை எல்லாம் தொட்டுத் தொட்டு அவன் பேசினான். நள்ளிரவு நெருங்கியபோது உள்ளே வெப்பம் தாங்கமுடியாத நிலையை எட்டியது. அவ்ரெலியானோவ் எழுந்தான்... இறுதிவரை தன் குடும்பம் சம்பந்தப்பட்ட எதும் காதில் விழாததால் இல்லம் செல்ல எத்தனித்தான். அப்போது பருத்த மாதரசி அவனை சைகையால் அழைத்தாள்.

"நீயும் உள்ளே...செல்" அவள் சொன்னாள். "அதற்கு இருபது சென்ட் தான்" அவ்ரெலியானோவ், அவள் மடியில் வைத்திருந்த கூடையில் தன் சட்டைப்பையிருந்து ஒரு நாணயத்தை எடுத்துப்போட்டார். பின் அறைக்கு எதற்கு என்பதை அறியாமலேயே அவர் நுழைந்தார். அங்கே வயதுவந்த பழுப்புநிற அழகிய பெண் தன் சிறிய முலைக்காம்புகள் தெரிய நிர்வாணமாய் படுத்திருந்தாள். அவ்ரெலியானோவிற்கு முன் அறுபத்து மூன்று பேர் அந்த இரவில் அந்த அறைக்குள் வந்து சென்றிருந்தனர். அத்தனை முறை பயன்படுத்தப்பட்டதால் உடல் பிசைந்து வியர்வையில் ஊறி மக்கி கறையெங்கும் மண்வாடையே அடித்தது. படுக்கையிலிருந்து எழுந்த அந்தப்பெண் வியர்வையில் ஊறிப்போயிருந்த படுக்கை விரிப்பை எடுத்து ஒரு பக்கத்தை பிடித்துக் கொள்ளுமாறு அவ்ரெலியானோவிடம் கொடுத்தாள். ஒரு பெரிய மாட்டுத்தோல் போல அது கனத்தது. அவர்கள் அதை பிழிந்தி வியர்வை ஆறு ஓடச் செய்து அதன் இயல்பான எடைக்கு அதை கொண்டு வந்தனர். மற்றும் பாயை எடுத்து அதை மறுபக்கமாய் திருப்பி வியர்வையை வடிந்திடவும் செய்தனர். அந்த வேலை முடியவே கூடாது என்று எண்ணிடும் அளவிற்கு அவ்ரெலியானோவிற்கு ஆர்வம் பிடுங்கித்தின்றது. காதல் செய்வதன் வழிமுறையை வாய்மொழி அளவில் அறிந்தவர் தான் என்றாலும், அந்த நேரத்தில் கால்முட்டியில் ஏற்பட்ட பலஹீனத்தால் அவரால் நிற்க முடியவில்லை. தேவையென கொந்தளித்த தோலில் சிலிர்ப்புகள் ஏற்பட்டபோதும் உடனடியாக ஒன்றுக்கடிக்க ஒரு

அவசரம் ஏற்பட்டது போலவும் இருந்தது. படுக்கையை உறித்துமுடித்து, பழுப்புயுவதி ஆடைகளை கழட்டுமாறு அவரிடம் கூறியபோது குழப்பமான விளக்கமே அவரால் அளிக்க முடிந்தது. "அவர்கள் என்னையும் உள்ளேவர வைத்துவிட்டார்கள்.. இருபது செண்ட் கூடையில் போடுமாறும் சீக்கிரம்..... சீக்கிரம் என்றும் அவசரப்படுத்தி விட்டார்கள்" அவர் உளறினார். அந்தயுவதி அவரது குழப்பத்தை அறிந்தவளாக, "கவலைப்படாதீர்கள்... மேலும் இருபது செண்ட் கொடுத்தால் சற்றுநேரம் கூடுதலாக கழிக்கலாம்" என்றாள்: தனது சகோதாரின் ஆடையற்ற உடலுக்கு கிட்டேகூட வரமுடியாதென ஒப்பீட்டு எண்ணத்தோடு வெட்கக்கேடான சித்தரவதையை வழக்கம் போல அனுபவித்தபடியே அவ்ரெலியானோவ் ஆடைகளை கழட்டினார். அந்த பழுப்பு யூவதி எவ்வளவோ முயன்றும் கிளர்ச்சியுறாத வராய், மேலும் வேதனையாகவும் தனிமைப்பாடுமாய் அவர் உணரத் தொடங்கினார், "நான் இன்னொறு இருபது செண்ட் வீசுவேன் உடைந்த குரலில் அவர் அறிந்தார். அமைதியாக அப்பெண் நன்றி கூறினாள். அவளது பின்புட்டம் புண்ணாகி இருந்தது. மெல்லிய ஆடையோடு உடல் ஒட்டிப் போயிருந்தது. மூச்சுதிணறலோடு வெளிப்பட்டது... கற்பனைக்கு எட்டாத அளவு அவள் சோர்வடைந்திருந்தாள்.... வருடங்கள் இரண்டுக்கு முன் அவ்விடத்திலிருந்து வெகுதொலைவில், ஒரு இரவில் மெழுகுவர்த்திகளை அணைக்காமல் உறங்கி, அனாதையான தன்னை வளர்த்து ஆளாக்கிய பருத்த மாதரசியான தன்பாட்டியின் வீடு பற்றி எரியும் தீச்சுவாலைகளுக்கு நடுவே கண் விழித்திருந்தாள். வீடு முழுவதும் சாம்பலாகி விட்டபோது அந்த பருத்த மாதரசி, அவளை ஊர் ஊராக தூக்கிசென்று வீடு எரிந்த நஷ்டத்தை ஈடுசெய்ய இருபது செண்ட் காசுக்கு படுக்கையில் விற்றாள். பழுப்பு நிற அப்பெண்ணின் கணக்குப்படி ஒரு இரவுக்கு எழுபது பேர் எனும் அடிப்படையில் இன்னும் பத்தாண்டுகள், கணக்கு ஈடுசெய்ய கட்டாயம் ஆகிவிடும்.. ஏனெனில் அவர்கள் இருவருக்குமான உணவு, பயணச்செலவு அத்தோடு பாட்டியின் அசையும் நாற்காலியை அமர்ந்த இந்தியர்களுக்கு கூலி என்று கணையும் அவளே தான் தரவேண்டியுள்ளது. பாட்டிக்காரி அறைக்கதவை இரண்டாம் முறை முரட்டுத்தனமாய் தட்டியபோது அவ்ரெலியானோவ் தயக்கத்தோடு ஏதுமே செய்யாமல், அழுகை பீறிடும் உணர்வு மேலிட வெளியேறினார். அன்றும் அப்பெண்ணின் நிலை குறித்து இரக்க உணர்வும் இச்சை களரமாய் கலந்து யோசித்தபடி அவரால் இரவு முழுவதும் உறங்கமுடியவில்லை... அவள் மீது அன்பு செலுத்தவும் அவளை பாதுகாக்கவுமான மாற்ற முடியாத விருப்பப்பாடு அவருக்கு ஏற்பட்டது. விடிந்தபோது உறக்கமின்மை மற்றும் காய்ச்சலால் அவதியுற்றபடி அவர் அவளது எதேச்சதிகார மூதாட்டியிடமிருந்து அவளை மீட்கவும் எழுபது பேருக்கு அவள் தாரைவார்க்கும் இரவுகள் அனைத்தின் சுகத்தையும் தானே அனுபவிக்கவுமாய் தீர்மானங்கள் செய்தார். ஆனால் காலை பத்து மணியளவில் அவர் காட்டரினோ அங்காடி சென்ற போது அவள் நகரை விட்டே சென்று விட்டிருந்தாள்.

கடந்துகொண்டிருந்த காலம் அவரது பைத்தியகாரத்தனமான முன் மொழிவின் வேகத்தை தணித்தபோதும் அவரது ஆர்வகுலைவை பன்மடங்கு அது அதிக முன் வைத்தது. தனது வேலையில் தன்னை அவர் தொலைத்தார். பயனற்ற ஆண்மை தந்த வெட்கக்கேட்டின் எதிர் வினையாய் வாழ்க்கை முழுவதையும் பெண்வாடை அறியா ஆண் மகனாய் கழிப்பதென்று அவர் கங்கணம் கட்டிக் கொண்டார். அதே சமயம் மெக்காண்டோவில் அச்சாக்கப்பட முடிந்த அனைத்தையும் படம் பிடித்து முடித்த மெகியூவாடெஸ், வெள்ளி நிழல் பட கருவியின் ஆய்வுக் கூடத்தை, கடவுளை நிழற்படமெடுப்பதென வைராக்கியம் கொண்ட ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் கட்டற்ற விருப்பார்வங்களுக்கு விட்டு கொடுத்தார் இதன் மூலம் கடவுளின் அறிவியல் பூர்வமாக இருப்பை நிரூபிக்க முடியும். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா வார்த்தைகளுக்குள் அடங்காத பல்லடுக்கு நிழற்பட காட்சிப்படுத்துதல் மூலம் வீட்டில் உள்ள கடவுளின் ரூபத்தை படமாக்கிடும் செயலில் இறங்கினார். மெகியூவாடெஸ்ஸோ நாஸ்ட்ராடாமஸின் விளக்கமுற்று மொழி பெயர்த்துணர மேலும் ஆழமாய் மூழ்கத்துவங்கினார். தனது வெல்வெட் மேலுடை வியர்வையில் ஊறும் அளவு காற்றற்ற அந்த ஆய்வகசூழலையில் தனது பழங்காலத்திய பளபளப்பை இழந்த மோதிரம் கொண்ட நடுக்கமுறும் கைகளினால் எதிர்காலத்தை குறித்து விளங்கா மொழிகளில் இறுக்கியபடி இருந்து கொண்டிருந்தார். ஒரு நாள் நள்ளிரவில் மெக்காண்டோவின் எதிர் வரும் காலத்தினை முழுமையாய் கணித்து பெயர்த்து விட்டதாக அவர் அறிவிப்பு செய்தார். சுடரொளி வீசும் ஒரு நகரமாய்... பிரமாண்ட கண்ணாடிமாளிகைகளோடு அது திகழும் என்பதோடு நகரத்தில் புயெண்டியா பரம்பரையே இல்லாமல் போகும் என்றும் அவர் கூறியபோது ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தார். "இது தவறுதலாக நிகழ்ந்த தீர்மானம்," இடிபோல அவர் முழங்கினார், "இல்லை... அவை கண்ணாடி மாளிகைகள் அல்ல... நான் கனவில் கண்டது ஐஸ் வீடுகள்... அப்புறம் புயெண்டிாக்கள் முடிவின்றி பரம்பரை பரம்பரையாக ஊரின் பாரம்பரியமாக தொடர்வார்கள்" ஊர்சுலாவோ ஊதாரித்தனமான அவ்வீட்டின் உண்மை நிலையை சமாளிக்கும் பட்டறிவு படைத்த ஒரே ஜீவனாக, இனிக்கும் விலங்கு மிட்டாய்கள் உற்பத்தியால் முழுமையாய் இரங்கினாள்... இரவு முழுதும் அணையாது சுடர்விட்ட சூளை அடுப்பு, கூடைகூடையாக ரொட்டிகள், விந்தையான பெரியரூபம் கொண்ட பிட்டு, முட்டைவெண்கரு ரொட்டிபிஸ்கட்கள் என ஊரின் பிரதான சாலைக்கு போனதும் நிமிடங்கள் சிலவற்றில் விற்றுத்தீரும் சுவையான பண்டங்களை உருவாக்கி கொட்டிய வண்ணமிருந்தது. ஓய்வெடுப்பது தன் உரிமை என முழங்கும் வயது அடைந்திருந்த போதும் அவள் மேலும் மேலும் உழைப்பில் இறங்கினாள். தனது வியாபாரத்தில் எந்த அளவிற்கு தீவிர ஈடுபாட்டோடு இருந்ததாதெலென்றால், மனாத்தடுமாற்றத்திலோடாக முற்றத்தில் திரிந்தபடி, பிசைந்த ரொட்டிமாவுக்கு இனிப்பு சேர்க்க இந்திய பெண்மணி உதவிய ஒரு நாள் மதியத்தில் சூரிய ஒளியில் இரண்டு வயது

வந்த அழகான பெண்கள் துணியில் பூவேலைகள் செய்ததை வெளியே கண்டு அதிசயித்தாள். ரெபக்காவும் அமரந்தாவுமே அவர்கள். தங்களது பாட்டியின் மரணத்திற்கான துக்க உடைகளை மூன்றாண்டுகள் மடிப்புக்கு எதுவற்ற விரைப்புத் தன்மையோடு அணிந்து பின் கழட்டியதும், பளபளப்பான புதிய உடை உலகில் சுவர்களுக்குகென ஒரு தனி இடத்தை கொடுத்திருந்தது போலிருந்தது. எல்லாரது எதிர்பார்ப்பையும் மீறிய ஒரு விஷயம் ரிபெக்கா கூடுதல் அழகோடு மிளிர்ந்தாள் என்பது. மெலிய உடல் வாகும் கவர்ச்சியான அமைதி தவழும் பெரிய விழிகளும் கண்ணுக்குப் புலப்படாத இழைகளினால் லாவகமாக பூவேலைப்பாடு செய்த மந்திர விரல்களுமாய் அவள் திகழ்ந்தாள்.... வயதில் சிறியவளான அமரந்தா சற்றே குறைவான கவர்ச்சியுடன் காணப்பட்டாள். ஆனால் இயற்கையான ஒரு பெருந்த குதி அவளுக்கு இருந்தது தன் இறந்த பாட்டியைபோலவே மிகவும் அழுத்தமானவளாயும், மன உறுதி மிக்கவளாகவும் அவளிருந்தாள்... அவர்களுக்கு அடுத்தபடியாக தனது தந்தையில் உடல் வாகுகளை பெற்றிருப்பினும் அர்காடியோ ஒரு குழந்தையைபோலிருந்தான். அவ்ரெலினோவ்வுடன் வெள்ளிப் பொற்கொல்லன் வேலையில் தீவிரமாய் ஈடுபாடு காட்டிய அவனுக்கு எழுதபடிக்கவும் அவ்ரெலினோவே கற்றுக் கொடுத்திருந்தார். குழந்தைகள் திருமணவயதை அடைந்திருந்ததால் அவர்களோடு மணமாகி வருபவரும் அவர்களது குழந்தைகளுமாய் இருக்கும்போது இடமில்லாது போக இருப்பதை வீடெங்கும் மனிதர்கள் நிறைந்து வழிவதையும் திடீரென்று ஊர்சுலா உணர்ந்தாள். சிறுகசிறுக, கடும் உழைப்பின் மூலம், திரட்டி வைத்திருந்த பணத்தை வெளியில் எடுத்ததோடு வாடிக்கையாளர்களிடம் சில முன் ஏற்பாடுகளையும் செய்து கொண்டு வீட்டின் விரிவாக்கத்தில் அவள் இறங்கினாள். விருந்தினரை வரவேற்று அமர வைக்கும் புதிய அறையோடு குளிர்ச்சியும் வசதியுமான இன்னொரு அறையும், வீட்டிலிருந்தோர் விருந்தினருடன் அமர்ந்து உணவருந்திட என்று பன்னிரண்டு பேர் உட்கார்ந்து சாப்பிடும் உணவறையும், முற்றத்தில் சன்னல்கள் திறக்கும் இடத்தடுத்த ஒன்பது படுக்கை அறைகளும், ரோஜா தோட்டம் விரவிய முன் பக்கமிருந்து தொட்டிகளில் வளர்ந்த படர் செடிகள் மற்றும் தூரம் வளரும் புதர்த்தாவரங்களிலிருந்தும் மதியத்தில் வெப்பக் காற்று வீசிய வாசல் முன் தாழ்வாரம் ஒன்றும் கட்டிட முடிவெடுத்தாள். தனக்கென்று உருவாக்கிக் கொண்ட சமையல் அறையில் இரண்டு சூளை அடுப்புகள் வைத்தாள். பிலர் டெனரா வருங்காலத்தை தனது சீட்டாட்ட சீட்டுகளின் வழியே ஜோஸ் அர்காடியோவிற்கு முன்மொழிந்த பண்டக அறை இடித்தெறியபட்டு இரண்டு மூன்றுமடங்காக இனி உணவுத் கட்டுப்பாடே வீட்டில் வரக்கூடாதென, பெரிதாக்கப்பட்டது. செவ்விதழ் மலர் மர நிழலில் வெளியே ஆண்களுக்கும் பெண்களுக்குமான இரண்டு தனித்தனி குளியல் அறைகள் கட்டிட செய்தாள். பின் கட்டில் ஒரு பெரிய குதிரைலாயம் கம்பிவேலியிடப்பட்ட கோழிப் பண்ணை, கறவை பசுக்களுக்கென ஒரு கொட்டகை, பறவைகள் இருப்பிடமாய்

கிரியும் எந்த வகைப் பறவையும் மகிழ்ச்சியோடு கூடுகட்டிக் கொள்ள ஒரு சிறந்த மேல் மாடம். தனது கணவரின் பிரமை காய்ச்சல் தொற்றிக் கொண்டவளைப் போல டஜன்கணக்கான மேஸ்திரிகளும் தச்சர்களுமாய், ஊர்சுலா வீட்டில் ஒவ்வொரு அங்கமாய் இடம் குறித்த எந்த தயக்கமும் இன்றி போதாமை எற்றிய அக்கரையும் இல்லாது ஒளியும் வெப்பமும் எறிடச் செய்தாள். நகரை கண்டடைந்தவர்களின் ஆரம்பக் கட்டிடம் முழுதும், கட்டுமானக் கருவிகளும் பொருட்களுமாய் இறைந்து கிடக்க, தலையிட்டு தொல்லை கொடுக்கவேண்டாமென வியர்த்து கொட்டியபடி வேலையாட்கள் வீட்டிலிருந்தவர்களை கேட்டுக் கொண்ட அந்த நாட்களில் எலும்புகள் கலீர் சப்தமெழுப்பிய ஒரு சாக்குப்பை அவர்கள் சென்ற இடமெல்லாம் கிடந்து தொல்லை தந்ததைக் கண்டார்கள். சுண்ணாம்பும் தாரும் நெடியடித்து வசதி குறைவை ஏற்படுத்திய அவ்விடத்தில் புவியின் மடியிலிருந்து, ஊரின் மிகப்பெரிய வீடு, அந்த சதுப்பு நிலமுழுதும் யாருமே முன்பின் அறிந்திடாத விருந்தோம்பல் வசதிகள் கொண்ட, இது வரை இருந்திடாத குளிச்சியான இல்லம் எழுவதை யாருமே காணவில்லை. அதிலும், புனித இறையருளை, திடீர் இயற்கை பெருமாற்றத்தின் மூலம் ஆச்சரியப்பட வைக்க நிழற்பட கருவியுடன் அமிழ்ந்து போன ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அதை சுத்தமாக உணரவே இல்லை. ஊர்சுலா, கட்டற்ற புனை உலகிலிருந்து அவரை வெளியே கொண்டுவந்து அவர்கள் திட்டமிட்டபடி வெளிப்புரத்தில் வெள்ளை நிறம் பூசக்கூடாது என்றும் நீல நிறமே பூசிடவேண்டுமென்றும் தனக்கு அனுப்பப்பட்ட அரச உத்திரவை காட்டிய அன்று வீட்டின் வேலைகள் முழுமை அடைந்திருந்தன. தனது மனைவி கூறியதன் அர்த்தம் புலப்படாத ஜோஸ் அர்காடியோ புயெண்டியா, ஆணையின் அடியில் இடப்பட்டிருந்த ஒப்பத்தை விளக்கி பொருள் காண விழைந்தார்.

"யார் இந்த... ஆள்?" அவர் கேட்டார்,

"நீதிபதி" ஊர்சுலா ஆறுதலற்று பதறினாள், "அரசால் அனுப்பப்பட்டுள்ள அதிகாரி என்கிறார்கள்".

நீதிபதி, டோன் அப்போலினார் மோஸ்காட், மெக்காண்டோவில் வந்து ஓசையின்றி குடியேறி இருந்தார். பஞ்சவர்ணக்கிளிகளின் கலீர் குரல்களால் ஈர்க்கப்பட்டு ஊருக்குள் வந்து பண்டமாற்றாய், மணிகள் விற்ற முதல் அராபியர் கட்டிய ஜேக்கப் விடுதியில் அறையெடுத்து தங்கி பின்மறுநாள் புயெண்டியா இல்லத்திலிருந்து இரண்டு வாழிடங்கள் தள்ளி காலையை நோக்கி கதவுகள் இருந்த அறை ஒன்றை வாடகைக்கு எடுத்தார். ஜாக்கப் விடுதியிலிருந்து விலை கொடுத்து வாங்கிய மேசை நாற்காலியை அலுவலகம் போல இடம் மாற்றி அமைத்து, தன்னோடு எடுத்து வந்திருந்த அரசு முத்திரை கேடயத்தை சுவற்றில் மாட்டி, வாசல் கதவில் பலகையை பொறித்தார்: நீதிபதி. தேசிய விடுதலையின் ஆண்டு விழாவை குறிக்கும் வகையில் வீடுகள் அனைத்தின் முகப்பையும் நீல வர்ணம் அடிக்கும் ஆணையே அவர் முதலில் பிறப்பித்தது. தனது குறுகிய அலுவலக அறை

யில் தனக்கத்திருந்த தொங்கு படுக்கையில் உறங்கிய வண்ணம் இருந்தவரை கையில் ஆணையோடு ஜோஸ் அர்காடியோ புயெண்டியா சந்திக்க வந்தார். "இதை நீ.. நீங்கள் எழுதினீர்களா?" அவர் கேட்டார். பக்குவப்பட்டிருந்த ஆனால் கோழையான சிவப்பு உடல்வாகு கொண்ட டான் அப்போலினார் மாஸ்கோட் ஆமென்று தலையசைத்தார். "என்ன உரிமையில் எழுதினீர்?" ஜோஸ் அர்காடியோ புயெண்டியா மீண்டும் அதிர்ந்தார். டான் அப்போலினார் மாஸ்கோட் தனது மேசை இழுவையிலிருந்து ஒரு காகிதத்தை காட்டினார், "நா... நான் இந்த ஊரின் நீதிபதியாய் அரசால், நியமிக்கப்பட்டுள்ளேன்", ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அந்த பணி நியமண கடிதத்தை பார்க்கக் கூட இல்லை.

"இந்த நகரில் ஆணைகள் எதையும் யாரும் காகித துண்டுகளில் பிறப்பிப்பது இல்லை" தனது நிதானம் தவாறமல் அவர் கூறினார். "எனவே முதலும் கடைசியுமாக நீங்கள் கூறிய வேண்டியது இதைத்தான் இங்கே தீர்ப்புரைப்பவர்கள் யாரும் தேவை இல்லை.. ஏனெனில் தீர்ப்பு எதற்கும் அளிக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை"

டான் அப்போலினார் மாஸ்கோட்டின் எதிரில் அவரை பார்த்தபடி குரலை உயர்த்தாமல் அப்படியே நின்று. எப்படி ஊரைகண்டு அவர்கள் அடைந்தார்கள் என்பதனையும் நிலங்களை எப்படி பங்கு போட்-டார்கள், அரசோ வேறு யாருமோ எத்தகைய வகையிலும் பாதிப்போ தலையீடோ செய்யாது அவர்களும் அதற்கு பாதிப்பு செய்யாது சாலைகள், மற்றும் ஏனைய அன்றாட வசதிகளை எப்படி அமைத்துக் கொண்டார்கள் என்பதையும் விளக்கினார். "எந்த அளவிற்கு அமைதியை நாங்கள் பேணி இருந்தால் இது வரை இயற்கை மரணம் என்ற ஒன்று கூட இங்கே நிகழாதிருக்கும்" .. அரசு உதவி எதுவும் செய்யவில்லை என்பது பற்றி யாருக்கும் எந்த வருத்தமும் உண்மையிலேயே இல்லை மாறாக இது வரை அரசு தலையீடு எதுவும் செய்யாமல் அமைதியாக விட்டதற்காக மகிழ்ச்சியும் திருப்தியும் உற்றதோடு இனியும் அவ்விதமாய் விட்டு விடுதலையே யாவரும் விரும்பினர் ஏனெனில் இது செய்... செய்யாதே என்று அதிகாரம் யாரும் செலுத்தாத இடம் தேடியே அந்த நகரை அவர்கள் கண்டறிந்திருந்தார்கள்.. டான் அப்போலினார் மாஸ்கோட் தனது கால் சராயின் நிறமொத்த வெள்ளை முரட்டுப்பருத்தி வெளிச்சட்டையை தன் மேலான தோற்றமும் உடல் அசைவும் குலைந்திடாது நிதானமாய் எடுத்து அணிந்து கொண்டார்.

"எனவே .... நீங்கள் இங்கே மற்றவர்களைப்போல ஒரு சராசரி குடிமகனமாக தங்குவதாயின் உடன் வாழ்பவராயில் யாருக்கும் எந்த ஆட்சேபணையும் இல்லை" ஜோஸ் அர்காடியோ புயெண்டியா முடித்தார், "ஆனால் வீடுகளை நீலம் அடிக்கக் கூறி ஒரு ஒழுங்கீனத்தை உருவாக்க வந்திருப்பவரானால், மூட்டையை கட்டிக் கொண்டு எங்கிருந்து வந்தீர்களோ... அங்கேயே சென்று விடுவது நல்லது... ஏனெனில் என் வீடு... வெண்மை நிறமாய் இருக்கப்போகிறது... ஒரு வெண் புறாவைப் போல"

டான் அப்போலினார் மாஸ்கோட்ன் முகம் வெளுத்துப் போனது. ஒரு அடி பின்னால் எடுத்து தன் பற்களை கடித்தபடி தீர்மானமாக கடுகடுப்பான முகத்தோடு கூறினார்.

"நான் ஆயுதம் தரித்துள்ளேன் என உங்களை எச்சரிக்க வேண்டியுள்ளது"

முரட்டுக் குதிரைகளை இழுத்துத் தள்ளும் தனது பலத்தை கைகள் எப்படி அடைந்தன என ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவுக்கே புரியாது போனது. சட்டை காலரை பிடித்து டான் அப்போலினார் மாஸ்கோட்டை எக்கி தன் கண்களுக்கு நேராக அவர் உயர்த்தினார்.

"இதை நான் செய்ய வேண்டி இருக்கிறது" அவர் சொன்னார், "உயிரோடு இப்படி தூக்கிக் கொண்டு சுற்றித்திரிவது என்பது பிணமாக உன்னை தூக்கிக்கொண்டு சுற்றித்திரியக் கூடாது என்பதற்காகதான்"

இவ்வகையில் அவர் நடுத்தெரு வரை டான் அப்போலினார் மாஸ்க்கோட்டை காலரை பிடித்துதூக்கிச் சென்று பொத்தென போட்டார். ஒரு வாரம் கழித்து அவர் கோபத்தோடும் சுடும் துப்பாக்கிகளோடும் வந்து ஆறு வெறுங்கால் சிப்பாய்களோடும், தன் மனைவியும் எழு மகள்களும் பயணித்த ஒரு காளை வண்டி மற்றும் மூட்டை முடிச்சுகள், மரசாமான்கள், பாத்திரங்கள் சுமந்து வந்த ஏனைய இரண்டு மாட்டு வண்டிகளுடன் திரும்பி வந்தார். குடும்பத்தை விடுதி ஜாக்கப்பில் தங்க வைத்து விட்டு ராணுவ சிப்பாய்களின் பாதுகாப்போடு தன் அலுவலகத்தை திறக்கச் சென்றார். மெக்காண்டோவை கண்டடைந்தவர்கள் கூடி ஊருக்குள் அத்து மீறிநுழைந்தவனை வலுக்கட்டமாய் போராடி தூக்கி பெரிய உறுதி பூண்டு ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் தலைமைக்கு கட்டுப்பட்டும் அவர் எது சொன்னாலும் செய்திட தயாராகவும் தமது மூத்த மகன்களுடன் முன் வந்தனர். ஆனால் அவர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஏனெனின் ஒருவரை அவரது குடும்பத்திற்கு முன்னால் இழிவாக நடத்துவதும் துன்புறுத்துவதும் மனிதத்தனமே அல்ல. டான் அப்போலினார் தனது மனைவி மற்றும் மகள்களுடன் திரும்பி வந்திருக்கிறார். எனவே நிலைமையை மகிழ்ச்சியான ஒரு அணுகுமுறை யோடு தீர்த்துவைப்பதென அவர் முடிவு செய்தார்.

அவ்ரெலியானோவும் அவரோடு சென்றார். அச்சமயம் தன் முகத்தில் கருப்புமை, குச்சிகளினால் தீட்டியது போன்ற மீசையும் போரில் கலந்து கொள்ளுமளவு தகுதி படைத்த கணீர் குரலும் அவருக்கு இருந்தது. பாதுகாவலராய் நின்ற சிப்பாய்களை பற்றி கவனமின்றியும் ஆயுதம் எதுமின்றியும் நேரடியாக நீதிபதியின் அலுவலகம் சென்றனர். டான் அப்போலினார் மாஸ்கோட் தனது அமைதியையும் பொறுமையையும் இழந்து விடவில்லை. அங்கே அப்போது வந்திருந்த தனது இருமகள்களை அவர்களுக்கு அவர் அறிமுகம் செய்து வைத்தார் தன் தாயைப் போல கருத்திருந்த பதினாறு வயதான ஆம்பரோ, மற்றும் ஒன்பது வயதே ஆகி இருந்த ஆனால் அல்லிமலர் நிற உடலும் பச்சை விழிகளும் கொண்டிருந்த

ரெமெடியாஸையும் டான் அறிமுகம் செய்திருந்தார். அவர்களும் இன்முகத்தோடு நல்ல ஒழுக்க சுபாவம் உள்ளவர்களாக வந்திருந்தவர்களை உபசரித்து நீதிபதி வருமுன் நாற்காலி அளித்து அமரச் செய்பவராகளாக இருந்தனர். இருந்தாலும் வந்தவர் இருவரும் நின்றுகொண்டே தான் இருந்தனர்.

"நல்லது நண்பரே" ஜோஸ் அர்காடியோ புயெண்டியா சொன்னார், "நீங்கள் இங்கே தங்கலாம் ... கையில் துப்பாக்கிகளோடு நிற்கும் இந்த சிப்பாய்களுக்காக அல்ல... உங்கள் மனைவி குழந்தைகளுக்காக."

டான் அப்போலினார் மாஸ்கோட் நிலைகுலைவுற்றார். ஆனால் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அவரைப் பேசவிடவில்லை, "இ-ரண்டே இரண்டு நிபந்தனைகள் தான்," அவர் தொடர்ந்தார், "முதலாவது அவரவர்கள் அவரவர் விருப்பம்போல வீடுகளுக்கு வர்ணம்பூசலாம், இரண்டாவது; ராணுவ வீரர்கள் உடனடியாக திரும்பிச் செல்லவேண்டும்... நாங்கள் உத்திரவாதம் அளிக்கிறோம்" நீதிபதி தன் வலக்கையை எல்லா விரல்களையும் நேராக்கி உயர்த்தினார்.

“உங்கள் மதிப்புமிகு சொற்கள்....”

“உங்கள் எதிரியின் சொற்கள்” ஜோஸ் அர்காடியோ புயெண்டியா வெட்டினார்... பிறகு கசப்பான முக ஜாடையோடும் தொனியோடும் தொடர்ந்தார் “ஏனெனில் ஒரு விஷயத்தை உன்னிடம் கூற வேண்டும்: இப்போதும் நானும் நீயும் எதிரிகளே”.

அதே நாள் மதியம் வீரர்கள் சென்றுவிட்டனர். ஒரு சிலநாட்கள் கழித்து ஜோஸ் அர்காடியோ புயெண்டியா நீதிபதி குடும்பத்திற்கு வசிக்க வீடொன்று பார்த்துக்கொடுத்தார். அனைவரும் அமைதி அடைந்தனர் அவ்ரெலியானோ வைத்தவிர, வயதின் காரணமாய் தன் மகளாக பாவிக்க வேண்டிய நீதிபதியின் இளைய மகள் ரெமெடியாஸ்ஸின் உருவம் அவரது உடம்பின் ஏதோ ஒரு இடத்தில் மிகவும் பாதித்து வலியேற்படுத்தியது. உடல் ரீதியிலான ஒரு பெரு உணர்ச்சியாய் நடக்கும்போதெல்லாம் அது காலணிக்குள் இருக்கும் ஒரு கூழாங்கல் போல அவரை குத்திக் கொண்டே இருக்கத் தொடங்கியது.



4

வெளேரென்று ஒரு புறாவைப்போல வர்ணம் பூசப்பட்டிருந்த அந்தப் புதிய வீட்டிற்கான புதுமனை புகும் வைபவம் நடனம் ஒன்றோடு நிகழ்த்தப்பட்டது. ரெபக்காவையும் அமரந்தாவையும் திடீரென்று இளம் யுவதிகளாக அவள் ஊர்சுலா கண்ட அந்த மதியத்தன்றே முடிவு செய்யப்பட்டது தான்.... ஏன் வீட்டை விரிவுபடுத்தும் எண்ணம் வந்ததே இப்பெண் குழந்தைகள் இருவரும் தங்களை சந்திக்க வருபவர்களை வரவேற்று அமரச் செய்ய இட நெருக்கடி இருக்கக் கூடாது என்பதற்காகத் தான். எதிலும் நிறைவுக்கு ஒரு குறை இருக்கக் கூடாதென தான் ஒரு கப்பல் துடுப்பு அடிமையைப்போல ஊர்சுலா, மறுகட்டுமான பணிகளின்போது ஒடி ஆடி மாடாய் உழைத்தாள்.... அதனால் வேலைகள் ஏறக்குறைய முடியும் தருவாய்க்கு வந்தபோது வீடுமுழுவதையும் அலங்கரிக்க அத்தியாவசிய சாமான்கள் உணவுமேசை உட்பட உபயோகப் பொருட்களை மிகவும் வித்தியாசமானவையாக அதிக பொருட் செலவில் அவள் வாங்கிடச் செய்தாள். குறிப்பாக நகரின் இளம் ஆன்மாக்களை அப்போது மிகுந்த எழுச்சியடைய வைத்திருந்த அப்புதிய நவீன சாதனம் வீட்டை நோக்கி வந்தது: இயந்திர இசைக்கருவி பியானோ அக்கக்காக பிரிக்கப்பட்ட தனித்தனி பாகமாக அதை அவர்கள்.. பல பெட்டிகளில் பலவித அளவுகளில் வியன்னாவிலிருந்து மரசாமான்கள், போஹெமிலிருந்து படிகக்கல், இந்திய உணவு மேசை, ஹாலந்திலிருந்து மேசை விரிப்புகள், விலை மதிக்க முடியாத விளக்கு வகைகள், மெழுகுவர்த்தி நிலைச்சட்டங்கள், மற்றும் திரைச்சீலைகள் ஆகியவற்றுடன் கட்டி அனுப்பி இருந்தார்கள். இறக்குமதி முகவர் குழுமம் உதிரிப்பாகங்களை சரியாக இணைத்து பியானோவை எழுப்பி நிறுத்திடவும் சுருதி ஏற்றவும் தானியங்கி இசை குறித்து செயல் விளக்கம் பல்வேறு பாகங்கள் குறித்து வாடிக்கையாளருக்கு தரவும், அது வெளியிடம் இசைக்கு நடனமாட கற்றளிக்கவும் தன் சொந்த செலவில் இத்தாலியனான பியெட்ரே கிரெஸ்பி என்பவனை அனுப்பி இருந்தது. இளமையும் பொன்னிற தேகமும் பெற்றிருந்த பியெட்ரோ கிரெஸ்பி, இது வரை மெக்காண்டோ கண்டறியாத அளவிற்கு எடுப்பான தோற்றமும் நவநாகரீக உடலசைவுகள் கொண்டவனையும் உடுப்புகள் கலைந்திடாது இருத்தலால் அளவற்ற கவனம் செலுத்தி வியர்வையிலும் மூச்சுத்திணறலிலும் வேலை கணக்கின்றி தனது சித்திர வேலைப்பாடு மிக்க வெளிக்கோட்டும் கருத்த எடை மிக்க முழுக்கை மேல் சட்டையும் கசங்காது பார்ப்பதில் சூரனாயும் இருந்தான். தனது வெள்ளித் தகட்டு வேலைகளில் அவ்ரெலியானோ காட்டிய அதே ஈடுபாட்டின் முழுமையோடு வாரங்கள் பலவற்றை வரவேற்பு அறையில் வியர்வையில் ஊறி வீட்டின் உறுப்பினர்களிடமிருந்து மதிப்பு மிக்க தொலைவைப் பேணியபடி தன் வேலைகளில் தன்னை அடைத்துக் கொண்டு அவன் கழித்தான். ஒரு நாள் கலைவயில் வரவேற்பறை கதவை திறக்காமலும், அந்த அதிசயத்தை காண யாரையும் அழைக்காமலும் அவன் முதல் சுருளை பியானோவில்

பொறுத்தியபோது அதுவரை கேட்ட சகிக்க முடியாத சுத்தியடி ஓசைகள் மரதேய்ப்பு வீட்டுச் சுவர் பொருட்கள் மாட்டும் கொடிய ஆணி அடிக்கும் லேத்து இரும்பு நாராசெஸ்களை முற்றிலும் வாயடைத்தபடி ரம்மியமான இசை வரத்துவங்கியது. அனைவருமே வரவேற்பு அறையை நோக்கி ஓடினார்கள். ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஏதோ மின்னலாய் தாக்குண்டவர் போல செயலிழந்து போனார். இசைக்கு மயங்கி அல்ல. மாறாக பியானோவின் இசைப் பித்தான்கள் தளங்களாகவே உள் சென்று வெளியேறும் விந்தை கண்டு மெகியூவாடெஸ்ஸின் நிழற்பட கருவிகொண்டு கண்ணிற்கு புலப்படாத இசை ஓசையை படம் பிடிக்க ஓடினார். அன்று அந்த இத்தாலியன் அவர்களோடு மதிய உணவுக்கு அழைக்கப்பட்டான். உணவு மேசையில் உபசரிப்புகள் நிகழ்த்திய ரெபக்காவும் அமர்ந்தாவும் கையில் திருமண மோதிரமின்றி விருந்தாளி உணவுத் கட்டையும் பாத்திரங்களையும் தந்திரமாய் கையாண்ட விதத்தால் கவர்ந்து இழுக்கப்பட்டிருந்தார்கள். வரவேற்புகறைக்கு பக்கத்திலேயே இருந்த வாழ்வறையில், பியெட்ரோ கிரெஸ்பி அவர்களுக்கு நடனம் கற்றுக் கொடுத்தான். இசையில் அமிழ்ந்து தாள ஊசல் கருவிக்கும் ராகத்திற்கும் தக்கவாறு உடலசைவுகளை லாவகமாக செய்து, தனது மகளிருவரும் நடனவகுப்புகளை முடிக்கும் வரை ஒரு நிமிடமும் அவ்விடம் விட்டு அகலாதிருந்து நட்போடு கண்காணித்த ஊர்சுலா முன்னிலையில், அவர்களைத் தொடாமல் நடன அசைவுகளை அவன் போதித்தான். அந்த நாட்களில் நீள் தன்மை கொண்ட உடலோடு ஒட்டிய கவர்ச்சியான ஆடையும் நடனக் காலணிகளும் அவன் பியெட்ரோ கிரெஸ்பி அணிந்திருந்தான். "நீ அதிகம் கவலைக் கொள்ளத் தேவையில்லை. " ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஊர்சுலாவிடம் சொன்னார், "மிகவும் நேர்மையானவனாக அவன் படுகிறான்" ஆனால் அவள் தனது தீவிர கண்காணிப்பை, பூர்வாங்க நடன பயிற்சிக்காலம் முடியும் வரையிலும், அவன் மெக்காண்டோவை விட்டு செல்லும் வரையிலும் விடவில்லை. பின் அவர்கள் விருந்திற்கு ஏற்பாடுகளைத் தொடங்கினார்கள். பெயர் தெரியாத தகப்பன்கள் கொண்ட மேலும் இரண்டு குழந்தைகள் பெற்ற பிலர் டெனராவைத் தவிர கிட்டத்தட்ட மெக்காண்டோவை கண்டடைய பெரும் பயணம் மேற்கொண்டவர்கள் மற்றும் அவர்களது சந்ததியர் மட்டுமே என ஊர்சுலா விருந்திற்கு அழைக்கப்பட வேண்டியவர்கள் அவர்களது குறித்து கண்டிப்பான பட்டியல் ஒன்றை தயாரித்து வைத்திருந்தாள்.. உயர் அந்தஸ்த்தில் உண்மைத் தன்மை கொண்டதாக அந்த பட்டியல் இருந்ததோடு, ஜோஸ் அர்காடியோ புயெண்டியா வீட்டு மெய்யான நண்பர்கள், மெக்காண்டோவை கண்டறிவதற்குமுன் மாபெரும் குடிபெயர்வை உடன் நிகழ்த்தியவர்கள், மற்றும் அவ்ரெலியானோ, அர்காடியா ஆகியோரின் குழந்தைப் பிராய சிநேகிதர்களான, அப்பெரியவர்களின் மகன்கள் பேரன்கள் அத்தோடு பூவேலைப்பாட்டு வேலையில் ரிபெக்கா வோடும் அமரந்தாவோடும் கலந்து வேலை செய்யவென வீட்டுக்கு வந்து சென்ற ஒரே கட்டமான அவர்கள் தம் மகள்களும் மட்டுமே அப்பட்டியல் கொண்டிருந்தது. தனது பாதுகாவலுக்கென வந்த கையில் ஆயுதமாக

விறகுக் கட்டை மட்டுமே வைத்திருந்த போலிஸ்காரர் இருவரை உணவளித்து பராமரிக்கும் நீதிபதி டான் அப்போலினார் மாஸ்கோட் பிரதான விருந்தனராகவும் சேர்க்கப்பட்டிருந்தார்கள் அலங்காரத்திற்கு தைத்தும் கொய்யா மணத்தில் மென்மை யான பூச்செண்டுகள் செய்தும் வாடிக்கையாளகள் விருப்பத்திற்கேற்ப காதல் கவிதைகளுடன் விற்பனை செய்தனர். நகரத்திலேயே மிக அழகாகவும் எல்லாவகை நடனத்தில் தேர்ச்சியும் பெற்றிருந்தாலும் விருந்திற்கு அழைக்கப்பட அவர்கள் தகுதியற்றவர்களாகவே கருதப்பட்டார்கள்.

ஊர்சுலாவும் பெண் குழந்தைகளும் உபயோகப் பொருட்கள் மரசாமான்கள் என அனைத்தையும் கட்டுகள் பிரித்து எடுத்து, பளபளத்த விட்டுச் சென்றிருந்த காலி இடங்களை ரோஜாக்கள் நிறைந்த யுவதிகள் பயணமுறும் படகுகள் வரைந்த சுவர் படங்களால் நிரப்பிய போது, ஜோஸ் அர்காடியோ புயெண்டியா கடவுளை நிழற்படமெடுக்கும் சபதத்திலிருந்து, கடவுள் என்கிற ஒன்று இல்லை என்பதில் சமாதானம் அடைந்தவராம் விலகி பியானோலாவை பகுதி பகுதியாய் பிரித்து போட்டு அதன் மந்திர ரகசியத்திற்கு பொருள் காணும் நோக்கில் தீவிரமாய் இறங்கியிருந்தார். விருந்திற்கு இரு நாட்களுக்கு முன், ஏராளமான திருகாணிகள், திருகுமறை யாணிகள் இசை சாவி ஆணிப்பட்டைகள், ஒரு புறமாய் சுழற்றவும் மறுபுற மாய் சுழற்றவும் வரும் சுருள் கம்பிகள், என்று எங்கும் இறைந்து கிடந்த அன்று ஒரு வழியாய் கருவியை முன்பிருந்தது போல மறுகட்டுமானம் செய்து அவர் முடித்திருந்தார். அந்த

நாட்களைப் போல மேலும் மேலும் ஆச்சரியங்கள் வேறு எப்போதும் ஏற்பட்டதில்லை எனும்படி புதிய சுவர் விளக்குகளும் விட்டு விட்டு ஒளி விட்ட அலங்கார தோரண விளக்குகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பிரகாசிக்க வைக்கப்பட்டன. இன்னமும் தொடர்ந்து கொண்டிருந்த சுவர் சுண்ணாம்பு மற்றும் இதர வர்ணப்பூச்சுகளின் நெடிக்கு நடுவே வீடு திறக்கப்பட்டது. நகர மூதாதையர் தப் குழந்தைகளும் பேரக் குழந்தைகளும் பெகோனியா நீர். தாவரமும், வர்ண இலைகளுடன் படர்ந்த கொடிகளும் முளைத்திருந்த கட்டிடத் தலைவாயிலை அமைதி நிரம்பிய அறைகளை, ரோஜாப் பூக்களின் மணம் பரப்பப்பட்ட தோட்டத்தை கண்டு மகிழ்ந்து வரவேற்பு அறை யில் வெள்ளைத் துணியில் மூடப்பட்டிருந்த நகரம் இது வரைக் காணாத வினோத கண்டுபிடிப்புக் கருகே கூடினர். சதுப்பு நிலமெங்கும் பிற ஊர்களில் பியானோவோடு பரிட்சயம் கண்டிருந்த சிலருக்கு லேசான மனவெறுப்பு கூட ஏற்பட்டது. ஆனால் முதல் இசைச் சுருளை, ரெபக்காவும், அமரந்தாவும் நடனத்தை தொடங்கட்டும் என்று இசைக்கச் செய்ய பொருத்திய ஊர்சுலாதான், கருவி வேலை செய்யாது போனதைக் கண்டு ஏமாற்றத்தில் அதிகம் மனபெறுப்புற்றாள். ஏறத்தாழ முழுதும் பார்வையற்றுப் போய் முதுமையின் தளர்ச்சியும் சிதைவும் அடைந்து விட்டிருந்த மெகியூவாடெஸ் தனது அறிவு சேகரிப்பு முழுவதையும் திரட்டி

அதை எப்படியோ இயங்க வைக்க பெருமுயற்சி செய்தார். ஆனால் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா, தன்னையும் அறியாமல் அகஸ்மாத்தாக ஏதோ ஒரு பொத்தனை அது மாட்டிக் கொண்ட இடத்திலிருந்து இழுத்து நகர்த்த திடீரென்று பேரிரைச்சலாக அனைவரையும் துணுக்குற வைத்து, முன்பின் தெரியாத வகையில் கோர்வையற்று அபசுரத்தில் ஒரு வகை இசையை கருவி வெளியிட்டது. இதுவரை அச்சம் என்பதே அறியாத, மலைக்காடுகளை அங்குலம் அங்குலமாய்த் தேடிடும் பெரும் பயணத்தை மேற்கொண்ட ஊரின் கண்டுபிடிப்பாளர் தம் குடும்பங்கள் இசையின் இயலாமை குறித்தெல்லாம் கணக்கு பார்க்காததால் நடனம் விடியும் வரை தொடர்ந்தது.

பியோனாவை மறுகட்டுமானம் செய்திட மீண்டும் பியெட்ரோ கிரெஸ்பி வந்தான். இம்முறை தலைகீழாக சுரமற்று அலறிய இசையின் நகைப்பில் கலந்து பங்குபெற்றபடியே அவனுக்குக ரெபக்காவும் அமரந்தாவும் உதவியபோது, அங்கு நிலவிய கண்ணியமும் மனஅமைதியும் ஊர்சுலாவை கண்காணிப்பு வேலை செய்ய விடாமல் செய்திருந்தது. வேலைமுடிந்து அவன் விடைகொடுக்கும் தருணத்தில் நன்கு இயங்கிய பியானோவின் இசைக்கு நடனம். ரெபக்காவோடு நவீன நடனங்கள் சிலதின் மூலம் தன் திறமைகளை அவன் வெளிக்காட்டினான். அவர்களது நடனத்திற்கு அமரந்தாவும் அர்காடியாவும் ஈடுகொடுத்து மறு ஜோடியாய் பரிணமித்தார்கள். ஆனால் அப்பேர்பட்ட நல்ல நடனவிருந்து, அர்காடியோ ஒரு பெண்ணின் பின்புட்டங்களை கொண்டிருக்கிறான் என பார்வையாளர்களில் யாரோ எதேச்சையாய் கூறப் போக கடித்தும் சடையை இழுத்து சாத்தியும் சண்டையிட்டு மோதிய பிலர் டெனராவால் திடீர் முடிவுக்கு வந்தது. கிட்டத்தட்ட நள்ளிரவில் ஒரு சம்பிரதாய உரைக்கு முடிவில் தான் அவசியம் திரும்பி வருவதாக மீண்டும் மீண்டும் வாக்களித்து பியெட்ரோ கிரெஸ்பி விடை பெற்றான். வாசல்வரை வழியனுப்பிட சென்று திரும்பிய ரெபக்கா தன் அறைக்கதவை சாத்திக்கொண்டு விளக்குகளை அணைத்துவிட்டு படுக்கையில் குலுங்கி அழுதாள். தேற்றுவார் யாருமற்ற அந்த அழுகை பல நாட்கள் தொடர்ந்தது. காரணம் குறித்து அமரந்தா கூட அறியமுடியாத உள்அடைப்பு திறனாக மாறியது. ஆனால் அது புதிதல்ல. எல்லாரோடும் நேரத்தை செலவிட்டு சகஜமாய் என்னதான் பழகினாலும் உடைக்க முடியாத தனிமையும் நுழைய முடியாத இதயமும் அவள் உடன் பிறந்தவை என்பது யாவரும் அறிந்ததே. நீண்ட பலமிகுந்த எலும்புகளுடன் பேரழகும் பொலிவும் கொண்ட தேகம் அவளது என்றாலும் பலமுறை திரும்பத்திரும்ப பழுதுபார்த்து ஸ்திரயேற்றப்பட்ட தனது பழைய அசைந்தாடும் நாற்காலியில் அமர இன்னமும் கூட பிடிவாதம் செய்பவளாய் அவளிருந்தாள்..... இந்த வயதிலும் விரல் சூப்பும் பழக்கம் அவளிடமிருந்து விடைபெறவில்லை என்பது யாருக்குமே தெரியாது. முகத்தை அவர்பக்கம் திருப்பிவைத்துக் கொண்டு உறங்கவும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் குளியலறைக்குள் அடைத்துக்கொண்டிடவும்

அதனாலேயே அவள் தயங்கியதே இல்லை. வீட்டின் முன்தாழ்வாரத்தில் அமர்ந்தபடி மற்றவர்களோடு துணியில் சித்திரத்தையல் வேலைகள் செய்யும்போதும், மண் புழுக்கள் மேலே கொண்டுவந்த ஈரக்களிமண் தன் வாயில் அவைப் புலனை ஊரவைத்திட பேச்சுசுவாரசியத்தை அப்படியே வெட்டிவிட்டு விடுவாள். ஆரஞ்சு பழங்கள் மற்றும் பேதி மருந்துகளால் மறக்கடிக்கப்பட்டிருந்த இறந்தகால ரகசிய இன்சுவை மீண்டும் ஒரு பூதமாய்க் கிளம்பி மறுதலிக்க இயலாத பரபரப்பை. அழுகைத் தொடங்கியதும் அவளெங்கும் ஊறவைத்தது மீண்டும் அவள் மண் தின்னத் தொடங்கினாள் தனக்கு ஏற்பட்ட கிளர்ச்சியை தணிக்கும் என்று ஒரு வகை ஆர்வக்கோளாறினால் தான் முதல் பிடி மண்ணை வாயில் அவள் போட்டாள் உண்மையில் அது அவளுக்கு ஆற்றொண்ணா குமட்டலையே ஆரம்பத்தில் கொடுத்தது..... ஆனால் தன்னைவிடாத மன உளைச்சலை சகிக்க முடியாமல் விடாமுயற்சி செய்து தன் பழங்கால உணவுப் பழக்கத்திற்கு அவள் திரும்பினாள். உண்மையான உணவிற்கு ஒத்த கடிவாமிடா பெருந்திப்தியை, ஆதார தரத்துக்களின் சுவை அவளுக்கு அளித்தது. தனது சட்டைப்பையில் ஒரு கையளவு மண்ணை போட்டுக் கொண்டபடி சிறுகசிறுக யாரும் காணாவண்ணம் சுவைத்தபடி, நற்சுவையும் எரிச்சலும் கலந்த வெறுப்புணர்வோடு தன் சக பெண் நட்புவட்டரத்தில் ஊசிமுனை விவாதங்கள், சுவர் சுண்ணாம்பு தின்னும் பெண்கள் தியாகம் செய்யுமளவு தகுதியற்ற பையன்கள் குறித்து அவள் செய்யத் தொடங்கினாள். உலகின் வேறொரு மூலையில் பதப்படுத்தியதோல் தன் பூட்ஸ்கால்களால் அதே மண்ணில் நடந்து தன் ரத்த ஓட்டத்து எடையும் வெப்பமும் உணர வைத்து அவள் வாழும் பகுதிக்கு பரப்பி அதன் சுவையை வாயில் அவள் பெற சகிக்க முடியாத பின் சுவையை நாக்கிலும் ஆனால் சக்கையாய் வண்டல் படிவாய் மன அமைதியை இதயத்திலும் இறக்கியபடியே இச்செயலுக்கு அந்த ஒரே ஆண் மகன் தகுதி படைத்தவன் ஆனான். ஒரு நாள் மதியம் ஒரு காரணமும் இன்றி அம்பாரோ மாஸ்கோட் புதிய வீட்டை சுற்றிப்பார்க்க அனுமதி கோரினாள். அவளது திடீர் வருகை குறித்த பதபதைப்பவள் ரெபக்காவும் அமரந்தாவும் அவளுக்கு மரியாதை நிமித்தம் பூரி வாங்க வரவேற்புகள் அளித்து கவனித்தனர். மறுகட்டுமானம் செய்யப்பட்ட அந்த முழு இல்லத்தையும் அதை சுற்றிய பகுதிகளையும் சுற்றிக் காட்டியதோடு பியானோாவை இசைக்க வைத்து அவளுக்கு இனிப்பு பழச்சாறும், உடைத்து சாப்பிடும் பருப்புதின்பண்டங்களும் விருந்தாய் படைத்தனர். குடும்பமரியாதை ஒழுக்கம் பற்றியும் சுய அழகேற்றம் குறித்தும் அம்பாரோ மாஸ்கோட் குழந்தைகளுக்கு நிறைய போதித்த போது அது ஊர்சுலா அந்த வருகையின் போது அவள் இருந்ததே சற்றுநேரம் தான் என்றாலும், கவர்ந்திழுத்து மயக்கமுற செய்தது. கிட்டதட்ட இரண்டு மணிநேரம் கழித்து பேச்சு சுவராசியம் குறைந்த நிலையில் அமரந்தா வேறெங்கோ எதற்கோ கவனம் செலுத்திய நேரம் பார்த்து அம்பாரோ ரெபக்காவிடத்தில் அவசரமாய் ஒரு கடிதத்தை திணித்தாள். அதில் பெருமதிப்பிற்குறிய ரெபக்கா புயெண்டியா என்று பியானோலாவை இயக்கும் முறைகள் குறித்த சுய

விளக்க சிறு ஏட்டில் பச்சைமையால் எழுதப்பட்ட அதே அச்சான எழுத்தில் எழுதப்பட்டிருந்ததை அவள் கண்டு நடுங்கும் கைகளால் சட்டென மடித்து உள்ளே மாரில் மறைத்தாள். பின் சாகும் வரையிலான கட்டுப்பாடுகளை சத்தியம் செய்த ஒரு பார்வையோடு ஒரு கோடி நன்றிகளை அம்பாரோ மாஸ்கோட்டிற்கு ரெபக்காவின் புன்னகை தெரிவித்தது.

அம்பரோ மாஸ்கோட்டிற்கும், ரெபக்கா புயெண்டியாவிற்கும் இடையிலான திடீர் நட்பு, அவ்ரெலியானோவை நம்பிக்கை கொள்ள வைத்தது, சிறுமியான ரெமடியாஸின் நினைவுகள் அவனை சித்திரவதை செய்வதை நிறுத்தியபாடில்லை என்பதோடு அவளை சந்திக்க ஒரு சிறு வாய்ப்பும் கூட கிட்ட இல்லை நகரின் கண்டுபிடிப்பாளர்களது பிள்ளைகளான அவர்களது பெயர்களே கொண்ட, தன் நெருங்கிய நட்பு வட்டத்திற்கான மாக்னிஃபிகோ கெரினெல்டோ மார்க்வெஸுடனும் ஊரெங்கும் சுற்றுகையில் தனி கவனத்தோடு தையல் கடையை அவ்ரெலியானோ நோட்டம் விடுவார். ஆனால் அங்கே எப்போதும் ஏமாற்றமளித்த படி முதிய சகோதரிகளே காணப்பட்டார்கள் அம்பாரோ மாஸ்கோட்டின் வருகை ஒரு வகை முன் அறிவிப்பாக இருந்தது. "அவளுடன் அவளும் வந்திருக்க வேண்டும்" அவர் மனதுக்குள் துடித்தார்.... "கட்டாயம் வந்திருக்க வேண்டும்" இதை பல முறை பலநாட்கள் திரும்பத்திரும்ப எத்தகைய தீர்மானத்துடன் கூறி வந்தாளென்றால் திடீரென்று ஒரு நாள் தனது ஆய்வகத்தில் குட்டி தங்கமீன் அச்சுகளை சேர்த்து அவர் பற்றவைப்பு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது அவரது அழைப்பிற்கு அவள் செவி சாய்த்தாள். உண்மையில் அடுத்த சில விநாடிகளில் குழந்தை ஒன்றின் மெலிய குரல் கேட்டது. பின் அவர் இதயம் குளிர்வித்து இறுக அளவற்ற பதற்றத்தோடு கதவருகில் ரோஜா நிற சல்லாத்துணி ஆடையில் வெள்ளை ஜேக்களில் அவளைக் கண்டார்.

"நீங்கள் செல்லமுடியாது ரெமெடியாஸ்" அம்பாரோ மாஸ்கோட் ஹாலிலிருந்து கத்தினாள், "அவர்கள் அங்கே... வேலை செய்கிறார்கள்"

ஆனால் அவள் அக்குரலுக்கு எதிர் வினைபுரியும் நேரம் எதையும் அவ்ரெலியானோவ் கொடுக்கவில்லை. சிறுமீனை பெருமீனிலிருந்து சங்கலி முலம் வாய் வழியே வெளியே எடுத்தபடி அவர் கூறினார், "உள்ளே.... வா".

மூச்சிறைப்பின் திடீர் தாக்குதலுக்கு ஆளானதினால் அவ்ரெலியானோவினால் பதில் தரமுடியாத சில கேள்விகளை பொன் மீன் குறித்து அவள் ரொமடியாஸ் உள்ளே நுழைந்து கேட்டாள்... தன் தந்தைக்கு அளித்த அதே அளவு மரியாதையோடு ஒவ்வொரு கேள்வியோடும் ஒரு சார்போட்டபடி பேசிய அந்த அல்லி மலர் தோலுக்கும், பச்சை மரகத விழிகளுக்கும் பின் நிரந்தரமாய் இருந்துவிட அவர் விரும்பினார். விளக்கம் பெறமுடியாத சமிக்ஞைகளை இருக்கியபடி மூலையில் மெகியூவாடெஸ்

அமர்ந்திருந்தார். அவர் மீது அவ்ரெலியானோவிற்கு அளவற்ற வெறுப்பு ஏற்பட்டது. அந்த தங்க மீனை அவளுக்கே தரப்போவதாக அவர் கூறக் கேட்டு மிரட்சியில் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அவள் அவ்விடத்தைவிட்டு வெளியேறினாள். அவளைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஒன்றிற்காக பூட்டி வைத்திருந்த பொறுமை அனைத்தையும் அன்றைய மதியத்தில் அவ்ரெலியானோ இழந்தார். வேலையை அவர் புறக்கணிக்கத் தொடங்கினார். விதவிதமான தீவிர, ஒரு முனைபடுத்தல் மூலம் அவர் அவள் வர எவ்வளவோ எண்ணமிட்டும் அவருக்கு ரெமெடியாஸ் செவிமடுக்கவில்லை. அவர்களது தையாவ் கடையில் ஜன்னலில் ஊசலாடும் நிழலில் அவர்களது வீட்டின் சாத்தியமான இடங்களில் என அவர் எங்கெங்கோ தேடியும் அவள் அவாது கொடித் தனிமையின் தனிப்பட்ட எண்ண பிம்பங்களில் மட்டுமே தோன்றினாள். பியோனாலாவின் இசையை ரசித்தபடி ரெபக்காவுடன் மணிக்கணக்கில் தனது பொழுதுகளை அவர் வரவேற்புரையில் கழிக்கலானார். தனக்கும் அமரந்தாவிற்குமான நடனம் அந்த இசைக்கு பியட்ரோ கிரெஸ்பி சொல்லிக் கொடுத்ததால் அவள் அதை கேட்டாள். அவ்ரெலியானோவுக்கோ அனைத்துமே ரெமெடியாஸ்

இன்றி நினைவை ஏற்படுத்தியது இசையையும் சேர்த்து அதற்காக .அவர் கேட்டார்.

வீடு காதல் நிரம்பியதானது. ஆரம்பமும் முடிவும் அற்ற கவிதைகளில் அவ்ரெலியானோவ் அதை வடித்தார். மெகியூவாடெஸ் கொடுத்த தடித்த கூழ் காகிதங்களில் மற்றும் குளியலறை சுவரில், தன் தோள் சதையில் என எதிலும் ரெமெடியாஸ் அப்படியே நிறைந்து கிடந்தாள். துயிலூட்டும் மதியம் இரண்டு மணி காற்றில் ரெமெடியாஸ், ரோஜாக்களின் மெல்லிய மணமெங்கும் ரெமெடியாஸ்; நீர்ம கடிகாரத்தின் உள்ளே அசுத்த சந்துப்பூச்சிகளின் ரகசியத்திலும் ரெமெடியாஸ்ல் மணம் வீசும் அதிகாலை ரொட்டித் துண்டில் ரெமெடியாஸ்; எங்கும் எதிலும் ரெமெடியாஸ் எப்போதும் முடிவின்றி ரெமெடியாஸ். ஒவ்வொரு நாளும் மாலை நான்கு அசைந்த போது ரெபக்கா சன்னல் ஒரம் பூவேலையில் ஈடுபட்டபடி தன் காதலை எதிர் நோக்கினாள் ஊருக்கு கடிதம் கொண்டுவரும் கோவேறுக் கழுதைக்காரர்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறைதான் வருவார்கள் என்று அவளுக்கு நன்றாகத் தெரியும்.... தவறுதலாக அன்று வரலாம் என்று, என்றும் நம்பியவள்.... வரவேண்டிய நாளிலும் கடிதம் சுமப்பவன் வரவே இல்லை. பொறுமையற்று பைத்தியமாக அவள் ஆகிப்போனாள்... நடு இரவில் எழுந்து கொண்டாள் நேரே தோட்டம் சென்று கை நிறைய மண்ணை வாயில் போட்டு... மிருதுவான மண் புழுக்களுடன் குதப்பியதோடு நத்தை ஓடுகளை கடித்துவிட்டு வாந்தி விடியும் வரை எடுத்தாள்... உடல் சோர்வில் ஜுர வேகமடைந்து நெடுஞ்சாண் கடையாக காலையில் வீழ்ந்து கிடந்தாள் அவளுக்கு நினைவு தப்பியதோடு, இதயம் சுயத்தை துரந்து வெளிப்பிதற்றல்கள் வெட்கமின்றி ரிப்பன்களோடு வாசனை திரவியம் பூசிய பதினாறு கடிதங்கள், தழைகள் பூவிதழ்கள், தொட்டதும் பொடியான காய்ந்த வண்ணத்துப் பூச்சிகள் இருப்பதை கண்டுபிடித்தாள்.

ரெபக்காவின் நோயை சரியான அர்த்தத்தில் புரிந்து கொள்ள அவ்ரெலியானோவால் மட்டுமே முடிந்தது. பிதற்றல் சகதியிலிருந்து அன்றைய மதியம் ரெபக்காவை மீட்டெடுக்க ஊர்சுலா பெருமுயற்சிகள் செய்த மார்க்வெஸ் ஆகிய தன் சகாக்களுடன் அவர் காட்டரினோ அங்காடிக்கு சென்று விட்டார். அது புதிய மர அறைகளுடன் விரிவாக்கப்பட்டிருந்ததோடு அந்த அறைகளில் இப்போது உதிர்ந்த மலரின் நெடியுடன் தனித்த பெண்கள் வாழலாயினர். பல ஆண்டுகளாய் கிழவன் பிரான்ஸிஸ்கோ மெக்காண்டோ பக்கமே வந்திருக்கவில்லை எனினும் அவனது பாடல்களை அகார்டியான் வாத்தியமும் மத்தளமும் முழங்க ஒரு குழு பாடிக் கொண்டிருந்தது. மூன்று நண்பர்களும் கரும்புச்சாறு கள்ளை வாரி குடித்தனர். மாக்னிஃபிகோவும் கெரினெல்டோவும் உலக ஞானம் அதிகம் பெற்றவர்களாகவும் அனுபவகாலங்களாகவும் இருந்ததால், தங்கள் மடியிலமர்ந்து பெண்கள் மகிழந்தூட்டிய கள்ளை சிறுக சிறுக முறைப்படி குடிக்க அறிந்திருந்தார்கள். தங்கப் பற்கள் மின்னிய யுவதி ஒருத்தி அன்பாய் தடவிக் கொடுத்து அவ்ரெலியானோவை பதற வைத்திருந்தாள் ... ஆனால்

அதிகம் குடிக்க குடிக்க ரெமெடியாஸின் நினைவு மேலும் அதிகமாவதை அவர் உணர்ந்ததோடு... மறு நினைவு என்பது குடித்திருந்தால் வலி குறைந்து வாட்டியதை கண்டார். எப்போது போதை தலைக்கேறி மிதக்கத் தொடங்கினோமென அவருக்கே பிடிபடவில்லை. அவரது நண்பர்களும் அங்கிருந்த பெண்களும் பளபளப்பு எறிட மின்னலின் தன்மையோடு எடையற்று மிதந்தபடி தங்கள் வாயிலிருந்து வெளிப்படாத சொற்களை பேசிட கண்டார். தங்களுக்குள் யாருக்கும் பிடிபடாத சமிக்ஞைகளும் அவர்கள் தங்களை மிஞ்சி செய்து கொண்டிருந்தனர். கட்டாரினோ அவரது தோளில் கைபோட்டு தட்டியபடி "மணி பதினொன்றாகி விட்டது" என்ற போது அங்கே வடிவத்திற்குப்படாது சிதைந்து காதில் தொடுத்த பூக்கள் தொடங்கும் பெரிய முகமொன்றை கண்டு, முன்பு மறதி நாட்களில் நடந்தது போல சுயநினைவு முழுதும் தப்பி பின் அறைகுறை விழிப்பு ஏற்பட்டபோது தனக்கு பிடிபடாத அது வரை கண்டிறராத ஒரு அறையில் விழுந்து கிடப்பதை உணர்ந்தார். அங்கே இரவு உடையில் கையில் விளக்கோடு, காலில் செருப்பும் இல்லாமல் பிலர்டெனரா அவரை அடையாளங் கண்டு நம்ப முடியாமல் அதிசயிப்பதையும் கண்டார்.

"அவ்ரெலியானோ"

அறை வாசலில் அவ்ரெலியானோ தலைநிமிர்ந்து எழுந்து நிற்கமுயன்றார். தான் எப்படி அங்கே வந்து சேரந்தோம் என்பது அவருக்கு தெரியவில்லை என்றாலும் சிறுவனாய் இருந்தது முதலே தன் மனதில், அடி ஆழ இதயத்தில் ஒரு உபரி நதியாய் ஓடிக் கொண்டே இருந்த ஒன்றான... அங்கே வருவதற்கான காரணம் அவர் அறியாதது அல்ல.

"உ..... உன்னோடு படுக்க வந்திருக்கிறேன்" அவர் சொன்னார்.

அவரது ஆடைகள் சகதியிலும் வாந்தியிலும் நனைந்திருந்தன. தனது இரண்டு குழந்தைகளுடன் தனித்து அப்போது வசித்து வந்த பிலாடெனரா கேள்வி எதுவும் கேட்கவில்லை. அவர் அவள் கைத் தாங்கலாக படுக்கைக்குள் அழைத்துச் சென்றாள். ஈரத்துணியால் அவரது முகத்தை துடைத்து விட்டாள். அவரது ஆடைகளை அகற்றிவிட்டு தனது உடுப்புகளை முற்றிலும் களைந்து, தன் குழந்தைகள் கண்விழித்தாலும் அவர்களை காணாதிருக்க கொசு வலையை நன்றாக இழுத்துவிட்டாள்.... எதிர்காலம் காட்டும் தன் சீட்டாட்ட சீட்டுகளின் குழப்பமான முடிவுகளும், தன்னிடம் வந்தும் தங்காத, வரவேண்டி காத்திருந்த அல்லது தன் இருப்பிடத்தின் வழியே அறியாமல் கூடப் போன பல்வகை ஆண் மகன்களை எதிர்பார்த்து அவள் சோர்ந்து விட்டிருந்தாள். இந்தக் காத்திருப்பு அவளது உடலை சுருக்கம் விழவைத்து முலையை தளர்த்தி நெஞ்சின் கனலை சற்றே ஏறக்குறைய அணைத்தே விட்டிருந்தது. இருளில் அவ்ரெலியானோவை அணைத்துக் கொண்டு அவரது வயிற்றில் கைவைத்து கழுத்தில் முத்தமிட்டு தன ஸ்திரித்தனங்களால் மிருதுவாய் "என்....செல்லமே... " என்று

கொஞ்சியபோது அவர் பதறி முழுவிழிப்பு நிலை எய்தினார். ஒரு சிறு தவறும் தவறுதலும் இன்றி தான் சேர்த்து வைத்திருந்து துயரம் புதிதாய் பிறந்த விலங்குக் குட்டியின் ரத்தவாளையும், தேய்க்கப்பட்டு மடித்த ஆடையின் சோப்பு மணமும் கூடிய வினோத தன்மையை எங்கும் மீண்டும் அடைந்த போதோ குலுங்கி அழுது கொண்டிருந்தார்.... முதலில் அவை வெறும் முனகல்களாக இருந்தாலும் விரைவில் தனக்குள் எங்கோ எதுவோ வெடித்துச் சிதறியது போல தன் பாரத்தை அழுகைப் பீறிட அவர் கொட்டி அடுக்கினார் வலியோடு. கருத்த அந்த சுமையை அவரது உடல் முழுதும் கொட்டும் வரை கேசத் தன் நீண்டு மெலிந்த விரல்களால் கோதி விட்டபடி இருந்த பிலர்டெனரா பின் கேட்டாள்: "யார் அவள்?" அவ்ரெலியானோவ் ஒளிவு மறைவின்றி அனைத்தையும் கூறினார்... ஏனைய சமயமாயிருந்தால் அவள் வளர்த்த புறாக்களைக் கூட அதிரவைக்கும் பெரிய சிரிப்பு தான் ஆனாலும் இப்போது குழந்தைகளைக் கூட எழுப்பவில்லை "முதலில் நீ அவளை வளர்க்க வேண்டும்..." அவள் கேலி செய்தாள்... ஆனால் அந்த கேலி கிண்டலுக்கு அடியில் அவர்களுக்குள் ஒரு அறிதல் ஏற்பட்டிருந்ததை அவர் காணத் தவறவில்லை... அன்று தன் பல மாதத்து வலியையும், சந்தேகங்களையும் நெஞ்சில் கசிந்த அதிர்வுகளையும் அவஸ்த்தைகளையும் அவ்விடம் விட்டு அறையை விட்டு அவர் வெளியேறிய அத்தருணத்தில் அவள், பிலர்டெனரா, தீர்மானமாகச் ஒரு வாக்குறுதி அளித்தாள்.

"நான் அப்பெண்ணுடன் பேசுவேன்", அவரிடம் கூறினாள், "தட்டில் வைத்து அவளுக்கு நான் கொடுக்க இருப்பது என்ன என்பதை அப்போது பார்".

தன் வார்த்தையை அவள் காப்பாற்றினாள். ஆனால் அப்போது வீட்டில் இருந்த பழைய அமைதி தளர்ந்து கெட்ட காலங்களை அது அனுபவித்துக் கொண்டிருந்தது. ரெபக்காவால் மூடி வைக்க முடியாதபடி போன அவளது விருப்பை, வெறியை அறிந்து கொண்ட நொடியில் அமரந்தாவிற்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. அவளும் தனிமைப்பட்ட ஒரு தலைக் காதலால் அவதிகளும் துயரும் அளவின்றி அனுபவித்தாள் கழிவறைக்குள் தன்னை அடைத்துக் கொண்டு நம்பிக்கையின்மையுடன் கூடிய படுவேதனையின் தன் சீற்றத்தை ஜுரவேகத்தில் கல்நெஞ்சக் கடிதங்களாக்கி உருகி ஒடச் செய்து அவற்றை முடிவாக தன் டிரங்க் துணிப் பெட்டியின் அடியில் போட்டு வைத்தாள். இரண்டு நோய்வாய்ப் பட்ட பெண்கள் கவனித்துக்கொள்ளும் பலமும் திராணியும் அற்றவளாய் ஊர்சுலா தவித்தாள். எத்தனையோ சூழச்சியும் கட்டும் நிறைந்த வழியில் விதவிதமாக விசாரணை நீடித்து செய்தும் அமரந்தாவின் வீழ்ச்சிக்கான உண்மையான காரணம் அவளுக்கு தீர்மானமாய் பிடிபடவே இல்லை. இறுதியாக அகஸ்மாத்தாய் தோன்றிய தூண்டுதலால் அவளது பெரியத் துணிப்பெட்டியை உடைத்து திறந்து பார்த்தவள், ரோஜா நிற ரிப்பனில் சுற்றப்பட்டு... புதிய அல்லி மலர்கள் புடைக்க... கண்ணீரால் அப்போதும் ஈரமாயிருந்த. எழுதப்பட்டு ஆனால் ஒரு போதும் பியெட்ரோ கிரெப்ஸிக்கு

அனுப்படாத கடிதங்களை கண்டுபிடித்தாள். ஆத்திரத்தில் கதறி அழுத அவள், தனக்கு பியானோவாக வேண்டுமென தோன்றிய நாளை சபித்த வண்ணம் பூவேலை பாடங்களை கூட நிறுத்திவிட்டு யாரும் இறந்துவிடாமலே, ஒரு விததுக்க நிலையை, மகள்கள் இருவரும் நம்பிக்கை துளிர்ந்து எழும்வரை, வீட்டில் கட்டளையிட்டாள். பியெட்ரோ கிரெஸ்பியின் இசைக்கருவிகளை கையாளும் திறத்தை பாராட்டியபடி, ஜோஸ் அர்காடியோ புயெண்டியா மேற்கொண்ட அவன் குறித்த கருத்தேற்றமும் எடுபடவில்லை. எனவே பிலர் டெனரா, ரெமெடியாஸ் திருமணம் குறித்து செய்திருந்த முடிவை அவ்ரெலியானோ விடம் கூறிய போதும், அந்த செய்தி தனது பெற்றோர்களின் கஷ்டத்தை அதிகரிக்கவே செய்யுமென அவர் திட்டவட்டமாக நம்பினார். பேசவேண்டுமென வரவேற்பறைக்கு அழைக்கப்பட்டபோது ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவும், ஊர்சுலாவும் தங்கள் மகனின் பிரகடனத்தை கேட்டு பாறைபோல செய்வதறியாது அதிர்ந்து நின்றனர். ஆனாலும் அவர் மணக்க விரும்புகிறவள் குறித்து சொல்லப்பட்ட போது ஜோஸ் அர்காடியோ புயெண்டியா கடுஞ்சினம் கொண்டு முகம்

வந்தார்: "காதல் ஒரு கொடியநோய்" அவர் இடியென முழங்கினார், "ஒழுக்கமும் அழகும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற எத்தனையோ யுவதிகள் சுற்றிலும் இருக்க, உனக்கு தோன்றியதெல்லாம் நம் எதிரியின் மகளைப் போய் மணக்க வேண்டும் என்பதே". ஆனால் ஊர்சுலா அவரது தேர்வை உடனே அங்கீகரித்தாள். ஏழு மாஸ்கோட் சகோதரிகள் மீதும் அவர்களது அழகுக்காக, வேலைத்திறன், ஒழுக்கம், நன்னடக்கம் என யாவற்றிற்காகவும் தான் வைத்திருக்கும் மரியாதையை வெளிப்படையாக அறிவித்த அவள் மகனின் மதி நுட்பத்தை வாயார பாராட்டினாள். தன் மனைவியின் பேரார்வத்தால் வெல்லப்பட்ட ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஒரு நிபந்தனையை முன் வைத்தார்: அவ்ரெலியானோவை மணந்து கொள்ள வேண்டுமென அவர் தீர்மானித்திருந்தவளான ரெபக்காவுக்கு பியெட்ரோ கிரெப்ஸியை மணமுடிக்க வேண்டும். ஊர்சுலா, நேரம் கிடைக்கும் போது நாட்டின் தலைநகருக்கு அமரந்தாவை அழைத்துக் கொண்டு நகரத்து மனிதர்கள் பலரிடம் பழக விடுவாள், அப்போது தன் துயரங்கள், ஏமாற்ற ங்களிலிருந்து அமரந்தா இலகுவில் விடுபடுவாள். ஒப்பந்தம் குறித்து அறிந்ததுமே, ரெபக்கா தனது நோயிலிருந்து மீண்டு மணக்க இருப்பவனுக்கு, நற்செய்தியும் பெருமகிழ்ச்சியுமளிக்கும் கடிதம் ஒன்றை எழுதி தன் பெற்றோ ரார்களுக்கும் காட்டி விட்டு அவர்கள் சொற்படி மத்தியஸ்கர்களை தவிர்த்து நேரடி தபாலில் அனுப்பினார் வெளிப்பார்வைக்கு தான் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது, போல அமரந்தா நடித்தாள். காய்ச்சலிலிருந்து வெளி வந்த அவள் உள்ளுக்குள் ரெபக்கா அவனை மணப்பதானால் அது தன் பிணத்தின் மீது தான் என தீர்மானமான சூளுரைகள் செய்தாள். அந்த வார சனிக்கிழமையன்று ஜோஸ் அர்காடியோ புயெண்டியா தன் கருத்த நெகிழ்ந்த தம் வைத்து தைத்த காலருடன் கூடிய மேல் கோட்டும், விருந்து நடந்த அன்று முதலில் அணிந்த புதிய மான் தோல் பூட்ஸும் அணிந்து ரெமெடியாஸ் மாஸ்கோட்டை பெண் கேட்க சென்றார். நீதி அதிகாரியும் அவரது மனைவியும் மகிழ்ச்சியோடும் அதே சமயம் மனக்கலக்கத் தோடும் அவரை வரவேற்றார்கள் ஏனெனில் அவர்களுக்கு அவர் வந்ததன் நோக்கம் முதலில் பிடிபடவில்லை பிறகோ மணமகள் பெயரை குழப்பத்தில் மாற்றி அவர் கூறுவதாக அவர்கள் கருதிக் கொண்டார்கள். தவறை சரிசெய்ய, இன்னமும் தூங்கிக் கொண்டிருந்த சிறுமி ரெமெடியாஸை கட்டி எழுப்பி அவள் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்திருக்கிறாளா என அவர்கள் வினவியபோது, தேம்பி அழுதுபடி அவள் குழந்தைக் குரலில் தூங்கவே விரும்புவதாகவும்... கத்திவிட்டு உறங்கிய ஜோஸ் அர்காடியோ புயெண்டியா, அவ்ரெலியானோவிடம் குழப்பத்தை நேரடியாக கேட்டு சரிசெய்ய திரும்பிச் சென்றார். அவர் மீண்டும் வந்தபோது, வீட்டின் வரவேற்பறையின் இருக்கைகளை ஒழுங்கமைத்தும் பூச்சாடிகளில் புதிய பூங்கொத்துக்களை சொறுகி தங்களது வயதான மகள்களுடன் காத்திருந்தனர். அரிப்பு ஏற்படுத்தி தொல்லைத் தந்த, தன் காலரை சரி செய்தே வெறுத்தும், இப்படியான பொறுப்பிற்கும் கசப்பான சூழலுக்கும் தள்ளப்பட்ட தன் நிலைக்காக எரிச்சலுற்றும் அவசரமாய் அவ்ரெலியானோ

மணக்க விரும்பியது சிறுமி ரெமெடியாஸையத் தான் என தீர்மானமாய் முன் மொழிந்தார். "இது விளங்கிக் கொள்ள முடியாத முடிவாக இருக்கிறது", கிலியும் பீதியும் வாட்டும் குரலில் டான் அப்போலினார் மாஸ்கோட் சொன்னார். "எங்களுக்கு திருமண வயதில் ஆறு பெண்கள் உள்ளனர், மணமாகாதவர்கள், ஆனால் மணமுடிக்கும் வயதில் அதுவும் கடும் உழைப்பாளியாகவும் மிகவும் அமைதியானவராகவும் அறியப்பட்ட தங்கள் மகனை மணக்கமுழு தகுதி படைத்தவர்கள், ஆனால் அவ்ரெலியானோவ் இவர்களை எல்லாம் விட்டு விட்டு, இன்னமும் படுக்கையை நனைக்கும் என் கடைசி மகள் மீது கண்டித்தாள். பழச்சாறை பருகி முடித்த போது அவர்கள் அவ்ரெலியானோவின் முடிவை பெற்றார்கள்... ஊர்சுலாவை திருமதி மாஸ்கோட் தனிமையில் எப்படியாவது சந்திக்க அனுமதி மட்டும் கேட்டு இரைஞ்சினாள். ஆவலை அடக்கிகொள்ள முடியாமல் அதே சமயம் ஆண்கள் முடிவு செய்ய வேண்டிய விஷயத்தில் போய் அநாவசியமாக தன்னை இழுப்பதாக புலம்பியபடியே, உள்ளார்ந்த உணர்ச்சிப் பிளிரலுடன் மறுநாள் அவளைச் சந்திக்க ஊர்சுலா சென்றாள் அரை மணி நேரம் கழித்து ரெமெடியாஸ் இன்னமும் வயதுக்கு வரவில்லை எனும் செய்தியோடு திரும்பி வந்தாள். அதை ஒரு தடையரணாய் அவ்ரெலியானோ கருதவில்லை. இவ்வளவு காலம் காத்திருந்த அவருக்கு தன் மணமகள் பூப்பெய்தும் நாள் வரை காத்திருப்பது ஒன்றும் பெரிய தாமதமாய் தோன்றவில்லை.

புதிதாய் நிலை பெற்ற அந்த அமைதி மெகியூவாடெஸ்ஸின் மரணத்தால் தடைப்பட்டது. அது எதிர்பார்க்கப்பட்ட சம்பவம்தான் என்றாலும் அது நடந்த சூழல் அப்படிபட்டதல்ல. திரும்பி வந்திருந்த சில மாதங்களிருந்தே கிழவயது மிகவேகமாக அவரை தொற்றத் தொடங்கி படிப்படியாக அதிவேகமுற்றுப் போனது. அது எந்த அளவிற்கு வேகமாய் அவரை கிழப்பருவ மெய்த வைத்த தென்றால், விரைவில் அவர் பயனற்ற கொள்ளுப்பாட்டனின்நிலை அடைந்து படுக்கை அறைகளில் நிழலாக ஊர்ந்து, தள்ளாடியபடி கைபிடிக்கத் துழாவிதன் சிறப்பு வருடங்களை சப்தமாக பகிர்ந்து அக்கறை யாரும் செலுத்த முடியாத ஒருத்தராகி திடீரென தங்கள் படுக்கை அறையிலேயே இருந்ததும் நினைக்கப்படும் பலர் போல் ஆனார். ஆரம்பத்தில் நிழற்பட பெட்டி மற்றும் நாஸ்ட்ரடாமஸ் முன்மொழிவுகளில் ஆர்வம் மிகுந்த ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அவருக்கு பணிவிடைகள் செய்தார். ஆனால் மெல்ல மெல்ல தகவல் பரிமாற்றமே சிரமமானபோது அவரை கைவிடவும் செய்தார். மெகியூவாடெஸ்ஸிற்கு பார்வை இழப்பு ஏற்பட்டதோடு தான் பழகிய உலக மனிதக் கடலின் யார் யாருடனோ எதிரில் பேசுபவரை குழப்பிக் கொண்டு தாறுமாறான கதம்ப மொழியில் பதில் பகரத் தொடங்கினார். காற்றில் நடுங்கியபடியே சில சமயம் விளங்க முடியாத எளிமையான ஒழுகும் இயல்போடு ஏதோ ஒருவித முன்அறிவோடு நடந்து செல்வார். ஒரு நாள் தன் படுக்கையின் தலைமாட்டில் தண்ணீரில் போட்டு வைக்கப்படும் பொய் பற்களை எடுத்தணிய மறந்தார். அது முதல் அதை சுவர் அணியவே

இல்லை. வீட்டை விரிவாக்கி மறுகட்டுமானத்தை ஊர்சுலா செய்தபோது அவ்ரெலியானோவின் பட்டறைக்கு அருகில் மெகியூவாடெஸ்ஸிற்கு வீட்டின் சப்தங்கள் ஆரவாரங்கள் அண்டாத இடத்தில் ஒரு தனி அறை எழுப்பி வெளிச்சம் நன்கு ஊடுருவும் சன்னலும் புத்தக அலமாரியும்-அதில் தானே தருவித்த புத்தகங்கள் பலதையும் அடுக்கினாள். மெகியூவாடெஸ் புதிய அறையால் மிகுந்ததிருப்தி அடைந்திருந்தார். புழுதியும் அஞ்சல் பூச்சிகளும் புத்தகத்தை அரிக்க, விளங்கிக்கொள்ள முடியாத அறிக்கைகளில் இருக்கப்பட்ட ஆத்தையான காகிதங்கள், நீர்த்தாவரங்கள் முளைத்த பொய்பல் கிடந்த குவளைத் தண்ணீரில் பூத்த மஞ்சள் பூக்கள் என அந்த அறையை விட்டு அவர் அதன் பின்-உணவு மேசை உட்பட எங்குமே தென்படவில்லை. அவ்ரெலியானோவின் பட்டறைக்கு மட்டும் சென்று அங்கே தான் கையோடு கொண்டு வந்திருந்த எழுதுவதற்காக பதப்படுத்தப்பட்ட தோல் காகிதங்களில் தனது வழக்கம் போலான விவரிக்க முடியாத அறிக்கைகளை எழுதி வந்தார். ஒரு நாளைக்கு இருமுறை விஷித்தாசியோன் எடுத்து வந்த தன் உணவை அங்கேயே அவர் உண்டார். ஆனாலும் கடைசி காலத்தில் பசியின்மையை அடைந்து பச்சை காய்கறிகளில் வாழ்ந்தார். காய்கறி உணவு மட்டுமே உண்பவர் மீது வீசும் இரங்கத்தக்க தோற்றத்தை அவர் விரைவில் பெற்றார். கழட்டாத அவரது பழமை வாய்ந்த வெளிக்கோட்டில் அளவின்றி வளர்ந்திருந்தது போலவே தோலிலும் பாசிப்பூத்தப் போனதும் மட்டுமல்ல உறங்கும் ஒரு விலங்கின் வாடையை அவரது மூச்சுக் காற்று வெளியிடவும் செய்தது. கவிதைகள் புனைவதில் தன் கவனம் முழுவதையும் செலுத்தி வந்த அவ்ரெலியானோவ், ஒரு சமயம் தமக்குக் தாமே மெகியூவாடெஸ் பிதற்றிக் கொண்ட கட்ட வியலாக்கும் தனி மொழி தனக்கு புலப்பட்டு விட்டதாக கருதி கவனம் செலுத்தத் தொடங்கினார். அவ் ஊரிலிருந்த காலத்தில் அவர் வாசித்த பூடகப் புதிர் இலக்கிய படைப்பொன்றை எழுதிவந்தார். அவ்ரெலியானோ நினைத்ததற்கு மாறாக உண்மையில் பாறைப்பாங்காய் எழுதப்பட்ட அந்தப் பத்திகளில் செதுக்கப்படும் உளி ஆழமாய் முன் பதித்தது போல, செதுக்கி தனிப்பட்டு வெளித் தெரிந்ததெல்லாம் என்ற சொல்லும், அலெக்ஸாண்டர் வான் ஹம்போல்ட் என்ற பெயருமே ஆகும். அவ்ரெலியானோவிற்கு அவரது வெள்ளி ரசவாதத்தில் உதவ வந்த நாட்களில் அர்காடியோ மெகியூவாடெஸ்ஸிற்கு சற்றே நெருக்கமானவன் ஆனான்... ஸ்பானிஷ் மொழியில் யதார்த்தத்திற்கு ஒவ்வாத சொற்றொடர்களோடு சில சமயம் மெகியூவாடெஸ் சம்பாஷனைக்கு பதில்கள் தர எத்தனித்தார். ஒரு நாள். மதியம் அவர் திடீர் உணர்ச்சி விரவாக எங்கும் உணர்ந்தவராகக் காணப்பட்டார். ஆண்டுகள் பலவற்றிக்கு பிறகு கொலைப்படையை எதிர்கொண்ட நாளில் அவ்ரெலியானோ, ஊடுறுவிப் பார்க்க இடம் தராத புதிர் மொழியில் தனது எழுத்துகளை சப்தமாக மெகியூவாடெஸ் படித்துக் காட்டியதையும், பல பக்கங்கள் போப்பாண்டவர் சுற்றிக் கடிதம் போலவும் தோத்திரமாய் ஜெபிக்கப்பட்டது போலவும் இருந்ததையும் தானும் கவனிக்க வைக்கப்பட்டதையும் நினைவு கூர்ந்தார். பிறகு அவர்

வெகுநாட்களாக பார்க்கமுடியாதிருந்த தன் புன்னகை மலர்ந்து, நான் இறந்துபோனால் மூன்று நாட்களுக்கு எனது அறையில் பாதரசத்தை எரியுங்கள் என்று ஸ்பானிய மொழியில் சொன்னார், அர்காடியோ அதை ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவிடம் சொன்ன போது அவர் வெளிப்படையான முழு உண்மையையும் உணர விரும்பி எவ்வளவோ முயன்றும் மெகியூவாடெஸிடமிருந்து எதையும் பெற இயலவில்லை. திரும்பத்திரும்பக் கிடைத்தது எல்லாம் ஒரே பதில் தான்; "நான் இறவா நிலையை அடைந்து நிலைப்பேறு பெற்றுவிட்டேன்" மெகியூவாடெஸ்ஸின்

சுவாசம் நாறத்தொடங்கிய போது வியாழனன்று காலையில் வாராவாரம் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அவரை குளிக்க ஆற்றுக்கு அழைத்துச் செல்ல தொடங்கினான். சற்றே உடல் நலம் தேறியவர் போலான அவர் உடைகளை களைந்து பையன்களுடன் தண்ணீரில் இறங்கி தனது விநோத கீர்த்தியை அறிவுப்பெற்றின் மூலம் ஆற்றின் மோசமான பகுதிகளை அறிந்து தவிர்த்து குளித்தெழுவார். ஒரு குறிப்பிட்ட சம்பவத்தன்று "நாம் தண்ணீரில் இருந்து வந்திருக்கிறோம்" என்று அறிவித்தார். மற்றபடி பியோனாவை திரும்ப இயக்க வைக்க பரிதாபமாய் அவர் முயற்சி மேற்கொண்ட அன்றும் மற்றபடி கையடியில் கரைக்குடுக்கை, பனைஎண்ணெய் சோப்புக் கட்டி சுற்றிய துண்டுமார் அர்காடியோவுடன் ஆற்றுக்கு செல்லும் போதும் தவிர எனைய எந்த நாளிலும் வீட்டில் யாருமே அவரைப் பார்த்ததில்லை எனுமளவு நாட்களும் வேகமாய் உருண்டோடின, ஒரு வியாழனன்று குளிக்க அழைத்தபோது "நான் எற்கனவே சிங்கப்பூரின் மணற்மேடுகளில் ஒன்றில் இறந்து விட்டேன்". என்று பதில் சொன்னதை அர்காடியோ கேட்க நேர்ந்தது. அன்றைய தினத்தில் தண்ணீரின் மோசமான ஒரு சென்று காணமல் போன அவரை மறுநாள் வரை தேடி கடைசியில் சில மைல்கள் ஆற்று நீரில் கடந்து ஒரு ஒளி படரும் திருப்பத்தில் அடித்துச் செல்லப்பட்டு வயிற்றில் பிணந்தின் கழுகு தனியே உட்கார்ந்திருந்த விதமாக கண்டு பிடித்தனர். தனது தந்தையின் மரணத்தை விடதாங்கொன்னா ஆற்றாமையோடு அழுது கதறியபடி தனியொருத்தியாய் ஊர்சுலா தெரிவித்த எதிர்ப்புகளை மீறி ஜோஸ் அர்காடியோ புயெண்டியா அவரை அடக்கம் செய்ய மறுத்தார்: "அவர் இறவா நிலை அடைந்தவர்" அவர் சொன்னார், "உயிர்த்தெழும் சமன்பாட்டை வழியை கண்டுபிடித்து அறிவித்துள்ளார்". மறக்கப்பட்ட தண்ணீர் குழாயை திரும்ப எடுத்து வந்து ஒரு கொதிகலத்தில் பாதரசம் ஊற்றி உடலுக்கு அருகில் தொதிக்க வைத்து போது சிறிது சிறிதாக நீலக் குமிழ் விடத் தொடங்கியது. டான் அப்பொலினார் மாஸ்கோட் சற்றே தைரியும் கொண்டு முன் வந்து, தண்ணீரில் வயிறு உப்பி மூழ்கி உயிரிழ்ந்தவன் ஊருக்கே ஒரு சுகாதாரக் கேடு என எடுத்துக் கூறியபோதும் "இவர் உயிரோடுதான் இருக்கிறார் " என்பதே ஜோஸ் அர்காடியோ புயெண்டியா கூறிய ஒரே பதில். கிட்டத்தட்ட எழுபத்திரண்டு மணி நேரம் பாதரச நெடியை வீடெங்கும் பரவ விட்டும், ஏற்கனவே கலையதிர்வில் ஒளி பெற்று உடல் சிதைவுறத் தொடங்கி, சிறு கீச்சொலிகள் மூலம் வீட்டை மரணம் விளைவிக்கும் கொள்ளை நோயால் கருவுற வைத்திருந்தது. அதன் பிறகே அவர் அவர்களை அடக்கம் செய்ய விட்டார். அதுவும் ஊருக்கு சேவைகள் பல புரிந்தவர்க்கான அனைத்து அந்தஸ்த்துகளும் வழங்கி நல்லடக்கம் இருந்த எற்பாடு செய்தார். அது தான் ஊரின் முதல் சவ அடக்கம். எனவே ஊரே திரண்ட நல்ல கூட்டம் இருந்த சவ அடக்கம்.... பின் அந்த கூட்டத்தை முறியடித்து கூட்டம் சேர்ந்தது ஒரு நூற்றாண்டு கடந்து நடந்த பெரிய அம்மாவின் சவ சடங்கிற்கு தான். இடுகாட்டிற்கென ஒதுக்கப்பட்டிருந்த நிலப் பகுதியின் நடுவில் அவரை சகல மரியாதைகளுடன் அவர்கள் புதைத்து .அவரை பற்றி அவர்கள் அறிந்திருந்த ஒரே விஷயத்தை

எழுதி ஒரு ஞாபக் கல்லும் பதித்தனர்: மெகியூவாடெஸ், பின் ஒன்பது இரவு எழுப்புதலும் அவருக்கு வழங்கினர். காப்பி பானம் அருந்திடவும் சீட்டாடவும் நகைப்புகளை பகிர்ந்து மீட்பு பெறவும் ஆரவாரமாய் அங்கு ஊரே கூடி அமர்க்களப்பட்ட அன்றை நாளில் தனது காதலை பியெட்ரோ கிரெஸ்பிக்கு அமரந்தா உருக்கமுடன் வெளிப்படுத்தினாள். பியெட்ரே கிரெஸ்பி, ஒரு வாரத்திற்கு முன்புதான் ரெபக்காவிற்கு வாக்களித்து போல மெக்காண்டோவிற்கே-இசைக் கருவிகள் மற்றும் இயந்திர பொம்மைகள் விற்கும் அங்காடி ஒன்றை திறந்து-குடிபெயர்ந்திருந்தான்... அராபியர்கள் பசுங்கிளிகளுக்கு ஆபரணங்கள் விற்க வந்த அதே பகுதியில், மக்கள் துருக்கிய வீதி என்றழைத்த நெருக்கமான இடத்தில் அக்கடை கச்சிதமாய் அமைந்திருந்தது. பெண்கள் ஒரு பார்வையாவது பார்ப்பதை தவிர்க்க இயலாதபடி கவர்ச்சிகரமாய் மடிப்புகளுடன் கூடிய புதுவகை தோல் குல்லாய் அணிந்திருந்த இத்தாலியின் அமரந்தாவை முரண்பட்ட உள்போக்கு கொண்ட சாதுவான சிறுமி ஒருத்தியை அணுகுவது போல கவலையோடும் அக்கறையோடும் அணுகத் தகுதியற்ற வளாய்.. தரகுறை வுபடுத்தி அணுகினான்.

"எனக்கு ஒரு சகோதரன் இருக்கிறான்," அவன் அவளிடம் சொன்னான், "கடையில் எனக்கு உதவியாய் இருக்க வரப்போகிறான்"

தான் அவமானப்பட்டதை எண்ணித்துடித்தபடி அமரந்தா, அளவிடற் கரிய வெறுப்புடன், தன் சகோதரியின் திருமணம் நடக்காது என்றும் தனது பிணம் கதவருகே குறுக்கே விழுந்தாவது அதை நிறுத்தும் என்றும் பியெட்ரோ கிரெஸ்பியிடம் முடிவாக கூறினாள். அது சொல்லப்பட்ட முறையும் மிதமிஞ்சிய காழ்ப்புணர்ச்சியோடு இறுதி முடிவு போல அது அறிவிக்கப்பட்ட விதமும், அதிலும் மறை பொருளாகி இருந்த எச்சரிக்கையின் நிஜத் தன்மையும் அவனை கிளர்ந்தெழ வைத்து அவன் ரிபெக்காவிடம் அதை கூறிட வைத்தது. பலமுறை ஊர்சுலாவின் வேலைச் சுமைக் காரணமாக தள்ளி வைக்கப்பட்ட அமரந்தாவின் தலைநகர் பயணம் கடைசியில். உடனடியாக அவசரமாய் மேற்கொள்ளப்பட்டது இப்படித் தான்.... ஒரே வாரத்தில் வேக வேகமாய் திட்டமிடப்பட்ட அப்பயணத்திற்கு எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை, என்றாலும் ரெபக்காவை அணைத்து விடைபெற்ற போது அவளது காதில் அமரந்தா கிசுகிசுத்தாள்...

"நம்பிக்கையை வளர்க்காதே... உலகின் எந்த மூலைக்கு அவர்கள் என்னை அனுப்பி வைத்தாலும் சரி, உன் திருமணத்தை உன்னை கொலை செய்தாவது நான் நிறுத்திக் காட்டுவேன்".

ஊர்சுலா இல்லாததும் மெகியூவாடெஸின், அறை விட்டு அறைக்கு திக்குகளைத் துழாவி, வெளியே தெரியாது, மறைபொருளாய் நகர்ந்த இருப்பும் வீட்டை மிகவும் காலியாகவும் பெரிதாகவும் ஒவென்று காட்டியது. வீட்டின் அன்றாட வாழ்வை ரிபெக்கா தன் பொறுப்பில் ஏற்றாள். ரொட்டிக்

கடை வேலையை இந்திய பெண்மணி விஷித்தாசியோன் சமாளித்தாள். அனுதினமும் மாலையில் டெலங்கும் லாவண்டர் மணக்க எடுப்பாய் கசங்காது அழுத்தி தேய்க்கப்பட்ட உடுப்புகளுடனும் அன்பளிப்பாய் ஒரு பொம்மையும் கொண்டு தன்னைச் சந்திக்க வந்த பியட்ரோ கிரெஸ்பியை ரெபக்கா சன்னல்களும் கதவுகளும் திறந்து வைக்கப்பட்ட முன் வரவேற்பறையில் யாருக்கும் சந்தேகம் வராவண்ணமாய் சந்தித்தாள் ஆனால் அதற்கு அவசியமே இருக்கவில்லை ; ஒராண்டில் தான் மணக்க விருக்கும் பெண்ணின் கையை கூட தொடுவது கூட இல்லை எனுமளவும் தன் சுயமரியாதையில் இத்தாலியன் நிலைப்பாடு வைத்திருந்தான். அம்மாதிரி விஜயங்கள் வீட்டை அற்புதமான இசைக்கும் பெட்டிகள், கழைக் கூத்தாடும் குறங்குகள், தாவியோடும் குதிரைகள், கஞ்சீரா வாசித்த கோமாளிகள் இப்படி பியெட்ரோ கிரெஸ்பி எடுத்து வந்தளித்த அற்புத பொம்மைகள் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவை மெகியூவாடெஸ்ஸின் மரணம் ஏற்படுத்திய திகில் நிறைந்த துக்கத்திலிருந்து விடுவித்து பழங்கால இரசவாத இசையை நோக்கி அவரை இழுத்திருந்தன. உள்ளிருந்து இயந்திர பாசஸ்களை குடல் போல முடிவற்ற ஆட்டத்தை வழங்க நெம்புகோல் முறைப்படி மறு கட்டமைப்பு செய்யவென பிரித்தெறிந்து, ஆராயும் வேலையில் அவர் தொடர்ந்தார். தன் பங்கிற்கு அவ்ரெலியானோ பட்டறையை துறந்து ரெமெடியாஸ்ஸுக்கு எழுத படிக்க கற்றுத் தரும் வேலையில் நேரடியாக இறங்கினார். முதலில் அந்த மனிதனை விட குழந்தை பொம்மைகள் மீது அதிக கவனம் வைத்திருந்தது. தன்னை பொம்மைகளிடமிருந்து பிரித்த வராகவே அவரைக் கண்டது. குளித்து தூய உடை உடுத்தி வரவேற்பறையில் தினமும் விஜயம் செய்பவருக்காக அவள் காத்திருக்க வேண்டி இருந்தது. ஆனால் அவ்ரெலியானோ மணம் தளரவில்லை. அவரது பொறுமையும் அர்ப்பணிப்பும் அவளைவென்றுடுத்தன. மணிகள் பலவற்றை அவரோடு எழுத்துக்களை அறிந்தெழுதவும், சிறு வீடுகள், ஆடுமாடுகள் தொழுவத்துடன் மஞ்சள் அவரோடு அவள் கழித்தாள். வட்ட வடிவ சூரியனும் மலைக்குப்பின் வரை பதிலும் அவரோடு அவள் கழித்தாள்.

அமரந்தாவின் மிரட்டல் காரணமாய் ரெபக்கா மட்டும் எப்போதும் துயரத்துடன் காணப்பட்டாள். தனது சகோதரியின் அகங்காரமும் இயல்பும் நன்கு அறிந்தவள் அவள் எனவே அவளது கோபத்தின் வேகத்தை கண்டு அவள் அஞ்சினாள் பல மணிநேரங்கள் குளியலறையில் விரல் சூப்பியபடி பேயரைந்தவளை போல திகிலில் அமர்ந்தபடி அவள் ரிபெக்கா-கழிக்கலானாள். எப்படியாவதும் மண்தின்னாது இருந்துவிட வேண்டுமென இதயத்தை அவள் இரும்பாக்கிக் கொண்டாள். கொஞ்சமாவது நிலைமையிலிருந்து விடுபட பிலர் டெனராவை அழைத்து தனது வருங்காலம் குறித்து குறிகேட்க முடிவு செய்தாள். ஆரம்பத்தில் சலசலத்த சடங்குகளுக்கு பிறகு பிலர் டெனரா முன்னறிவித்தாள்:

"உனது பெற்றோர்கள் அடக்கம் செய்யப்படாத வரை உனக்கு மகிழ்ச்சியே கிடையாது" ரெபக்கா பதறிபோனாள்.. கனவின் ஞாபக

செல்களில் ஒரு சிறு குழந்தையாக கிடந்த வீட்டில் அவள் நுழைந்தாள்... ஒரு டிரங்க் பெட்டி, அசைந்தாடும் நாற்காலி ஒன்றுடன் உள்ளே இருப்பது என்ன என்று அவள் ஒரு போதும் அறிந்திடாத ஒரு பையும் இருந்தது நினைவிருக்கிறது. ஹார்ட்டின் ராஜாவுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமே இல்லாத வழுக்கை தலையும் நினைவு கூர்ந்தாள். இளம் அழகிய யுவதி ஒருத்தியை நறுமணம் வீசும் கைகளுடன் தனது கூந்தலுக்கு மலர் சூட்டி, பச்சை வீதிகளின் மதியத்தில் தன்னை காலார நடைகழைத்துச் சென்றவளாய் ஆனால் டைமண்டு சீட்டாட்ட சீட்டின் கீல்வாத கையுடைய தளபதியோடு சற்றும் தொடர்பற்ற அவளையும் நினைவு கூர்ந்திட மட்டுமே அவளால் முடிந்தது.

"எனக்குப் பிடிபடவில்லை" அவள் கூறினார்.

பிலர்டெனரா அவளுடன் சேர்ந்து சிந்திக்க விரும்பாதவளை போல முகத்தை வைத்துக் கொண்டாள்......

"எனக்கும் தான்.... ஆனால் சீட்டுகளை அதைத்தான் சொல்கின்றன" ஆனால் அந்தக் கனத்திலிந்து மீள முடியாதவளான ரெபக்கா விஷயத்தை ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவிடம் சொன்னாள். அவரும் சீட்டாட்ட சீட்டுகளின் குறியெல்லாம் கேட்குமளவு அறிவு மழுங்கிட போனதற்காக அவளை கண்டித்தாலும் தாமாகவே எலும்புகள் வைத்த பையை பெரிய டிரங்கு பெட்டி, பரணை, கட்டிலடி, படுக்கைக்கு அடியில் என எங்கும் தேடினார். வீட்டின் மறு கட்டுமானத்திற்கு பின் அதை எங்கும் காணாததை நினைவு கூர்ந்தார். கட்டுமான மேஸ்த்திரிகளை ரகசியமாய் அழைத்து மிரட்டி விசாரித்தார். அவர்களில் ஒருவர் ஏதோ ஒரு படுக்கை அறையில் அது ரொம்ப இடைஞ்சலாக இருந்ததால், சுவரோடு பதித்து பூசியதாக கூறினார். அவர்களில் காதுகளை பதித்து பல நாட்கள். க்ளாக் க்ளாக் சப்தத்தை தேடி கடைசியில் அவர்கள் கண்டுணர்ந்தார்கள். சுவரை இடித்து அங்கே எவ்விதத்திலும் பாதிப்படையாத பையில் எலும்புகள் இருப்பதை கண்டார்கள். மெகியூவாடெஸ்ஸின் கல்லறைக்கு அருகிலேயே அவற்றை அதே நாளில் ஒரு சவப் பெட்டியில் இட்டு அவர்கள் கல் ஊன்றாது அடக்கம் செய்தனர். புருடன்சியோ அக்விலாரின் நினைவைப் போலவே தன் மனதை பாரமாய் அழுத்திய ஒரு வித குற்ற உணர்விலிருந்து மீண்டவராய் ஜோஸ் அர்காடியோ புயெண்டியா திரும்பினார். சமையல் அறை பக்கம் சென்றவர் ரெபக்கா நெற்றியில் முத்தமிட்டார்.

"அந்த கெட்ட எண்ணங்களை உன் மண்டையிலிருந்து அகற்று" அவர் அவளிடம் சொன்னார், "நீ இனி மகிழ்ச்சியாய் இருக்கப் போகிறாய்" அர்காடியோ பிறந்த நாளிலிருந்து ஊர்சுலாவால் மூடப்பட்ட வீட்டின் கதவுகள் இப்போது ரெபக்காவுடனான நட்பால் பிலர் டெனராவுக்கு திற க்கப்பட்டன. அவள் அங்கே எந்த நேரத்திலும் திறந்த வீட்டிலும் ஆட்டு மந்தைப் போல நுழையவும் கடுமையான எந்த வேலையிலும் கையுதவி

புரியவும் முடிந்தது. சில சமயம் அவ்ரெலியானோவின் பட்டறையில் நிழற்பட ஒளிக் கருவியின் வெள்ளிப் பட்டைகளை தேய்த்து மறுபயன்பாட்டுக்கு அடுக்க திறமையோடும் ஒரு வித மிருதுவான தன்மையோடும் செய்து அவரை குழப்பி இறங்க வைத்தாள். உண்மையில் அப்பெண்மணி அவரை திக்குமுக்காட எப்போதும் வைந்தாள். அவளோடு ஒரு சாய்வு லேசான அவளது வாடை, குறிப்பாக படம் கழுவிய இருட்டறையில் தெறித்த அவளது சிரிப்பில் தெரிந்த கள்ளத்தனம் யாவுமாக சேர்ந்து செயல்களில் அவரை திணற வைத்தன.

தனது வெள்ளி ரசவாதத்தில் மும்முரமாக அவர் ஈடுபட்டிருந்த ஒரு நாள் பிலர் டெனரா அவரது கடும் உழைப்பு நிரம்பிய பொறுமையை போற்றிய வண்ணம் வேலை மேசையில் சாய்ந்து அவரை உற்றுநோக்கினாள். திடீரென்று அது நிகழ்ந்தது. அவ்ரெலியானோ என்ன விஷயமென சூசகமாய் கேட்க ஏறெடுத்து அவளது விழிகளை நோக்கினார். உச்சி வெயிலின் வெளிச்சத்தில் பட்டவர்த்தனமாய் அவளது எண்ண ஓட்டங்களை அவர் காண முடிந்தது.

"சரி" அவ்ரெலியானோ சொன்னார், "என்னவென்று சொல்" தனது கீழுதட்டை துயரத்துடன் பிலர் டெனரா கடித்துக் கொண்டாள்.

"அதாவது... நீங்கள் யுத்தத்திற்கு செல்வீர்கள்", அவள் கூறினாள், "உங்கள் பார்வை விழும் இடமெல்லாம் உங்கள் பார்வைகள் பாயும்"

முன்னறிகுறியின் சாட்சியத்தைப் போல அவர் ஆசுவாசமாக அமர்ந்திருந்தார். தன் ரசவாத வேலைகளில் எதும் நடக்காததைப் போல கவனமிடத் தொடங்கினார். அவரது குரல் அதிகார பலம் பெற்றதாயிற்று

"அவரை நான் கண்டறிவேன்" அவர் அறிவித்தார்,"அவர் என் பெயர் கொண்டவராய் இருப்பார்"

ஜோஷ் அர்காடியோ புயெண்டியா தான் எதை நோக்கி தீவிரமாய் முயன்றதை அடைந்து காட்டினார். இயந்திர நடனப் பெண் பொம்மைகளோடு கடிகாரத்தின் இயங்கியலை இணைத்து நடனக்காரிகள் மூன்று நாட்களுக்கு இடைவிடாமல் கடிகார முள்-இசைக்கு ஆடித்தள்ளினர். தனது அடுக்கான வேலைகளிலேயே இந்தக் கண்டுபிடிப்பு அவருக்கு மிகவும் பிடித்தாயிருந்தது. அவர் உணவருந்துவதையும் நிறுத்தினார். உறங்குவதையும் நிறுத்தினார். ஒரு வகையான ஆனந்த திகைப்பிலிருந்து ரெபக்காவின் கவனிப்பு இல்லாது போயிருந்தால் அவர் வெளிவராமலேயே போயிருப்பார். இரவெல்லாம் சப்தமாய் சிந்தனைகள் செய்த வண்ணம் சீர் அசைவியாய பெண்டுலத்தின் இயக்கத்தை பயன்படுத்தி வேறு-மாட்டு வண்டி, உழவு சாதனம், இயங்குதலால் பயன் தரும் எதையும் தானியங்கி ஆக்கிட அவர் முடிவின்றி வழி தேடினார். உறக்கமின்மை நோயால் கடுமையாக காய்ச்சலுற்ற அவருக்கு ஒரு நாள் அதிகாலையில் வெள்ளை

நரைமுடியும் முடிவு கூற முடியாத அங்க சேட்டைகளுடனும் வந்த வயதானவரை அடையாளம் தெரியவில்லை. வந்திருந்தது புருடென்ஷியோ அக்விலியார். முடிவாக அவனை அடையாளம் கண்டபோது இறந்தாலும் வயது முதிரும் எனும் விஷயம் தாக்கிட அவரும் அவனோடு ஒன்றாக பேச விருப்பமிட்டார். "புருடென்ஷியோ" அவர் ஆச்சரியப்பட்டார், தொலை தூரத்திலிருந்து நீ வந்திருக்கிறாய்". மரண ஆண்டுகள் தந்த வாழ்பவர் மீதான உச்சகட்ட கழிவிரக்கத்தாலும், ஒரு துணையை தேடி திரிந்து மரணத்தின் வெகு அருகே காத்திருந்து காத்திருந்து கடைசியில் புருடென்ஷியோ தன் எதிரியையே ஆழமாக நேசிப்பவனாய் மாறி இருந்தான். வெகு காலமாக அவரைத் தேடி அவன் சலித்தான். ரியோஹாச்சாவிலிருந்து இற ந்தவரை அவர் பற்றி கேட்டான், மேல்மட்ட வயற்பகுதி, பள்ளத்தாக்கு என எங்கிருந்தும் வந்த இறந்தவர்களையும் எவ்வளவோ விசாரித்தும் அவனுக்கு இருக்குமிடம் தெரிவிக்க ஆளில்லாது போனது. ஏனெனில் மெக்காண்டோ இறந்தவர்களுக்கு தெரியாத நகரமாயிருந்தது... இற ப்பு நிகழும் இடங்களை குறித்தறிந்த பல வர்ணகலவைக் கூளமான ஒரு வரைபடத்தில் மெக்காண்டோ மெகியூவாடெஸின் மரணத்தால் சிறு கருப்பு புள்ளியாக இடம் பெற்றுவிட்டது. ஜோஸ் அர்காடியோ புயெண்டியா காலைவரை புரொடன்ஷியோ ஆக்விலாருடன் பேசிக் கொண்டிருந்தார். சிலமணி நேரங்கள் சென்றதும் ஏதோ ஒன்று சட்டென கவனங் கொண்டவராய் அவ்ரெலியானோவின் பட்டறைக்குள் நுழைந்து அவரைக் கேட்டார்: "இன்று என்னக்கிழமை"? அவ்ரெலியானோ அது செவ்வாய்க் கிழமை என அவரிடம் சொன்னார். "நானும் அதையே தான் யோசித்தேன்" ஜோஸ் அர்காடியோ புயெண்டியா பதற்றத்தோடு கூறினார்," "ஆனால் சட்டென கவனித்த போது இது திங்கள்கிழமையாக இருந்தது.... வானத்தைப்பார் அவர்களைப் பார்... படர்செடி கொடிகளைப்பார்... இன்று திங்கட்கிழமையும் தான்" அவரது கவிதா விருப்புகள் பற்றி அறிந்திருந்த அவ்ரெலியானோ அவரை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்த நாள் புதன்கிழமை அன்று ஜோஸ் அர்காடியோ புயெண்டியா மீண்டும் பட்டறையில் பிரவேசித்து, "இது ஒரு பேரழிவு" என்றார், "காற்றை கண்டாயா, சூரியனின் முனுமுனுப்பு கேட்கிறதா... நேற்றும் நேற்றைய முதல் தினமும் போல.... இன்னும் சந்தேகமின்றி திங்கள் கிழமையே தான்". அன்றைய மாலைப் பொழுதில், புரொடன்ஷியோ அக்விலாருக்காக, மெகியூவாடெஸ்ஸிற்காக, ரெபக்காவின் பெற்றோர்கள், தன் சொந்த தாய் தந்தை என இறந்தோர் யாவரையும் நினைத்து அவர் கதறி அழுததை முன் தாழ்வாரத்தில் பியட்ரோ கிரெஸ்பி கண்டான். ஒற்றைக் காற்றில் பின்னங்கால்களால் நடக்கும் கரடிப் பொம்மை ஒன்றை அவன் அளித்தபோதும் அவரை ஆட்டிப்படைக்கும் ஒற்றை கருத்து நிலையிலிருந்து மீட்டெடுக்க இயலாது போயிற்று. மனிதர்கள் பறக்க ஊசற் குண்டு வழியே அவர் கண்டுபிடிக்க முயன்ற திட்டம் என்னவாயிற்று என அவன் அவருக்கு பேச்சும் கொடுத்தான். அது முடியாததாகிவிட்டது என்றும் எதையும் வான்நோக்கி நிமிர்த்தும் ஊசற்குண்டு தன்னைத் தானே உயர்த்தி கொண்டு

அச்சாரமின்றி இயங்க இயல தன்மை கொண்டுள்ளதென்று பதிலளித்தார். உழவாரம் செய்யப்பட்ட நிலம்போல வலியும் மிகுந்த அதிர்முகத்தோடு வியாழக்கிழமையும் அவர் பட்டறையில் பிரவேசம் செய்தார். "கால இயந்திரம் உடைந்து விட்டது" அவர் கிட்டத்தட்ட விம்மி அழுதார், " இந்த நிலையில் ஊர்சுலாவும் அமரந்தாவும் எங்கோ தூரத்தில் இருக்கிறார்கள்" ஒரு குழந்தை போல அவ்ரேலியானோ அவரை கடிந்து கொண்டார். அவரோ உடனே தவறுக்கு வருந்தியவர் போல மன்னிப்பு கேட்கத் தொடங்கினார். ஆறு மணி நேரம் பலவகை பொருட்களை மாற்றம் எதும் ஏற்பட்டுள்ளதாவென பரிசோதித்து தோற்றத்தில் முந்தின நாளிலிருந்து வேறுபட்ட விதமாய் இருக்குமென்ற நம்பிக்கையில் நேரம் கடந்துள்ளதா என அறியத் துடித்தார். அன்றிரவு முழுதும் படுக்கையில் கண் இமைக்காது விழித்து, புரொடன்ஷியோ ஆக்விலார் முதல் மெகியூவாடெஸ் வரை இறந்த யாவரையும் கூவியழைத்து தன் துயரத்தை பகிர்ந்து கொள்ள முயன்றார். ஆனால் யாருமே வரவில்லை. வெள்ளிக்கிழமை அன்று வேறுயாரும் எழும்முன் இயற்கையின் மாறுபாடுகளை உற்று கவனித்து சந்தேகம் துளியும் இன்றி அது திங்கட்கிழமை தான் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டார். பிரகுராசசவாத ஆய்வுக் கூடத்தின் கருவிகளை, நிழற்பட யந்திரத்தை இன்னும் வெள்ளிப் பட்டறை யாவற்றையும் கதவிலிருந்து ஒரு பெரும்

இரும்புக் கம்பியை பெயர்த்தெடுத்து தன்வழமையான பலத்தைவிட பெருமடங்கு பலத்தோடு தூள்தூளாய் உடைத்தெறியும் வேலையில் மும்முரமாய், புதிய உத்வேகம் பெற்றமனிதராக, மிகச்சரளமாக ஆனால் பரிவுணர்வை சற்றும் எட்டாத ஒரு புதிர் மொழியை உரத்தொலித்து பேசிய வண்ணம் இறங்கினார். கிட்டத்தட்ட வீடு முழுவதையுமே அவர் அவ்விதமாய் உடைத்து நொறுக்க எத்தனித்தபோது. அவ்ரெலியானோ அக்கம் பக்கத்தாரின் உதவியை நாடினார். அவரை செயலிழந்து தரையில் கிடத்த பத்து பேர் தேவைப்பட்டார்கள். பதினாலு பேர் கட்டிப்போடவும் இருபது பேர் அவரை தோட்டத்தின் செம்மலர் பூத்த ஒருமரத்திற்கு இழுத்துச் செல்லவும் தேவைப்பட்டார்கள். அங்கே புதிர்மொழி ஒன்றை மிகச் சரளமாய் கத்திக் கத்தி வாயில் பச்சை நுரை தள்ளிய அவரை மரத்தோடு சேர்த்து கட்டி அப்படியே விட்டு விட்டார்கள். ஊர்சுலாவும் அமரந்தாவும் திரும்பிவந்தபோதும் கைகால் யாவற்றையும் சேர்த்து மரத்தோடு கட்டப்பட்டவராயும் மழையில் ஊறிப்போனவராயும் அதே சமயம் அப்பாவியாகவும் அங்கே அவரிருப்பதை கண்டார்கள். ஆனால் அவருக்கு அவர்களை சுத்தமாக அடையாளம் தெரியவில்லை. அவர்கள் அவரிடம் பேசியபோது அவர்களால் புரிந்துகொள்ளவே முடியாதவற்றை பேசுபவராகவும் அவர் இருந்தார். கயிற்றின் பிடியில் சிராய்ப்புகளும் புண்ணுமாயிருந்த கையையும் முட்டியையும் மணிக்கட்டையும் ஊர்சுலா அவிழ்த்து இடுப்பில் மட்டும் கட்டியிருப்பவராக அவரை கட்டவிழ்ப்பு செய்தாள். பனை ஓலைகளாளான ஒரு மேல் உறையை அங்கேயே அவருக்காக வெயிலிருந்தும் மழையிலிருந்தும் அவரைக் காக்க அவர்கள் அமைத்தார்கள்.

தொடரும்...

ஒரு குளிர்காலத்தின் அதிகாலைப் போதுகளில்

நகுலனின்

எழுத்துக்களில் ஈடுபட்டது தீவிரமான ஆன்மிக யாத்திரையாய் போய்க் கொண்டிருந்தது. சுசீலாவையும், பீட்ரிஸையும், நவோமியையும் தேடுகையில், புல்லிதழ்களில் ஒளிரும் வெண்பனிப்புள்ளிகளும் பிரண்டைப் பூக்களின் மணிப் புள்ளிகளும் காணக்கிடைத்தது பாக்கியமே. நகுலனிலிருந்து பயணம் தொடங்கும் கோணங்கிக்காக...

சா. தேவதாஸ்

நகுலன் : முடியறாத தேடலும் சிறகடிப்பும்.

''... சிருஷ்டிநியதியில் எனக்கு நான் யார் என்பது தெரியாது என்பதனால், என் உருவம் எனக்கு புலப்பட, என் உலகம் எது என்று கண்டுபிடிக்க, எழுத்தை நாடுகிறேன்''

நகுலன் வேணை வந்துற்றபோது, கட்டுறையில்.

நாற்பதாண்டுகால எழுத்துலக இயக்கத்தில் நகுலனிடமிருந்து விதவிதமான பிரதிகள் கிடைத்துள்ளன. ஒரு பக்கம் வார்த்தை விளையாட்டுகளாய், இன்னொரு பக்கம் தீவிரமான விசாரமாய், வேறொரு பக்கம் ஆவேசமான உணர்வுத் தெறிப்பாய் பாய்ச்சல் கொள்பவை அப்பிரதிகள். பைத்தியங்களின் உறைவாய் தோற்றம் தரும் அதே வேளையில், பைத்தியங்களின் பீதி நிறைந்த சொரூபத்தை காட்டிவிடும் வல்லமையினையும் • பெற்றிருக்கும்; ப்ரூகலின், வான்காவின் தீவிரத்தீட்டுதல்களை ஒத்திருக்கும்.

இந்திய ஆன்மிக தத்துவ இழைகளை அடிக்கடித் தொற்றியபடி விசாரம் செய்யும் நகுலன், அதனை அப்படியே ஏற்றுக் கொள்கின்றாரா?

வேதாந்த உண்மைகளை எடுத்துரைக்கத்தான் அவரது இலக்கியப் பிரதிகள் உருவாக்கப்பட்டனவா?'நேதி', 'நேதி' என எதிர்மறையாய் முடிவுறும் தத்துவமரபிலிருந்து நகுலனின் திசை வழி எங்கே போகிறது?

தீவிர ஆன்மிகப் பிடிப்பு இருந்தபோதிலும் தெய்வத்தைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. இதன் காரணமாகவே பிரம்மத்துடன் சங்கமிப்பது பற்றிய வேட்கை இல்லாது போகிறது. தன்னை அறிவதான தேடலே எழுத்தில் அவரை ஈடுபடவைக்கிறது. இத்தேடலில் தன்னை அறிந்திட முடிந்ததா?

நகுலன்
சிறுகதைகள்

அன்பின் அர்த்தத்தையும் அர்த்தமின்மையினையும் உணர்த்தும் தாகூரின் 'போஸ்ட் மாஸ்டர்' கதையைப் பற்றிய பிரஸ்தாபத்துடன், அதே தலைப்பில் ஒரு சிறுகதை தொடங்குகிறது.

'காக்கை, குருவி எங்கள் ஜாதி' என்னும் பாரதியின் வரியைத் தலைப்பாக கொண்டு இன்னொரு கதை அமைகிறது.

புதுமைப்பித்தனது சிறுகதையின் தலைப்பாகவும் இந்தியத் தத்துவமரபில் அத்வைதத்தை உணர்த்தும் வாசகமான 'கயிற்றரவு' என்பதை தலைப்பாக கொண்டுள்ளது வேறொரு கதை.

தாகூரும், பாரதியும், புதுமைப்பித்தனும் மரபில் வேரூன்றி நின்று புதியஉலகங்களைக்காணப் புறப்பட்டவர்கள். மரபின் மறுபரிசீலனைகளை அவர்களிடம் காணலாம்.

நகுலனிடம் மரபு பற்றிய மறுபரிசீலனை இல்லை.

ராமகிருஷ்ணரிடமும் ரமணரிடமும் கிருஷ்ணமூர்த்தியினிடமும் மரியாதை கொண்டிருக்கும் நகுலன் 'சிறியன சிந்தியாது' உன்னதமாய் திகழ்ந்தவர்கள் என்று இவர்களை அடிக்கடி குறிப்பிடுவார்.

அவரது 'ஒருநாள்' ராமகிருஷ்ணரை மையமாக வைத்தே எழுதப்பட்டது. அவரது ஆசிரமத்திற்கு மூன்று வருடங்களாக வந்து போகும் கடைக்கார குமாஸ்தாவான தோதாபுரி, ஆசிரமத்தில் பூஜா காரியங்களில் உதவிக் கொண்டிருக்கும் தன் மகன் நவீனனை இறந்து போன தன் மனைவி சொற்படி மேற்படிப்பு படிக்கவைத்து நல்ல பதவியில் அமர்த்தி முன்னேற்ற வேண்டும் என்று விரும்புகிறார். இதற்காக, ராய் மஹாசயர் என்ற செல்வந்தரைப் பார்க்க ராமகிருஷ்ணருடன் போகிறார். மூன்று மணி நேரம் நிகழும் அச்சந்திப்பின் போது ராமகிருஷ்ணர் தியானத்தில் ஆழ்ந்திருப்பவராகவே தோன்றுகிறார்.
படித்து என்ன பயன்? நான் படித்தா முன்னேறினேன்? ராமகிருஷ்ணர் படித்தா ஞானியானார்? கல்கத்தாவில் இருக்கும் தாசி ரோஜாமணியின் காரியங்களை கவனிக்க நவீனன் இருக்கட்டும் என்றவாறு ராய் மஹாசயர் கூறிவிடுகிறார்.

மறுநாள் தட்சிணேசுவரத்தின் காளி கோயில் பூசாரியாக நவீனன் மாறியிருக்கிறான்.
இக்கதையில் மிகவும் அழகான இடம், ராமகிருஷ்ணரின் எதிர்வினை:

'... இந்த மூன்று வருஷங்களில் நீ என்னிடம் கற்றுக் கொண்டதைவிட, கற்றுக் கொள்ளத் தவறியதை, ராய் மஹாசயர் உனக்கு மூன்று மணி நேரத்தில் கற்றுக் கொடுத்திருப்பார். நாம் இருவரும் அவரை வணங்குவோம். இப்பொழுது நான் உன்னுடன் வந்ததின் தாத்பரியம் உனக்குப் புரிந்திருக்கும்.''

இக்கதையில் வரும் சிறுவன் பாத்திரத்தின் பெயரான 'நவீனன்' என்பது பின்னர் நகுலனின் இன்னொரு அகத்தை சுட்டும் பெயராக அமைகிறது.

'தங்கக்குடம்' என்னும் கதை படர்க்கையில் ஆசிரியரின் கதை சொல்லலில்
ரமணியைப்பற்றியும் அவளது தாயைப்பற்றியும் ஆரம்பிக்கிறது. பின்னர் அக்கதையில், ரமணியே சொல்லத் தொடங்கிவிடுகின்றாள். தன்னைப் பற்றிய குடும்பத்தைப்பற்றிய சுற்றியுள்ள உலகத்தைப்பற்றிய எண்ண ஓட்டம் இப்படிப் போகின்றது:

''எனக்கு வேறு ஒருவரையும் தெரியாவிட்டாலும் என் தங்கையைத் தெரியும். அப்படித் தான் நேற்றுவரையில் நினைத்துக் கொண்டிருந்தேன். போனவாரம் என்றுதான் சொல்லவேண்டும் போல் தோன்றுகிறது. அவளுக்குப் பவரறிய மணம் நடந்தது. அடுத்தவாரம் அவள் வருகிறாள். முதல் பிரசவத்திற்கு!

நேற்று, போனவாரம், அடுத்த வாரம் என்பதெல்லாம் கடந்த வருஷத்தில் நடந்தது தான். ஆனால் நினைவு என்னும் நதியில் நாம் முக்குளி இடுகையில் இன்றும் நாளையும் அகல, நேற்றும் சென்று கடந்த, மடிந்து மாய்ந்து மறையாத நாட்களும், வாரங்களும், மாதங்களும், வருஷங்களும் தானே மணமான பெண்களைப் போலப் பூரண எழிலுடன் நம் முன் வந்து நிற்கின்றன. யாரைப் பற்றி எழுதுகின்றேன்? கடந்துபோன நாட்களைப்பற்றியா? தங்கையைப்பற்றியா? அல்லது மாலதியைப்பற்றியா? அல்லது என்னைப்பற்றியேதானா?

'இவைகள் எல்லாவற்றையும் பற்றிதான். ஆனால் குறிப்பாக, சூட்சுமமாக நான் எழுதுவதெல்லாம் என்னைப்பற்றித்தான்.''

பூனைகளைப்பற்றி நாய்களைப்பற்றி நுட்பமாகப்பேசும் நகுலன் பறவைகளைபற்றி பேசும்போது குழந்தையின் மனநிலையில் பாடல்களைக் கட்டுகிறார். அவ்வாறு கட்டுவது எதற்கு? அப்பாடல்களுக்குள் சுசீலாவைக்வெளியிட முடியாத நிலையில் தத்தளிக்கின்றன' 'அனுபவத்தின் பிரத்தியட்ச நிலையிலிருந்து தப்பத்தான் மனிதன் தான் தோன்றிய காலந்தொட்டுத் தீர்த்த யாத்திரை செய்கிறான்.'

'.... இத்தகைய அர்த்தகர்ப்பமான கட்டங்களில் வார்த்தைகள் தலைகுனிகின்றன. வாக்கியங்கள் பின்னமடைகின்றன.'

'வாக்கியம் என்பதற்கே சொல் தமிழில் இல்லையென்றால், தமிழில் பல பிரத்தியட்சங்கள் தென்படுகின்றன என்பதுதான் என் அனுமானம்.'

'தத்துவ ஞானிகள் ஒன்றுக்கும் விடை சொல்வதில்லை.'

'சிப்பி' கதையில் தந்தை ஷிப்பி என்று சொல்வதை குழந்தை சிப்பி என்று

கருதி சிப்பியைப் பற்றி விவரிக்கின்றது. இந்த இடத்தில் கதை அடுத்த தளத்துக்குப் போய்விடுகிறது.

''இந்திரா அவனைப் பார்த்தாள். அவன் என்ன சொல்வான்? அவளைப் பார்க்கும் ஒவ்வொரு கணமும் அவன் ஒரு சிப்பியாகப் பரிமாணம் அடைகிறான் என்றால் அவள் என்ன சொல்வாள்.''

''திரை தள்ளும் சாகரத்தில் சிப்பியாகப் புரண்டு முத்துப் பெறுவதற்கு அது சகிக்கும் வேதனை.''உலகியல் தளத்தில் நிகழ்கின்ற நடவடிக்கையிலேயே அதனைத் தாண்டிய விகசிப்புகள் கிடைத்துவிடுகின்றன.

''அநாமதேயமாக இருப்பதில் பல செளகரியங்கள் இருக்கின்றன'' என்று 'ஆட்டோ' சிறுகதையின் ஆரம்பத்தில் தொடங்கும் நகுலன், ஆட்டோ டிரைவர் தன் எதிரில் அம்மாவின் படத்தை ஒட்டி வைத்திருப்பதும் நியாயமான கூலி பெற்றுக்கொள்வதும் ஆச்சரியம் அளிக்கவே, மனிதர்கள் ஆட்டோக்களாக மாறிக் கொண்டிருக்கும் நிலையில், ஆத்மா உள்ள ஒரு ஆட்டோவைக் கண்டது அவனுக்கு ஒரு மன நிறைவைக் கொடுத்தது என்று குறிப்பிடுவார். கூடவே போர்ஹேயின் வரி ஒன்றை ஞாபகப்படுத்திக் கொள்வார்: 'ஒரே பக்கம் உள்ள நாணயம் ஒரு இடத்திலும் இல்லை.'

''பேசுவதை விடக் கேட்பது, தன்னுள் இருப்பதை விட வெளியில் வந்து நிற்பது, உலகத்தையும் தெரிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம், தனியாக இருந்தாலும் ஏதோ ஒன்று வந்து தன்னை இணைக்கிறது அது?''

என்று விசாரம் நிகழ்கின்ற ''நிலக்கடலையும் பீடித்துண்டுகளும்'', சிறுகதையில் கிழவன் ஒருவன் தற்கொலை செய்து கொண்ட விபரீதம் இடம் பெறுகின்றது. அவன் இறந்து கிடந்த இடத்தில் பீடிகளும் நிலக்கடலை தோல்களும்

நகுலனின் நாவல்கள்

தமிழில் கதையைத் தவிர்த்துவிட்டு கதை எழுதியவர் என்று நகுலனைத்தான் கூற வேண்டும். அதிலும் யதார்த்தவாதத்தில் பாத்திர வார்ப்பு, சம்பவக் கோவை, பிரச்னைகளின் விவரிப்பு, கதைப்பின்னல் என்றவாறு நவீன தமிழ் எழுத்துலகம் போய்க் கொண்டிருந்த காலகட்டத்தில் புதிய வடிவத்தில் புதிய சொல்லாடல்களை நிகழ்த்தியவர். சமூகத்தைப் பாதிக்கின்ற / சமூகம் சார்ந்த சிக்கல்களை நேடியாகத் தொடாமல் சில நபர்களின் அக உலகங்களுக்குள்யாத்திரை செய்வதாக அமைந்தது நகுலன் எழுத்து. அதற்காக யதார்த்தப்பாணியிலான நாவல்களில் வரும் உளவியல் சித்திரிப்பில் இறங்குவதில்லை அவர்.

சாமி என்பவனின் கதையை படித்து விட்டு நவீனன் தன் அபிப்பிராயமாக, 'நிழல்களில்' இப்படி பதிவு செய்கிறான்.

'வாழ்க்கையின் வியர்வை நாற்றம் சொட்டி லேசான அழுகல் நாற்றம் வீசும் பிரஜைகளின் நடுவில் சிக்கி வதங்கினாலும் அவர்களிடமிருந்து வெளியே வந்து அவர்களையே பார்த்துக்கொண்டு நிற்கும் நிலை''.

பெரும்பாலும் பேச்சு நடையிலேயே எழுதுவது நகுலனின் தனிச்சிறப்பான பண்பு. இதனால் தீவிரமான எண்ண ஓட்டங்களில்கூட தனக்குள் தானே நிகழ்த்திக் கொள்ளும் உரையாடல்களாகி விடுகினன்றன. நகுலன் எழுத்து எப்பொழுதும் முடிவுகளை, தீர்வுகளை, விளக்கங்களை முன் வைப்பதில்லை. அவரது உரையாடல்கள் புதிர்களைப்போடுகின்றன, குழப்பங்களை முன் வைக்கின்றன. புதிர்களும் சிக்கல்களும் மர்மங்களும் கொண்டுள்ளதான வாழ்க்கையின் கதியை கள்ளங்கபடமற்றதான குழந்தையின் துணிவுடன் கண்டு நகைக்கின்றது; புதிர்களை விடுவித்துப் புதிய புதிர்களைப் போடுகின்றது: மர்மங்களை அவிழ்த்து, வேறு விசித்திரங்களை சேர்க்கிறது.

``சாமி ஐயங்கார், சகோதரி சாரதா, ஸ்டாலின் பக்தர், பராங்குச நாயுடு, ஆரோக்கியசாமி, ஏன், கேசவமாதன் கூட இவர்கள் பிரதியே. பிம்பங்கள் ஒன்றும் என் மனதில் யாதொரு கவனத்தையும் விளைவிக்கவில்லை. இந்த ராமசாமி ஐயங்கார் என்ற சாமி ஐயங்கார் என்பவர் மாத்திரம் என் உயிரை வதைக்கிறார்.

``நவீனா! நான் பிராம்மணன்; ஐயங்கார்ப்பையன். இதெல்லாம் அப்பொழுது என் ஞாபகத்திற்கு வந்தது. 20 வது நூற்றாண்டில் சரித்திர யுகத்தில் பிராம்மணன் சபிக்கப்பட்டவன் ஆகிவிட்டான். தன் சுயரூபத்தை மறந்துவிட்டு, 'ஏதோ ஒன்றின்பிரதிபலிப்பு' என்ற உணர்வு அடிப்படை யான தத்துவ உண்மை. அதற்கு எதிர்நிலையில் இருப்பது 'ஒரு ஸ்வரூபம்' இருப்பதாக உணர்வது. இந்தச் சிக்கலும் மோதலும் உராய்வும் தான் நகுலனின் சொல்லாடலின் தொடக்கங்கள். பிரதிபலிப்பு என்ற நிலையில் ஒரு ஜீவிக்கு முயன்று அடைய வேண்டியது ஏதுமில்லை. தனி சொரூபம் உண்டு என்று கொள்ளும்போது உருவாதல் நிகழும் / பரிணமித்தல் நிகழும். இந்தியாவின் தத்துவப் போக்குகளுக்குள்ளும் இந்தப் பிரிவினைகளும் வேறுவேறான போக்குகளும் நிலவினாலும், ஏகத்துவமாக்கும் சங்கரரின் அத்வைதம் சட்டாம்பிள்ளையாகிவிடும். மற்றவைகளை தலையில் குட்டி அமர்த்திவிடும்.

மேலோங்கி நிற்கும் அத்வைதம் வேதாந்த உண்மையினை நேதி,நேதி என்று விலக்கிக் கொண்டே போயிருக்கும். அது, இதுதான் பிரும்மம் என்று சுட்டிக்காட்டுவதில்லை. பிரம்மம் ஒன்று என நிறுவினாலும், எது

பிரம்மம் என்று அடையாளங் காட்டுவதில்லை. மாறாக, இது இல்லை, இது இல்லை என்று எதிர்மறையாக விளக்கிக் கொண்டே போகும்.

நகுலனின் இகர முதல்வியும் இதனைச் செய்கின்றாள். வேதாந்தத்தின் போக்கையும் இகர முதல்வியின் போக்கையும் ஒரிடத்தில் இணைத்துவிடுவது நகுலன் செய்யும் ரசமான விளையாட்டு.

> ''இன்மை பகரும்
> இகர முதல்விக்கு
> இந் ''நிழல்கள்''
> உண்மை பகரும்.?
> என்ற சமர்ப்பணத்தில் அதனைக் கோடி காட்டுவார்.

''வாக்குமூல''த்தில் மஞ்சள் வெள்ளைப் பூனை கடுவன் பூனை குறித்த சொல்லாடலிலும் இது தெறிக்கும்.

''அந்தப்பூனையை அதன் சுபாவம் அறிந்து அதை அதாக அறிந்து கொண்ட பிறகுதான் இந்தப் புரியுந்தன்மை ஏற்பட்டது.

...''இது மென்மை என்றால் அது கடினம் இது மிருது என்றால் அது முரடு. இவைகளுக்கிடையில் இருக்கும் உறவு.

...''இந்தப்பூனைகளுக்கு உள்ளது போல ஒருவிதப் பயமின்மை, ஒரு அலஷிய பாவம் எல்லாம் வேண்டும். எழுத்தாளனுக்குப் பாலும், புலாலும் அவசியம் என்று வைத்துக்கொள்''

இந்தச் சிக்கலை/பார்வையை காப்ஃகாவை வாசிக்கும்போதும் நகுலன் முன் வைக்கின்றார்;

''...காப்ஃகா கவர்ச்சிகரமாக இருந்தாலும் மனிதன் எப்பொழுதுமே ஒரு குற்ற உணர்ச்சியுடன் இருக்கிறான் என்பதை என்னால் ஏற்றுக்வாய்ப்புண்டு.
இந்தப்பார்வையும் அணுகுமுறையும் கலைஞனுக்கு இருந்தால் என்ன நிகழும் என்பதுதான் நகுலனிடம் நாம்காண்பது.

இப்பொழுதான இக்கணத்திலான அனுபவத்தில் மட்டும் கவனத்தை குவிப்பது மற்றவற்றையெல்லாம் விலக்கித்தள்ளிவிட்டு ஓடிக்கொண்டிருக்கும் நதியாக மனதை வைத்திருப்பது, அதில் நினைவுகள் என்றபாசி படியாது காப்பது இதுதான் ஜே. கிருஷ்ணமூர்த்தி முன்வைப்பது.

இக்கணத்தின் தீவிரத்தை / உக்கிரத்தை எதிர்கொள்ளத் தயங்குகையில் நினைவுகள் குமிழியிடுகின்றன, சற்று ஆறுதல் தருகின்றன.

இந்நிலைவிலகலில் நிகழின் கணம் இழக்கப்படுகிறது. இந்தப்போக்கில் சதா தப்பித்தலையும் திசைவிலகலையும் மனம் நாடத்தலைப்படுகிறது. மனதை அதன்போக்கில்விட்டால் என்ன கிடைக்கும்! '' நினைவுப்பாதை'' கிடைக்கும்.

'தத்துவார்த்தப்பிரச்சினைகள் எழுவதே மொழி தறிகெட்டுப் போவதால்தான், என்னும் விட்டி ஜென்ஸ்டீனின் வாசகத்தை நகுலன் மேற்கோள்காட்டுவார். ஆனால் அதில் ஒரு லாபமும் உண்டு. தறி கெட்டுப்போகும் மொழியை பதிவு செய்தால் அற்புதமானதும் அதிர்ச்சி தருவதுமான பிரதியாயிருக்கும் அது 'நினைவுப்பாதை.'

வாழ்க்கையைப்பற்றி ஒரு பரஸ்பரமான சர்ச்சை' செய்திட நாட்குறிப்பு வடிவத்தை தெரிவு செய்து கொண்டு 28.03.69 லிருந்து 14.04.70 வரை மனநோய் விடுதியிலிருந்தபோது உண்டான மன அவசங்களை உரைநடையும் கவிதையுமாக நகுலன் தந்திருப்பது ''நினைவுப்பாதை''

நாட்குறிப்பு என்பதால் அது உணர்வு பாவங்கள்
நீங்கிய அறிவார்த்தப் பதிவுகளாக நின்றுபோகவில்லை. நவீனன் நகுலனுடன் கொள்ளும் உரையாடலாக இருக்கிறது. வாசகனுடன் பேசுவதாக அமைகிறது. பேச்சமொழியில் போகிறது. கட்டற்ற நகையுணர்வில் தீவிரமான விசாரங்கள் நிகழ்த்தப்படுவது அலாதியான தன்மை பெற்று விடுகின்றன.

மொழியின் இறுக்கத்தை தவிர்க்க முடிந்ததும், உரையாடல் நிகழ்த்த முடிந்ததும், நகை உணர்வுடன் பேசமுடிந்ததும்தான், நகுலனால் புதுப்பிராந்தியங்களில் பயணிப்பதை சாத்தியமாக்கி இருக்கிறது. இந்தியதத்துவ விசாரத்தின் நிழலை மாத்திரம் பதிவு செய்திடாமல், சுயரூபம் கொண்ட சொல்லாடலைச் செய்ய முடிந்திருக்கிறது. திருமூலரிலிருந்து தாயுமானவரிலிருந்து பத்திரகிரியாரிடமிருந்து தொடங்கும் சிந்தனைகள் புலம்புதலை மட்டும், வேண்டுதலை மட்டும், பிரார்த்தனையைஇருக்கும என்னும் பொருளில் ஹெமிங்வே குறிப்பிட்ட 'For Paris is a movable Feast'-ஆக நகுலனுக்கு சுசீலாவின் நினைவு.

''நீ இருக்கும் இடம் பார்க்காமல் உன்னைப் பற்றிக்கூட நினைக்காமல், கண் சலிக்க, வாய் குவிய, மணம் வியக்க, நீ இருக்கும் அதே இடத்தில் நானும் இருக்கிறேன் என்ற ஒரு உபபோதமே என்னை உன்மத்தமாக எவ்வளவு நிமிஷங்கள் யுகாந்திர காலமாகக் கற்பூரம் கரைவதைப்போல நான் இருந்திருக்கிறேன். ஆனால காலந்தான் கற்பாந்தத் தத்துவத்தையும் சிறைப்படுத் திவிடுகிறது.''

இந்நினைவில் இன்னொன்று தட்டுப்படுகிறது. ஆண் தான் இழந்து போன / மறந்து போன இன்னொரு பாதியான பெண் அம்சத்தை தேடிக் கொள்ள வேண்டும் என்று.

"Some yogis can make both the penisand the testes disappear in the pubic area, so that the body has the appearance of that of a women"

என்னும் அவலானின் வரிகள் நகுலனை வெருட்டுகின்றன.

'இராமகிருஷ்ணர் கூட ஒரு காலகட்டத்தில் தன்னைப் பெண்ணாகப் பாவித்துப் பெண் போல் ஆடை அணிந்து கொண்டு நடை உடை பாவனையில் கூடப் பெண் போல் பழகினார் என்று சொல்கிறார்கள்'

என்பது இதப்படுத்துகிறது.

கலைஞன் என்ற நிலையில் இந்த உணர்வும் தேடலும் அவனை எங்கே கொண்டுபோய் சேர்க்கும்?

"... கலைஞனும் சிருஷ்டி விஷயத்தில் ஈடுபடுகையில் பால் வேற்றுமையிலிருந்து அகன்று நிற்கிறான். அப்பொழுது அவன் ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி அர்த்த நாரீசுவர வடிவைப் பெறுகிறான். கலைக்குப் பொருந்துவதுதான் வாழ்க்கைக்கு பொருந்தும். தான்இழந்த பாதியைதான் இங்கு பிறந்த துவேஷத்தால் நாம் தேடிக் கொண்டிருக்கிறோம்"

'நாம் எது ஆவோம் என்றிருக்கிறதோ அது நம்மைப் பின் தொடர்கிறது. அதன் பின் நாம் செல்கிறோம்? நகுலனைப்பின்தொடர்வது யார்? சுசீலா. சுசீலாவை நகுலன் பின் தொடர்வது எதற்கு? சுசீலாவாக.

ஒரு கட்டத்தில் சுசீலா கொல்லிப்பாவையாகி ஆட்டிவைப்பதுமுண்டு. வனப்புக் காட்டி வசீகரித்து மயக்கி உருவழித்து விடுபவள் தானே கொல்லிப்பாவை. அழித்து விடுபவள் கொல்லிப்பாவையா? தன்னில் கரைத்துவிடுபவள் கொல்லிப்பாவையா? அழித்தல் வேறு, கரைத்தல் வேறா?

"மறுகணம்
காலங்கண்டு நகைக்கும்
நிகழும் நிமிஷம் போல்
உயிர் வெளவி
உயிர்காக்கும்
யாதுமறியாப் பேதை போல்
யான்போற்றும்
கொல்லிப்பாவையாய்
தன்மை பொலியத் தன்னுருவாய்
நீ நிற்பாய்;
அதுகண்ட நெஞ்சம்

பறை கொட்ட
நின்முன் மீண்டும் மீண்டும்
வந்தேன்; வகை செய்யப்பட்டேன்''

இது மட்டுமில்லை. பால்பேதமுற்று அவஸ்தை கொண்டு மன்றாடுதல் நிகழ்தலும் நடக்கின்றது;

''...நாக்கடித்து
வாய்யப்பறை கொட்டி
வேதாந்தக் கயிறு திரித்துக்
குறிதான் ஏதுமின்றி
ஆண்மை தோற்று
பேடியனெப்பால் திரிந்து,
அவள் உருக் கண்டு
உள்ளங் குலைந்து
உரம் வேண்டி
வந்து போகும் அர்ச்சுனன் நான்''

இன்னும் சொல்லிவிட்ட நிறைவு உண்டாகவில்லை. யூங்கின் வாசகம்பொறி தட்டுகிறது.

''அவள் கட்டுக்கடங்காத ஜீவப் பிரளயம்; மோகினிப் பிசாசு; வாழ்விக்க வந்த பிராட்டி; தவிர மனிதனைக் காதல் சாதல் என்ற இரு உச்சங்களுடனே இழுத்துச் செல்லும் வேகம்; கிரியா சக்தி; பிரளயத்தின் ரூப சத்தியம்''

நினைவுப் பாதையின் 5 வது அத்தியாயம் முழுவதும் நனவுமனதின் பங்கில்லாது முற்றிலும் நனவிலிமனத்தின் விகசிப்பாய் இருப்பது; 10.4.70 லிருந்து 14.4.70 வரையிலுமான இறுதி 5 நாட்களிலான குறிப்புகளைக் கொண்டது.

கடுமையான கேலி கிண்டலாயிருக்கும். கன்னாபின்னாவென்று போகும். எதையும் ஒன்றுமில்லாததாக்கிவிடும். உற்றார்-உறவினர், வேண்டியவர் வேண்டாதவர், பெரியவர்-சிறியவர் நண்பர்-விரோதி எவரும் விலக்கப்படவில்லை. எல்லாருமே இப்போனா வரைதலுக்கு ஆளாகி ஒன்றுமில்லாது போகின்றனர் இது, தன்னை ஒன்றுமில்லாதாக்கிக் கொள்ளும் நடவடிக்கையா...! அகத்தின் சுவடு கூட இல்லாது போவதற்கான சாதகமா?

எந்த தர்க்க விதிகளுக்கும் கட்டுப்படாது எந்த நியதிகளுக்கும் அடங்காது. எல்லாமாண்டு போகின்றன. அக்கோடையில் நாங்கள் அங்கே துயின்றோம். அவற்றின் பிரகாசமான பரிமாணங்களில் எமது உடல்களால்

புணர்ந்தோம். மூச்சிறைக்கும் நட்சத்திர மீன்களால் வளைக்கப்பட்ட நாங்கள் எங்களை உருவாக்க இணைந்தோம். எம் அவயங்களிலிருந்து சொட்டிய வியர்வைத்துளிகளை இரவெல்லாம் உறிஞ்சி, அவை உயிர்த்திருந்தன. அடிக்கடி அவள் கூச்சலிட்டாள்; உனது கரம்! எனது அக்னியுடன் அவளைத் தழுவுகின்ற ஒரு நட்சத்திர மீன் அது'' என்பார்.

மனதை புலன்களை முற்றிலும் ஒழுங்கு பிசகச் செய்தால் தான் கவிதை சாத்தியம் என்று இயங்கிய ஃப்ரெஞ்சுக்கவி ரிம்பாவை நகுனுக்கு அருகில் கொண்டுவர முடியும்.

சிறுவயதிலிருந்து தனித்து வளர்ந்து அனுபூதியாளர்களின் நம்பிக்கைகளுக்கு நெருக்கமான எண்ணங்களைக் கொண்டிருந்த ரிம்பா இடைக்காலத்து ரசவாதிகளை வீரர்களாக கருதியிருந்தார். ``நான் என்பது இன்னொரு நபர்'' என்று அவரது 15வது வயதில் குறிப்பிட்டிருந்தார். கவிதை உருவாக்கத்தை ஆன்மிக வளர்ச்சியாகக் கொண்டிருந்தவர். மதத்தை இழிவுபடுத்தினார். வீட்டிலிருந்து ஓடிச்சென்று தன்பால் புணர்ச்சியாளர்களுக்கு இரையானார். பால் வேர்லைன் என்பவர் மட்டுமே அவருக்கு நெருக்கமாயிருந்தார். இருபால் புணர்ச்சியாளரான வேர்லைன்தான், ரிம்பாவின் நெருக்கடியான காலகட்டங்களில் ஆறுதலாய் இருந்திருக்கிறார். வழிநடத்திச் சென்றிருக்கிற ார். ஒரு கட்டத்தில் ரிம்பாவை நீங்கிச் சென்று விடுகிறார் வேர்லைன். அவரைப் பின்தொடர்ந்து ரிம்பா வந்தபோது, ரிம்பாவைச் சுட்டுக் காயப்படுத்தியிருக்கிறார். அதிலிருந்து தன்வீட்டில் தனி அறையில் உணவினைக்கூட மறுதலித்து, கூச்சலிட்டும், குழம்பியும், எழுதியும் தீவிர கணங்களில் வாசம் செய்கிறார். மறுபடியும் வீட்டிலிருந்து ஓடிச் செல்கிற ார். அபிசீனியாவில் வர்த்தகராயிருக்கிறார். 37 வயதில் இறந்து போகும் ரிம்பா, 19 வயது வரைதான் கவிதை, எழுதினார் என்பது இன்னொரு புதிர்மிகு விஷயம்..

``ஆசிப்பெண்ணே
ரோசாப்பூவே
ராத்திரி வெயிலடிக்கும்
பகல்லெ பைத்தியம் பிடிக்கும்...''

``வா வா ஜகஜண்டி மாடே
மரத்துக்கு மரம் ஏறும் சம்மந்திக் குரங்கே
ஆனை புகுந்ததாம் தோப்பிலே
அழுகப் பழுத்ததாம் மாம்பழம்
குதிரை புகுந்ததாம் தோப்பிலே
குலுங்கப் பழுத்ததாம் மாம்பழம்
கித்தானைக் குட்டிக்கு கொம்பு முளைச்சுதாம்
பட்டணமெல்லாம் சுத்தி சுத்தி வந்ததாம்
கையில் வெண்ணெய் சிந்திற்றோ

அடங்காத வெறி
கரையிரண்டும்
மணலென்று
கண்டால்
எல்லாம் வெட்டவெளி.''

''எழுத எழுத எழுத்து அழிகிறது. வாசிக்க வாசிக்க வாசகன் தொலைகிறான்''
தத்துவார்த்த சொல்லாடலே எழுத்தாக்க சொல்லாடலையும் விரிவு கொள்கிறது. இல்லாது போதலும் அழிதலும் சூன்யமாதலும் எழுத்திலும் வாசிப்பிலும் காணக்கூடியதாக உள்ளது.

தத்துவார்த்த உலகின் அக்கறைகளையெல்லாம் கலை உலகின் பிரச்னைப்பாடுகளாக மாற்றிக் கொள்வதும் கலைஞனாக நின்று தத்துவார்த்த சிக்கல்களை அணுகுவதும், அப்போது சித்தாந்தங்கள் விடைபெற்றுப் பிரிந்து கொள்ள, சித்தர் மொழியில் திருமூலர் மொழியில் சிவவாக்கியர் மொழியில், தாயுமானவர் மொழியில், அனுபூதிக் கவிதைகளும் மிகை யதார்த்தப்படிமங்களும் நனவிலி மனத்தின் சிதறல்களும் பிரக்ஞையோட்டத்தின் தெறிப்புகளும் பிரதிகளாக வந்து கொண்டிருக்கின்றன.

''...எனக்கு கோவிலில் ஒருவருமில்லாத சமயத்தில் புகுந்து கிரிகையில் என் வயது கற்பாந்த காலம் சென்ற பிரமை என் அம்மையின் ஸ்தனங்களின் ரூபமும் ஆண்டவன் குறியும் என்னுள் ஒரு பவித்திர உணர்ச்சியை விளைவிக்கின்றன?''

என்பது போன்ற அபூர்வமானதும் அதிர்ச்சியூட்டுவதுமான தொன்மக்கவி வரைதல் அப்போது சாத்தியமாகிறது.
நுட்பமான கவித் தெறிப்பும் உக்கிரமான பிரக்ஞைப் போக்குமுள்ள ஒருவரின், மரபை எதிர் கொள்ளும்போது சூக்கும நிலையிலான அனுபூதிக்குப்பதிலாக புலனின்பம் சார்ந்த ஒருவித திளைப்பை பவித்திரத்துடன் அனுபவித்தல் நிகழ்கிறது. விக்ரமாதித்யன் கவிதைகளில் அங்கங்கே இத் தெறிப்பு பளிச்சிடும்.

''நாய்கள்'' நாவலில் ஒர் இடம்:

''தானாகவும், பாத்திரமாகவும், எழுத்தாகவும் இழுத்துச்செல்லும் ஒரு வேகத்தின் பாதியாகவும், கண்டதையும் காணாததையும், பார்த்த மனிதர்களையும் பார்க்காத தெய்வங்களையும், கிடைத்த அனுபவங்களையும் தனியாக வந்து சேர்ந்த ஞானங்களையும் அதையுப் இதையும் எதை எழுதுகின்றோம் என்று தெரியாமலேயே எதை எதையெல்லாமோ எழுதிச்

கொண்டிருந்தான்...''

எழுத்தின் தீவிரமான ஒருமுகத்தை அடையாளம்காட்டுவதுபோல ஒரு குறிப்பு அதே நாவலில் இடம் பெறும்;
''...அவனுக்கு எழுதுவது என்பதே எதை எழுதாமல் விட்டோம் என்பதைக் காண்பிப்பதற்கே.''

அறிந்ததன் மூலம் அறியாததை அறிவது மாதிரி. நகுலனுக்கு எழுத்து என்பதே ஒருவித தத்துவார்த்த தளத்திலான போதமாகிவிடுகிறது. ''எழுத எழுத ஏன் எழுத்துக்கரையமாட்டேன் என்கிறது'' என்னும் கவலை பிறக்கிறது. மொழி இல்லாத தான ஒருநிலையை தாயுமானவர் பாடல்களில் காணக்கூடும் என்று தமிழவன் குறிப்பிடுவார். இறையுணர்வில் கரையும் தாயுமானவரால் மொழியைக் கரைந்து போகச் செய்ய முடிந்திருக்கிறது.

உள் முக யாத்திரை செய்து செய்து நகுலன் தான் கண்டது என்ன என்பதை விவரிக்கிறார்;

''மனம் என்பதே ஒரு ஆழம் காண முடியாத குப்பைக் கூடைதானே? கொட்டிக் கவிழ்க்கக் கவிழ்க்க குப்பை கூடிக் கொண்டு தானே இருக்கின்றது? இந்தக் குப்பையிலே சில உயர்வகையானவை என்றாலும் அவையும் குப்பை தான்''.
எழுத்துப்பற்றி ஹெர்மன் ஹெஸ் சொன்னதை நினைவு கூர்ந்து கொள்கிறார்.

''நம்மை எழுத வைப்பதெல்லாம் நம் வீட்டைப்
பற்றிய ஞாபகம் தான்''.

இழந்து போனதும் மறந்து போனதுமான ஒன்றை நினைவில் மீட்டிப்பார்க்கும் காரியமே எழுத்தாகிறது. அப்படியே எழுதி விடலாகாது என்னும் எச்சரிக்கை குறிப்பையும் முன் வைக்கிறார் நகுலன்

'' எழுத்து விஷயத்தில் அர்த்தம் பூஜ்யமாவதில் தான் அர்த்தம் உருவாகிறது என்று : இது எழுத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் பொருந்தும் வார்த்தை, வார்த்தைச் சேர்க்கை, அந்தச் சேர்க்கைகளின் முழுரூபம் ஒன்றிலும் நாம் கண்டு பழகி களைத்துப்போன உருவங்களைப் பார்க்ககூடாது. நிறைய, நிறைய எழுதி, எழுதி, எழுதவேண்டும்வதை எழுதாமல் விட்டு விட வேண்டும்'' தென்படுவதை வைத்து தோற்றத்தைக் கண்டு மனப் பதிவுகளின் அடிப்படையில் எழுதுகிறோம், பேசுகிறோம்.

வார்த்தைக்கூட்டங்கள் என்னும் குறிகள் மூலம் அர்த்தத்தை தொடர்புபடுத்த விழைகிறோம்.

கேட்பவன் / வாசகன் தன் பார்வைக்கேற்ப ஒன்றை பெற்றுக் கொள்கிறான்.

இந்நிகழ்வில் தோற்றம் ஒன்றாயும் அதன் பின்னுள்ள நிஜம் வேறொன்றாயும் இருக்கலாம். தோற்றத்தை வைத்து உண்டான மனப்பதிவுகள்பிடித்தவர்களை வேறு பெயர்களில் இடம்பெறச் செய்யும் நகுலன், பிடிக்காதவர்களை அவர்தம் புனைபெயர்களிலே தந்து விடுவது சுவாரஸ்யமானது.

''...இந்த ஒத்தரை ஒத்தர் பார்க்கிற விஷயம், இந்த ஒத்தர் ஒத்தரோட பேசற விஷயம் இதில் எல்லாமே அடிலெஒடறது என்னன்னா நமக்கு நம்மோடயே பேச முடியாதங்கறதுதான் என் உள்ளே இருக்கிறது வெளிலே வர்றதுக்கும் உன் உள்ளே இருக்கிறது வெளியே வர்றதுக்கும் உன் உள்ளே இருக்கிறது வெளியே வர்றதுக்கும் நாம்ப ஒத்தரை ஒத்தர் பாக்கர மாதிரியும், பேசற மாதிரியும், உள்ள பாவனையிலெ இறங்க வேண்டியிருக்கே...''

பேசுவது போலவே எழுதினால் தான் சிந்தனைப் போக்கை அப்படியே தருவதாக அமையும் என்று எண்ணுகின்ற நகுலன் தன் எழுத்தின் பெரும்பகுதியை அப்படியே எழுதிப்பார்த்திருக்கிறார். இதுதான் எழுத்தில் அவரது விசுவாசத்தையும் தீவிரத்தையும் அறிந்து கொள்ள உதவுவது. இந்தப்பேச்சு தனிமொழியில் உச்சத்தை அடையும்போது அடிமனத்தின் எழுத்தாகிவிடும். அதனைத் தாண்டிய பயணம் கவிதை உலகிற்குள் கொண்டு சேர்க்கும். அங்கே தாயுமானவர், பத்திரகிரியார் திருமூலர் வழிவந்த தமிழ் ஙளங்காட்டும். தன்னை அந்நியனாக, அநாமதேயமாக, பறையனாக உணர்ந்து கொள்ளும். சுசீலாவைத் தேடும். பரவசத்தைப்பாடும். மலர்களோடும் நட்சத்திரங்களோடும் குழந்தைகளோடும், விருட்சங்களோடும், கிளிகளோடும் உரையாடும், ஒன்றிப் போகும்.

எல்லாவற்றினின்றும் விலகி வெறுபட்டு சோதியில் ஒன்றிவிடப்பட்ட பயணம் திசை மாறி அலைந்து திரிந்து புறப்பட்ட புள்ளிக்கு வந்து சேரும். இப்போது அந்த ஜீவி அந்நியமானதல்ல, அநாமதேயமல்ல. அது இந்தப் பிரகிருதியுடன் இணக்கம் காண்பது. இந்த உறவில் களிப்படைவது. ஏனெனில் அது உருமாற்றமடைந்து விட்டது. அது ஒளியால் குதூகலத்தால் பாடலால் ஆன ஜீவியாகும்.

தத்துவஞானியும் கலைஞனும் எப்படி வேறுபடுகின்றனர்? என்பதை 'ரோகிகள்' நாவலில் ஒரிடத்தில் விவாதிக்கிறார்;

'தத்துவஞானி தன் அடிப்படை ஸ்தானத்திலிருந்து நகராமல் எல்லாவற்றையும் பாகுபாடு செய்கிறான்; கலைஞன் ஸ்தானத்தை மாற்றி வித விதமாகப்

பாகுபாடு செய்கிறான்'.

'யாத்திரை' குறுநாவலில் அச்சுதன் என்னும் நாய்க்கும், நவீனனுக்குமிடையே உறவு அசாதாரணமாக இருக்கிறது.

நாய்களும், பூனைகளும், பறவைகளுமான உலகில் நகுலனின் கதை சொல்லிகளால்

நகுலனின் கவிதைகள்

சிறுகதைகயையும் நாவல்களையும் எழுதும்போது தேகத்துடனான ஜீவி என்ற நிலையிலேயே எழுதவேண்டிய நிர்ப்பந்தம். தேகம் என்றால் நிழல் பரப்பும். நிழல் கவிகையில், பின்தொடர்கையில் ஜீவி முற்றிலும் தனித்திருக்க முடிவதில்லை. அறுதியாயும் இறுதியாயும் தனிமைப்பட்டாலொழிய நித்திய சொரூபியை தரிசிக்க முடியாது. அதற்கு கவிதைகளே காரணமாகும். அப்போது அடர்கருப்பில் பதுங்கியிருக்கும் நித்திய சாபத்தையும் தழுவிக்கொள்ள நேரலாம். அச்சத்தை ஊட்டுவதான இத் தனிமைப் பயணத்தில் தன் பெயரையும் மறந்து போய்விடலாம். தேகத்தை கோட்ஸ்டாண்டில் நிரந்தரமாக தொங்கவிட்டுப் போய்விடலாம். என்றாலும் பூர்வ வாசனை முற்றிலும் போய்விடாது சற்று ஒட்டியிருப்பதால், மீண்டும் நிழலைத் தேடும் சபலம் வாய்க்கும். அது ஒரு சில சந்தர்ப்பங்களே. தீவிரப்பயணம் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். இங்கே இலக்கை விட பயணம் பிரதானமானது. கவனம் குவிக்கத்தக்கது, லயிக்கத்தக்கது. கனவுகளில் கரையலாம். தீக்கனவுகளில் அலைவுறலாம். இருந்தாலும் என்ன? சதா ஓயாது ஒழியாது அலைகளை வாரியிறைத்துக் கொண்டிருக்கும் கடலோரமாய் நிற்கக் கொடுத்துவைத்தால் போதும். இருண்ட அலைகள்மோதி மோதி வெண்நுரைத்துகள்களாய் சிதறி கரைந்து இல்லாது போகும். கடற்காகங்கள் அங்கங்கே சப்திக்கும். தொலைவில் கட்டுமரங்கள் அசைந்தாடி வருவது தெரியும். வெண் நுரைகள் கரையோர மணலில் படிந்து சித்திரம் வரைந்துவிடும். அங்கங்கே கிளிஞ்சல்கள் பொலிந்து கிடக்கும். இவற்றில் ஆழ்ந்திருக்கையில் கனவாய் எழும் நிலவு.

பயணம் நிகழாத தருணங்களில், வீட்டிலிருக்கையில் நிகழ்வது தீக்கனவும் மிகை யதார்த்த படிமமும் ஒன்று கலந்திட்ட அனுபவம்:

> ... அருகில்
> தரையில்
> ஒரு பாம்பு
> சுருண்டு கிடக்கிறது

காலம் கண்ணாடியாகக் கரைகிறது
ஒரு நதியாக ஒரு ஜலப்ரளயமாகச்
சுழித்துச் செல்லுகிறது
விறைந்த கண்களுடன்

பாரசீகத்து சூஃபிக் கவிஞர் ஒருவர் இன்னொரு வகையில் இச் சொல்லாடலைத் தருகிறார்;

'பிரியமானவளின் இடத்துக்கு வந்து கதவு மூடியிருக்கக் கண்டேன்; கதவை நான் தட்டவும் 'யாரது?' என்னும் குரல் உள்ளிருந்து கேட்டது. 'நான், என்றேன். கதவு திறக்கவில்லை. இரண்டாவது முறை அங்கு வந்து கதவைத்தட்டிய போது 'யாரது என்னும் குரல் உள்ளிருந்து வந்தது.' நான் இன்னார்' என்றேன். கதவு திறக்கவில்லை. மூன்றாவது முறையாக அங்கு வந்து தட்டியபோது 'யாரது?' என்ற அதே குரல் கேட்டது. 'என் அன்பே நான் நீ தான்' என்றேன். கதவு திறந்தது.

''எறும்பும்
கழுகும்
எனது இலைகளும்
பறவைகளுமாக
நான்
கனவு காண்பேன்
விறகு வெட்டி!
என் நிழலை வெட்டு;
எனக்கு
நானே ஒரு மலடியாகப் போகும்
நிலைமையைப் பார்த்துக் கொண்டிருக்கும்
அவஸ்தையிலிருந்து
என்னை விடுவி''

வாத்ஸல்யமிக்கதாய், சித்தம் பேதலித்த தந்தை, பாசமிகு தங்கையர், தம்பி, தம்பி பிள்ளைகள் என்னும் நெகிழ்ச்சி தரும் பந்தங்களிலிருந்து விலகி,

உலக நடவடிக்கைகளிலிருந்து தன்னைக் கத்தரித்துக்கொண்டு,

அடிமன ஆழங்களுக்குள் யாத்திரை போவது எளிதான காரியமல்ல. நிக்கலவுகளைத் தாண்டிப் போனால் படைப்பியக்கமற்ற ரூபியாக சிருஷ்டிக்க இயலாத மாதாக ஆகி விட்ட அவலம். இதற்கா இந்த யாத்திரை, இந்த அவஸ்தை.

தரிசனம் வேண்டி, தரிசனம் கிடைத்ததும் அகத்தின் விகசிப்பில் யாத்தரையும் பிரகிருதியையும் ஒரேசேர வாரி எடுத்துக் கொள்ள வேண்டும், ஒளி வெள்ளம் பாய்ச்ச வேண்டும், குழந்தைகளுக்கும் விருட்சங்களுக்கும்.

நட்சத்திரங்களுக்குமான ஓர் புவிப்பரப்பை நிர்மாணிக்க வேண்டும் என்பதல்லவா வேட்கை நோக்கம்.

> ''ராத்திரியில்
> ஒவ்வொரு நட்சத்திரமும்
> என்னை பிரசவிக்கிறது''

என்று கண்டு கொள்ளும்

> " I will gather
> the tharns
> you can
> take the Rose "

தான் முட்களை எடுத்துக் கொண்டு, அவனை/ அவளை மலரினை எடுத்துக்கொள்ளுமாறு எப்படி அனுமதிக்கமுடிகின்றது?

மலர் வேண்டும் என்று தானே புறப்பட்டது! முட்களுடன் நின்றுவிட்டால் என்னாவது? முட்களாவது கிடைத்ததே என்னும் ஆசுவாசமா? மலர் கிடைக்காது போனால் என்னாவது என்னும் பீதியா? முள்தானே மலராகும் என்ற நம்பிக்கையா? முள்வேறு மலர்வேறு என்ற பேதமற்ற உணர்வா?

'பிறப்பினை விட்டுச் சென்றால் எதிர்நோக்க வேண்டியது சாவினைத்தானே' என்னும் போதமா? 'ஜமாய்க்காவுக்கு கிளம்பினேன், அண்டார்டிகா வந்தடைந்தேன், என்பது பரிகாசமா முரன்சுவையா?

> ''One said:
> The cat has its claws
> The rat has its teeth
> Even the bird has its beak
> What have you?
> The other said :
> Flash wedded to the mind
> subject to the school of suffering and survival ''

பூனையின் நகங்கள், எலியின் பற்கள், பறவையின் அலகு போல, இருத்தலுக்கும் அவஸ்தைக்கும் கட்டுப்பட்ட நிலையில் மனத்துடன் பிணைக்கப்பட்டுள்ள தசைக்கோளம் இருப்பதை எப்படிக்கொள்வது? இது வரமா சாபமா?

தொகுப்பிலுள்ள பதினைந்தாம் இலக்கமிடப்பட்ட கவிதையில், வீட்டுக்குள்

ஒரு பறவை வந்து அங்குமிங்குமாக திரிகையில் வீடு வாசல் சாளரம் அறைகள் எல்லாம் இல்லாதுபோய் கவிந்த வானின் கீழேயான காற்று மட்டுமே காணக் கிடைக்கிறது.

''கவிதை உட்செவியில் எப்பொழுதும் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்க வேண்டும்'' என்று கருதும் நகுலனின் கவிதைகள் பிரக்ஞைப் பரப்பில் உண்டு பண்ணும் சலனங்கள் பதிவுகள் அனந்தம்.

வினாக்களுக்கு விடை தேட முனைகின்றார். ஏற்கனவே உள்ள வினாக்கள் போதாதென்று புதிதாய் வினாக்கள் எழ வைக்கிறார். புதிர்கள் விடுபடவில்லை. மர்மம் போகவில்லை. மாயம் அவிழவில்லை. வினாக்கள் பெருகுகின்றன.

உறவுகளிலிருந்து விலகி நிற்க முயன்று, பற்றற்று

நகுலனின் பிறபடைப்புகள்

இராமயணத்தை நகுலன் மறுவாசிப்பு செய்யும் போது எதிரும் புதிருமான விஷயங்களை பரிசீலிக்கிறார். சாதகம் புரிவது, யோகத்தில் ஆழ்வது, தன்னை அறிவது என்பதான வேதியர் போக்குக்கு மாறான, வேறான வழிமுறைகளைக் கண்டு அதிசயிக்கிறார். ஒருவர் கதைக்கு எதிர்கதை போடப்படுவதைப் பார்த்து பரவசப்படுகிறார். சபரியையும் கும்பகர்ணனையும், இராவணனையும், விராதனையும், குகனையும் பேசவைத்துக் கேட்கிறார்.

சதா நகுலனும் நவீனனும் பேசிக் கொண்டிருந்தது நிறுத்தப்பட்டு, வேறு குரல்கள் ஒலிக்கப்படுகின்றன. வேறு அணுகுமுறையில் புரிதல் உண்டாகிறது.

''அடிப்படையில் நான் ஒரு அரக்கன். நிழல்கள் எனக்குத் தேவையில்லை. ஸ்தூலத்தைச் சூக்சுமமாக்கும் வித்தையை நாங்கள் வெறுக்கிறோம். ... ரத்தமும் சதையுமாகத்தான் நாங்கள் இந்த உலகைத் தர்சிக்கிறோம் ஸ்பர்சிக்கிறோம் சுவைக்கிறோம், உணர்கிறோம். தலைவிரித்துக் கொண்டு நிற்கும் மரங்கள், சிறகிரண்டையும் விரித்துக் கொண்டு அந்தரத்தில்அம்மணமாகப் பறக்கும் பறவைகள், நிலத்தை ஈரம்பண்ணிக் கொண்டு ஓடும் நதிகள் இவைகளெல்லாம் எங்கள் தீராத தாகத்தைத்தூண்டிவிடுகிறது''.

என்று விடணனிடம் பேசும் கும்பகர்ணன், ''சீதையைக் கண்டு மோகமுற அண்ணன் மிகவும் புண்யம் செய்திருக்க வேண்டும்!''

என்றுகூட அதிர்ச்சி தரும் வகையில் குறிப்பிடுவான். எல்லாம் மாயை என்று ஒதுக்குவதற்கு, புறக்கணிப்பதற்கு மாற்றாக இந்நிலைப்பாட்டை முன் வைக்கிறான் நகுலனின் கும்பகர்ணன்.

மதங்கரும் சீடரும் வேதங்கள் கற்று யோகங்கள் பயின்று தவங்கள் இயற்றியும் இராமனைத் தரிசிக்கும் முன்பே மடிந்து போக நேர்கிறது. அவர்களுடனிருந்து சபரி என்னும் வேட்டுவப் பெண்ணை இராமன் தேடி வந்து தரிசனம் தருகின்றான். கற்றறிந்த யோகியர் தேடிச் சென்றும் தரிசனம் கிடைக்காது நடைப்பிணமாக தவிக்கையில், சபரியைத்தேடிவருகிறான் இராமன்.

மதங்கர் வேதம் ஓதியதையும் புலன்கள் மயங்கிய நிலையில் நூலெழுதியதையும் யோக நிலையில் அருபமானதையும் பார்த்த அளவில்தன் மனத்தை

''நிச்சலனம்,
ஓமகுண்டம்,
புண்யதீர்த்தம்''

ஆக்கிக் கொண்டதுதான் சபரியின் மாட்சிமை.

''தான் தனியாகத்
தன் மயமாக''

இருக்கக் கற்றுக் கொண்டது தான் சபரியின் பக்குவம். சபரியின் நிலை மட்டுமல்ல, எழுதுவதும் அத்தகைய காரியம் தான் என்கிறார் நகுலன். ''எழுதுவது என்பதுகூட என்னுடன் இருப்பதற்கு நான் காத்திருப்பது என்பது தான் என்பதை நான் கண்டு கொண்டேன்.நமது பிரக்ஞை இயல்பாகவே ஒரு அரைவட்டம்: அது முழு வட்டமாக ஆவதற்கு இந்தக் காத்திருத்தல் ஒரு தத்துவம் ..'

சாபத்தால் அரக்கனாய்ப் பிறந்த விராதன், சீதையைக் கவர முற்படும் போது இராம, இலக்குவரால் வீழ்த்தப்படும் போது இப்படி உரைக்கின்றான்:

''சற்று முன்னர்
என்னை நானென்று அறிந்த நானும்
இவ்வமயம்
நானறிந்த நானும்
வேறொருவன் என்றுணர்வது ஏனோ?
ஐயனே!
யார் யாரென்று யாரறிவார்?

... என்னை நான் காண
நின்னுருவம் தேவை ...?

தன்னையே அழித்துக்கொள்வதில் ஆனந்தம் கொண்டு நிற்கையில் பிரம்மம் இடைவெளியில் நின்று பிரகாசிக்கிறது. இதனால் தான் இவரது அரக்கர்கள் ஸ்தானத்தைச் சூக்குமமயமாக்கும் வித்தையை எதிர்க்கிறார்கள். 'ரத்தமும் சதையுமாக இந்த உலகை நேசிப்பது இவர்களுக்கு இஷ்டம்''.

என்று ப. கிருஷ்ணசாமியும் அரக்கர்கள்பால் நகுலன் கொண்ட ஈடுபாட்டை விவரிப்பார்.

V

நகுலனின் எழுத்து ஒரு கருத்திழையை வளர்த்தெடுத்து உச்சத்திற்கு கொண்டுபோகும் வகையினது இல்லை. பாத்திரங்களை உருவாக்கி சம்பவங்கள் மூலம் நகர்த்திச் செல்வது இல்லை. கதை சொல்வதில்லை. கருத்தியல் சார்புகளை வாதப் பிரதிவாதம் செய்வதில்லை. ஒரு நிலைப்பாட்டை ஆதரித்து இன்னொன்றை மறுதலிப்பதில்லை. மையக்கருத்து ஒன்றைஇருவருமே தங்கள் உலகில் ஏகாதிபத்தியச் சக்கரவர்த்திகள்'' என்று நகுலனே சாட்சியம் அளிக்கிறார்.

''நவீனன் டயரி'' யில் 3.10.73 நாளின் நாட்குறிப்பாகத் தருவதிலும் இதனைக் காணலாம்''

''நேற்று அடியோடியுடன் இலக்கியத்தைப் பற்றிப் பேசினது. அவர் நான் கவிதை பற்றிச் சொன்னதை ஆமோதித்து விட்டு அவர் சொன்னது. ஆனால் ஒரு வரிமாத்திரம் கவிதை ஆகாது நான் ஒவ்வொரு கவிஞனும் தன்னைத்தான் எழுதுகிறான் என்றதும் இது மிகவும் சாதாரண விஷயம் (?) என்று சொல்லிவிட்டு எலியட்டின் கடைசி ''நான்கு கூறுகள்'' என்ற கவிதையில் ஃங்ழ்ள்ர்ய்ஹப் ய்ர்ற்ங் அதிகம் என்றும் சொல்லிவிட்டு ஒவ்வொரு நாற்காலி அல்லது மேஜையிலும் அதைச் செய்பவனது சொரூபம் இருக்கிறது என்றார்''.

தன்னைப்பற்றியது எழுத்து என்றுள்ள நகுலன் தன்னைப் பற்றி எழுதுவதில் அல்லது அறிதலில் மூன்று நிலைகள் இருப்பதை பரிமேலழகர் உரையிலிருந்து எடுத்துக்காட்டுவார்;

''ஒரு மனிதனின் மூன்று வகையான உறவுகளுக்கு ஆட்பட்டவன் ... தன்னுடன், பிறருடன், இவைகளைத் தாண்டிய ஒரு அணுக முடியாத அதீத சக்தியுடன். இந்த மூன்று நிலைகளும் தனிப்பட இயங்குவதில்லை.''

யதார்த்தமே பல அடுக்குகள் கொண்டுள்ளதாகத்தான் இருக்கிறது. இதனைச் சரிவர கணக்கில் எடுத்துக் கொள்ளாதது தான் யதார்த்தவாதம் சென்று தேய்ந்து இற்றதுக்கான முக்கிய காரணம். மேற்பரப்பில் நிகழ்வதை, பிறர் சொல்ல கேட்பதை அப்படியே நீர்த்துப்போன மொழியில் பதிவு செய்வதில், என்ன சாதிக்க முடியும்? மொழி எதிர்கொண்ட சவால் என்ன? எடுத்துரைத்தலில் கதையாடலில் கையாண்ட புதுமை என்ன? மறுபரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டது எது? என்னும் கேள்விகளுக்கு விடை ஒன்றுமில்லை.

யதார்த்தம் என்பது தட்டையானதில்லை. இதனைச் சுட்டிக்காட்ட நமது மரபிலேயே ஒரு நிகழ்ச்சி இருக்கிறது.

பெரிய தர்க்கவியல்வாதியான வாசஸ்பதி மிஸ்ரா ஒரு நாள் மாலையில் யதார்த்தம் பற்றிய தனது கோட்பாட்டை ஆராய்ந்து கொண்டிருக்கிறார். அந்தி நெருங்கிவிட்டதை திடீரென அறிகின்றார். அடுத்த கணம் அறை இருட்டிவிருகிறது. அப்போது அங்கு விளக்கு ஒன்று ஏற்றப்படுகிறது. ஒரு தட்டில் உணவு எடுத்து வைக்கப்படுகிறது. யாரோ ஒருவரின் இருப்பையும் உணர முடிகிறது. பனை ஓலைச்சுவடிகளிலிருந்து நிமிர்ந்து பார்க்கும் மிஸ்ரா அழகான ஒரு யுவதி தன் முன் நிற்பதைக்அடைவதற்கான சாதனம். அது சுசீலாவைச் சென்று சேர்ந்ததா? இக்கேள்விக்கு இடமில்லை சுசீலாவே வார்த்தையாயிருக்கும் போது.

" .... என்றாலும் உன் உருவம் என்னை வசீகரிக்கிறது; உன் புன்னகை ஒரு புதிர்; உன்னைப்பற்றி படரும் தருணம் தான் வார்த்தை பிறக்கிறது.: நீ என்ன சொன்னாலும் வார்த்தைதான் இவ்வையத்தைக் காத்து நிற்கும். உன் தொடர்பு கைப்பைத்தான் கரக்கிறது; ஆனால் அதன் அடிப்படையில் மாதுர்யம் ... உன்னைப் புரிந்து கொண்டு தான், உன்னுருவம் என்னுள் உருத்தெரியாமல் உருவாகும்பொழுதுதான் வார்த்தை பிறக்கிறது"

என்னும் நகுலனின் சொல்லாடல் இத்தளத்தில் நிகழ்வது. இதன் தொடர்ச்சியாய்,

"உன்போல்
தன்னைக்கண்டு
தன்மை மறந்தவர்
இங்கு நின்னைத்தவிர
வேறு யார்?"

என்று கேட்பது.

ஆதாரங்கள்

1. நகுலன் கதைகள் ,காவ்யா -பெங்களுர் 1998.

2. நாய்கள் டி.கே. துரைசாமி திருவனந்தபுரம். 1994.

3. நிழல்கள் தமிழ்ப்புத்தகாலயம் -சென்னை. 1965

4. நவீனன் டயரி,இலக்கியச் சங்கம்,சென்னை. 1978.

5. வாக்குமூலம் -முன்றில் ,சென்னை. 1992

6. நினைவுப்பாதை.

7. இவர்கள் -நர்மதா ,சென்னை. 1983

8. கோட் ஸ்டாண்ட் கவிதைகள் -ழ வெளியீடு. 1981.

9. சுருதி -தாரணி பதிப்பகம். கள்ளக்குறிச்சி. 1987.

10. மூன்று கவிதைகள் -டி.கே. துரைசாமி , திருவனந்தபுரம். 1979.

11. ஐந்து கவிதைகள் ,டி.கே. துரைசாமி - திருவனந்தபுரம். 1987

12. இருநீண்ட கவிதைகள் -விருட்சம் ,சென்னை. 1991

13. மற்ற நூல்கள்.Non - being/

1. வேளை வந்துற்ற போது - நகுலன் கட்டுரை ,தீபம் கட்டுரைகள், தொகுப்பு - நா.பா. -கலைஞன் பதிப்பகம் ,சென்னை. 1985.

2. **Times of India - Bangalore Edition 15.12.1999 & 2.1.99.**

3. The Asian Age - 5.12.99

4. திருவாய் மொழி - நம்பிள்ளை ஏட்டின் தமிழாக்கம் ,சென்னை பல்கலைக்கழகம்.

5. Selections from the complete works of Swamy Vivekanandar/Advaida Dharma/ Calcutta. 1991.

6. The Ploughshares, vol.4 No:1. 1977.

7. Selected poetry and prose of William Blake/ The modern Library/Newyork, 1953.

நகுலன் - ஒரு உடனிருத்தல்

எஸ்.எஸ்.குமார்

"பயம், எண்பது வயசானாலும் சாகப் பயம்"

வீட்டிலிருந்து இறங்கி தோட்டத்தில் என் கைகளை பற்றி நடக்கும்போது, ஏதோ தடுக்க என் கைகளை சிலீரென்று அழுத்தி பிடித்து பின் சுதாரித்து உடனே பளீரென்று சிரித்து என்முகம் பார்த்து நகுலன் சொன்ன வார்த்தைகள்.

இதைப் படிக்கும்போது உண்டாகும் உணர்வுகளை எண்ணங்களை உங்களுக்கு தந்துவிட்டு, எண்பது வயது நகுலனின் அழுந்தப்பிடித்த ஸ்பரிசத்தையும், என் முகத்தருகே சிரித்த சிரிப்பையும் என் ஞாபக - தவறு - என் உணர்வுகளின் அடுக்குகளில் பத்திரப்படுத்திக் கொள்கிறேன்.

நகுலன் டாக்குமெண்ட்ரி படத்தின் தயாரிப்பாளர் என்ற முறையில் நான்............................

அச்சமயம் டைரக்டர் பாண்டியராஜன் படப்பிடிப்பில் நகுலன் தன் வீட்டு திண்ணையில் சேரில் அமர்ந்திருக்க, நண்பர் பாண்டி சாய்ந்திருக்கும் தூணில் நான் சாய்ந்து பணத்தை ஏதோ செலவுக்கு மும்முரமாய் எடுத்து எண்ணிக் கொண்டிருக்க...........................

என்னை மெல்லிய சிரிப்புடன் கூர்மையாய் கவனித்து என் சகாக்கள் அண்ணாச்சி விக்கி, டைரக்டர் பாண்டியராஜன், நண்பர் பாண்டியிடம் என்போலவே அபிநயித்து சிரித்த சிரிப்பு இருக்கிறதே...........................

மேற்படி சம்பவங்களை உள்வாங்கி உங்கள் சொந்த மனபாதிப்புகளால் பாதிக்கப்பட்டு கொள்ளுங்கள்.

மேற்படி சம்பவங்களால் உண்டான பகிர்ந்து கொள்ள முடியாத உணர்வு பூர்வமான விசயங்களை தவிர்த்து, என் - அறிவு பூர்வமான மனதில் பதிந்த விசயங்கள் இரண்டு.

"சாகப்பயம்", என்று சொல்லி சாவின் விளிம்பில் உள்ள அந்த மனிதர் சிரித்த சிரிப்பில் தனிமை - மரணம் பற்றிய பயம் விலகிப்போனது.

பணத்தை எண்ணும்போது அவர் பார்த்த பார்வையும், சிரித்த சிரிப்பும் பணத்தின் மீதான அதிகப்படியான மரியாதையையும், என்னை அறியாமல் எனக்குள் பரவி விரவி இருந்த பணத்தினால் உண்டான அகங்காரத்தையும் விட்டு விலக வைத்தது.

சிகரெட் புகைப்பது ஒரு கலை. அது இன்று ஒரு பழக்கமாக அனிச்சை செயலாக மாறி விட்டிருக்கிறது. சிகரெட்டை ஆழ்ந்து புகைக்கும் சிலரின் முகத்தில் அவர்களின் அந்தராத்மாவின் பிரதிபலிப்பு இருக்கும்.

அந்த சிலரில் ஒருவரான நண்பர் பாண்டி (தாடி பாண்டி) புகைக்கும் அழகை ரசித்த நகுலன் அருகில் அழைத்து எதுக்கு சிகரெட் பிடிக்கிறது தெரியுமா? என்று கேட்டார். இந்த கேள்விக்கு பலரை போலவே பதில் தெரியாமல் (ஒருவேளை அந்த கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லாமலும் இருக்கலாம்) சிரிக்க. நகுலன் சொன்னார் "மனசுக்கு ஒரு சமாதானம்".

வெற்றியை நோக்கிய பயணத்திலும் - தோல்விகளிலும் - வெற்றியின் போதை தெளிந்தபின் காலம் கழிந்துவரும் விரக்தியிலும் வாழ்வின் நிலைகளில் எல்லாம் எல்லோருக்கும் அவ்வப்போது தேவைப்படுகிறது. நகுலன் சொன்ன "மனசுக்கு ஒரு சமாதானம்".



புது எழுத்து ● தனிச்சுற்றுக்கு மட்டும்